# உதயன்

40

விலை ரூபா.20

சுடர்: 30 | கதிர்: 1 | கார்த்திகை 11, வியாழன் 27.11.2014 | வள்ளுவர் ஆண்டு: 2045


**உரிமையை மறுப்பது நாகரிகமல்ல**

சாடுகிறார் மாவை எம்.பி.

பக்கம் 21

# சட்டத்தரணிகள் சங்கம் மைத்திரிக்கே ஆதரவு

## நேற்றைய கூட்டத்தில் முடிவு.

### ஜனாதிபதி முறையை ஒழிக்கக் கோரி பரப்புரையில் ஈடுபடவும் தீர்மானம்.

யாழ்ப்பாணம், நவ. 27
எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எதிரணியின் பொதுவேட்பாளராகக் களமிறங்கும் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவு வழங்கத் தீர்மானித்துள்ள சட்டத்தரணிகள் ஒன்றியம். மைத்திரியின் பரப்புரைக் கூட்டங்களில் ஒன்றியத்தைச் சேர்ந்த சட்டத்தரணிகள் கலந்து கொள்வார்கள் என்றும், அவர்கள் நிறைவேற்று அதிகார முறை நீக்கப்பட வேண்டியதன் அவசியத்தை அங்கு வலியுறுத்துவர் என்றும் அந்த அந்த ஒன்றியம் தெரிவித்துள்ளது. இந்த ஒன்றியம் சுமார் 4 ஆயிரம் அங்கத்தவர்களைக் கொண்டதாகும். சட்டத்தரணிகளின் ஒன்றியத்தின் விசேட கூட்டம் ஒன்றியத்தில் நேற்று இடம்பெற்றது. கூட்டத்தின் பின்னர் சிரேஷ்ட சட்டத்தரணியும் ஒருங்கிணைப்பாளருமான லால்காந் விஜய நாயக்க, ஜனாதிபதி சட்டத்தரணி ஸ்ரீநாத் பெரேரா, சிரேஷ்ட சட்

20ஆம் பக்கம் பார்க்க

## மாவீரர் நாள் இன்று

### ஆலங்களில் இராணுவம் கெடுபிடி

தமிழ் மக்களால் இன்று மாவீரர்நாள்நினைவேந்தல்கள் கடைப்பிடிக்கப்படவுள்ள நிலையில் இராணுவத்தினர் குடாநாட்டில் உள்ள ஆலங்களில் வழமையாக பூசைகளை மேற்கொள்ள வேண்டாம் என்று அச்சுறுத்தியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் நேற்றைய தினம் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரனின் பிறந்தநாள் கொண்டாடப்பட்ட நிலையில், சதுர்த்தி விரதத்துக்கான விசேட பூசைகளையும், அன்னதான நிகழ்வுகளையும் இராணுவத்தினர் தடுத்து நிறுத்தியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ந-173)

## தப்பியோடிய மோசடிப் பேர்வழி விரட்டிப் பிடித்த பொலிஸார்

நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த மோசடிப் பேர்வழி லாவகமாக மதில் பாய்ந்து தப்பியோடியுள்ளார். ஆனாலும் அவர் மீண்டும் பொலிஸாரிடம் சிக்கிக் கொண் டார்.



பெண்ணொருவரிடம் ரூபா 20 லட்சம் கடனாக வாங்கிய அந்த மோசடிப் பேர்வழி, அதைத் திருப்பிக் கொடுக்காது ஏந்துள்ளார். அதையடுத்து கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தபோது மலசலகூடம் செல்ல வேண்டும் என்று கூறிவிட்டு மதில் பாய்ந்து தப்பியுள்ளார்.

விரிவான தகவல் 22ஆம் பக்கத்தில்



தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரனின் 60 ஆவது பிறந்த தினம் நேற்று உலகெங்குமுள்ள தமிழர்களால் மகிழ்ச்சியாகக் கொண்டாடப்பட்டது. தமிழகத்தில் பல்வேறு தடைகளுக்கு மத்தியிலும், அவரது பிறந்த தினம் இனிப்பு வழங்கிக் கொண்டாடப்பட்டது. ம.தி.மு. க பொதுச்செயலர் வைகோ, கரூரில் கட்சி நிர்வாகிகளுடன் கேக் வெட்டிக் கொண்டாடினார். இதேவேளை, நாமக்கல், திருப்பூர் உள்ளிட்ட இடங்களில் பிரபாகரனின் பிறந்த நாளைக் கொண்டாடிய ம.தி.மு.கவினர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விரிவான தகவல் 10 ஆம் பக்கத்தில்

## யாழ். தளபதிக்கு திடீர் இடமாற்றம்

யாழ்.மாவட்டப் படைகளின் தளபதியாக கடமையாற்றி வந்த மேஜர் ஜெனரல் உதயபெரேரா உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் கொழும்பு இராணுவத் தலைமையகத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இதனை பலாலி ஊடகப் பேச்சாளர் மேஜர் ரஞ்சித் மல்லவராச்சி நேற்றிரவு உறுதிப் படுத்தினார்.

குடாநாட்டுக்கான இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்டு சிறிது காலத்திலேயே இவர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவரது இடத்துக்கு புதிதாக நியமிக்கப்படுபவர் யார் என்பது தெரியவரவில்லை என்றும் அவரின் பெயர் பெரும்பாலும் இன்று அறிவிக்கப்படும் என்றும் ஊடகப் பேச்சாளர் கூறினார். இடமாற்றத்துக்கான காரணம் என்ன வென்பது தெரியாது என்றும் அவர் குறிப்பிட்டார்..

விடுதலைப் புலிகளின் மாவீரர் நாள் இன்று அனுஸ்டிக்கப்படும் நிலையில் அவரது இந்தத் திடீர் இடமாற்றம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-4)

க.பொ.த. சாதாரண தர மாணவருக்கான வினாத்தாள்

**உள்ளே..**



## அமைச்சர் டக்ளஸ் பாய்ச்சல்

அரச அதிகாரிகள் முன்னிலையில், வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஆனோல்டை நோக்கி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தாக்கும் பாணியில் ஆவேசமாகச் சென்றதால் பரபரப்பு ஏற்பட்டது.

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மீளாய்வுக் கூட்டத்திலேயே இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

விரிவான தகவல் 22ஆம் பக்கத்தில்

## விலை நிர்ணயம் இல்லாத பசும் பால் கொள்வனவு

யாழ். மாவட்டத்தில் பசும்பால் கொள்வனவின் போது விலை நிர்ணயம் பேணப்படுவதில்லை என்று பண்ணையாளர்கள் கவலை வெளியிடுகின்றனர். அதனால் தாம் பொருளாதார ரீதியில் பெரும் பின்னடைவை எதிர்நோக்குவதாகவும் அவர்கள் விசனிக்கின்றனர்.



விரிவான தகவல் 22ஆம் பக்கத்தில்

**சனி பெயர்ச்சி பலன்கள் உள்ளே...**

## தேசிய அரசமைப்பதற்கு அழைக்கிறார் மைத்திரி



ஊழல், மோசடிகள் தலைவிரித்தாடும் இந்த ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழித்து, 2015 ஆம் ஆண்டில் தேசிய அரசொன்றை அமைப்பதற்கு இணைந்து கொள்ளுங்கள் என்று அழைப்பு விடுத்துள்ளார் எதிரணிகளின் பொது வேட்பாளர் மைத்திரிபால

20ஆம் பக்கம் பார்க்க

## குடாநாடு பூராவும் தீவிர கண்காணிப்பு

இன்று மாவீரர் தினம் உலகெங்குமுள்ள தமிழர்களால் உணர்வுபூர்வமாகக் கடைப்பிடிக்கப்படவுள்ள நிலையில், யாழ்.குடாநாடு முழுவதும் இராணுவத்தினர் தமது கண்காணிப்பை அதிகரித்துள்ளனர். வீதிகள் எங்கும் இராணுவத்தினர் தமது சோதனை நடவடிக்கைகளையும் ஆரம்பித்துள்ளனர்.


யாழ்.பல்கலைக் கழகத்திலும் இராணுவத்தினரின் கண்காணிப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. பல்கலையின் அனைத்து வாயில்களிலும் இராணுவத்தினர் நிறுத்தப்பட்டிருந்தனர். அதனால் பல் கலைக் கழக மாணவர்களின் வருகை மிகக் குறைவாகவே காணப்பட்டது.

விரிவான தகவல் 22ஆம் பக்கத்தில்

## நேர்மையுடன் செயற்படுகிறது ஐ.நா. குழு

யாழ்ப்பாணம், நவ. 27
ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தால் அமைக்கப்பட்ட விசாரணைக் குழு நடுநிலையுடன் – நேர்மையாகச் செயற்படுகின்றது. இந்த விசாரணைக்கு இலங்கை அரசு முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் – இவ்வாறு மீளவும் கோரிக்கை விடுத்துள்ளார் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் சயிட் அல் ஹுசைன்.
ஐ.நா. மனித உரிமைகள் ஆணை

20ஆம் பக்கம் பார்க்க


மக்களின்
உரிமை காக்க
உயிர் நீத்த எம்
மறவர்களுக்கு
சிரம் தாழ்த்தி
எம் அஞ்சலிகள்



இன்று உதயன் 30 ஆவது ஆண்டுக்குள் காலடி எடுத்து வைக்கின்றான். மக்கள் பணிக்காக உதயனுடன் இணைந்திருந்து தம் உயிர் நீத்த எம்மவர்களுக்கும் உதயன் வெளிவர இதுவரை காலமும் எம்மைச் சூழ்ந்துதவி மக்களுக்காக இன்னுயிர்களை உவந்தளித்த வீர மறவர்களுக்கும் எமது சிரந்தாழ்ந்த அஞ்சலிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

# அஞ்சலிக்கும் ஆன்ம உரித்தை தடுப்பது நாகரீகமானது அல்ல

## மாவை.சேனதிராசா எம்.பி. சாடுகின்றார்

உயிர் இழந்தோருக்கு அஞ்சலி செலுத்தும் ஆன்ம உரித்தையும் இந்த அரசும் – இராணுவமும் தடை செய்வது நாகரிகம் அல்ல என்று தெரிவித்துள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை. சேனதிராசா பல்கலைக்கழகச் சூழலில் அச்சுறுத்தல்பாணியில் இராணுவத்தினர் நிறுத்தப்பட்டிருப்பது வன்மையாகக் கண்டித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில்,

இலங்கை இராணுவத்தினர், கவச வாகனங்களுடன் போருக்கான படையெடுப்புப் போல கடந்த ஒரு வாரகாலமாக பல்கலைக்கழகத்தைச் சூழ முகாமிட்டுள்ளார்கள். யாழ். பல்கலைக் கழகத்தினுள் உளவாளிகள் போல் ஊடுருவியும் நிற்கின்றனர். இது மாணவர்களுக்கு மட்டுமல்ல, தமிழ்ச் சமூகத்திற்கே விடுக்கப்பட்டுள்ள தொடர்ச்சியான அச்சுறுத்தலாகும்.

மாணவர்களின் சுதந்திரமான செயற்பாடுகளும், அவர்கள் கல்வியும் எதிர்காலமும் அடக்குமுறைக்கு உள்ளாகியுள்ளது. அவர்களின் மனநலம் பாதிப்படைகின்றது. முப்பதாண்டு போர்க் காலத்தை விட கடந்த 5 ஆண்டுகளிலும் தொடரும் இராணுவத் தலையீடும், அச் சுறுத்தலும் தீவிரமடைந்துள்ளது. உயிர் இழந்தோருக்கு செலுத்தும் ஆன்ம உரித்தையும் இந்த அரசும் இராணுவமும் தடை செய்வது நாகரிகம் அல்ல.

இத்தகைய நடவடிக்கைகளை நிறுத்தி, இராணுவ அச்சுறுத்தலை அகற்றி மாணவர் கல்வியைச் சுதந்திரமாக தொடர பல்கலைக் கழக நிர்வாகமும், கல்வி அமைச்சும் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றோம்" – என்றுள்ளது. (5)

# பல்கலை உட்படக் குடாநாடு இராணுவக் கண்காணிப்பில்

## சோதனையும் தொடர்கிறது

யாழ்ப்பாணம், நவ. 27

மாவீரர் தினம் இன்று கொண்டாடப்படவுள்ள நிலையில் யாழ். பல்கலைக்கழகம் உள்ளிட்ட யாழ்.குடாநாட்டின் பல இடங்களிலும் வடக்கின் ஏனைய மாவட்டங்களிலும் இராணுவத்தினர் குவிக்கப்பட்டு வீதிச் சோதனைகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

யாழ்.பல்கலைக்கழகத்தில் கடந்த வருடங்களைப் போன்று இந்தமுறையும் மாவீரர் தினம் கொண்டாடப்படுமா என்ற எதிர்பார்ப்பில் படையினர் அங்கு தமது கண்காணிப்பைத் தீவிரப்படுத்தியுள்ளனர். அதனால் பல்கலைக்கழக பிரதான வாயில் உட்பட அனைத்து வாயில்களிலும் ராணுவத்தினரும் புலனாய்வாளர்களும் நிறுத்தப்பட்டுள்ளனர். அந்த வீதி வழியே பயணிப்பவர்களிடம் நேற்று முற்பகல் ராணுவத்தினர் போர்க் காலம் போன்று சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். அவர்களுடன் பொலிஸாரும் இணைந்திருந்தனர். இந்த மாத ஆரம்பத்திலிருந்தே பல்கலைக் கழகச் சூழலில் ராணுவத்தினர் நிறுத்தப்பட்டிருந்த நிலையில் நேற்று அவர்களின் செயற்பாடுகள் தீவிரமாகியிருந்தன.

யாழ். பல்கலைக்கழகத்தில் நேற்று மாணவர்களின் எண்ணிக்கையும் விரிவுரையாளர்களின் எண்ணிக்கையும் குறைந்திருந்தது. எனினும் அவர்கள் பிற்பகல் வரை அங்கு நின்றிருந்தனர். பல்கலைக்கழக இராமநாதன் வீதியில் சன நடமாட்டம் குறைந்திருந்தது.

அங்கு மாத்திரமல்லாது குடாநாட்டின் ஏனைய பகுதிகளிலும் வீதியில் ரோந்து நடவடிக்கையில் படையினர் ஈடுபட்டிருந்தனர். சைக்கிள்களிலும் கால்நடையிலும் அவர்கள் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தனர். பிரபாகரன் பிறந்த ஊரான வல்வெட்டித்துறை உட்பட வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் உட்பட பல பகுதிகளிலும் படையினர் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தனர். வடக்கில் ஏனைய மாவட்டங்களிலும் ராணுவத்தினர் அவ்வாறே கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர் என்று தகவல்கள் தெரிவித்தன. (த–4)

# யாழ். பல்கலையினரும் அலரி மாளிகை தரிசனம்

## நேற்று முதல் திங்கள் வரை விடுமுறை

யாழ்ப்பாணம், நவ. 27

யாழ்.பல்கலைக்கழகக் கல்விசார், கல்வி சாரா உத்தியோகத்தர்கள் அனைவரும் எதிர்வரும், திங்கட்கிழமை அலரி மாளிகைக்குப் பயணம் செய்ய வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.பல்கலைக்கழகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டத்தில் இது தொடர்பான அறிவித்தலைத் துணைவேந்தர் வழங்கியுள்ளார்.

பீடாதிபதிகள், துறைத் தலைவர்கள், கல்விசாரா உத்தியோகத்தர்கள், பேரவையினர் ஆகியோரே இவ்வாறு அழைக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்ட நிலையில் பல துறையைச் சேர்ந்தவர்களும் அலரி மாளிகைக்குச் சென்று வருகின்றனர். அந்த வரிசையில் கல்வி நிறுவனமான யாழ்.பல்கலைக் கழகத்தைச் சேர்ந்தவர்களும் அலரி மாளிகைக்குச் செல்ல வேண்டும் என்று நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் எத்தனை பேர் அங்கு செல்வார்கள் என்பது தெரியவில்லை.

இதேவேளை, யாழ்.பல்கலைக் கழகத்தில் கலைப்பீட, விஞ்ஞான பீட மாணவர்களுக்கு நேற்று செவ் வாய்க்கிழமையிலிருந்து எதிர்வரும் திங்கட்கிழமை வரை துணைவேந்தர் விடுமுறை வழங்கியுள்ளார்.

மாணவர் வரவு குறைவாக உள்ளதனால் அவ்வாறு பல்கலையை மூடியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான கூட்டம் ஒன்று பல்கலைக்கழகத்தில் நேற்று இடம்பெற்றது. இதன்போதே இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

எனினும் மாணவர்களுக்குப் பாதுகாப்பு இல்லாத நிலை காரணமாகவே அவ்வாறு விடுமுறை வழங்கப்படுவதாக யாழ். பல்கலைக்கழக ஆசிரியர்கள் தெரிவித்தனர்.

ராணுவத்தினர் மற்றும் புலனாய்வாளர்கள் பல்கலைக்கழகச் சுற்றாடலில் நிறுத்தப்பட்டுள்ளதனால் மாணவர்கள் அச்சம் அடைந்துள்ளனர் என்று பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கண்டித்துள்ளது.

இந்நிலையில் தமக்குப் பாதுகாப்பு இல்லை என்ற காரணத்தினாலேயே மாணவர்கள் பல்கலைக்குச் செல்வது குறைந்துள்ளது. அதனாலேயே துணைவேந்தர் விடுமுறை வழங்கியுள்ளார் என்று ஆசிரியர்கள் மேலும் கூறினர்.

மாவீரர் வாரத்தில் மாணவர்கள் பல்கலைக்குள் நுழைவதைத் தடுக்கும் வகையிலும் அவ்வாறு கூறப்பட்டிருக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழகத்தில் நேற்று இடம்பெற்ற கூட்டத்தில் விடுமுறை தொடர்பான அறிவித்தலை துணைவேந்தர் பதிவாளருக்கு விடுத்துள்ளார். கூட்டத்தில் பீடாதிபதிகள், மாணவ ஆலோசகர்கள், விடுதிக் காப்பாளர்கள் கலந்து கொண்டிருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

தமிழர் உரிமைக்காகப் போராடி உயிர் நீத்த மறவர்களின் மாவீரர் தினத்தைப் புறமொதுக்கும் வகையாக விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. (த–4)

# கல்முனை மாநகர அமர்வில் மோதல்

## மு.கா உறுப்பினர் பிர்தௌஸ் காயம் றியாஸை கைது செய்யக் கோரிக்கை

கல்முனை, நவ. 27

கல்முனை மாநகர சபை அமர்வு கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றவேளை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கல்முனை மாநகர.சபை உறுப்பினர் றியாஸ் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மாநகரசபை உறுப்பினர்கள் மீதுதாக்குதலை மேற்கொண்டார். இந்தத் தாக்கதல் சம்பவத்தில், மாநகர சபை உறுப்பினர் எம்.ஐ. எம்.பிர்தௌஸ் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதனையடுத்து கல்முனை மாநகர சபை அமர்வின்போது சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் மீது தாக்குதல் நடத்திய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உறுப்பினர் ஏ.எம். றியாஸை உடனடியாகக் கைது செய்யுமாறும் அவருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்குமாறும் மாநகர முதல்வர் உட்பட உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த மாநகர முதல்வர் நிஸாம் காரியப்பர், கல்முனை மாநகர சபை அமர்வின்போது மேற்கொள்ளப்பட்ட காட்டுமிராண்டித்தனமான சம்பவங்களைக் கட்சி பேதமின்றி அனைத்து உறுப்பினர்களும் வன்மையாகக் கண்டிக்கிறோம். குறித்த சம்பவத்தில் தொடர்புடைய மாநகர சபை உறுப்பினர் றியாஸ் கைதுசெய்யப்படவேண்டும் என்பதுடன் அவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்' எனத் தெரிவித்தார்.

இதேவேளை, கல்முனை மாநகர சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர் றியாஸ், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் மீது மேற்கொண்ட தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கின்றேன். கல்முனை மாநகர சபை இந்த நாட்டு முஸ்லிம்களின் அரசியல் எழுச்சியின் மையமாகும். இந்தச் சபையின் கௌரவத்துக்கு குந்தகம் விளைவிக்கும் இவ்வாறான நடவடிக்கைகளை அனுமதிக்க முடியாது எனத் திகாமடுல்லை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம். எம். ஹரீஸ் தெரிவித்துள்ளார். (த–10)

# சோசலிச சமத்துவக் கட்சி தேர்தலில் தனித்து போட்டி

யாழ்ப்பாணம், நவ. 27

ஜனாதிபதித் தேர்தலில் சோசலிச சமத்துவக் கட்சி தனித்துப் போட்டியிடவுள்ளதாக அறிவித்துள்ளது. பொது எதிரணி வேட்பாளருக்கு ஆதரவு வழங்கும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், சமத்துவக் கட்சி தனித்துப் போட்டியிடப் போவதாக அறிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் எதிர்வரும் 8 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. இதற்கு முன்னதாக ஒவ்வொரு கட்சிகளும், ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை ஆதரிப்பதா?, பொது எதிரணியை ஆதரிப்பதா? அல்லது தனித்துப் போட்டியிடுவதா என்பது தொடர்பில் கலந்துரையாடல்களை நடத்தி வருகின்றன.

அதனடிப்படையில், சோசலிச சமத்துவக் கட்சி அதன் அரசியல் குழு உறுப்பினரான பாணி விஜேசிறிவர்த்தனவைத் தேர்தலில் நிறுத்துவது என்று முடிவு செய்துள்ளது.

ஓய்வுபெற்ற ஆசிரியரான இவர், தொழிலாளர்களின் பிரச்சினைகளுக்காக நீண்டகாலம் போராட்டங்களில் ஈடுபட்டு வந்தவராவார்.

இதற்கிடையே, ஜனசெத பெரமுனவின் தலைவரான வண.பத்தரமுல்ல சீலாரத்ன தேரரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப் போவதாக அறிவித்துள்ளார். இவர் ஏற்கனவே 2010 ஆம் ஆண்டும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த–5)

# மாவீரர் வாரத்தில் மது அருந்துவதா?

## வயோதிபரைத் தாக்கியது கும்பல்

தென்மராட்சி, நவ. 27

மாவீரர் வாரத்தில் மது அருந்துவதா? இது தான் மாவீரர்களுக்கு செலுத்தும் அஞ்சலியா? எனக் கேட்டு வயோதிபரைத் தாக்கியது இனம் தெரியாத கும்பல். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு தென்மராட்சிப் பிர தேசத்தில் இடம்பெற்றது. இருள் சூழும் வேளையில் கள் அருந்துவதற்காகத் கள்ளுத் தவறணைக்குச் சென்ற வயோதிபரை வழி மறித்த கும்பல் மேற்படி கேள்விகளைக் கேட்டு சரமாரியாகத் தாக்கியது.

தாக்குதலில் தலையில் பலத்த காயமடைந்த 65 வயதுடைய வயோதிபர் அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். (த–9)

# 80 ஹெக்ரேயரில் உ. கிழங்கு செய்கை

## ஆயினும் அதில் நாட்டமின்றி விவசாயிகள்

அச்சுவேலி, நவ. 27
இந்த வருடம் யாழ்.மாவட்டத்தில் உருளைக்கிழங்கு பயிர்ச்செய்கையின் உத்தேச இலக்கு 80 ஹெக்ரேயராகத் தீர்மானிக்கப்பட்டுள்ள போதிலும் இந்த வருடம் உருளைக்கிழங்கு செய்கையில் விவசாயிகள் பெருமளவில் ஆர்வம் கொள்ளவில்லை எனக் கூறப்படுகின்றது.

50 கிலோ விதை கிழங்கு 11 ஆயிரத்து 230 ரூபா விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றது.

யாழ்.மாவட்ட விவசாயிகளுக்கு 2010ஆம் ஆண்டு காலப் பகுதியில் குறிப்பிடத்தக்களவு விதை உருளைக் கிழங்கு இலவசமாக வழங்கப்பட்டது. 2012-2013 காலப்பகுதியில் குறிப்பிடத்தக்களவு 50 வீத மானிய விலையில் வழங்கப்பட்டது. அந்த வகையில் கடந்த வருடம் 132 மெற்றிக் தொன் விதை உருளைக்கிழங்கு 50 வீத மானிய விலையில் வழங்கப்பட்டது.

இந்த வருடம் விதை உருளைக் கிழங்கு விடயத்தில் அரசு எந்த விதமான உதவியும் வழங்க முன்வரவில்லை. யாழ்.மாவட்ட விவசாயிகள் மானியம் தொடர்பாக விடுத்த கோரிக்கையும் நிராகரிக்கப்பட்டது.

யாழ்.மாவட்ட உருளைக்கிழங்குச் செய்கையாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் 2ஆயிரம் ரூபா வீதம் முற்பணம் செலுத்திப் பதிவு செய்த விவசாயிகளுக்கு வழங்குவதற்கு ஆயிரத்து 500 அந்தர் கிழங்கை அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்து வழங்கி வருகின்றது. 50 கிலோ கொண்ட பொதி ஒன்று 11ஆயிரத்து 230 ரூபா விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றது.

அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஹெட்லைட் சேடா" ரகத்தைச் சேர்ந்த உருளைக்கிழங்கே யாழ்.மாவட்ட கால நிலைக்கு ஏற்புடையது என்பதால் அதுவே இறக்குமதி செய்யப்பட்டுச் சம்மேளனத்தினால் வழங்கப்படுகின்றது.

ஹேலீஸ் போன்ற தனியார் நிறுவனங்களும் விதை கிழங்கை இறக்குமதி செய்து விவசாயி' களுக்க் விற்பனை செய்கின்றன.

விதை உருளைக்கிழங்கு விநியோகம் தொடர்பாக உருளைக் கிழங்கு உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் தலைவர் இ.தெய்வேந்திரன் தகவல் தெரிவிக்கையில்,

இந்த வருடம் சமாசம் இறக்குமதி செய்த கிழக்கில் முற்பணம் செலுத்திப் பதிவு செய்தவர்களில் 30 வீதம் வரை கிழங்கைப் பெற்றுக் கொள்ளவில்லை. விதை உருளைக்கிழங்கு விதை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றது. இந்த வருடம் பெற்றுக் கொள்ளப்பட்ட விதை கிழங்கு நடுத்தர அளவை கொண்டது. இந்த வருடம் மானிய உதவி இல்லாமையினால் அதில் ஆர்வம் குன்றிய நிலை காணப்படுகின்றது. முற்பணம் செலுத்திப் பதிவு செய்தவர்கள் விதை கிழங்கை உடனடியாகப் பெற்றுக் கொள்ள முன்வரவேண்டும் எனக்கூறினார். (த-11)

CMY K


## திடீரென உயர்ந்தது வெங்காயம் விலை

யாழ்ப்பாணம், நவ.27
யாழ்.குடாநாட்டில் வெங்காயத்தின் விலை திடீரென அதிகரித்துள்ளது. இம்முறை மாரிகால வெங்காயச் செய்கையில் விவசாயிகள் அதிகளவில் ஈடுபட்டனர். அண்மையில் பெய்த மழையினால் வெங்காயப் பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கி அழிந்துள்ளன. இதனால் வெங்காயத்தின் விலை திடீரென அதிகரித்துள்ளது.

மழை சற்றுப் பிந்தலாம் என்ற நம்பிக்கையில் விவசாயிகள் தம்மிடம் இருந்த விதை வெங்காயத்தைப் பயன்படுத்திச் செய்கையில் ஈடுபட்டனர். இந்த மாத முற்பகுதியில் திடீரெனக் கொட்டித் தீர்த்த மழையினால் வெங்காயப் பயிர்கள் முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

வெங்காயச் செய்கையில் ஈடுபடுவதற்கு இது உகந்த காலம் இல்லாதபோதும் அதையும் பொருட்படுத்தாமல் விவசாயிகள் செய்கையில் ஈடுபட்டனர்.இதனால் இந்த அழிவு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் சின்ன வெங்காயம் தற்போது கிலோ 130 ரூபாவாக விலை உயர்ந்துள்ளது. அடுத்து வரும் நாள்களில் அதன் விலை மேலும் அதிகரிக்கலாம் என்று சந்தை வியாபாரிகள் தெரிவித்தனர். (த-17)




## குறுந்தூர ரயில் சேவை நேற்று முதல் ஆரம்பம்

### யாழ். - கிளிநொச்சி இடையே

யாழ்ப்பாணம், நவ.27
யாழ்ப்பாணத்துக்கும் கிளிநொச்சிக்கும் இடையிலான குறுந்தூர ரயில் சேவை நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அரச, தனியார் நிறுவனப் பணியாளர்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்களின் வசதி கருதி இந்த விசேட தினசரி ரயில் சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டதாக யாழ். ரயில் நிலையப் பிரதம அதிபர் தி.பிரதீபன் தெரிவித்தார்.

இந்த விசேட ரயில் சேவை தினமும் இரண்டு தடவைகள் யாழ்ப்பாணத்துக்கும் கிளிநொச்சிக்கும் இடையில் இடம்பெறும்.

யாழ்.ரயில் நிலையத்தில் இருந்து இந்த ரயில் காலை 6.05 மணிக்குப் புறப்பட்டு காலை 7.39 மணிக்குக் கிளிநொச்சியைச் சென்றடையும் கிளிநொச்சியில் இருந்து காலை 8.05 மணிக்குப் புறப்பட்டு முற்பகல் 10.08 மணிக்கு யாழ். ரயில் நிலையத்தை வந்தடையும். பின்னர் இந்த ரயில் பிற்பகல் 4 மணிக்கு யாழ். ரயில் நிலையத்தில் இருந்து புறப்பட்டுப் பிற்மாலை 5.35 மணிக்குக் கிளிநொச்சியைச் சென்றடையும். கிளிநொச்சியில் இருந்து மாலை 5.55 மணிக்குப் புறப்படும் ரயில் இரவு 7.52 மணிக்கு யாழ். ரயில் நிலையத்தை வந்தடையும்.

இந்தக் குறுந்தூர ரயில் யாழ்ப்பாணத்துக்கும் கிளிநொச்சிக்கும் இடையேயான சகல ரயில் தரிப்பு நிலையங்களிலும் தரித்துச் செல்லும்.

கிளிநொச்சி வரைக்குமான இந்தச் சேவைக்குப் பயணி ஒருவரிடம் இருந்து 90 ரூபா அறவிடப்படும். அத்துடன் கொடிகாமம் வரைக்கும் 30 ரூபாவும், பரந்தன் வரைக்கும் 80 ரூபாவும் பயணக் கட்டணமாக அறவிடப்படும். (த-17)



கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலையில் நேற்றுப் புதன்கிழமை வடக்கு மாகாண மரநடுகை மாதம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்வில் வடக்கு மாகாண விவசாய, கமநலசேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் கலந்துகொண்டு மரக் கன்றுகளை நடுகை செய்தார். (த-10)

## புதிய இடங்களில் இம்முறை உருளைக் கிழங்குச் செய்கை

யாழ்ப்பாணம், நவ.27
குடாநாட்டில் செய்கை பண்ணப்படாத புதிய இடங்களில் இம்முறை உருளைக்கிழங்குச் செய்கை மேற்கொள்வதற்கு விவசாய திணைக்களம் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

இதற்கென 65 விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டு 15.5 ஏக்கர் விஸ்தீரணத்தில் இந்தச் செய்கையை மேற்கொள்வதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக விவசாய திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கரவெட்டி, புலோலி, எழுதுமட்டுவாள் படித்த மகளிர் திட்டம், சண்டிலிப்பாய், மருதங்கேணி போன்ற இடங்களில் இம்முறை புதிதாக உருளைக் கிழங்குச் செய்கை மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்தச் செய்கைக்கெனத் தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு இலவசமாக விதை உருளைக் கிழங்கும் விநியோகிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, குடாநாட்டில் உருளைக்கிழங்குச் செய்கையை ஆரம்பிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

மழையால் இந்தச் செய்கையை உடனடியாக ஆரம்பிக்க முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாக உருளைக்கிழங்குச் செய்கையாளர்கள் தெரிவித்தனர்.

பெரும்பாலும் மேட்டு விவசாய நிலங்களில் செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகள் இந்த வாரத்தில் விதை கிழங்குகலை நடுகை செய்வதற்கு தயாராகி வருகின்றனர். (த-17)

## வவுனியாவில் பல பகுதிகளுக்கு மின் விநியோகம் இன்னுமில்லை

வவுனியா, நவ.27
வவுனியா வடக்கு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பல கிராமங்களுக்கு இன்னும் மின்சார விநியோகம் வழங்கப்படவில்லையயன அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேற்படி பகுதியில் வசிக்கும் மக்கள் மீளக்குடியேறி பல வருடங்கள் கடந்த நிலையிலும் இவர்களுக்கான மின்சார வசதிகள் இதுவரை ஏற்படுத்தப்படவில்லை. இந்தப் பகுதியில் வசிக்கும் பல மாணவர்கள் மின்சாரம் இல்லாமையால் கல்வியைத் தொடர முடியாது சிரமப்படுகின்றனர். (த-421)

# செய்திகள்

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தீர்க்கப்படாமல் தொடரும் மாவீரர் தினப் பதற்றம்

வருடாவருடம் தமிழர்கள் மறந்துவிடாமல் விடுதலைப் புலிகளின் மாவீரர் நாள்களை ஞாபகப்படுத்திவிடுகிறார்கள் படையினர். போர்க் காலத்துக்குச் சற்றும் குறைவில்லாத பதற்றத்துடன்தான் மாவீரர் வாரமும் நாளும் இப்போதும் கழிகின்றன என்பது ஆச்சரியமாகத்தான் இருக்கின்றது.

போர் முடிந்துவிட்டது. புலிகள் தமது ஆயுதங்களை -வெளிப்படையாக அறிவித்துவிட்டே - மௌனித்துவிட்டார்கள். பெற்ற வெற்றியை இலங்கை அரசு உலகத்துக்கு வருடாவருடம் பெருமெடுப்பில் பறைசாற்றியாகி விட்டாயிற்று. ஆனாலும் நவம்பர் இறுதி வாரம் எப்படியோ அமைதியைத் தொலைத்துவிடுவதைத் தவிர்க்க முடியவில்லை.

முடியவில்லை என்பதிலும் பார்க்க, அதற்கு முயலவில்லை சிங்கள தேசமும் பௌத்த சிங்கள அரசுகளும் என்பதுதான் சரியானது.

போர் முடிந்து 5 ஆண்டுகளில் ஈழத் தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்று காணப்பட்டிருந்தால், வருடா வருடம் இப்படிப் பதற்றப்படத் தேவையில்லை. பிரச்சினையின் மூல வேர்கள் - மூல காரணங்கள் - தீர்க்கப்பட்டிருந்தால் இந்த நிலை வந்திருக்காது என்பதை உணரும் நிலையில் கொழும்பும், தமிழ் சிங்களக் கட்சிகளும் இல்லை என்பதுதான் கொடூரத்திலும் கொடூரம்.

இதோ! மீண்டும் ஜனாதிபதித் தேர்தல் வந்துவிட்டது. இப்போதுகூட பிரச்சினையைத் தீர்க்கும் வேகம், விருப்பம் எவருக்கும் இருப்பதாகத் தெரியவில்லை. போரை வெற்றி கொண்ட பெருமைக்கு யார் உரிமை கோருவது என்பதுதான் அவர்களின் பிரச்சினையாக இருக்கிறது.

நாங்கள்தான் புலிகளைத் தோற்கடிக்க அடித்தளம் இட்டோம், மீண்டும் ஆட்சிக்கு வந்ததும் எஞ்சியுள்ள (புலம்பெயர் தேசங்களில்) புலிகளையும் ஒழிப்போம் என்று சூளுரைத்துள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ. பங்கரவாதிகளைத் தோற்கடித்து உங்களுக்கும் நாட்டுக்கும் அமைதியை மீட்டுத் தந்த மீட்பர் நா்ன்தான் என்றே போகும் இடங்களிலெல்லாம், ஜனாதிபதி மஹிந்தவும் முழங்குகிறார். வெற்றியின் உரிமையைப் பங்கிட்டுக் கொள்வதற்கு இவர்கள் காட்டும் ஆர்வத்துக்குள் இனப்பிரச்சினையும் தமிழர்களும் அமிழ்ந்து போனா்ர்கள்.

மாவீரர் தினங்கள் பதற்றம் நிறைந்தவையாகவே கழிவதற்கு இதுதான் காரணம். பல்கலைக் கழகங்களை மூடுவதோ, மாணவர்கள் மத்தியில் பயப்பீதியை ஏற்படுத்தி அவர்களை வீடுகளுக்கு விரட்டுவதோ, இராணுவத்தைக் குவித்து பாதுகாப்பைப் பலப்படுத்துவதோ ஒருபோதும் இதற்கான தீர்வாகாது. அது இன்னும் இன்னும் பதற்றத்தை அதிகரிக்கவே வழிவகுக்கும். இப்படியே போனால் இந்தப் பதற்றம் தலைமுறை தலைமுறையாகக் கையளிக்கப்படும். அமைதியின்மையும் கூடவே கொடுக்கப்படும். அது இலங்கை என்ற நாட்டுக்கு அமைதியைத் திரும்பக் கொண்டு வராது.

பிரச்சினையின் மூலத்தைக் கண்டு தீர்க்காத வரையில், தமிழர்களுக்கு அதிகாரங்கள் பகிரப்படாத வரையில், மாவீரர் தினங்கள் ஆட்சியாளர்களுக்கு பயமூட்டுபவையாக மாறுவதை ஒருவராலும் தடுக்க முடியாது. விரைவில் அது உணரப்படாவிட்டால் விளைவு பேராபத்தாகவே முடியும்.

# சிறிசேன நிகழ்த்திய திடீர்ப் புரட்சி

## ரணில், சந்திரிகா பின்னணியில்

*சண்டே ரைம்ஸ் கட்டுரையிலிருந்து*
கோகுலன்

அடுத்த வருடம் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட உள்ள பொது எதிரணி யின் கூட்டமைப்பானது இலங்கை அரசியலில் எதிரியும் இல்லை நண்பனும் இல்லை என்ற நிலையை தோற்று வித்துள்ளது.

மைத்திரிபால சிறிசேனவுக்கு பொருத்தமான எதிர்த்தரப்பு வேட்பாளராக இருக்கும் தகுதி இருக்கிறதா என்பதில் சிறு சந்தேகமிருக்கலாம். ஆனால் அவரது தகுதியை மேலும் உயர்த்தும் வகையில் பல பிரமுகர்களும் அரசியல்கட்சிகளும் அவரைச் சார்ந்து நிற்கிறார்கள். இந்தப் பட்டியலில் முதன்மை வகிப்பவராக சிறிசேனவின் குரு போன்ற வரும், முன்னாள் ஜனாதிபதியுமான சந்திரிகா பண்டார நாயக்க குமாரணதுங்க இருக்கின்றார். சிறிசேனவை முன்னிறுத்தி பணியாற்றுவதற்கான முன்னெடுப்புக் களை எல்லாம் அவரே செய்திருந்தார்.

அரசுத் தரப்பிலிருந்து விலகிய சிறிலங்கா சுதந்திரக் கட்சியினரின் அவசரக் கூட்டமொன்று புதிய நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்தின் அழைப்பாளர் திருமதி சந்திரிகா குமாரணதுங்க மற்றும் சிறிசேன முத லியவர்களுடன் மீன்பிடி அமைச்சர் ராஜித சேனாரத்ன, கல்விச் சேவைகள் அமைச்சர் துமிந்த திஸாநாயக்க, புத்தசாஸன மற்றும் சமய விவகாரங்கள் பிரதி அமைச்சர் எம்.கே.டி.எஸ்.குணவர்த்தன முதலியவர்களுடன் நாடாளு மன்ற உறுப்பினர்கள் ரஜீவ விஜேசிங்க, அர்ஜுன ரணதுங்க ஆகியவர்களும் அமர்ந்திருந்தனர். அமைச்சர்களும் பிரதி அமைச்சரும் பதவிகளைத் துறக்காமலே கூட்டத்துக்கு வந்திருந்தனர். ஆனால் அந்தப் பதவிகள் யாவும் ராஜபக்ஷவினால் பின்னர் நீக்கப்பட்டு விட்டன. பிறகு நுவரெலிய மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பெருமாள் ராஜதுரையும் கூட்டத்தில் இணைந்து கொண் டார். கம்பஹா மாவட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்ட மைப்பு உறுப்பினர் வசந்த சேனநாயக்க ஐ.தே.கவில் இணைந்து கொண்டார். மேலும் பலர் அரசிலிருந்து தங்களுடன் இணைந்து கொள்ள இருக்கிறார்கள் என்று கூட்ட மைப்பாளர்கள் கூறிக் கொண்டார்கள். 32 பேர் அரசிலிருந்து வரவிருக்கிறார்கள் என்று குமாரணதுங்க கூறினார். ஐ.தே.கட்சியின் லக்ஷ்மன் கிரியெல்ல 60 பேர் கட்சிதாவ இருக்கிறார்கள் என்றார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து ஒரு பகுதியினர் ஐ.தே.கவுடன் கைகோர்த்துக் கொண்டுள்ள நிலையில் ஏற்கனவே ஜாதிக ஹெல உறுமய இணைந்து கொண்டுள்ளது. ஐ.தே.கவின் உயர்நிலை பிரமுகர்கள் சிலர், ஜே.வி.பியையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் கூடத் தங்களுடன் இணைத்துக் கொள்ள பேச்சு நடத்தி வருகின்றனர். முஸ்லிம் காங்கிரஸையும் இணைத்துக் கொள்ள முயற்சி நடைபெறுகின்றது. இவ்வாறு ஒரு பொது எதிர்க்கட்சி அமைப்பு ஏற்படுமானால் நிச்சயம் அது ராஜபக்ஷ. வினருக்கு பெரும் அழுத்தம் கொடுப்பதாகவே இருக்கும்.

ஜே.வி.பி. இது குறித்துக் கருத்துக்கூற மறுத்துவிட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இராஜவரோதயம் சம்பந்தர் கூறுகையில்;

வேட்பாளர் யார்? என்பது வெளிப்படுத்தப்பட்டுள்ளது. சிறி சேனவின் பேச்சை தொலைக் காட்சியில் பார்த்தேன். அதில் சில முற்போக்கான அம்சங்கள் காணப்பட்டன. நா்ங் கள் ஒரு தீர்மானம் எடுப்பதற்காகக் கூட வேண்டியிருக்கிறது. எமது மக்களிடமும் நாங்கள் கருத்துக் கேட்க வேண்டியிருக் கும். நியமனத் திகதி டிசெம்பரில் என்பதால் இன்னமும் கால மிருக்கிறது என்றார். முஸ்லிம் காங்கிரஸ் உயர்மட்டக் குழு கூடி தீர்மானம் எடுக்கும் என்று அதன் தலைவர் கூறினார்.

### அரசின் எதிர் நடவடிக்கை

இதேசமயம் அரசு தரப்பில் எதிர் நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. சந்தேகத்துக்குரிய அமைச்சர்களும் உறுப்பினர்களும் கவனமாக கண்காணிக்கப்பட்டு வருகிறார்கள். ஏனையவர்களுடன் சந்திப்புக்கள் இடம் பெற்று வருகின்றன. நாடாளுமன்ற உறுப்பினர்களின் குறைகள் நிவர்த்தி செய்யப்படும் என்று அரசால் வாக்குறுதி வழங்கப்பட்டு வருகிறது. ஜனாதிபதி மற்றும் அவர் குடும் பம் தொடர்பில் நச்சுத்தனமான கருத்துக்களை வெளி யிட்ட வரான அமைச்சர் ஒருவரும் தீவிர் கண்காணிப்புக் குள்ளாகியிருப்பது தெரிகிறது. சிறிசேன விலகுவதற்கு முன்னர் இரண்டு தடவைகள் அவருடன் ஜனாதிபதி பேச்சுக்களை நடத்தி பிரிந்து போகாமல் இருக்கச் செய்ய முயற்சிசெய்துள்ளார் என்று தெரிகின்றது.

### 18 ஆவது திருத்தம் மிகப்பெரிய தவறு

போர் முடிவுற்ற பின்னர் அரசின் நிலை எதிர்பார்க்காத விதத்தில் வேறு திசையில் போகத் தொடங்கியது. அரச மைப்பில் 18 ஆவது திருத்தம் இணைத்துக் கொள்ளப்பட்டமை மிகப் பெரிய தவறா கும். அது எமது சுயாதீனத்தை இல்லாமல் செய்துவிட்டது. எமது மக்களின் ஜனநாயக உரி மைகள், நாடாளுமன்றத்தின் அதிகாரங் கள் அனைத்தையும் பறித்துவிட்டது. 1978 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட நிறைவேற்று ஜனாதிபதி முறையை மேலும் வலுவாக்கி விட்டது. கடந்த சில ஆண்டுகளாக நாடு சர்வாதிகாரத்தை நோக்கி நகரத் தொடங்கியது. ஊழல், மோசடிகள், அநீதிகள் பெரும் எடுப்பில் அதிகரித்து விட்டன. நீதித்துறையின் உயர் நிலை தாழ்ந்து விட்டது. பொலிஸ் நிர்வாகம் கீழ்நிலைக்குச் சென்றுவிட்டது. தவறு செய்கிறவர்களை அவர்களால் ஒன்றும் செய்யமுடியவில்லை. இந்த முறையில் சர்வாதிகாரம் மறைமுகமாக தலையெடுக்க ஆரம்பித்தது. நிர்வாகத்தையும் பொருளாதாரத்தையும் ஒரு குடும்பம் மேற்கொள்ளத் தொடங்கியது. இதன் காரணமாக என்னுடன் இன்னும் சேர்ந்துகொள்ள இருக்கும் பலரும் இதற்கு ஒரு தீர்வுகாண வேண்டும் என்று ஆலோசித்தோம். ஏனைய கட்சிகளுடனும் கலந்தாலோசித்து ஒரு முடிவுக்கு வந்தோம் என்று கூறினார். அவர் மேலும் கூறுகையில்;

கடந்த நான்கு ஆண்டுகாலம் சுகாதார அமைச்சராக இருந்த வகையில் மிகக் கவலைக்குரிய அனுபவங்களைப் பெற்றேன். சிகரெட் பாக்கெட்டுக்களில் படத்துடனான எச் சரிக்கை பிரசுரிப்பது தடங்கலுக்குள்ளானது. தேசிய மருத்துவக் கொள்கை தடைப் பட்டுவிட்டது. இதற்குக் காரணம் யார்? ஹல்ப்ஸ்டோப்புக்குச் (அளுத் கடை) சென்று நீதிமன்ற வாங்கில் அமர்ந்திருந்தேன். ஆனால் செயற்படுத்த முடியாமல் போய் விட்டது என்றார்– அவர். மேலும் ஊடக சுதந்திரம் பற்றி குறிப்பிடுகையில், ஊடகங்கள் மீது செய்திகளை திரித்துக் கூறும்படியும் உண்மைகளை மறைக்கும்படியும் அழுத்தம் கொடுக்கப்படுவதை அறிவீர்கள். புதிய அரசு அமைந்தால் உண்மையான ஊடக சுதந்திரம் இருக்கும். ஊடகவியலாளர்கள் சுதந்திரமாகப் பேசவும் எழுதவும் கூடியதாக இருக்கும் என்றார். இப்போது நடைமுறையில் இருக்கும் ஊழல் நிறைந்த தேர்தல் முறை ஒழிக்கப்படும். 18 ஆவது திருத் தம் ஒழிக்கப்பட்டு 17 ஆவது திருத்தம் மீளவும் செயற்படுத்தப்படும் – என்றார்.

அமைச்சர் ராஜித சேனாரத்ன பேசியபோது சர்வதேச மட்டத்தில் எமது நாட்டின் தோற்றம் நாசமாக்கப்பட்டுள்ளது. சர்வதேசத்துக்கு எதிராகக் கத்துவதும், பெரிய வசனங்களைப் பேசுவதும் தேசப்பற்று ஆகிவிட்டது. அது வீரத்தனமும் ஆகாது. எல்லாமே மிகவிரைவில் ஓர் உச்ச நிலைக்கு வருவதைக் காணலாம் என்றார். அவர் பேச்சை முடிக்கும் தறுவாயில் தமது அதிகாரபூர்வ வாகனத்தை ஒப்படைக்கும்படி தகவல்

(19 ஆம் பக்கம் பார்க்க)

# ஒரு தரம் விழிகளை இங்கே திறவுங்கள்...

கண்கள் மூடி, காதுகள் திறந்திருக்க இருட்டுப் போர்த்திய அந்த நேரத்தில் வானமும் மனிதர்களும் ஒருசேர கண்ணீர் உருக்கும் அந்தக் கணங்களை நினைக்கும்பேதே மயிர்க்கால்கள் குத்திட்டுக்கொள்ளும்.

வேடிக்கை பார்க்கவென வரும் இளசுகள்கூட தம்மைமறந்து தன்னிலை மறந்து விழிநீர் சொரியும் அந்தக் கணங்கள் திரும்ப எப்போது வருமோ தெரியாது. ஆனால், அப்படி ஒரு காலம் இருந்தது. தியாகத்தை தீ முன்னால் அமர்ந்து கண்ணீரால் அலங்காரம் செய்த காலத்தில் வாழ்ந்தோம் என்பதே பெருமைதான். அந்த நாளை வாழ்வில் ஒருபோதும் மறக்க முடியாது.

பிற்பகல் மூன்று மணி முதலே மக்கள் சாரைசாரையாக அங்குகூடத் தொடங்கிவிடுவார்கள். எல்லோர் கைகளிலும் ஏதாவது ஒரு பொட்டலம் இருக்கும். அதில் மாலைகளும் ஊதுவத்திகளும் நிறைந்திருக்கும். பலகாரங்கள்கூட இருக்கும். சிலரது பொட்டலங்களில் மதியம் பொங்கிய சோறு கறிகூட இருக்கும். எல்லாம் 'அவர்களுக்காகத்தான்'.

ஒருபோதும் அழக்கூடாது என்று மீண்டும் மீண்டும் சொல்லிச் சொல்லிச் வளர்க்கப்பட்டவர்கள் எல்லாம் குலுங்கிக் குலுங்கி கூனிக் குறுகி அழும் காட்சி மனதை நொறுக்கும். தாய்மாரின் பாச ஓலம். சொற்களில் வடிக்கத்தான் இயலுமா?

குறித்த நேரத்தில் முன்னாள் உள்ள எண்ணெய்ப் பந்தங்களை அனைவரும் ஒருசேர ஏற்றுவார்கள். பின்னர் பாடல் தொடங்கும். அந்தக் கணங்கள்.... அதனை ஒரேயொரு நாளாவது அனுபவிக்காத வாழ்க்கை இந்தப் புவியில் அர்த்தமுள்ளதா? புரியவில்லை. இன்று வரைக்கும் அந்த இனம் புரியாத உணர்வை பிரித்து உய்த்துணர முடியவில்லை. அதனை வருடத்தின் ஒரேயொரு நாளில் அந்த நேரத்தில் மட்டுமே அனுபவிக்க முடிந்தது. இப்போது அது இல்லை என்றாலும் அதனை நினைக்கும் போதெல்லாம் நெக்குருகுவதைத் தவிர்க்க முடியவில்லை.



கண்களை மூடி நின்றபடி அந்தப் பாடலைக் கேட்கும் ஒவ்வொரு தருணத்திலும் மனங்களை அந்தக் காட்சிகளே ஆக்கிரமித்துக்கொள்கின்றன. ஆயிரம் ஆயிரம் ஆள்கள், அரவணைத்து நிற்கும் இருட்டு, திமிறி எரியும் நெருப்பு, ஏகாந்தமாய் தவழ்ந்து வரும் இசை எல்லாம் சேர்ந்து அங்கே கொளுந்துவிட்டு எரியும் ஈகம்.

மீண்டும் மீண்டும் அந்தக் காட்சியைப் பார்த்தவர்களால் அனுபவத்தைப் பெற்றவர்களால் பங்கெடுத்தவர்களால் எப்படி அதனை மறக்க முடியும்? உயிரைப் பறிகொடுத்த உணர்வுடன் ஏங்கத்தான் முடிகிறது இப்போது?

அத்தனை கொடுந்துயர்களுக்கும் இழப்புகளுக்கும் மத்தியிலும் தங்கள் பொன்னான கண்ணையும் பெற்றெடுத்த குஞ்சையும் பறிகொடுத்தவர்களுக்கு ஆற்றுப்படுத்தும் ஆறுதலாக இருந்த நாள் இன்றில்லை. மீண்டும் அந்தக் கொடுந்துயர் நெஞ்சை அடைக்கிறது. நீறாகி விடாமல் நெஞ்சோடு எரிகிறது.

---

இது மரநடுகை மாதம்



ராஜராஜன்

## வருமானம் தரும் தேக்க மரங்கள்

தேக்க மரங்கள் என்று கூறினாலே சட்டென எமது நினைவுக்கு வருவது முன்னர் பர்மா என அழைக் கப்பட்ட தற்போதைய மியன்மார் நாடு தான். அந்த அளவுக்கு தரமான தேக்க மரங்கள் அந்த நாட்டிலிருந்து கிடைத்து வருகின்றன.

இதற்கு தேக்க மரங்கள் வளர்வதற்கான மண்வளம் அங்கு இருப்பது மட்டுமே காரணமெனக் கூறிவிடமுடியாது. அந்த நாட்டு அரசும், மக்களும் மேற்கொண்டு வரும் முயற்சிகளே அதற்கான பிரதான காரணமெனக் கூற முடியும். அரசு அளிக்கும் ஊக்கத்தையும் உதவிகளையும் பயன்படுத்திக் கொள்ளும் அந்த நாட்டு மக்கள், தமக்குரிய நிலங்களில் தேக்கங் கன்றுகளை நட்டு அவை முதிர்ச்சியடைந்ததும் விற்பனை செய்து அதிக வருமானத்தைப் பெற்று வருகின்றனர்.

எமது நாட்டின் சில பகுதிகளில் தேக்க மரங்கள் வளர்க்கப்படுவதைக் காண முடிகின்றது. இந்த மரங்கள் வளர்ந்து காடுகள் போன்று காணப்படுகின்றன. அரசுக்குச் சொந்தமான நிலங்களே இதற்குப் பயன்படுத்தப்படுகின்றன.

ஆனால் தனியாரும் தமக்குச் சொந்தமான நிலங்களில் தேக்க மரங்களை நட முடியும். ஆரம்பத்தில் தேக்கம் கன்றுகளை வளர்த்தெடுத்து விட்டால் பின்னர் பராமரிப்பு வேலைகள் அதிகம் தேவைப்படுவதில்லை. மரத்தில் தோன் றும் சிறிய கிளைகளை வெட்டி அப்புறப் படுத்தி விட்டால் மரம் நேராக வளர்ந்து செல் லும். அதன் முதிர்ச்சிக் காலம் வந்ததும் மரத்தை அதிக விலைக்கு விற்க முடியும்.

குறிப்பாக தேவையற்றுக் காணப்படும் காணிகளில் தேக்க மரங்களைப் பயிரிட முடியும். எமது பிரதேசத்தைப் பொறுத்தவரை ஏராளமான நிலம் பயன்படுத்தப்படாத நிலையில் காணப்படுகின்றது. இதில் தேக்க மரங்களை வளர்த்து அதிக வருமானத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். இந்த மரங்களிலிருந்து வரு மானத்தைப் பெறுவதற்குச் சிறிது காலம் பிடிக்குமென்றாலும் குறிப்பிட்ட காலப்பகுதியில் கிடைக்கும் வருமானம் மிகவும் உபயோகமானதாகவும் அமைந்து விடும்.

தேக்க மரங்களை நடுவோம். அதிக பயனைப் பெறுவோம்.



---

# சச்சினின் சுயசரிதை நூல்

பூ.கொ.சரவணன்

*(நேற்றைய தொடர்ச்சி...)*

இங்கிலாந்துடன் அடுத்து வந்த தொடரில் லெக் ஸ்டம்ப்புக்கு வெளியே பந்தை வீசியும், விக்கெட்டைச் சுற்றி பந்தைச் செலுத்தியும் கைல்ஸ்ஸைக் கொண்டு சச்சினைச் சாய்க்க நாசர் ஹுசைன் திட்டமிட்டார். சச்சின் முதலில் ஸ்டம்ப் ஆனாலும், அடுத்தடுத்து 76, 88, 103, 90 என்று அடித்துக் கலக்கினார். ஹாரி ராம்ஸ்டன் என்கிற ஹோட்டலில் பெரிய மீன்,ரொட்டி, சிப்ஸ், வெண்ணெய் ஆகியவற்றை ஒரே மூச்சில் சாப்பிடுபவருக்குத் தலைமை சமையற்காரரே சான்றிதழில் ஹாரிஸ் செலஞ்ச் வெற்றியாளர் என்று கையெழுத்திடுவது வழக்கம். சச்சின் சிப்ஸைத் தவிர மற்ற அனைத்தையும் தின்று முடிக்கச் செப் கையெழுத்துப் போட்டுத் தந்திருக்கிறார்.

பிளின்ட்டாப் பந்து வீச்சை அடுத்த ஹெடிங்லி போட்டியில் தானே சமாளித்துக் கங்குலியை சச்சின் காப்பாற்ற, நாம் ஒருவழியாகப் பிளின்டாப்பை சமாளித்தோம் என்று கங்குலி சொல்ல, ஆமாம்! நீ மட்டும் தான் சமாளித்தாய் என்று சச்சின் சொல்ல ஒரே புன்னகை ட்ரஸ்ஸிங் அறையில்.

**வீசுபவனின் விரலில் இருக்கிறது வித்தை**

ஒவ்வொரு பந்து வீச்சாளரையும் எப்படிக் கணித்து வைத்திருந்தார் என்று எடுத்து வைக்கிறார். பழைய பந்தை சாய்வாக ஹில்பெனாஸ் போடவந்தால் அது பவுன்சர். பந்து வீசும் கரத்தை இருமுறை ஸ்விங் செய்து அக்தர் வீசினால் அது கூடுதல் வேகத்தோடு வரப்போகும் பந்து, முரளிதரனின் கடடைவிரல் மேலே இருந்தால் அது தூஸ்ரா பந்து! பிற்காலத்தில் ஹர்பஜன் எப்படி தூஸ்ரா வீசுவது என்று முரளிதரனிடம் கேட்டபோது சச்சின் முன்னமே கணித்தது சரியாக இருந்தது!

சச்சினைச் சிரமப்படுத்திய பந்துவீச்சாளர்கள் என்று வரும் பெயர்கள் இரண்டும் அதிகம் அறிமுகமில்லாத நியூசிலாந்து மற்றும் மேற்கிந்திய அணிகளின் பந்து வீச்சாளர்கள். பெயர்களை நூலில் படித்துத் தெரிந்து கொள்ளுங்கள். அவர்கள் ஏன் தொல்லை கொடுத்தார்கள் என்பதும் சுவையான அம்சம்.

**கூச்சமா இருக்கே-கங்குலி**

நாட்வெஸ்ட் இறுதிப்போட்டியில் இங்கிலாந்து அணி வென்றுவிடும் என்கிற சூழலில் அவர்கள் சாம்பெயின் போத்தல்களை ஓடர் செய்திருக்கிறார்கள். ஆனால், இந்திய அணி வென்றதும் அந்தப் பாட்டில்களைக் கேட்டு அனுப்பி சச்சின் உட்பட எல்லாரும் குடித்துத் தீர்த்திருக்கிறார்கள். அதே போல அன்று சட்டையைக் கங்குலி கழற்றி, சுழற்றி கலக்கியதும் சுவராஸ்யமான விடயங்கள், அதைப்பற்றி எப்பொழுது சச்சின் அவரிடம் பேச முயன்றாலும் கங்குலி கூச்சப்பட்டே விலகுவாராம்.

(முற்றும்)

# கட்டுரை

## ராஜபக்ஷவின் ராஜதந்திரம் வெல்லுமா?

ஸர்மிளா ஸெய்யித்

இலங்கையில் நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தல் மிகுந்த அரசியல் முக்கியத்துவத்தைப் பெற்றிருக்கிறது. நகர்வுகள், திருப்பங்கள், திடீர் செய்திகள் அனைத்தும் அரசியல் கட்சிகளுக்கிடையே போரொன்று வெடித்திருப்பதையே நிரூபணம் செய்கின்றன. அமைச்சராக இருந்த மைத்திரிபால சிறிசேன, எதிர்க் கட்சி ஆதரவுடன் ஜனாதிபதித் தேர்தலுக்கான பொது அபேட்சகராக (வேட்பாளர்) வெளிப்பட்டிருப்பது மகிந்த ராஜபக்ஷவுக்கு பலத்த சவாலாகியுள்ளது.

இதுவரை ராஜபக்ஷ அரசிலிருந்து அமைச்சர்கள் மூவர், பிரதியமைச்சர் ஒருவர், நாடாளுமன்ற உறுப்பினர் கள் இருவர் பதவி விலகியுள்ளனர். இன்னும் 20 பேர் அளவில் விலகிச் செல்லக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவற்றுக்கிடையில் ஜனாதிபதி தேர்தலுக்கான அபேட்சகர்கள் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்யும் நாள் டிசம்பர் 8 என்றும், வாக்கெடுப்பு 8 ஜனவரி 2015–ல் என்றும் தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவின் ஆசீர்வாதத்துடன் அரசின் எதிரணி ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவுடன் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதித் தேர்தலில் பொது அபேட்சகராகக் களமிறங்குகிறார். இதனை அவர், அமைச்சர் பதவியிலிருந்து விலகிய கையோடு, 21 நவம்பர் அன்று பகிரங்கமாக அறிவித்திருந்தார்.

மைத்திரிபால சிறிசேனவின் இந்த அதிரடி நடவடிக்கைக்கு முன்னதாகவே அரசின் கூட்டணிக் கட்சிகளில் ஒன்றான ஜாதிக ஹெல உறுமய அரச பொறுப்புகளிலிருந்து வெளியேறியிருந்தது. இன்னும் அரசில் அங்கத்துவம் வகித்துக்கொண்டிருக்கும் அமைச்சர்கள் பலரும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முதுகெலும்பாக இருந்துகொண்டிருக்கிற பெருந்தலைகளும் ஜனாதிபதித் தேர்தலில் பொதுஅபேட்சகருக்கு ஆதரவளிக்கக் கூடுமான சூழ்நிலைகள் எழுந்துள்ளன.

ஜாதிக ஹெல உறுமய, பத்தொன்பது அம்சக் கோரிக்கைகள் கொண்ட அரசியலமைப்புத் திருத் தத்தை முன்மொழிந்திருந்தது. இந்தக் கோரிக்கைகள் மறுதலிக்கப்படுமானால் அரசாங்கத்தை விட்டு வெளியேறுவோம் என்றும், ராஜபக்ஷவைத் தோற்கடிப்போம் என்றும் அந்தக் கட்சி பகிரங்கமாகவே சவால் விடுத் திருந்தபோதும் அரசு பொருட்படுத்தியிருக்க வில்லை. ஆகவே, முன்னர் கூறிய விதமாக ஜாதிக ஹெல உறு மய அரசப் பொறுப்புகளிலிருந்து ஒதுங்கிக் கொண்டுள்ளது.

மைத்திரிபால சிறிசேனவின் வெளியேற்றம் எந்தவித முன்னறிவிப்பும் இல்லாதிருந்ததுடன், அனுமானத்துக்குக்கூட இடமளிக்காதிருந்தது. 1989 இல் நாடாளு மன்றத்துக்குப் பிரவேசித்த மைத்திரிபால சிறிசேன 1994இல் அமைச்சராகப் பதவிவகிக்கத் தொடங்கியதுடன், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கிய உறுப்பினராகவும், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்கவின் வலக்கரமாகவும் இருந்துவந்தவர். எனவேதான், சந்திரிகா பண்டார நாயக்க இவரை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளராகவும் நியமித்திருந்தார்.

இத்தகைய பின்னணிகளில் இடம்பெறப்போகும் ஜனாதிபதித் தேர்தல் குறித்த அரசியல் விமர்சனங்கள் பல தளங்களிலிருந்தும் கிளம்பிக்கொண்டிருக்கின்றன. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை எதிர்த்துப் போட்டியிடு மளவு மைத்திரிபால சிறிசேனவுக்கு மக்கள் செல்வாக்கு இல்லை என்பது தெளிவானது. ஆனால், பொது அபேட்சகர் என்கிற அடிப்படையில் எதிர்க் கட்சிகளின் கூட்டு ஒருங்கிணைப்பு பலம்பெற்றதாகியுள்ளது. இந்தக் கூட்டணியில் ஜாதிக ஹெல உறுமய, மக்கள் விடுதலை முன்னணி என்னும் ஜே.வி.பி. ஆகிய கட்சிகளும் இணைந்துகொள்ளக்கூடும். சிங்களக் கடும் போக்குவாதிகளின் ஆதிக்கமிக்க இந்தக் கட்சிகள் பொது அபேட்சகருக்கு ஆதரவாக இணையும்போது இலங்கை அரசியலில் பாரிய மாற்றத்துக்கான முஸ்தீபு களாக இவை பார்க்கப்படுகின்றன. 20 ஆண்டுகளாக ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையிலான கூட்டாட்சி இத்தோடு முடிவுக்கு வந்துவிடக்கூடும் என்பதான எதிர்பார்ப்புகள் எழுந்துள்ளன.

ஆட்சிக் காலம் முடிவடைவதற்கு மேலும் இரு ஆண்டுகள் இருக்கும் நிலையில், தேர்தலுக்கு அறிவிப்பு செய்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது அரசியல் கணக்கு பிழைத்துவிடுமோ (பிழையாகிவிடுமோ) என்கிற பதற்ற நிலையையே அடைந்துள்ளார்.

2009–ல் புலிகளை இல்லாதொழித்துப் பெற்ற போர் வெற்றியைத் தேர்தல் வெற்றியாகச் சந்தைப்படுத்தியே இரண்டாவது முறையாக இவர் ஜனாதிபதியாகி யிருந்தார்.


இன்னும் இரு ஆண்டுகளில் தமது பதவிக் காலம் முழுவதும் முடிவடைந்த பின்னர் இன்னொரு தேர்தலை எதிர்கொள்வதற்கு போர்வெற்றியைச் சந்தைப்படுத்தும் தந்திரம் சிங்களப் பெரும்பான்மை மக்களிடையே எடுபடாதென்றும், அதற்குள்ளாக இந்த மாயை காலாவதியாகிவிடும் என்பதையும் அனுமானித்தே தேர்தலை அறிவித்தார்.

1978 இல் ஜே.ஆர். ஜயவர்த்தனவினால் பிரகடனம் செய்யப்பட்ட அரசியலமைப்பில் இருந்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையியலிலும், ஒருவர் இரு முறைகள் மாத்திரமே ஜனாதிபதியாக பதவி வகிக்க முடியும் என்பதையும் ஒருவர் எத்தனை முறையும் பதவி வகிக்கலாம் என்பதாக மாற்றியமைத்து 18ஆவது திருத்தத்தைக் கொண்டுவந்தார் மஹிந்த ராஜபக்ச. எனினும், திருத்தத்தை மொழிந்தவர் என்ற வகையில் அவர் மூன்றாவது முறையாக ஜனாதிபதி அபேட்சகராகக் களமிறங்க முடியாதென்ற சட்டச் சிக்கல்கள் எழுந்தன. இது குறித்த சட்டச் சிக்கல்களை ஆராய்ந்து ஆலோசனை தரும்படியாக நீதித்துறையை மஹிந்த ராஜபக்ஷ கேட்டுக்கொண்டதுக்கு அமைய அதி உயர்நீதிமன்றத்தில் கூடிய பத்து நீதிபதிகள் அடங்கிய குழு, மகிந்த ராஜபக்ச மூன்றாவது முறையாகவும் ஜனாதிபதித் தேர்தலில் அபேட்சகராகக் கள மிறங்க முடியும் என்பதாக ஒருமித்த அபிப்பிராயத்தை வெளியிட்டது.

மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான தற்போதைய அரசானது சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரு பகுதி (ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகிச் சென்றவர்கள்) மற்றும் சிறு கட்சிகளின் கூட்டணியே ஆகும். இதே விதமான அரசியல் கூட்டுச் சித்தாந்தமொன்றைப் பிரதியீடு செய்கின்ற நடவடிக்கையினூடாகவே, மஹிந்த ராஜபக்ஷவின் குடும்பத்திடமிருந்து நாட்டைக் காப்பாற்ற முடியும் என்பது போன்ற வியூகத்துடன் அட்டவணைப் படுத்தப்பட்ட நிரல்களாகவே அரசியல் நிகழ்ச்சிகள் யாவும் அமைந்துள்ளன. எதிர்க்கட்சி தலைமையில் உருவாகிக்கொண்டிருக்கின்ற கூட்டணியை இந்தக் கண்ணோட்டத்திலேயே பார்க்க வேண்டியுள்ளது. இதற்கமைய, எதிரணியான ஐக்கிய தேசியக் கட்சியானது சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஒரு பகுதியையும்;சிறு கட்சிகளையும் கொண்ட பலம் பொருந்திய கூட்டணியாக உருமாறிக்கொண்டிருக்கிறது.

ஜனாதிபதிப் பதவியிலிருந்தும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்தும் தூக்கி வீசப்பட்ட சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க கடந்த ஒன்பது ஆண்டுகளாக அமைதியாகக் கழித்த அஞ்ஞாதவாசத்திலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டு களமிறங்கியிருக்கிறார். தனது தந்தை எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டார நாயக்கவினால் தோற்றுவிக்கப்பட்டு, பிரதமராக இருந்த தனது தாய் சிறிமாவோ பண்டார நாயக்கவினால் வளர்த்தெடுக்கப்பட்டு, தன்னை ஜனாதிபதியாக உயர்த்திய சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து தான் ஒழித்துக்கட்டப் பட்டதால் அதற்குக் காரணமான துரோகிகளைக்களை யெடுக்கவும், பழிதீர்க்கவும் இப்படியொரு ஜனாதிபதித் தேர்தலுக்காகவே காத்திருந்தவர்போல உற்சாகமாகக் களத்தில் இறங்கியிருக்கிறார் சந்திரிகா பண்டார நாயக்க!

இந்தப் பின்னணியில் சந்திரிகா பண்டார நாயக் கவுக்கு இது சிறிலங்கா சுதந்திரக் கட்சியை மஹிந்த ராஜபக்ஷவிடமிருந்து மீட்பதற்கான போராட்டம். ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான போராட்டம்.



# வாசகர் திருமுகம்

## தாதியர் பயிற்சி கல்லூரி அதிபர் அவர்கட்கு,

சுகாதார அமைச்சின் தாதியர் பயிற்சி நெறி 2014க்கு விண்ணப்பித்து உயிரியல் பிரிவை சேர்ந்த ஆண் விண்ணப்பதாரிகளான எம்மை நேர்முகப்பரீட்சைக்கு அழைத்திருந்தார்கள் அதில் எம்மை தாதியர் பயிற்சி நெறிக்கு தகுதியுடையவர்களாக தெரிவுசெய்திருந்தார்கள் எனினும் தகைமையுடைய உயிரியல், கணித பிரிவைச் சேர்ந்த சகல பெண் விண்ணப்பதாரிகள் தாதியர் பயிற்சிக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். ஆனால் ஆண்களில் உயிரியல் பிரிவைச் சேர்ந்த இருவர் மாத்திரமே தெரிவு செய்யப்பட்டுள்ளனர். எனினும் தகைமையுடைய ஏனைய உயிரியல் பிரிவைச் சேர்ந்த ஆண்களாகிய எம்ம தெரிவு செய்யவில்லை.

உயிரியல் பிரிவைச் சேர்ந்த எம்மை முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யாது கணிதப் பிரிவைச் சேர்ந்த பெண்களைத் தெரிவு செய்திருப்பது எமக்கு மிகவும் கவலையளிக்கின்றது. சுகாதார அமைச்சின் விண்ணப்பப்படிவத்தில் கோரப்பட்டதற்கு அமைய நாம் ஏற்கனவே கல்விகற்ற நிறுவனங்களில் இருந்து கல்வி கற்பதை இடைநிறுத்தி நாம் தாதியர் பயிற்சி நெறிக்கு தெரிவு செய்யப்படுவோம் என்ற நம்பிக்கையில் விண்ணப்பித்திருந்தோம். ஆனால் நாம் தற்போது தெரிவுசெய்யப்படாததால் செய்வதறியாது பாதிக்கப்பட்டு உள்ளோம்.

யாழ். மாவட்டத்தில் தாதியர் பற்றாக்குறை நிலவுவதாலும் எமது எதிர்காலத்தையும் கருத்தில் கொண்டு உயிரியல் பிரிவைச் சேர்ந்த தாதியர் பயிற்சிக்கு தகுதியுடைய ஆண் களாகிய எம்மை தாதியர் பயிற்சிக்கு சுகாதார அமைச் சுடன் கலந்துரையாடி எம்மையும் தெரிவு செய்து எமக்கு ஒரு நல்ல எதிர்காலத்தை பெற்றுத் தருமாறு யாழ். தாதியர் பயிற்சிக் கல்லூரி அதிபரை தயவாக வேண்டி நிற்கின் றோம்.

இதனை உதயன் பத்திரிகையின் "வாசகர் திருமுகத்தில்" பிரசுரித்து எமது எதிர்காலத்தை கருத்தில் கொண்டு எமக்கு நியாயம் பெற்றுத் தரவேண்டும் என்று உதயன் பத்திரிகை நிறுவனத்தை பாதிக்கப்பட்டோர் சார்பில் தயவாக வேண்டி நிற்கின்றோம்.

*இப்படிக்கு பாதிக்கப்பட்டோர்*
*(உயிரியல் பிரிவு ஆண்கள்)*

## ஐந்து மாதங்கள் மருந்து இல்லை

நான் நீரிழிவு நோயாளி. யாழ்.போதனா வைத்தியசாலை நீரிழிவுக் கிளினிக்கில் மா்தம் ஒரு தடவை சிகிச்சை பெற்று வருகின்றேன். கடந்த ஐந்து மாதங்களாக நீரிழிவு நோய்க்கு பாவிக்கின்ற "Gliclazide tablets BP 40 mg" என்ற வில்லை வழங்கப்பட வில்லை. இவ்வில்லை இருப்பில்லை எனத் தெரிவித்து கடந்த ஐந்து மாதங்களும் வழங்கப்படவில்லை. இதனைப் பெறுவதற்கு வைத்தியசாலை நிர்வாகம் எவ்வித நடவடிக்கையுமெடுத்ததாகத் தெரியவில்லை. வைத்தியசாலை நிர்வாகத்தினருக்கு இதனைப் பணிவன்புடன் சமர்ப்பிக்கின்றேன்.

*இ.இராஜேந்திரா*
*(அகில இலங்கைச்சமாதான நீதிவான்)*

செய்திகள்

# சர்வாதிகார ஆட்சியை முடிக்கும் காலம் இது

## விக்கிரமபாகு கருணாரத்ன கூறுகின்றார்

கொழும்பு, நவ.27
சர்வாதிகார ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவரும் காலம் மலர்ந்துள்ளது என்று கூறியுள்ளார் புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரத்ன.

நாட்டு மக்களின் ஜனநாயகத்தை நிலைநாட்டக் கூடிய ஓர் ஆட்சி முறைமையை உருவாக்கவேண்டும். அரசு பொதுவாக நாட்டின் அரசியல் அமைப்பு, நீதிமன்றம், நாடாளுமன்றம், தேர்தல் ஆணையாளரின் நடவடிக்கைகள், அரச அதிகாரிகளின் நடவடிக்கைகள் போன்றவற்றுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டு வருகின்றது. – என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–
"பலவந்தமான விதத்தில் நாட்டின் பல்வேறு துறைகளை அரசு பலவீனப்படுத்தி வருகின் றது. மக்கள் இந்த அரசை விரட்டியடிக்கவேண்டுமெனக் கருதுகின்றனர்.

நாடாளுமன்றம், நீதிமன்றம் மற்றும் அதிகாரிகளை அரசு தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளது. வெளியுறவுத்துறை கடுமையான அரசியல்மயப்படுத்தலுக்கு உள்ளாகியுள்ளது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு வேண்டப்பட்டவர்களே ராஜதந்திர சேவையில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்"– என்று தெரிவித்துள்ளார்.

சிங்கள மொழி ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார். (ற)

# பிரதமர் பதவியின் மேல் யாருக்கு ஆசையில்லை

## இப்படிக் கேட்கின்றார் அமைச்சர் நிமால்

கொழும்பு, நவ.27
பிரதமர் பதவிக்கு யார் தான் ஆசைப்பட மாட்டார்கள்? என்று கேள்வி எழுப்பியுள்ள அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா, பிரதமர் பதவியை உரிய நேரத்தில் உரிய நபருக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வழங்குவார் – என்றும் கூறியுள்ளார்.

பிரதமர் பதவிக்காக கட்சிக்குள் நாம் மோதிக்கொள்ள வேண்டிய அவசியமில்லை. கிடைக்க வேண்டியிருந்தால் கிடைக் கும். கிடைக்கக் கூடாது என்றால் கிடைக்காது. கிடைத்தால் மகிழ்ச்சி அடைவேன். கிடைக்கவில்லைஎன்பதற்காகக் கவலைப்பட மாட்டேன் – என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதுகுறித்து அவர் கூறியுள்ளதாவது:–

கட்சிகளை பாதுகாக்க செயற்படுபவர்கள் நாங்கள். எல்லா நேரங்களிலும் கட்சியை பாதுகாக்க நடவடிக்கை எடுப்போம். உண்மையிலேயே பிரதமர் பதவி குறித்த எதிர்பார்ப்புக்கள் இல்லாமல் இல்லை. யார்தான் பிரதமர் பதவியை வேண்டாம் என்பார்கள்.

பிரதேச சபை உறுப்பினர் கூட பிரதமராகவே விரும்புகின்றார். எனினும் எதிர்பார்ப்புக்கள் எல்லா நேரங்களிலும் வெற்றியடைவதில்லை.

அரசு வெறும் பொருளாதார அபிவிருத்தியை மட்டும் ஏற்படுத்தவில்லை. மனித வள மேம்பாடு, உட்கட்டுமான வசதிகளை விருத்தி செய்தல் எனப்பல்வேறு துறைகளில் அபிவிருத்தியை ஏற்படுத்தியுள்ளது – என்று தெரிவித்துள்ளார்.

சிங்கள மொழி ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார். (ற)

# பொலிஸ் கான்ஸ்டபிள் சூட்டில் சாவு

கொழும்பு, நவ.27
தெனியாய கொட்டபொல பொலிஸ் விசேட அதிரடிப்படை முகாமில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு 9.15 மணியளவில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். (ற)


**காணி விற்பனைக்கு**

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோயிலுக்கு அருகில் K.K.S. றோட்டில் இருந்து 300 மீற்றர் தூரத்தில் துர்க்காபுர லேனில் 12 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. துண்டு துண்டாகவும் பிரித்துக் கொடுக்கப்படும்.

தொடர்பு: 077 3564 245


# அரசின் தீர்மானங்கள் மகிழ்ச்சியைத் தரவில்லை

## மாநாயக்கர் தவுல்தென ஸ்ரீ ஞானேஸ்வர தேரர் கூறுகின்றார்

கொழும்பு, நவ.27
வடக்குமாகாண சபைஸ்தாபித்தமை, கசினோ உட்படதிட்டமின்றிநாட்டுக்குப்பாதிப்பை ஏற்படுத்தும்வகையில்அரசு கடந்த காலங் களில் எடுத்த முடிவுகள் தொடர்பில் மகிழ்ச்சிய டைய முடியாது என்று கூறியுள்ளார் அமரபுர மஹா நிக் காய பௌத்த பீடத்தின் மாநாயக்கர் தவுல்தென ஸ்ரீ ஞானேஸ் வர தேரர்.

ஜாதிக ஹெல உறுமயவின் செயலாளர் சம்பிக்க ரணவக்கவுடன் இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–
மாநாயக்க தேரர்களுக்கு அரசியல் முக்கியமானதல்ல. எனினும் முழு நாட்டு மக்களின் வளர்ச்சிக்காகவும் பௌத்த கொள்கையுடன் கூடிய தேசிய முன்னுதாரணங்களை கொண்ட அரசியல்வாதிகளும் அரசியல் அணிகளும் நாட்டுக்கு இன்று தேவைப்படுகின்றனர்– என்று தெரிவித்துள்ளார். (ற)

# பொது வேட்பாளருக்கே ஹெல உறுமய ஆதரவு

## இன்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கும்

கொழும்பு, நவ.27
ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளருக்கானதனது ஆதரவு நிலைப்பாட்டை இன்று வியாழக்கிழமையன்று ஜாதிக ஹெல உறுமய அறிவிக்கவுள்ளது.

ஏற்கனவே பொதுவேட்பாளர் நிலைப்பாட்டில் அந்தக்கட்சி உத்தியோகப்பற்றற்ற ரீதியில் இணைந்துள்ளது. இந்தநிலையில் இன்று கொழும்பில் செய்தியாளர் சந்திப்பில் அந்தக்கட்சி பொது வேட்பாளருக்கான ஆதரவை பகிரங்கமாக அறிவிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை– ஜனநாயகம் தொடர்பில் அறிவூட்டும் நிகழ்வுகளை தாம் ஏற்கனவே மக்கள் மத்தியில் முன்னெடுத்துச் செல்கின்றோம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். (ற)


# த.சாரிகா லேணர்ஸ்

(முதல்தர சாரதி பயிற்சி பாடசாலை)



கடந்த 12 ஆண்டுகளுக்கு மேலாக யாழ். மக்களுக்கு சேவையாற்றிவரும் எமது நிறுவனம் தற்போது இயங்கிவரும் இல. 57, வேம்படி, யாழ்ப்பாணம் எனும் முகவரியிலிருந்து

**இல. 357, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்**

எனும் புதிய முகவரிக்கு இன்று தொடக்கம் மாற்றப்பட்டுள்ளது என்பதை எமது வாடிக்கையாளர் யாவருக்கும் அன்புடன் அறியத்தருகின்றோம்.

குறைந்த செலவில் நிறைந்த பலன்பெற த.சாரிகா லேணர்ஸ்



அத்தோடு யாழ். நகரில் வேறெந்தப் பகுதியிலும் எமக்கு கிளைகள் கிடையாது என்பதையும் இத்தால் அறியத்தருகின்றோம்.

புதிய நிலைய திறப்பு விழா
**இன்று (27.11.2014) வியாழக்கிழமை காலை 6.02**

தலைமைக் காரியாலயம்: **அனுராதபுரம்.**
எமது கிளைகள்: **முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி, வவுனியா.**

(41559)(10.6.3)

**357, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். 021 5100 200**

# செய்திகள்


**வட இலங்கைச் சங்கீத சபை**
**பரீட்சைகள் - 2015**

வட.இலங்கை சங்கீத சபையின் 2015ஆம் ஆண்டுக்கான விண்ணப் பப் படிவங்கள் 01.12.2014 முதல் விற்பனைக்கு வரும். விண்ணப்ப முடிவு திகதி 19.01.2015 ஆகும். விண்ணப்பப் படிவம் ஒன்றின் விலை அறி வுறுத்தல், கடித உறையுடன் ரூபா 60/= (அறுபது) மட்டும்.

விண்ணப்பப் படிவத்தை தபால் மூலம் பெற விரும்புவோர் ரூபா 85/= பெறுமதியான காசுக் கட்டளையுடன் (மணிஓடர்) சொந்த முகவரி எழுதப் பட்ட நீள் கடித உறையை வட.இ.ச.சபைக் காரியாலயத்துக்கு அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

இலங்கை வங்கியின் ஏதாவது ஒரு கிளையில் பரீட்சைக் கட்ட ணத்தை, சபையினால் வழங்கப்படும் படிவத்தையும், வங்கியினால் வழங்கப்படும் படிவத்தையும், பூரணப்படுத்தி அதற்குரிய பணத்தினைச் செலுத்தி வங்கியினால் வழங்கப்படும் படிவம் ஒன்றை விண்ணப்பத் துடன் தவறாது இணைத்து அனுப்பி வைக்கவும்.

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த தேர்வுநாடிகள்.

**வட.இலங்கை சங்கீத சபை,**
கே.கே.எஸ்.வீதி, மருதனார் மடம், சுன்னாகம்
என்ற முகவரியில் பெற்றுக்கொள்ளவும்.
(சி17901) (12.3.6)



**மணிவிழாவும், நூல் வெளியீடும்**

காலச் சக்கரத்தில் அறுபது என்பது முக்கியமானது.
அறுபது வினாடிகள் ஒரு நிமிடம்.
அறுபது நிமிடம் ஒரு மணித்தியாலம்
பஞ்சாங்கத்தில் அறுபது வருடங்கள் உள்ளன. மனிதர்
வாழ்வில் அறுபது வருடங்கள் நிறைவடையும்
பொழுது கிரகங்கள் யாவும், ஒரு சுற்று வட்டத்தைப்
பூர்த்தி செய்து மீண்டும் அவர் பிறந்த இடத்திற்கு
வருகிறது. அந்த வகையில் எமது பெற்றோர்களாகிய,

**கா.குகானந்தக் குருக்கள்,**
**நிர்மலாதேவி**

ஆகியோரின் மணிவிழாவை
இன்று (27.11.2014) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு
எமது இல்லத்தில் கொண்டாடி அவர்களுக்கு இறை
அருளும், குரு அருளும் என்றும் நிறைந்து மேலும்,
பீமரசாந்தி, சதா அபிஷேகம் காண வேண்டி எல்லாம்
வல்ல முருகப் பெருமானின் திருவருளும் சீரணி
நாகபூசணி அம்பாளின் திருவருளும் கிடைக்கப்
பிரார்த்திக்கின்றோம்.

**பிள்ளைகள்,**
**முருகமூர்த்தி கோயிலடி, உடுவில், சுன்னாகம்.**
(53830) (12.3.6)



**O/L இல் 5 பாடம் சித்தி அடைந்தவர்களும் பட்டதாரி ஆகும் அரிய வாய்ப்பை வழங்குகின்றது**
**மதுரை காமராசர் பல்கலைக்கழகம்**

* O/L இல் ஒரே தடவையில் ஏதாவது ஐந்து பாடங்கள் சித்தி அடைந்திருப்பின் இரண்டு வருட கற்கை நெறியாக அடிப்படை நிலைக்கல்வியை (FUNDATION) நிறைவு செய்து பின்னர் 2½ வருட கற்கை நெறியாக நீங்கள் விரும்பிய துறையில் பட்டப்படிப்பை மேற்கொள்ள முடியும்.
* A/L இல் ஒரு பாடம் சித்தியடைந்தவர்களும் சித்தியடை யாதவர்களும் அடிப்படை நிலைக் கல்வியின் ஒரு வருடத்தை மாத்திரம் பூர்த்தி செய்து பட்டப்படிப்பை மேற்கொள்ள முடியும்.
* A/L இல் இரண்டு பாடம் சித்தியடைந்தவர்களும் முழுமைச் சித்தியடைந்தவர்களும் 2½ வருட கற்கை நெறியாக BA,B.Com,B.Sc, B.BA ஆகிய பட்டநெறி களில் ஒன்றைத் தெரிவு செய்து பட்டதாரியாக முடியும்.

குறிப்பு:
1) இந்தப் பட்ட நெறிகள் யாவும் இலங்கைப் பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வையாகும்.
2) பரீட்சைகள் யாவும் காமராசர் பல்கலைக் கழகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட யாழ்.இணைப்பாளராகிய புதிய உயர் கல்லூரி வளாகத்தில் நடைபெறும்.
3) பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினூடாக நடைபெறு கின்றது.

**விரிவுரைகள் ஆரம்பம் : 29.11.2014 காலை 8 மணி**

**கவனிக்குக:** விரிவுரைகளில் பங்கேற்கும் வெளிமாவட்ட மாணவர்களுக்கான தங்குமிட வசதி இலவசம்

யாழ்.இணைப்பாளர்,
காமராசர் பல்கலைக்கழகம்.
021 222 8148

புதிய உயர் கல்லூரி,
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.


# கடும் எதிர்ப்புகளையும் மீறி பிரபாகரனின் பிறந்த நாள்

## தமிழகத்தில் கோலாகலக் கொண்டாட்டம்



சென்னை, நவ, 27

தமிழகத்தில் கடும் எதிர்ப்புகளை மீறி தமிழீழ விடுத லைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் 60ஆவது பிறந்தநாள் விழா நேற்றுக் கொண்டாடப்பட்டது. ம.தி.மு. க பொதுச்செயலர் வைகோ, கரூரில் கட்சி நிர்வாகிகளுடன் கேக் வெட் டிக் கொண்டாடினார். இதேவேளை, நாமக்கல், திருப்பூர் உள்ளிட்ட இடங்களில் பிரபாகரனின் பிறந்த நாளைக் கொண்டாடிய ம.தி.மு.கவினர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகள் இயக்கத் தின் தலைவர் பிரபாகரனின் 60வது பிறந்த நாள் விழாவை உலகம் முழுதும் சிறப்பாகக் கொண்டாட வேண்டும் என்று ம.தி.மு.க பொதுச் செயலர் வைகோ அழைப்பு விடுத் திருந்தார். இதற்கு பாரதீய ஜனதாவின் சுப் பிரமணிய சுவாமி, எச்.ராஜா ஆகியோர் கடும் எதிர்ப்பு தெரிவித்திருந்தனர். பிரபாகரனின் பிறந்த நாளை வைகோ கொண்டாடினால் அவரைத் தேசிய ஜனநா யகக் கூட்டணியில் இருந்து வெளியேற்றித் தேசிய பாது காப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்ய வேண்டும் என்றும் சுப்பிரமணிய சுவாமி மத் திய அரசுக்கு கோரிக்கை விடுத்திருந் தார்.



இந்த நிலையில் நள்ளிரவு 12 மணி முதல் தமிழகத் தின் பல இடங்களில் பிரபாகரனின் பிறந்த நாள் விழாக் கொண்டாட்டங்கள் நடைபெற்றன.

சென்னை ராயப்பேட்டையில் தந்தை பெரியார் திராவிடர் கழகம், தமிழக முன்னேற்றப் படை ஆகிய வற்றின் சார்பில் நள்ளிரவில் 60 கிலோ கேக் வெட்டி, பட்டா சுகளை வெடித்து பிரபாகர னின் பிறந்த நாள் விழா கொண் டாடப்பட்டது. இதைத் தடு க்கும் வகையில் ராயப்பேட் டையில் நூற்றுக்கணக்கான பொலிஸார் குவிக்கப்பட்டி ருந்தனர். இதே போல் நேற்றுக் காலை சென்னை சாந் தோமில் உள்ள மாற்றுத்திறனாளிகள் பாடசாலையில் விடுதலைச் சிறுத்தைகள் சார்பில் 60 கிலோ கேக் வெட்டி பிரபாக ரன் பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது.

கரூரில் ம.தி.மு.க பொதுச் செயலர் வைகோ நேற்றுப் பிரபாகரனின் பிறந்த நாளை கேக் வெட்டி கொண்டாடினார். அப்போது செய்தியா ளர் களிடம் பேசிய வைகோ, ஈழத் தமிழர் பிரச்சினைக் குத் தமிழீழம் ஒன்றுதான் தீர்வு; சார்க் மாநாட்டில் ராஜபக்ஷ மீண்டும் அதிபரா கப் பிரதமர் மோடி வாழ்த்து தெரிவித்த தற்குக் கண்டனம் தெரிவிக்கி றேன் எனக் குறிப்பிட்டார்.

இதேபோல் நாமக்கல்லில் பிரபாகரனின் பிறந்தநாள் விழாவைக் கொண்டாட முயன்ற ம.தி.மு.க.வினர் 65 பேர் கைது செய்யப்பட்டனர். ம.தி.மு.க மாநில செயற் குழு உறுப்பினர் சசிக்குமார் தலைமை யில் நேற்றுக் காலை நாமக்கல் மணிக்கூண்டு முன்பு கூடிய, ம.தி.மு.கவினரை நாமக்கல் பொலிஸார் கைது செய்தனர். மேலும் திருப்பூரில் பிரபாகரன் பிறந்த நாளைக் கொண்டாடிய ம.தி.மு.கவினர் 15 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேபோல் தமிழகம் மற்றும் புதுவையில் பல்வேறு பகுதிகளில் பிரபாகரன் பிறந்த நாள் விழா எழுச்சியு டன் கொண்டாடப் பட்டது. பிரபாகரன் பிறந்த தினத் தில் புதுக்கோட்டையில் அகதி முகாமில் விநாய கர் கோவிலில் குடமுழுக்கு விழா நடத்த பொலிஸார் தடை விதித்தனர். இந்தத் தடையை எதிர்த்துப் போராடியதால் பொலிஸார் ஈழத் தமிழ் அகதிகள் மீது தடியடி நடத்திக் கலைத்ததுடன் சென்னையில் மயி லாப்பூரில் திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் வைக்கப்பட்டிருந்த பிரபாகர னின் பிறந்த நாள் மற்றும் மாவீரர் நாள் பதா கைகளும் அகற்றப்பட் டுள்ளன. (த-10)


**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



யா/தம்பசிட்டி
மெ.மி.த.க.பாடசாலையில்
2014 - தரம் 05
புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி 157
புள்ளிகளைப் பெற்று, சித்தியடைந்த
**செல்வி**
**மோகனரூபி சுதர்சன்**
அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்
வாழ்த்துவோர்:
அப்பப்பா - வே.நிபாகராசா (ஓய்வுநிலை கிராம சேவகர்)
அம்மம்மா - நீ.கசிலா
சித்தப்பா - நீ.சசிவன்
சித்தியார் - திருமதி ச.கவிதா, செல்வி நீ.தாரணி, செல்வி நீ.ரஜிதா
"இரங்கன் இல்லம்",
புலோலி தென்மேற்கு, பருத்தித்துறை.


## ஆன்மிகச் சொற்பொழிவு

தென்மராட்சி, நவ.27

சாவகச்சேரி கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகர் (புலுட் டையன் பிள்ளை யார்) ஆலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை இரவு 7,மணிக்கு தென்மராட்சி இலக்கிய அணியைச் சேர்ந்த கே.எஸ்.சந்திர சேக ரம் பகவத்கீதை' என்ற தலைப்பில் ஆன் மிகச் சொற் பொழிவு நிகழ்த்தவுள்ளதாக ஆலய தர்மகர்த்தா அறி வித்துள்ளார். (வ-9)

# பொதுபல சேனாவால் மத ரீதியான பதற்றம்

## ஐ.நாவின் விசேட அறிக்கையாளர் ரீட்டா இசாக் குற்றச்சாட்டு

கொழும்பு, நவ.27

பொதுபல சேனா அமைப்பு இலங்கையில் மதரீதியான பதற்றத்தைத் தூண்டுகின்றது என்று குற்றஞ்சாட்டியுள்ளார் ஐ.நாவின் சிறுபான்மை இன விவகாரங்களுக்கான விசேட அறிக்கையாளர் ரீட்டா இசாக்.

பொதுபல சேனா கடந்த இரண்டு வருடங்களில் மாத்திரம் முஸ்லிம்களுக்கு எதிராக 350 தாக்குதல்களையும், கிறிஸ்தவர்களுக்கு எதிராக 120 தாக்குதல் களையும் நடத்தியுள்ளது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

சிறுபான்மை இன விவகாரங்களுக்கான மன்றத்தின் 7 ஆவது அமர்வு நேற்றுமுதல் ஜெனிவாவில் ஆரம்பமாகியுள்ளது. அதில் சமர்ப்பித்துள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

"இந்த அமைப்பு ஏனைய சில அமைப்புக்களுடன் இணைந்து தீவிரவாதக் கொள்கைகளை பரப்புகின்றது. சிங்களவர்களே இன ரீதியாக உயர்ந்தவர்கள் எனவும் பரப்புரை செய்கின்றது. மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்துகின்றது. பௌத்த சிலைகளை சிறுபான்மை இனத்தவர்கள் சேதமாக்குகின்றனர். மத மாற்றத்தில் ஈடுபடுகின்றனர் போன்ற தகவல்களும் பரப்பப்படுகின்றன. கடந்த ஜூலை மாதம் ஐ.நா வின் வேறு நிபுணர்களுடன் இணைந்து முஸ்லிம் மற்றும் கிறிஸ்தவ சமூகத்துக்கு எதிராக பௌத்த அமைப்புக்களால் முன்னெடுக்கப்படும்மத மற்றும்இனரீதியிலான வன்முறைகளைத் தடுத்து நிறுத்துமாறு இலங்கை அரசைக் கேட்டுக் கொண்டது"– என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ந)

## லும்பினி சென்றார் மஹிந்த

யாழ்ப்பாணம், நவ. 27

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ள மஹிந்த ராஜபக்ஷ, கௌதம புத்தர் அவதரித்த இடமானலும்பினிக்குச்சென்று நேற்றுமுன்தினம் வழிபாடுகளில் ஈடுபட்டிருந்தார்.

சார்க் மாநாட்டில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, நேபாளத் தலைநகர் காத்மண்டுக்குச் சென்றுள்ளார். நேபாளத்தைச் சென்றடைந்த ஜனாதிபதி மஹிந்த உடனடியாகவே, கௌதம புத்தர் அவதரித்த இடமான லும்பினிக்குச் சென்றார். அங்கு விசேட வழிபாடுகளில் ஈடுபட்டார். (ந–5)

## ஏல விற்பனை

**யாழ். வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானம்**

மேற்படி ஆலயத்தில் பயன்படுத்திய 21 அடி நீளமான 2'' L கேடரால் ஆன ஊசிக்கால்கள், 8''×4'' அளவுடைய கஸ்பஸ் மரத்திலான தீராந்திகள், இரும்பிலான சுருக்குக் கதவுகள் போன்றவை 2014.12.07ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு ஆலய வளாகத்தில் ஏலத்தில் விற்கப்படும். மதிப்பீட்டுத் தொகையிலிருந்து ஏலம் கூறப்படும். பொருள்களுக்கான பணத்தை உடன் செலுத்தி பொருள்களையும் அன்றைய தினமே ஆலய வளாகத்தில் இருந்து அகற்றவேண்டும்.

25.11.2014

து. சிறீமோகன்,
பெறுநர், பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம், மல்லாகம்.

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

பெண் வரவேற்பாளர்
எமது நிறுவனத்தின் மேற்படி பதவி நிலைக்கான நேர்முகத்தேர்வு தற்போது நடை பெறுகிறது.25 வயதிற்குட்பட்ட நல்ல தொடர்பாடல் திறனும் ஆளுமையும் உள்ள பெண்கள் நேரில் வரவும்.
(05.12.14 வரை)
நொலேட்ஜ் யூனிவேர்ஸ்
Knowledge Universe
No 626,1/1,K.K.S Rd,Jaffna
021-3208342/0777-302882

## 38,000 பேர் டெங்கால் பாதிப்பு

கொழும்பு, நவ.27

இந்த ஆண்டின் இதுவரையான காலப் பகுதியினுள் நாடளாவிய ரீதியில் 38 ஆயிரத்து 751 டெங்கு நோயாளர்கள் இனங் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோய்ப் பிரிவு தெரிவித்துள்ளது.

டெங்குத்தொற்றுக் காரணமாக கடந்த ஆண்டு 32 ஆயிரத்து 63 பேரே பாதிக்கப்பட்டிருந்தனர். அதற்கமைய கடந்த வருடத்துடன் ஒப்பிடுகை யில் இந்த வருடம் அதிகளவிலான டெங்கு நோயாளர்கள் இனங் காணப்பட்டுள்ளனர்.

டெங்குத் தொற்றுக் காரணமாக மேல் மாகாணத்தைச் சேர்ந்தவர்களே அதிகளவில் பாதிக் கப்பட்டுள்ளனர். இந்தநிலையில் 56 சதவீதமானவர்கள் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும்– நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக இந்த எண் ணிக்கை அதிகரித்துள்ளது என் றும் –தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை

*My No :Np/14/41(15)/01/Tender/2015*

### வலிகாமம் தெற்கு பிரதேசசபை சுன்னாகம்
### 2015ஆம் ஆண்டுக்கான மீள் கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட மரக்கறிச் சந்தைகள், மீன் சந்தைகள், கருவாட்டுக் கடைகள், என்பவற்றை 01.01.2015 தொடக்கம் 31.12.2015ஆம் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொ.இ | விவரம் | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரப் பணம் | கேள்வி வைப்பு | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (வற் வரி தவிர) | மாத வாடகை (வற் வரி தவிர) |
|---|---|---|---|---|---|
| | சுன்னாகம் உப அலுவலகம் | | | | |
| 1 | சுன்னாகம் பொதுச் சந்தை. (மீன் வெட்டுமிடம், மீன் சந்தை வாகன தரிப்பிடம் உட்பட) | 2000.00 | 30000.00 | 8140550.00 | |
| 2 | உடுவில் கீளிச் சந்தை | 1000.00 | 10000.00 | 180000.00 | |
| 3 | சுன்னாகம் மாட்டிறைச்சிக் கடை- 01 | 1000.00 | 10000.00 | 1710700.00 | 250.00 |
| 4 | சுன்னாகம் ஆட்டிறைச்சிக் கடை- 02 | 750.00 | 7500.00 | 232750.00 | 250.00 |
| 5 | கருவாட்டுக் கடை இல 03 | 750.00 | 7500.00 | 39500.00 | 250.00 |
| 6 | முட்டைக் கடை இல 04 | 750.00 | 7500.00 | 54650.00 | 250.00 |
| 7 | கோழிக்கடை இல 06 | 750.00 | 7500.00 | 228500.00 | 250.00 |
| | உடுவில் உப அலுவலகம் | | | | |
| 1 | இணுவில் சந்தை ஆட்டிறைச்சிக் கடை (கொத்தியாலடி கொல்களத்தில் ஆடுகள் வெட்டப்படுதல் வேண்டும்) | 500.00 | 5000.00 | 74000.00 | 250.00 |
| 2 | மருதனார்மடம் சந்தை பொது மலசலகூடம் | 500.00 | 5000.00 | 15000.00 | |

1.கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் - 27.11.2014 – 11.12.2014 பி.ப 2.00 மணி வரை
2.கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளுதல் - 12.12.2014 நண்பகல் 12.00 மணி வரை
3.கேள்விப் பத்திரம் திறக்கப்படுதல் - 12.12.2014 பி.ப 2.00 மணிக்கு

கேள்வி சம்பந்தமான மேலதிக விபரங்களை 2014.10.28ஆம் திகதிய உதயன் தினக்குரல் வலம்புரிப் பத்திரிகைகளிலும் எமது அலுவலகத்தில் அலுவலக நேரத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

தி.பிரகாஷ்,
தவிசாளர்.
வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.

(சி18011)(10.6.3)

## யாழ்ப்பாணம் மாநகரசபை
### 2015 ஆம் ஆண்டுக்கான வழங்குநர்களையும் சேவை ஒப்பந்தக்காரர்களையும் பதிவுசெய்தல்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வழங்கு பொருள்களையும், சேவைகளையும் வழங்குவதற்கு தம்மைப் பதிவுசெய்துகொள்ள விரும்பும் பிரபல்யமான வழங்குநர்கள், உற்பத்தியாளர்கள், ஒப்பந்தக்காரர் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்கள் **2015.03.31** ஆம் திகதிவரை யும் எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும்.

**பொருள்கள்**

01. காகிதாதிகள் எழுதுபொருள்கள்
02. அலுவலக உபகரணங்கள் (தளபாடங்கள், இரும்பு அலுமாரி)
03. மேல்நாட்டு மருந்துவகைகள், வைத்திய உபகரணங்கள்
04. சித்த மருத்துவ மருந்துகள்
05. கோலவுடைத்துணிகள், யன்னல் துணிகள்,ஏனைய துணிவகைகள்
06. பாதணிகள், மழைக்கவசம் மற்றும் தோல்பொருள்கள்
07. கட்டடப் பொருள்கள் (சிமெந்து, ஓடுகள்) முதலியன
08. தீந்தைகள், நிறந்தீட்டும் பொருள்கள் முதலியன
09. கற்கள், மணல்கள்.
10. நீர்வழங்கு பொருள்கள், பி.வி.சி.குழாய்கள் முதலியன
11. வாகன இயந்திர உதிரிப்பாகங்கள், துணை உறுப்புக்கள்
12. மின்சார இயந்திரப்பொருள்கள் மின்கருவிகள்
13. விறகு, தேங்காய் மட்டை, கிடுகுகள்
14. எரிபொருள், உராய்வு நீக்கிகள், கிறீஸ்
15. இரும்புப்பொருள்கள்
16. பனைமரங்கள், சலாகைகள்
17. நூலகங்களுக்குரிய நூல்கள்
18. வாகனங்களுக்கான பற்றரிகள், ரயர்கள், ரியூப் முதலியன
19. தீராந்திகள், நீப்பைகள், பலகைகள்
20. தும்புத்தடி, விளக்குமாறு, நார்க்கடகம், கால்துடைப்பம், இழைக்கயிறு, தேடாக்கயிறு முதலியன.
21. சுத்திகரிப்புப் பிரிவுகளுக்கான கிருமிநாசினிகளும், மருந்துகளும்
22. கணினி, கணினிகளுக்கான உதிரிப்பாகங்கள், போட்டோ பிரதி இயந்திரம், போட்டோ பிரதி இயந்திரங்களிற்கான உதிரிப்பாகங்கள் வழங்கல்

**சேவைகள்**

01. அச்சிடுதல்
02. ரீயூப் ஒட்டுதல்
03. ஒட்டு வேலைகள், உலோக வேலைகள்
04. ஏற்றியிறக்கும் வேலைகளிற்கு பாரம் குறைந்த வாகனங்களை வாடகைக்கு விடல்.
05. சுத்திகரிப்பு, ஏற்றியிறக்கல் வேலைக்கு ரக்ரர் வாடகைக்கு விடல்
06. மின் மோட்டார்கள், மின்விசிறிகள், ஜெனரேட்டர்கள், குளிர்சாதனப் பெட்டிகள் திருத்தம்
07. மின் கலங்களிற்கு மீள மின்வலுவூட்டல்
08. இறப்பர் முத்திரை தயாரித்தல், புளக் தயாரித்தல்
09. வாகனங்கள் சேவிஸ் செய்தல்
10. போட்டோப்பிரதி இயந்திரம், சேவிஸ் செய்தல்
11. கணினிகள் திருத்தம், சேவிஸ் செய்தல்

இதற்கான படிவங்களை யாழ். மாநகரசபை கொள்வனவுப் பகுதியில் பெற்றுக்கொள்ளலாம். ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் பதிவுக்கட்டணமாக ரூபா 1000/= (வற் வரி நீங்கலாக) பெறுமதியான காசுக்கட்டளை அல்லது தபால் கட்டளை ''ஆணையாளர் மாநகரசபை யாழ்ப்பாணம்'' என்ற பெயருக்கு பெறப்பட்டு இணைத்து அனுப்பிவைக்கப்படல் வேண்டும். பணமாக செலுத்த விரும்புபவர்கள் சபையின் நானாவித இறைவரிக்கிளையில் நேரடியாக வேலை நாள்களில் செலுத்தமுடியும்.

கூறுவிலைகள் பதிவு செய்யப்பட்டவர்களிடமிருந்து கோரப்படும் போது கூறுவிலைகளை சமர்ப்பிக்கத்தவறும் அல்லது உரிய நேரத்திற்கு பொருள் க்ள்/ சேவைகளை வழங்கத்தவறும் அல்லது குறிப்பிடப்படும் மாதிரிகளுடன் ஒத்திராத பொருள்கள்/ சேவைகளை வழங்கும் எந்தவொரு வழங்குநரின் பெயரும் முன்னறிவித்தல் இன்றி பதிவுப் புத்தகத்தில் இருந்து நீக்கப்படும். இதற்கான விண்ணப்பத்தினை கடித உறையின் இடது பக்க மேல்முலையில் ''வழங்கல்கள், சேவைகள் 2015'' எனக்குறிப்பிட்டு ஆணையாளர், மாநகர சபை யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவு தபால் மூலம் அல்லது நேரடியாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

செ. பிரணவநாதன்,
ஆணையாளர்,
மாநகரசபை, யாழ்ப்பாணம்.

(சி.18801) (45.6.3) 26.11.2014

# உலகச் செய்திகள்

## நைஜீரியாவில் மனித குண்டுத் தாக்குதலில் 60 பேர் சாவு

அபூஜா, நவ.27

நைஜீரியாவில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட மனித வெடிகுண்டு தொடர் தாக்குதலில் 60 பேர் உயிரிழந்துள்ளனர்.

நைஜீரியாவில் தனி நாடு கோரிப் போராட்டம் நடத்தும் போகோ ஹரம் தீவிரவாதிகள் பல அட்டூழியங்களை அரங்கேற்றி வருகின்றனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் மெய்டுகுரி மற்றும் அபூஜா ஆகிய இடங்களில் உள்ள சந்தைகளில் இரு பெண் கள் மனித வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்தக் குண்டுவெடிப்புகளில் குறைந்தது 60 பேர் உடல் சிதறி உயிரிழந்ததாகவும், ஏராளமானோர் படுகாயம் அடைந்ததாகவும் கூறப்படு கிறது.

இந்தச்சம்பவம் குறித்த தகவல் அறிந்ததும் இராணுவமும், பொலிஸாரும் சம்பவ இடத்துக்கு



விரைந்து சென்று படுகாயமடைந்தவர்களை மருத்துவமனையில் அனுமதித்துள்ளனர். இந்தத் தாக்குதலுக்கு இதுவரை எந்த இயக்கமும் பொறுப்பேற்கவில்லை என்றாலும் போகோ ஹரம் தீவிரவாதிகள் மீது பொலிஸாருக்கு சந்தேகம் எழுந்துள்ளது. இதற்கிடையே நேற்று முன்தினம் டமாசாக் என்ற நகரை போகோஹரம் தீவி ரவாதிகள் கைப்பற்றியுள்ளதாக தெரியவந்துள்ளது. (வ)

## இந்தியாவுடன் பேசத் தயார்

### பாக். பிரதமர் தெரிவிப்பு

இந்தியாவில் தாக்குதல் நடத்த பயங்கரவாதக் குழுக்கள் எப்போதும் நாட்டின் தலைநகரான புதுடில்லியையே முக்கிய இலக்காககொண்டுள்ளனஎன்றுமத்திய உள்துறை இணை அமைச்சர் கிரண் ரிஜிஜு தெரிவித்தார்.

இதுதொடர்பாக லோக்சபாவில் கிரண் ரிஜிஜு, எழுத்து பூர்வமாக நேற்றுமுன்தினம் அளித்துள்ள பதிலில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

பயங்கரவாதக் குழுக்களின் முக்கிய தாக்குதல் இலக்காக புதுடில்லி உள்ளது. ஆகையால், டில்லியைஎப்போதும்உச்சக்கட்ட பாதுகாப்பு வளையத்தில் வைத்துள்ளோம். இந்தியன் முஜாஹிதீன் பயங்கரவாத அமைப்புக்கு நிதி உதவி, பயிற்சி, ஆயுதங்கள் ஆகியவை பாகிஸ்தானில் வழங்கப்படுகின்றன என மத்திய உளவுத் துறைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த விவகாரத்தை ராஜீய ரீதியிலும், உளவுத்துறை மட்டத்திலும் மத்திய அரசு கையாண்டு வருகிறது என்று கிரண் ரிஜிஜு தெரிவித்துள்ளார்.

டில்லியில், பயங்கரவாதத் தாக்குதல் சம்பவங்கள் நிகழக் கூடும் என்ற உளவுத்துறைத் தகவல்கள் ஏதும் வரவில்லை. (ரி)



சென்னையில் கொடி அறிமுக நிகழ்வு

## வாசன் ஆரம்பிக்கவுள்ள கட்சியின் கொடி அறிமுகம்

சென்னை,வ.27

முன்னாள் மத்திய அமைச்சர் ஜி.கே.வாசன் ஆரம்பிக்க வுள்ள புதிய கட்சியின் கொடி நேற்று சென்னையில் அறிமுகப்படுத்தப்பட்டது. மத்திய அமைச்சராக இருந்த ஜி.கே.வாசன் சமீபத்தில் தலைமையுடன் கொண்ட சில கருத்து வேறுபாடுகள் காரணமாககாங்கிரஸ்கட்சியில்இருந்து விலகினார். அதன்பின்னர் அவர் தனது ஆதரவாளர்களுடன் தனிக் கட்சி தொடங்கும் முயற்சியில் ஈடுபட்டார்.

அதற்காக தமிழகம் முழுவதும் அவர் சுற்றுப்பயணம் மேற்கொண்டு ஆதரவாளர்களைத் திரட்டி வருகிறார்.

இந்த நிலையில்,ஜி.கே. வாசனது கட்சியின் புதிய கொடி சென்னையில் நேற்று அறிமுகப்படுத்தப்பட்டது.

நாளை வெள்ளிக்கிழமை திருச்சியில் நடைபெற இருக்கும் மாநாட்டுக்குகட்சிகொடியுடன்வர, தொண்டர்கள் விரும்பியதால் அது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஜி.கே.வாசன் கட்சியின் புதிய கொடி, ஒரேஞ், வெள்ளை, பச்சை வண்ணம் கொண்டது. இந்த மூவர்ண கொடியின் நடுவில் காமராஜர், மூப்பனார் ஆகியோரின் உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. நாளை வெள்ளிக் கிழமை திருச்சியில் நடைபெறும் கூட்டத்தில்புதியகட்சியின்பெயரை அவர் அறிவிப்பார் என்று கூறப்படுகிறது. (ரி)

## பயங்கரவாதத்துக்கு கடும் எதிர்ப்பு பிரிட்டன்

லண்டன், நவ.27

பிரிட்டன் நாடாளுமன்றத்தில் பயங்கரவாதத்துக்கு எதிராகக் கடுமையான பிரேரணை தாக்கல் செய்யப்பட உள்ளதாக தகவல்கள் வெளியாகி யுள்ளன.

பிரிட்டன் பொலிஸார் சார்பாக கடைப்பிடிக்கப்படும் பயங்கரவாத எதிர்ப்பு விழிப்புணர்வு வாரத்தை திங்கள்கிழமை ஆரம்பித்து வைத்த பிரிட்டனின் உள்துறை அமைச்சர் பேசுகையில், பயங்கரவாதிகளிடம் சிக்கியவர்களை விடுவிக்கப் பிணைத் தொகை வழங்குவது பிரித்தானிய சட்டத்துக்கும் சர்வதேச சட்டங் களுக்கும் விரோதமானது.

இளம்வயது ஜிஹாதிகளின் கடவுச்சீட்டு முடக்கம், இணையத் தளப் பயன்பாட்டைக் கண்காணித்தல் உள்ளிட்ட பிரிவுகள் உள்ளன.

ஐ.எஸ். போன்ற காட்டு மிராண்



டிக் குழுக்களின் கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ளத் தொடங்கினால், மேலும் பல உயிர்கள் அச்சுறுத்தலுக்கு ஆளாகும்.

மேலும், பிணைத் தொகை வழங்கும் நடைமுறையை சர்வதேச அளவில் முடிவுக்குக் கொண்டு வரும் முயற்சியில் பிரிட்டன் முன்னிலை வகிக் கிறது என்று தெரிவித் துள்ளார். (வ)

## அண்டை நாடுகளுடன் நல்லுறவுக்கு விருப்பம்

### சார்க் மாநாட்டில் மோடி தெரிவிப்பு

காத்மாண்டு, நவ.27

உலகம் முழுவதும் உள்ள நாடுகளுக்கு அண்டை நாடுகளிடையே நல்ல உறவு இருக்க வேண்டும். தெற்காசிய நாடுகள் இணைந்து செயற்பட வேண்டும். ஒன்றுமையுடன் செயற்பட்டால் கற்றுக்கொள்ள ஏராளமானவை உள்ளன என்று சார்க் மாநாட்டில் தெரிவித்தார் மோடி.

நேபாள தலைநகர் காத் மண்டுவில் நடைபெற்று வரும் சார்க் மாநாட்டில் நேற்றுப் பேசிய பிரதமர் மோடி, இந்தியாதான் மிகப்பெரிய ஜனநாயக நாடு என்று பெருமிதத்துடன் கூறினார். இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

தெற்காசிய நாடுகளில் இணையத்தள பயன்பாடு 10 சதவீதத்துக்கும் குறைவாக உள்ளது. சார்க் அமைப்பு மிகவும் ஆற்றல் வாய்ந்த ஒன்றாக விளங்குகிறது. பொருளாதார மேம்பாடு மிகப் பெரிய சவாலாக உள் ளது. சுற்றுலாவை மேம்படுத்துவதில் சார்க் நாடுகள் கவனம் செலுத்த வேண்டும். தெற்காசிய நாடுகளுக்கு விமான சேவையை விரிவுபடுத்துவது சுற்றுலாவை மேம்படுத்த உதவும். இந்தியாவில் உள் கட்டமைப்பை மேம்படுத்த அதிக கவனம் செலுத்தப்படும். கிராமங்களுக்கு மின்சாரம் வழங்க சூரியசக்தியைப் பயன்படுத்த வேண்டும். இந்திய சந்தைக்கான பொருள்களை பிற தெற்காசிய நாடுகள் உற்பத்தி செய்ய வேண்டும். எனவே ஒருவருக்கொருவர் கற்றுக்கொள்ள அதிக விட யங்கள் உள்ளன.

தெற்காசிய நாடுகளில் இருந்து மருத்துவ உதவிக்காக இந்தியா வருபவர்களுக்கு உடனடி விசா வழங்கப்படும். 2016ஆம் ஆண்டில் சார்க் நாடுகள் சார்பில் செயற்கைக் கோள் விண்ணில் செலுத்தப்பட உள்ளது. நெருக்கடி காலங்களில் சார்க் நாடுகள் ஒருங்கிணைந்து செயற்பட வேண்டும். இந்தியாவின் எதிர்காலம் குறித்த எனது கனவு தெற்காசியாவுக்கும் பொருந் தும்.

கடந்த 10 ஆண்டுகளில் தெற்காசிய நாடுகளுக்கு இந்தியா 8 பில் லியன் டொலர் அளவுக்கு நிதி உதவி வழங்கியுள்ளது. தெற்கா சிய நாடுகளுக்குள் தடையற்ற வர்த்தகம் அதி கரிக்க வேண்டும் என்பதே இந்தியாவின் விருப்பமாகும்." –என்றார். (ரி)

## மாற்றுத்திறனாளிக்கு குவிந்த 30 ஆயிரம் வாழ்த்துமடல்கள்

பரிஸ், நவ.27

பிரான்ஸை சேர்ந்த மாற்றுத்திறனாளி இளைஞர் ஒருவருக்கு 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பிறந்தநாள் வாழ்த்துக் கடிதங்கள் கிடைத்துள்ளமை ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

பிரான்சைச் சேர்ந்த இமானுவேல் (வயது–30) என்ற இளைஞர் டவுண் ஸின்ட் ரோம்' என்ற பிறவிக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டவர்.

இந்த நோயால் பாதிக்கப்படுபவருக்கு எவ்வளவு வய தானாலும் 8 வயதுக் குழந் தைக்கு இருக்கும் மன முதிர்ச்சி தான் இருக்கும் என்று கூறப் படுகிறது.

இந்தநிலையில் இமானுவேல் பிறந்தநாள்வருவதைமுன்னிட்டு அவரது பெற்றோர் பேஸ்புக்கில் ஒரு கோரிக்கையைப் பதிவு செய்திருந்தனர். அதில் அவர்கள் தெரிவித்ததாவது:

"டவுன் ஸின்ட்ரோம் நோயால் பாதிக்கப்பட்டுள்ளஎங்கள்மகனுக்கு நவம்பர் 22ஆம் திகதி பிறந்தநாள். எனவே அவனுக்கு சிறிய வாழ்த்துக்கடிதம் அனுப்புங்கள். உங்கள் நண்பருக்கும் பரிந்துரை செய்யுங்கள்" என்று வேண்டுகோள் விடுத்திருந்தனர்.



இந்தப் பதிவு பேஸ்புக்கில் உடனடியாகப் பிரபலமாகி பல்வேறு நாடுகளிலிருந்தும் வாழ்த்துக் கடிதங்கள் வரத் தொடங்கி சுமார் 30ஆயிரத்துக்குமேற்பட்ட வாழ்த்து கடிதங்கள் குவிந்துள்ளன.

இதுகுறித்து இமானுவேலின் தாய் ஜாக்குலின் கூறுகையில், இவ்வளவு வாழ்த்துக் கடிதங்கள் வரும் எனநாங்கள் எதிர்பார்க்கவில்லை என்றும் சிலவற்றைப் பார்த்து இமானுவேலின் கண்களில் கண்ணீர் வந்துவிட்டது எனவும் மகிழ்ச்சி பொங்கக் கூறியுள்ளார்.

இமானுவேலுக்கு சில குழந்தைகள் ஓவியங்களை வரைந்து அனுப்பியுள்ளனர். மேலும் சிலர் வாழ்த்துக் கடிதங்கள், சொக்லேட், சாவிக் கொத்துகள், கேக்குகள் என ஏராளமான பரிசுகளை அனுப்பியுள்ளனர். (வ)

## முதுமையின் தத்துவங்களை கண்டுபிடித்தவர் காலமானார்

ஒமாஹா, நவ. 27

முதுமைக்கான அடிப்படைத் தத்துவங்களைக் கண்டு பிடித்த பிரபல மருத்துவ விஞ்ஞானி டென்ஹாம் ஹார் மன் தனது 98 ஆவது வயதில் நேற்று முன்தினம் காலமானார்.



அவரது தத்துவங்களை அடிப்படையாக வைத்தே புற்று நோய், அல்சைமர் மற்றும் இதர நோய்கள் குறித்தபாடங்களும்,ஆய்வுகளும் நடத்தப்படுகின்றன. தனது 90 ஆவது வயதுகளில் நெப்ராஸ்கா மருத்துவமைய பல்கலைக் கழகத்தில் பணியாற்றிய ஹார்மன் உடல் நலக்கு றைவு காரணமாக நேற்றுமுன்தினம் உயிரிழந்ததாக அம்மருத்துவ மைய செய்தித் தொடர்பாளரான டாம் ஓகான்னர் தெரிவித்தார். ஹார்மனின் ஆய்வுகள் ஆயிரத்துக்கும் மேற்பட்ட இளம் மருத்துவ விஞ்ஞானிகளுக்கு, வயது முதிர்வு தொடர்பான ஆய்வுகளை நடத்தப் பேருதவியாக இருந்ததாக ஹார் வேர்டு மருத்துவ பாடசாலை பேராசிரியரான டேவிட் சிங்க்ளேர் கூறினார்.

1954 ஆம் ஆண்டு வயது முதிர்வுக்கான அடிப்படைக் கூறுகளை ஹார்மன் கண்டுபிடித்தார்.

அவரது ஆய்வின் மூலம், ஆக்சிஜனை உட் கொள்ளும் போது வெளியாகும் துணைப் பொருள்கள் மனித உடலில் உள்ள செல்களில் வேதியியல் மாற்றங்களை ஏற்படுத்துவதால், வயது முதிர்வு ஏற்பட்டு அதன் காரணமாக உயிரிழக்க நேரிடுகிறது என்ற அரிய தத்துவம் கிடைத்தமை குறிப்பிடத்தக்கது. (வ)

# மீண்டும் வெடித்தது பெரும் வன்முறை

### அமெரிக்காவில் கறுப்பின இளைஞர் சுட்டுக் கொல்லப்பட்ட வழக்கு தொடர்பில்



அமெரிக்காவின் மிசோரி மாகாணத்தின் பெர்குசன் நகரில் கறுப்பின இளை ரான மைக்கேல் பிரவுனைச் சுட்டுக் கொன்ற பொலிஸ் அதிகாரி வில்சன் மீது விசா ரணை நடத்த முடியாது என்று நீதிபதிகள் அறிவித்ததைத் தொடர்ந்து மீண்டும் அங்கு வன்முறை வெடித்துள்ளது.

பல இடங்களில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன. அமெரிக்காவின் மிசோரி மாகாணத்தில் உள்ள பெர்குசன் நகரில் கடந்த ஓகஸ்ட் 9 ஆம் திகதி மைக் பிரவுன் என்ற கறுப்பின இளைஞரை பொலிஸ் அதிகாரி டேரன் வில்சன் சுட்டுக் கொன்றார். இதனால் அப்போது அங்கு பெரும் வன்முறை வெடித்தது. கடைகள் சூறையாடப்பட்டன. பல இடங்களில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. இந்த வழக்கில் பொலிஸ் அதிகாரி வில்சன் மீது மைக்கேல் பிரவுன் குடும்பத்தினர் அளித்த முறைப்பாட்டின் பேரில் விசாரணை நடைபெற்றது. இந்த விசாரணை முடிவ டைந்து நீதிபதிகள் தங்களது தீர்ப்பை வழங்கினர். அதில் பிரவுனை சுட்டுக்கொன்றமை தொடர்பாக வில்சன் மீது விசாரணை நடத்தப்படமாட்டாது என்று அறிவிக்கப்பட்டது. இந்தத் தீர்ப்பு வெளியானவுடன் அங்கு திரண்டிருந்த மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்கள் பொலிஸாரின் வாகனங்களை அடித்து நொறு கினர். பொலிஸார் மீது கற்களையும், போத்தல் களையும் வீசி தாக்குதலில் ஈடுபட்டனர். இதனால் பொலிஸார் கண்ணீர்புகை குண்டுகளை வீசி போராட் டக்காரர்களைக் கலைத்தனர். துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதையடுத்து அந்த மாகாணத்தில் அவசர நிலை உத் தரவைப் பிறப்பித்து ஆளுநர் நிக்சன் உத்தரவிட்டுள்ளார். அதே நேரத்தில் போராட்டக்காரர் களை பொறுமையாக கையாளு மாறு அதிபர் ஒபாமா பொலிஸார் கேட்டுக் கொண்டுள்ளார். (வ)

## மொரோக்கோ நாட்டில் வெள்ளம் 32 பேர் உயிரிழப்பு

மொரோக்கோ நாட்டில் கன மழையால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் 32 பேர் பரிதாபமாக உயிரிழந்தார். ஏராள மான வீடுகள், வீதிகள் சேத மாகியுள்ளன. வட ஆபிரிக்காவில் உள்ள மொராக்கோ நாட்டில் கடந்த சில தினங்களாக கடும் மழை பெய்து வருகிறது. இதனால் அங் குள்ள ஆறுகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. தம் சோர்ட் ஆற்றில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் கரை உடைந்து. குயில்மிம் பகுதியில் உள்ள குடியிருப்புகளில் வெள்ளம் புகுந்தது. இதில் ஆயிரக்கணக்கான வீடுகள், நூற்றுக்கணக்கான சிறிய சாலைகள், 6 முக்கிய நெடுஞ்சாலைகள் உள்ளிட் டவை சேதமாகின. வீடுகளின் முன்புநிறுத்திவைக்கப்பட்டிருந்த கார்கள், இருசக்கர வாகனங்கள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன. (வ)

# சிறந்த அமெ. அதிபராக உருவெடுப்பார் ஹிலாரி

### நம்பிக்கை வெளியிடுகிறார் ஒபாமா

வொஷிங்டன், நவ.27

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ஹிலாரி கிளிண்டன் போட்டியிட்டால் அவர் நாட்டின் மிகச் சிறந்த அதிபர்களில் ஒருவராக உருவெடுப்பார் என்று அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா கூறியுள்ளார். அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னமும் சுமார் 2 வருடங்கள் உள்ளன.



ஒபாமா இப்போது இரண்டாவது முறையாக ஜனாதிபதிப் பதவியில் இருப்பதால், அவரால் இனி ஜனாதிபதிப் பதவிக்கு போட்டியிட முடியாது. இந்த நிலையில் அவரது ஜனநாயக கட்சி சார்பில் முன்னாள் வெளியுறவு செயலர் ஹிலாரி கிளிண்டன் போட்டியிடலாம் என்று தெரிகிறது.

முன்பு அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்பாளர் தெரிவுக்கான உள் கட்சி தேர்தலில் ஒபாமாவி டம் ஹிலாரி தோல் வியடைந்ததால் தான் அத்தேர்தலில் அவர் போட்டியிட முடியாமல் போனது. இந்த நிலையில் அமெரிக்க தேசிய தொலைக்காட்சிக்கு பேட்டியளித்த ஒபாமா மேலும் கூறியதாவது: ஜனநாயகக் கட்சியில் ஜனாதிபதிப் பதவிக்கு பொருத்தமான பலர் உள்ளனர். எனினும் அவர்களில் ஹிலாரி கிளிண்டன் மீண்டும் ஜனா திபதிப் பதவிக்கு போட்டியிட்டால் சிறப்பாக இருக்கும். அவர் அமெரிக்காவின் மிகச் சிறந்த ஜனாதிபதிகளில் ஒருவராக இருப்பார். அமெரிக்க ஜனநாயக அர சியலில் ஹிலாரி பல ஆண்டுகளாக வலுவான சக்தியாக உள்ளார். (வ)



தீயில் கருகிய சுரங்கம்

## சீன நிலக்கரிச் சுரங்கத்தில் தீ விபத்து: 24 பேர் சாவு

பீஜிங், நவ. 27

நிலக்கரி உற்பத்தியில் உலகின் முன்னணி நாடாக விளங்கும் சீனாவில் நேற்று அதிகாலை ஏற்பட்ட நிலக்கரி சுரங்க தீ விபத்தில் 24 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதன் மூலம் நிலக்கரிச் சுரங்க பாதுகாப்பில் தீவிர கவனம் செலுத்தவில்லை என்பது தெளிவாகத் தெரிவதாக விமர்சகர்கள் கூறியுள்ளனர். அந்த நாட்டு அரசுக்கு சொந்த மான 'புக்சின் நிலக்கரி நிறுவன' சுரங்கத்தில் இந்தத் தீவிபத்து ஏற்பட்டுள்ளது. அங்கு நேற்று முன்தினம் நள்ளிரவில் 1.6 ரிக்டர் அளவுக்கு நில நடுக்கம் ஏற்பட்டதைத் தொடர்ந்து இந்த விபத்து ஏற்பட்டதாக அந்த நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அங்கு கடந்த மாதம் ஏற்பட்ட சுரங்க விபத்தில் 16 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் கடந்த ஆண்டு மட்டும் சுரங்க விபத்தில் 1049 பேர் உயிரிழந்துள்ளனர். (வ)

# அமெ. தாக்குதல்; அதிர்ச்சியில் ஐ.எஸ்.

ஐ.எஸ்.ஐ.எஸ் – அமைப்பின் 200 இற்கும் மேற்பட்ட தீவிரவாதிகளை அமெரிக்கபடைகள் கொலை செய்தமை, அந்த அமைப்பினரை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.



ஈராக் மற்றும் சிரியாவின் பல்வேறு பகுதிகளைக் கைப்பற்றி தனி இஸ்லாமிய தேசத்தை உருவாக்கிய ஐ.எஸ். ஐ.எஸ் அமைப்புக்கு எதிராக அமெரிக்கா உட்பட பல சர்வதேச நாடுகள் வான் வழித் தாக்குதல்களை நடத்தி வருகின்றன.

இந்த நிலையில் தீவிரவாதிகளை ஒழித்துக் கட்ட, அமெரிக்கா தலைமையிலான எஸ். ஏ.எஸ், என்று அழைக்கப்படும் கூட்டுப் படையினர் தினமும், ஐ.எஸ்.ஐ.எஸ் – இன் எட்டுப் பேரை கொல்வது என திட்டம் தீட்டியுள்ளனர்.

இந்தத் திட்டத்தின் படி முதலில் இஸ்லாமிய நாடு என்று அறிவிக்கப்பட்ட பகுதிகளில், ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகள் பதுங்கியுள்ள இடங்களை ஆளில்லா விமானங்கள் மூலம் கண்டறிகின்றனர். அதன்பின்னர் அந்தப் பகுதிகளுக்குச் செல்லும் ஹெலியிலிருந்துஇறங்கும் 'குவாட் பைக்' என்று அழைக்கப்படும் துப்பாக்கிகள் பொருத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் படையினர், தீவிரவாதிகள் பதுங்கியிருக்கும் இடத்துக்கு அருகே சென்று அதிரடித் தாக்குதலை நடத்துகின்றது. (வ)

# பல்சுவை



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்**: எதிர்பார்த்த இலாபம் தாமதப்படும். பய ணங்களில் கவனம் தேவை. உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வேலைப் பளு அதிகரிக் கும். மாணவர்கள் கல்வியில் அக்கறை செலுத்த வேண்டும்.

**இடபம்**:குடும்பத்தில் நிம்மதி குறையும்படியான ஏதாவது சம்பவங்கள் நடக்கலாம். நண்பர்கள் உற வினர்களிடம் கவனமாகப் பேசிப் பழகுவது நல்லது. எந்தவொரு காரியத்தையும் செய்யும் முன்னர் தீர ஆலோசித்துச் செய்வது நல்லது.

**மிதுனம்**: எடுத்த முயற்சிகளில் சாதகமான பயன் கிடைக்கும். எதிர்ப் பாலினத்தாரால் நன்மை உண் டாகும். வீண் செலவு உண்டாகும். தொழில் வியா பாரம் தொடர்பான முக்கிய முடிவுகள் எடுப்பதில் தடு மாற்றம் உண்டாகும்.

**கடகம்**: உத்தியோகத்தில் இருப்பவர்கள் நீண்ட நேரம் பணியாற்ற வேண்டி இருக்கும். பொறுப் புடன் செயலாற்றுவது நல்லது. குடும்ப நிம் மதி குறையக்கூடும். பிள்ளைகளுக்காக கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும்.

**சிங்கம்**: குடும்பத்தில் அமைதி குறையலாம். தேவையானவற்றை வாங்கித் தருவீர்கள். அடுத்தவர்கள் பொறுப்புக்களை ஏற்காமல் தவிர்ப்பது நல்லது. எதிர்பாராத செலவுகள் வரலாம். குடும்பத் தில் சிற்சில சண்டைகள் வரலாம்.

**கன்னி**: மனோதிடம் அதிகரிக்கும். பயன் தரும் காரியங்களில் ஈடுபடுவீர்கள். பயணங்கள் மூலம் ஆதாயம் கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த சிக்கல்கள் நீங்கி முன்னேற்றம் உண் டாகும். எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும்.

**துலாம்**: உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு பதவி உயர்வு, சம்பள உயர்வுஉண்டாகும்.வேலைப்பளுகுறையும்.குடும்பத்தில்மகிழ்ச்சியான சூழ் நிலை காணப்படும். உறவினர்கள் மத்தியில் மதிப்பு மரியாதை அதி கரிக்கும்.

**விருச்சிகம்**: பிள்ளைகளின் செயல்கள் சந்தோ ஷத்தைத் தரும். வீட்டுக்குத் தேவையான பொருள் களை வாங்கித் திருப்தியடைவீர்கள். மனதில் துணிச்சல்அதிகரிக்கும்.திட்டமிட்டபடிசெயலாற்றி காரிய அனுகூலம் பெறுவீர்கள்.

**தனுசு**: தொழில் வியாபாரம் வளர்ச்சி பெறும். இதுவரை இருந்த தொய்வு நீங்கும். இனிமையான பேச்சின் மூலம் வாடிக்கை யாளர்களைத் தக்க வைத்துக்கொள்வீர்கள். உத்தியோகத்தில் இருப்ப வர்களுக்குப் புதிய பதவி தேடிவரும்.

**மகரம்**: உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேல் அதிகாரிகள் கொடுத்த வேலையைச் செய்து முடித்து நன்மை பெறுவீர்கள். குடும்பத்தில் சிறு பிரச்சினை கள் ஏற்பட்டு நீங்கும். உறவினர் மூலம் நடக்க வேண்டிய காரியங்களில்தாமதம் ஏற்படலாம்.

**கும்பம்**: குடும்பத்தில் மனம் வருந்தும்படியான சூழ்நிலை ஏற்படும். நினைத்த காரியத்தைச் செய்து முடிக்க எடுக்கும் முயற்சிகள் சாதகமான பயன் தரும். வீண் மனக்கவலை உண்டாகும். மாணவர் கள் கல்வியில் ஆர்வம் காட்டுவார்கள்.

**மீனம்**: அறிவுத்திறன் அதிகரிக்கும். உங்களது பேச்சு மற்றவரை மயக்குவது போல் இருக்கும். சாமர்த்தியமாக காரியங்களைச் செய்து வெற்றி பெறு வீர்கள். தொழில்வளர்ச்சிக்காகசிலதிட்டங்களைச்செயற்படுத்தமுடிவெடுப்பீர்கள்.

## நாளை

**கார்த்திகை-12 வெள்ளிக்கிழமை | 28.11.2014**

திதி: ஷஷ்டி மு.ப.08.58 வரை
நட்சத்திரம்: திருவோணம் மு.ப.08.44

சுபநேரம்:06.13-07.43 வரை
இராகுகாலம்:10.43-12.13 வரை

## ஆணவத்தை அகற்றி சுயநலமற்று வாழுங்கள்

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....




தன்னலமற்ற செயலின் மூலம் மனித வாழ்வின் லட்சியமான சுதந்திரத்தை அடைவதுதான் கர்ம யோகம். தன்னலச் செயல் ஒவ்வொன்றும் நாம் லட்சி யத்தை அடை வதிலிருந்து நம்மை விலக் குகிறது. சுயநலமற்ற செயல் ஒவ்வொன் றும் நம்மை அந்த லட்சியத்தை நோக்கி இட்டுச் செல்கிறது. ஒழுக்கம் சுயநலமாக இருப்பது தீயொ ழுக்கம். சுயநலமின்மை யாக இருப்பது நல்லொழுக் கம். இந்த ஒழுக் கங்களுக்கு நான் முன்பே, சொல் லியதுபோல் சூழ் நிலை முக்கிய பங்கு வகிக்கிறது. ஒரே செயல் ஒரு குறிப் பிட்ட சூழ்நிலையில் சுயநல மற்றதாக இருக் கும், மற் றொரு சூழ்நிலையில் சுயநல முடையதாகி விடும். எனவே நாம் ஒரு பொதுக்கருத்தை மட்டுமே கூற முடியும். விளக் கங்களைப் பொறுத்தவரை யில் அந்தச் செயல் நிகழும் காலம், இடம், சூழ்நிலைஎன்பவற்றைக்கருத்தில்கொண்டு முடிவு செய்வதற்கு விட்டு விட வேண்டும். ஒரு நாட் டில் ஒருவிதமான நடத்தை நன்னெறியாகக் கருதப் படும். மற்றொரு நாட்டில் அதே நடத்தை தீயொழுக்கமா கக் கொள்ளப்படும். ஏனென்றால் சூழ் நிலை வேறுபடுகிறது. இயற்கை முழுவதன் லட்சியமும் சுதந்திரம் தான். முழுமை யான சுய நலமின்மையின் மூலம் மட் டுமே சுதந்திர நிலையை அடைய முடி யும். சுயநல மற்ற ஒவ்வோர் எண்ணமும், வாக்கும், செயலும் மனிதனை லட்சி யத்தை நோக்கி அழைத்துச் செல்கின்றன. எனவே அவை நன்னெறி என்று அழைக் கப்படுகின்றது. இந்த விளக்கம் ஒவ் வொரு மதத்துக்கும் நீதி நெறிக் கோட் பாட்டுக்கும் பொருந்துகிறது. முழுக்க முழுக்கச் சுயநலமற்ற, தனக்கென்று எதை யும் நினைக்காத, தனக்கென்று எதையும் செய்யாத, தனக் கென்று எதையும் பேசாத ஒருவனைப்பற்றி எண்ணிப் பார்த்து, அவனது நான் என்னும் ஆணவம் எங்கே இருக்கிறது என்று சொல்லும்படி, இந்தச் சிறிய நான் என்பதைப் பற்றிக் கொண்டி ருக்கும் ஒருவனிடம் கூறுங்கள். சுய நலம் அழிந்தவனின் தனித்து வம் எங்கே இருக்கிறது என்று அவன் சிந்திக்கட் டும். தனக்கென்று நினைத் தும், செயல்பட்டும், பேசியும் இருக்கும் வரைதான், ஒருவ னுக்கு நான் என்ற எண்ணம் இருக்கும்

## எமது சிந்தைக்கு ஏன் இதைச் சொல்ல வேண்டும்?

துயரமும் துன்பமும் இந்த உலகில் ஆட்சி செய்து கொண்டு இருக் கின்றபடியால் இதை எமது சிந்தைக்குச் சொல்ல வேண்டும். வாழ்க்கை யானது கஷ்டம், நோய், மயக்கம் என்பவற்றால் மிதமிஞ்சிப் போய் இருக்கிறது.

நிலையில்லாத உலகிலே மனிதனின் வாழ்வானது தாமரை இலை யில் மினுங்கித் துடித்துக் கொண்டிருக் கும் நீர்க்குமிழி போன்றது.

நன்றி



**சாயி சிந்தனை**

## சுடோக்கு எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரை களையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல் களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டாங் கள், பகுதி கள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனம் நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக் கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | 3 | | 6 | | 7 | |
| 9 | 7 | 8 | | | 4 | 6 | 3 | |
| 3 | 2 | | | | | | | |
| | | 2 | | | 7 | 1 | 6 | 3 |
| | | | 5 | | 1 | | | |
| 7 | 9 | 1 | 6 | | | 2 | | |
| | | | | | | | 8 | 6 |
| | 3 | 4 | 7 | | | 5 | 2 | 9 |
| | 8 | | 9 | | 2 | | | 4 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 6 | 3 | 7 | 8 | 5 | 4 | 2 | 1 |
| 4 | 1 | 5 | 3 | 6 | 2 | 8 | 7 | 9 |
| 8 | 2 | 7 | 9 | 4 | 1 | 5 | 3 | 6 |
| 7 | 8 | 6 | 2 | 5 | 9 | 1 | 4 | 3 |
| 2 | 5 | 4 | 6 | 1 | 3 | 9 | 8 | 7 |
| 1 | 3 | 9 | 8 | 7 | 4 | 2 | 6 | 5 |
| 6 | 7 | 1 | 4 | 9 | 8 | 3 | 5 | 2 |
| 5 | 4 | 2 | 1 | 3 | 7 | 6 | 9 | 8 |
| 3 | 9 | 8 | 5 | 2 | 6 | 7 | 1 | 4 |

CMK

# ஜோதிடம்

# சனி பெயர்ச்சி உங்களுக்கு எப்படி?

## 02.11.2014 - 2017



### 27 நட்சத்திரங்கள், 12 ராசிகளுக்குமான பலன்களும் பரிகாரங்களும்

### மேஷம்



*மேஷ ராசி நேயர்களே!*

மேஷராசிக்காரர்கள் உயரமான, ஒல்லியான, நிமிர்ந்த மற்றும்சுறுசுறுப்பானவராகவும் இருப்பர். பொது நிறம், நீண்ட கரங்கள், நீண்ட மூக்கு, நீண்ட முகம் மெலிதான கால்கள் மற்றும் நன்கு தெரியக்கூடிய நரம்புகளும் உள்ளவராக இருப்பர். துரு துரு பார்வை, ஊடுருவும் மற்றும் கூரிய பர்ர்வையுடன் கூடிய சாம்பல் நிறக் கண்களை உடையவர்கள். எதையும் உடனடியாக கிரகித்துக் கொள்ளக் கூடியவராகவும், கற்றுத் தேர்ந்த நல்ல கல்வியாளராகவும் இருப்பர். அன்பானவராகவும், நகைச்சுவை உணர்வுடையவராகவும் அமைதியானவராகவும் வெட்க சுபாவம் உடையவராகவும் மனிதாபிமானம் மிக்கவராகவும் ஓய்வற்றவராகவும் மற்றும் உணர்ச்சி மிக்கவராகவும் இருப்பர். இவர்கள் பக்தி சிரத்தை உடையவர்கள், எதையும் அலசி ஆராய்ந்து செயல்களைச் செய்வர். கலை, இலக்கியம், நடனம், ஓவியம், வர்ணம் தீட்டுதல், பயணம் மற்றும் புதியன கண்டுபிடித்தல் ஆகியவற்றில் ஆர்வ முள்ளவர்களாக இருப்பர். பல கலைகளில் வல்லவராகவும், சிறந்த வியாபார நுணுக்கங்கள் அறிந்தவராகவும் இருப்பர். இவர்கள் இரு. வேறு மாறுபட்ட துறைகளில் ஈடுபட்டு எப்போதும் ஓய்வில்லாது உழைப்பவர்கள். மற்றவர்களின் மனதில் உள்ளதைப் புரிந்து கொள்ளும் தன்மை உடையவர்கள். உறவினர்கள் மூலமாக இலாபம் அடைவர். இவர்களைப் போல், எவராலும் ஒரு செயலை சிறப்பாகவும், வெற்றிகரமாகவும், மற்றவர்களைக்கவரும் வகையிலும் செய்ய இயலாது. அதேபோல் இவர்கள் செயலில் ஒரு முகத் தன்மையின்மை யும், விரைந்து முடிவெடுக்க முடியாத தன்மையும் காணப்படும். மக் களால் போற்றப்படுவர். மனமகிழ்வுடன் இருப்பதையே விரும்புவர். ஆசை மிக்கவர்கள். ஒரே நேரத்தில் இரு வேறு வேலைகளை செய்பவர்கள். சில நேரங்களில் ஓய்வில்லாதவர்களாகவும் உணர்ச்சி மிக்கவர்களாகவும் இருப்பர்.

கடந்த இரண்டரை வருட காலமாக களத்திர ஸ்தானம் எனும் 7லில் இருந்து சனி பகவான் தற்சமயம் 2.11.2014 இல் உமது ராசிக்கு 8இல் வந்து. அங்கு அவர் 26.01.2017 வரை சஞ்சாரம் செய்வார்.

அஷ்டமச் சனி என்ற அச்சம் வேண்டாம். சனி பகவான் உமது ராசிக்கு 10, 11க்கு உடையவர். உமது ராசி சரராசி. சர ராசிக்கு 11க்கு உடையவர். பாதகாதிபதி. கெட்டவன் கெட்டிட்டால் கிட்டிடும் ராஜயோகம் என்ற கூற்றுக்கு இணங்க புதிய முயற்சிகளில் பெரும் வெற்றி கிட்டும். மனைவியின் சேமிப்பு உதவும். தந்தை வழியில் அனுகூலம் கிட்டும். 8இல் உள்ள சனிக்கு குரு பார்வை உள்ளதால் குருவால் பார்க்கப்பட்ட சனி குபேர யோகம் தருவார் என்ற கூற்றுக்கு இணங்க வாக்கினால் ஜீவனம் புரிவோர் செல்வவளம் பெறுவர்.

சனி பகவானின் 3, 7, 10 பார்வையினால் உமது ராசிக்கு 10, 2, 5 ஆகிய வீடுகளைப் பார்வை செய்கிறார். உமது ராசிக்கு 10ஆம் வீட்டை சனி பார்வை செய்வதால் தொழில், உத்தியோகம் என முன்னேற்றம் கிட்டும். 10ஆம் வீட்டுக்கு குருப்பார்வையும் உள்ளதால் செல்வந்தர்களின் உதவியும் ஒத்தாசையும் கிட்டும். விவ சாயம் செழிக்கும். வேலை தேடுபவர்களுக்கு வேலை கிடைக்கும். கறுத்தகுள்ளமான மனிதர்களால் உதவி கிட்டும். ஏற்றுமதி இறக்குமதி வாணிபம் செய்வோர் ஏற்றம் காண்பர்.

உமது ராசிக்கு தனம், வாக்கு, குடும்ப ஸ்தானமான 2ஆம் வீட்டை சனி பார்வை செய்வதால் குடும்பத்தில் தரித்திரம் தீரும். செல்வம் சேரும். தொழில் வழியில் உமது பேச்சுக்கு மதிப்புக் கிட்டும். சிலர் தனிக்குடித்தனம் செல் வர். சிலர் நீதிவான், அரச வழக்குரைஞர், மேலாண்மை பதவிகளில் அமரும் யோகம் பெறுவர். நல்ல விசுவாசம் உள்ள வேலைக்காரர்கள் கிடைக்க இடம் உண்டு.

உமது ராசிக்கு பூர்வ புண்ணிய ஸ்தானமான 5ஆம் வீட்டை சனி பார்வை செய்வதால் புத்திர பாக்கியம் இல்லாதவர்களுக்கு புத்திர பாக்கியம் கிட்டும். பூர்வீக சொத்தின் வில்லங்கம் தீரும். சிலர் பூர்வீகத் தொழிலை ஏற்று நடத்த இடமுண்டு. சிலருக்கு அரச துறைகளின் ஒப்பந்தங்களால் அனுகூலம் கிட்டும்.

13.07.2015 வரை குருபகவான் 4இலும் பின்பு 5இலும் வருவதால் புதுவீடு, மனை, பூமி, கார் என வாங்க இடமுண்டு. உமது மகனோ மகளோ வெளிநாடு செல்ல இடமுண்டு. 14.07.2015 வரை சனிக்கு குரு பார்வை உள்ளது. பின்பு சனியின் குருவுக்கும் உள்ளது குறிப்பிடத்தக்கது. இதனால் நல்லவையும் கெட்டவையும் கலந்தே நிகழும்.

ராகு தற்போது ஆறாம் இடமான கன்னிராசியில் அமர்ந்திருப்பதால் குடும்பத்தில் நிலவிவந்த பிரச்சினைகள் அகலும். எடுத்த காரியத்தில் வெற்றி உண்டாகும். பண வரவு அதிகமாகும். கேது மீனத்தில் இருப்பது அவ்வளவு சிறப் பான இடம் என சொல்ல முடியாது. உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

உடல் நிலை – உங்களது உடல் நிலையில் சிறு சிறு உடல் உபாதை கள் ஏற்பட்டு மருத்து வச் செலவுகளை ஏற்படுத்தும். தேவையற்ற பயணங்களால் அலைச்சல் அதிகரிக்கும். மனக் குழப்பங்களும், நிம்மதியற்ற நிலையும் ஏற்படும்.

பொருளாதாரம் – பொருளாதார நிலையில் தடைகள் நிலவும். சிக்கனமாகச் செலவிட்டால் மட்டுமே சேமிக்க முடியும். புத்திர வழியில் வீண் பிரச்சினைகளால் மன நிம்மதி குலையும்.

உத்தியோகத்தர்கள்– பணி புரிபவர்கள் உடல் நலக் குறைவுகளால் அடிக்கடி லீவு எடுக்க நேரிடு வதால் அதிகாரிகளின் கெடுபிடிகளுக்கு ஆளாக வேண்டி வரும். வேலைப்பளு அதிகரித்து அதிக நேரம் உழைக்க வேண்டியிருக்கும். எதிர்பார்க்கும் உயர்வுகள் தாமதப்படும்.

மாணவர்கள் – மாணவர்கள் கல்வியில் நல்ல கவனத்துடன் செயற்பட்டால் மட்டுமே எதிர்பார்க்கும் மதிப்பெண்ணைப் பெறமுடியும். தேவையற்ற நண்பர்களின் சகவாசங்கள் வீண் பிரச்சினைகளை ஏற்படுத்தும் என்பதால் நண்பர்களைவிட்டு விலகியிருப்பது நல்லது.

அதிஷ்டக் குறிப்புக்கள் – எண்–45,52,77,87, 103, 107, கல்– பவளம், கிழமை– சனி, புதன் நிறம் – நீலம், திசை – மேற்கு, கல் – நீலக்கல், தெய்வம் – ஐயப்பன்.



# 5 ஆவது இயற்கை அதிசயத்துக்கு ஆபத்து

உலகின் ஏழு இயற்கை அதிசயங்களில் 5 ஆவது அதிசயமாகக் கருதப்படும் ஆஸ்திரேலியாவின் பவளப்பாறைகள் பெருந்தொடர், உலக வெப்பமயமாதல் காரணமாக அழியும் ஆபத்தில் இருப்பதாக அமெரிக்க ஜனா திபதி பராக் ஒபாமா சொன்னாலும் சொன்னார், பருவ நிலை மாற்றம் பற்றிய விவாதம், சர்வதேச அளவில் மீண்டும் பரபரப்புக்குள் ளாகியிருக்கிறது. ஆஸ்திரே லியாவில் அண்மையில் நடைபெற்ற ஜி 20 நாடுகள் கூட்டத்தின் ஒரு பகுதியாக, குயின்ஸ்லாந்து பல்கலைக் கழகத்தில் பேசியபோது தனது இந்தக் கவலையை ஒபாமா வெளியிட்டார்.

ஒபாமாவின் கருத்துக்கு பார்வையாளர்கள் கைதட்டி வரவேற்புத் தெரிவித்தாலும், ஆஸ்திரேலிய அரசு கையை முறுக்கி கடும் எதிர்ப் புத் தெரிவிக்கிறது. உண்மையில், பவளப் பாறைகளின் நிலைதான் என்ன? ஆஸ்திரேலியாவின் வடகிழக்கு மாகாணமான குயின்ஸ் லாந்து கடல் பகுதியில் சுமார் 2300 கி.மீற்றர் நீளத்துக்கு விரிந்துள்ளது இந்தப் பவளப்பாறைகள் தொடர்.

பருவநிலை மாற்றம், கடற்கரை யோரம் நடக்கும் அளவுக்கதிகமான மேம்பாட்டு நடவடிக்கை கள், மீன்பிடி போன்றவற்றால் இந்தப் பவளப்பாறைகளுக்கு ஆபத்து ஏற்படு வதாக ஏற்கனவே குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ள நிலையில் தான், ஒபாமாவும் தனது கவலையைத் தெரிவித்துள்ளார்.

குயின்ஸ்லாந்து கடற்கரை யோரப் பகுதியில் நடந்து வரும் வேகமான தொழில்மய மாக்கல் நடவடிக்கைகள் குறித்து யுனெஸ்கோவும் ஏற்கனவே கவலை தெரி வித்துள்ளது. அதன் ஒரு பகுதியாக, யுனெஸ்கோ வின் இயக்குநர் ஜெனரல் இரினா பொகோவா ஆஸ்திரேலியாவுக்கு நேரில் சென்று இந்தப் பவளப்பாறைகளின் நிலை குறித்து ஆய்வு செய்துகொண்டிருந்த நேரத்தில் ஒபாமாவின் கருத்து வெளியானதுதான் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. ஏற்கனவே, இந்தப் பவளப் பாறைகளைப் பாதுகாக்க ஆஸ்திரேலியா வின் மத்திய அரசும், குயின்ஸ்லாந்து மாகாண அரசும் ஒரு தொலை நோக் குத் திட்டத்தை வகுத்திருந்தாலும், இன்னமும் வரைவு வடிவத்திலேயே இருக்கும் அத்திட்டத்தால் பெரிய பலன் ஒன்றும் ஏற்படாது என ஆஸ்திரேலியா வின் அறிவியல் அகடமி தெரிவித் துள்ளது.

ஆனால், ஆஸ்திரேலிய அரசு இதை மறுக்கிறது. பருவ நிலை மாற்றத்தால் பவளப்பாறைகளுக்கு ஆபத்து இல்லை; விவசாய நிலங்களிலிருந்து வெளியேறும் இரசாயன உரங்கள் கலந்த கழிவுகள், இயற்கைப் பேரிடர் இரண்டினால் மட்டுமே ஆபத்து. ஆனால், அந்த ஆபத்து நிகழ 200 ஆண்டுகளாவது ஆகும்' என்கிறார் அந்த நாட்டின் வெளியுறவு அமைச்சர்.

குயின்ஸ்லாந்து கடலோரப் பவளப்பாறை களின் பாதுகாப்பு குறித்து ஆய்வு செய்து வரும் யுனெஸ்கோ, அவை அழிவின் பிடியில் உள்ளதா, இல்லையா என்பது குறித்து அடுத்த ஆண்டு அறிவிக்கவுள்ளது.

பருவநிலை மாற்றம் குறித்த விழிப்புணர்வு உலகம் முழுவதும் பரவலாக எழுந்துள்ள நிலையில், எந்த ஒரு பாரம்பரிய சின்னமுமே பாதுகாக்கப்பட வேண்டிய தன் முக்கியத்துவம் அதிகரித்துள்ளது. இதில் அமெரிக்கா வின் தலையீட்டை ஆதிக்க மனப்பான்மையாக எடுத்துக் கொண்டாலும் சரி, அக்கறையாக எடுத்துக்கொண்டாலும் சரி ஆஸ்திரேலிய விஞ்ஞானிகள் பவளப் பாறைகள் அழிந்து விடும் ஆபத்து உள்ளதாகவும், அரசு இது குறித்து போதிய அக்கறை காட்டவில்லை எனவும் குற்றம் சாட்டியுள்ளனர்.

# செய்திகள்

## டெங்கு ஒழிப்புத் திட்டம் அக்கரைப்பற்றில் தீவிரம்

அக்கரைப்பற்றில் டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டதை அடுத்து ஆலையடி வேம்பு பிரதேசத்தில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம்தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. கடந்த செவ்வாய்க்கிழமை ஆலையடி வேம்பு பிரதேசத்துக்குட்பட்ட அக்கரைப் பற்று–9ஆம் பிரிவில் முன்னெச்சரிக்கை யாக திடீர் சோதனையை மேற்கொண்ட பொதுச் சுகாதார பரிசோதகர் ப.கேதீஸ் வரன் தலைமை யிலான குழுவினர் டெங்குபரவக்கூடிய வகையில் சுற்றுச் சூழலை வைத் திருந்தவர்களுக்கு எச்ச ரிக்கை விடுத்தனர். மழையுடன் கூடிய காலநிலை நிலவுவதால் டெங்கு நுளம்பு கள் பரவும் சாத்தியக்கூறுகள்அதிகமாகஉள்ளதாகதெரி வித்த பரிசோதனைக் குழுவினர், இனங் காணப்பட்ட இடங்களைதுப்பரவுசெய்வதற் கான அறிவுறுத்தல்களையும் வழங்கினர். இந்தப் பரிசோதனைக் குழுவில் பிரதேச செயலகஉத்தியோகத்தர்கள்இசுகாதாரவைத் திய பணிமனை உத்தியோகத்தர்கள் உள் ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (த–10)

### 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 19.08.1960 மறைவு 15.12.2007



அமரர் கந்தையா தியாகராஜா

(உரிமையாளர் அம்மன் வணிக மாளிகை - புதுக்குடியிருப்பு.)

திதி: 27.11.2014

அன்புத் தெய்வமே! பாசமிகு அப்பாவே!
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஏழு ஆண்டுகள்
கழிந்து விட்டாலும்
உங்கள் அன்பு நினைவுகள் என்றும்
எம் மனதில் நிலைத்திருக்கும்.
உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்

புதுக்குடியிருப்பு.

மனைவி,
பிள்ளைகள், சகோதரர்கள்,
அம்மன் ஹாட்வெயார்-புதுக்குடியிருப்பு.

### 31ஆம் நாள் நினைவுப் பிரார்த்தனை



அமரர்

இராசையா ஆறுமுகம்

கடந்த 29.10.2014அன்று சிவபத மடைந்த எமது என்புத் தெய்வத்தின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை 28.11.2014 வெள்ளிக்கிழமை காலை எமது இல்லத்தில் நடைபெற்று, அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

மாமுனை,
செம்பியன்பற்று குடும்பத்தினர்.

### 100ஆவது பிறந்தநாள் நினைவஞ்சலி



திருமதி
தங்கம்மா
விஜயரத்தினம்
(27.11.2014)

தோற்றம் 27.11. 1914

மறைவு 07.04.2000

அன்புத் தாயே நீங்கள் எங்களோடு 100ஆவது அகவை வரை இருப்பீர்கள் என்று எதிர்பார்த்திருந்தோம்.
ஆனால் அகவை 86 இல் தலைமன் கலட்டி விநாயகப் பெரு மான் பாதங்களைச் சென்றடைந்தீர்கள். இப்போது உங்கள் நினைவுகளை இட்டு உங்கள் பிறந்தநாளிலே அஞ்சலி செலுத்து கின்றோம்.

ஆனைக்குட்டி வளவு,
தெல்லிப்பழை.
021 224 1811 (54426)(5.6.3)

அன்புள்ள
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்
மற்றும் உறவினர்கள்.

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி
குணேஸ்வரி
கனகசபாபதி



தோற்றம் 12.08.1944

மறைவு 07.12.2013


திதி: 27.11.2014

பண்பின் உறைவிடமாய் பாசத்தின் திருவுருவாய்
மலர்ந்த எம் குடும்பக் குலவிளக்கே!!
அருமை குடும்பத் தலைவியே!
எம் எல்லோருடைய இதயங்களிலும் என்றும் அணையாத சுடராய்
நீங்காத நினைவுகளுடன் ஜொலித்துக்கொண்டிருக்கிறாய்
ஆண்டொன்று கடந்தாலும் மறையவில்லை உன் நினைவு
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

கணவர் க.கனகசபாபதி
(ஓய்வுபெற்ற இலங்கை
மின்சாரசபை உத்தியோகத்தர்.

42, திருமகள் வீதி,
அரியாலை.

### 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 07.09.1939

மறைவு 28.10.2014

அமரர் சின்னையா
சுப்பிரமணியம்

உங்கள் ஆன்மா இறைவனடியில் சேர்ந்து
சாந்திபெற அனைவரும் பிரார்த்திக்கின்றோம்

கடந்த 28.10.2014 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எங்கள் அன்புத் தந்தையின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டு பல வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும், தொலைபேசி மூலம் ஆறுதல் கூறிய உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், மலர் வளை யம் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், ஆகாரம் அளித்து ஆறுதல் கூறியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரி வித்துக் கொள்வதோடு, இன்று (27.11.2014) வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ள வீட் டுக்கிருத்தியத்திலும், தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத் திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல. 773, ஆறுமுகம் வீதி,
வட்டக்கச்சி. 024 324 6721.

குடும்பத்தினர்.
உறவினர்.

## ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு என்றுமில்லாதவாறு ஆயத்தங்கள்

பட்டிருப்பு, நவ, 27

இலங்கையில் தனிப்பெரும் தமிழ்த் தொகுதியான பட்டிருப்புத்தொகுதியின் பல இடங்களிலும் ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு என்றுமில்லாதவாறு பாரிய பதாகைகளும் அலங்காரங்களும் முன் னெடுக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக களுவாஞ்சிக்குடி, பட்டிருப்பு, களுதாவளை, பெரியபோரதீவு, வெல்லா வெளி பொன்கோட்டைக்கல்லாறு போன்ற இடங்களில் ஜனாதியின் பதாதைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. பெரிய போர தீவு, வெல்லாவெளி ஆகியவற்றில் உப காரியாலங்களும் களுவாஞ்சிக்குடி பிரதான வீதியில் பிரதான காரியாலய மும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் கிளைக் காரியாலயங்களும் அமைக்கப்பட்டுள் ளன. எந்தவொரு ஜனாதிபதி தேர்தலின் போதும் இல்லாத வகையில் இவ்வாறான ஏற்பாடுகள் முன்கூட்டியே இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(த–10)

## இயற்றாலை வாசிக்கு விளக்க மறியல்

தென்மராட்சி,நவ. 27

வீதியில் சென்றவரை பொல்லால் அடித் துக்காயப்படுத்தியதாவளை இயற்றாலை வாசியொருவரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றில் திங்கட்கிழமை உத்தரவிடப் பட்டது.

அதேஇடத்தைச் சேர்ந்த செல்லையா நவரத்தினம் என்பவர் கடைக்குச் சென்று விட்டு திரும்பிய தன்னைப் பொல்லால் தாக்கி காயப்படுத்தியதாக செய்த முறைப் பாட்டை அடுத்து கொடிகாமம் பொலிஸார் குறிப்பிட்ட சந்தேகநபரை கைது செய்தனர். இவரை திங்கட்கிழமை சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தியபோது விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிடப் பட்டது. (வ–9)

### கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை திருமதி
சீதாதேவி இந்திரன் அவர்களின்
அன்புத் தாய்
திருமதி சிவபாக்கியம் நடராசா
அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும் பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங் களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/அல்லாரை அரசினர் தமிழ்வித்தியாலயம்,
மீசாலை. (41513)(10.6)

### துயர் பகிர்கின்றோம்



எமது கல்லூரி ஆசிரியை
திருமதி விக்னேஸ்வரி மணிவண்ணன்
அவர்களின் பாசமிகு மாமி
திருமதி சிவபாக்கியம் நடராசா
அவர்கள் 24.11.2014 அன்று
இறைபதம் எய்தியதையிட்டு
துயருறும் குடும்பத்தினரின் துயரில்
நாமும் பங்குகொள்வதுடன்,
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கல்லூரிச் சமூகம்,
யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி.

# விளம்பரங்கள் / செய்திகள்


**முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும்**
**81 ஆம் ஆண்டு பிறந்ததினமும்**

தோற்றம் 10.11.1933 மறைவு 09.12.2013

அமரர்
**மயில்வாகனம் பொன்னுத்துரை**



ஆண்டொன்று ஆனாலும் ஆறுவதில்லை
உங்கள் நினைவு
அன்பான தந்தையாய், நல் அறிவூட்டும் ஆசானாய்
இந்த அவனியிலே - எம்மை
வாழவைத்த தெய்வமே! -உம்
அன்பு முகம் அகலவில்லை. எப்பொழுதும்
உமது அரும்பணியை எவர் மறப்பார் அவனியிலே
உங்கள் ஆத்மா சாந்தியடைய
பொலிகைக் கந்தனை வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

நவிண்டில், கரணவாய் மத்தி, கரவெட்டி.
T.P: 021 226 2390
குடும்பத்தினர்.


## பயங்கரவாதத்தை எதிர்க்க சார்க் இணைய வேண்டும்

### 18ஆவது மாநாட்டில் ஜனாதிபதி கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 27
பயங்கரவாதத்தை எதிர்கொள்ள சார்க் நாடுகள் இணைந்து செயற் பட வேண்டும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள் ளார். நேற்று சார்க் மாநாட்டில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

நேபாளத் தலைநகர் காத்மண்டு வில் 18 ஆவது சார்க் மாநாடு நேற்றுக் காலை ஆரம்பமானது. இந்த மாநாட்டில், இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம், பூட்டான், மாலைதீவு, ஆப்கன், இலங்கை ஆகிய எட்டு நாடுகளின் தலைவர்கள் பங்கேற்றுள்ளனர்.

அங்கு உரை நிகழ்த்திய ஜனாதி பதி மஹிந்த ராஜபக்ஷ, "தீவிர வாதம் இலங்கையின் உறுதிப் பாட்டுக்கு அடிப்படையான சவாலாக இருந்து வருகிறது. தீவிர வாத சவால்களை எதிர்கொள் வதற்கு சார்க் நாடுகள் ஒருங் கிணைந்து செயற்பட வேண் டும்"– என்று வலியுறுத்தினார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும், தீவிரவாதம் குறித்த கடுமையான கருத்துக்களை இந்த மாநாட்டில் முன்வைத் தார். 2008 ஆம் ஆண்டு இதே நாளில், மும்பையில் நடத்தப் பட்ட தீவிரவாத தாக்குதலை நினைவு கூர்ந்து அவர் உரை யாற்றினார்.

**ஜனாதிபதிகளின் சந்திப்பு**

சார்க் மாநாட்டில் பங்கேற்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆப்கன் ஜனாதிபதியைச் சந் தித்து இருதரப்பு பேச்சு நடத்தியுள்ளார். காத்மண்டுவில் உள்ள விடுதியொன்றில் இந்தச் சந் திப்பு நடந்துள்ளது. (ற–5)

## ஜனாதிபதித் தேர்தல் களத்தில் சிறிதுங்க

கொழும்பு, நவ.27
எதிர்வரும் ஜனாதிபதித் தேர்த லில் களமிறங்க உள்ளதாக ஐக்கிய சோசலிச கட்சியின் பொதுச் செயலாளர் சிறிதுங்க ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடை பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பிலேயே அவர் இவ்வாறு கூறி னார்.

இடதுசாரி கட்சிகள் இணைந்து பொது வேட்பாளர் ஒருவரை தேர்தலில் நிறுத்துவது தொடர் பாக நடத்தப்பட்ட பேச்சு தோல் வியில் முடிந்தது. முன்னிலை சோசலிசக் கட்சி, நவசமசமாஜ கட்சி உட்பட பல்வேறு இடது சாரி கட்சிகளுடன் இது தொடர்பில் பேச்சு நடத்தப்பட்டது. அதில் இணக்கப்பாட்டுக்கு வர முடியாத காரணத்தால், எதிர் வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட தீர்மானித்துள் ளேன் – என்று சிறிதுங்க ஜய சூரிய கூறினார்.

சிறிதுங்க ஜயசூரிய, 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலிலும் போட்டியிட்டிருந் தார். (ற)


**முதலாம் ஆண்டு நினைவலைகள்**



தோற்றம்
11.04.1993

மறைவு
07.12.2013

செல்வன்
**சண்முகானந்தன் யதுஷன்**
(மாணவன் - A/L - 2012 உயிரியற் பிரிவு - யா/ இந்துக்கல்லூரி)

பத்துத் திங்கள் உனைச் சுமந்து உன் கால்கள் வயிற்றில்
உதைத்த போதெல்லாம் நான் இருக்கின்றேன் - அம்மா
எனக் கூறியதாய் நினைத்தேன் மார் மேலும் தோள் மேலும்
மனத்திலே உனைச் சுமந்து மண் போற்ற வளர்த்த - என்
மாணிக்கமே எங்கு போனாயடா???

கவிஞனாய் கலைஞனாய் அறிவியலாளனாய்
ஆன்மீக விரும்பியாய் - உனை ஆளாக்கி
"மகன் தந்தைக்காற்றும் உதவி இவன் தந்தை எந் நோற்றான் கொல் எனும் சொல்"
என்பதற்கிணங்க எத்தனை பதக்கங்கள் பண்ணிசைப் பாடல்கள், திருமுறை ஓதல்கள்,
வில்லிசை, நாடகங்கள் என எமை எல்லாம் உன் மீது விருப்பம் கொள்ளவைத்தவனே
இறைவன் தந்த செல்வமென இறுதிவரை நம்பியிருந்த எம்மை விட்டு எங்கு சென்றாயடா???

அறிவியல் பெட்டகமாய் அன்பிலே வித்தகனாய் அருள் பெறும் ஞானியாய்
இசைப் பிரியனாய் இளவல் வழிகாட்டியாய் சமூக சேவகனாய் சகலரும் விரும்பும் வண்ணம்
சந்து பொந்து எங்கும் - உன் கால் தடம் பதியாத இடம் ஏது? அறுபது வரை முடிப்பதை
இருபதிற்குள் முடித்தது இதற்காகத் தானா???

எம் கண்மணியே - நீ எட்டிய தூரம் சென்றதை நினைக்க முடியவில்லை - எமது
உள்ளக் குமுறல் - உன் உயிர்வரை கேட்பதை அறியாயோ?
பெற்றவரை விட்டு பிரிய சகோதரரைவிட்டு உற்றவரை விட்டு ஊராரை விட்டு நீ போனாலும்
உன் நினைவு எமை விட்டு நீங்காது - என்றும் நின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
கற்பகப் பிள்ளையாரின் அடிபணிந்து நிற்கிறோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.
குடும்பத்தினர்.

(41519)(45.6.3)



**நான்காம் ஆண்டு நினைவஞ்சலி**

மண்ணில் 15.04.1954
மனங்களில் 11.12.2010

திருமதி
**சின்னத்துரை பரமேஸ்வரி**



ஆறுதல் எமக்குத்தர இங்கு
ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
அம்மா உன்னைப்போல வருமா?
விழிமூடித்தூங்கும் வேளை தினமும்
அழுகின்றோம் உன் நினைவால்
மனதுக்குள் வெம்பி அழும் எங்கள்
அன்பு அப்பாவுக்கு ஆறுதல் தர
இனி யாருமில்லை
பாசப்பேரப்பிள்ளைகளும் இங்கு
பரிதவிக்கின்றனர் உன் வரவை எண்ணி
உன் அம்மாவும் உனது
உடன்பிறப்புக்களும்
உனது நினைவுடன் தினமும்
வாடுகின்றனர்.
அம்மா! உனது மடியில் தலை சாய்த்து
சுகம் காணும் அந்த நாள்
இனி வருமா?
இந்த மண்ணில் எம் தாயாய் நீ
மறுபடியும் பிறக்க இறைவனை
தினமும் வேண்டுகின்றோம்.

நூலக வீதி, கைதடி தெற்கு.
குடும்பத்தினர்.



**31 ஆம் நாள் நினைவஞ்சலி**



கொக்குத்தொடுவாயைப் பிறப்பிடமாகவும்
வசிப்பிடமாகவும் கொண்ட
**அமரர் செல்லையா சிற்றம்பலம்**
(ஓய்வுபெற்ற தபால் உத்தியோகத்தர்)
அவர்களின்
தெய்வீகமெய்திய திதி நிருணயம்
ஆண்டு ஜய வருடம் ஐப்பசி திங்கள்தனில்
பூண்ட சுடர் நாளபர பஞ்சமி நா(ள்) - நீண்டபுகழ்
சிற்றம்பலம் ஓய்வுபெற்ற தபால் ஊழியர்
இறைவன் பாதம் நண்ணிய நாளாம்

மண் மகிழ 09.12.1949
மனம் நெகிழ 28.10.2014

சுபாஸ்கரன் (மகன்)
கொக்குத்தொடுவாய் தெற்கு,
முல்லைத்தீவு.

# செய்திகள்

## விசேடதர தாதிய அலுவலர்களுக்கான மும்முனை மாநாடு

தென்மராட்சி, நவ.27


சுகாதார திணைக்கள நிறுவனங்களில் கடமையாற்றும் மருத்துவ சேவைக் கல்வி மற்றும் பொதுச் சுகாதார சேவை ஆகியவற்றைச் சேர்ந்த விசேட தர தாதிய உத்தியோகத்தர்களுக்கானமும்முனை வருடாந்த மாநாடுநாளைவெள்ளிக்கிழமை கொழும்பு–10 இல் உள்ள தேசிய மருத்து வமனையில் நடைபெறும்.

இந்த மாநாட்டுக்கு விசேட தர தாதிய உத்தியோகத்தர்கள் கலந்து கொள்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு சுகாதார அமைச்சின் மருத்துவ சேவை பிரதிப் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் (திருமதி) லக்ஸ்மி சிசோமதுங்க அனைத்து மாகாண சுகாதார சேவை கள் பணிப்பாளர்கள், தேசிய மருத்துவமனை, போதனா மருத்துவ மனை பொது மருத்துவமனைகளின் பிரதி மருத் துவ அத்தியட்சகர்கள், சுகாதார விஞ்ஞான தேசிய நிறு வன பணிப்பாளர் ஆகியோ ருக்கு அறிவித்துள்ளார். (வ–9)

## மல்லாவியில் நடைபெற்ற நடமாடும் மருத்துவமுகாம்

முல்லைத்தீவு, நவ.27

வடக்கு மாகாண சுகாதார அமைச்சரின் வழிகாட் டலில் முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணி மனையால் கடந்த வெள்ளிக் கிழமை நடமாடும் மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. மல்லாவி ஆதார மருத்துவமனையில் நடை பெற்ற இந்த வைத்திய முகாமில் பெருமளவிலான பொது மக்கள் கலந்து கொண்டனர்.




பின்தங்கிய பிரதேசங்களை சேர்ந்த மக்களுக்கு மருத்துவ நிபுணத்துவ சேவை கிடைக்கும் நோக் கில் ஒழுங்கு செய்யப் பட்ட இம் மருத்துவ முகாமில் பொது மருத்துவம், மகப் பேற்றியல், குழந்தைகள் நலம், கண்சி கிச்சை, ஆய்வு கூட சோதனைகள் என்கன் நடைபெற்றன.

இவ்வாறான நடமாடும் மருத்துவ முகாம்கள் மாதம் இருமுறை வடக்கின் அனைத்து மாவட்டங்களிலும் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண் சுகாதார அமைச்சரின் ஊடகப்பிரிவு தெரிவித் துள்ளது.

பெரும்பாலும் அடுத்த நடமாடும் மருத்துவ முகாம் கிளிநொச்சி மாவட்டத்தில் நடாத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## உதய்புரம் கிராமத்துக்கான பாதை புனரமைக்கவில்லை

### அந்தப்பகுதி மக்கள் விசனம்

கொழும்புத்துறை, நவ.27

கொழும்புத்துறை உதயபுரத்துக்குச் செல்லும்பிரதானபாதைநீண்டகாலமாக சீரமைக்கப்படாமையால் அந்தப் பகுதி மக்கள் போக்குவரத்தில் பல்வேறு சிரமங்களை அனுபவித்து வருவதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

அந்தக்குடியேற்றக்கிராமத்துக்குச் சென்று வர கடற்கரை யோரமாக உள்ள ஒரேயொரு பாதையே பயன்படுத்தப்பட்டு வருகிறது. உதயபுரம் கிராமம் ஆரம்பிக்கப்பட்டு பல தசாப் தங்களைக் கடந்த போதிலும் இதுவரை சீரான பாதை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட வில்லை.

தற்போது குண்டும் குழியு மாகக் காணப்படும் மணற் பாதையானது மழை காலங்களில் மழைநீரும் பெருக்கெடுக்கும் கடல்நீரும் தேங்கி நின்று போக்கு வரத்து செய்ய முடியாத நிலை வருடாந்தம் காணப் படுகிறது.

இடையிடையே இடிபாட்டுக் கற்கள் போடப் பட்ட போதிலும் வீதி சீராக அமைக்கப்படவில்லை. நூற்றுக்கணக்கான குடும்பங்கள் வசிக்கும் குறித்த கிராமத்திலிருந்து நோயாளர்கள் மற்றும் அவசர தேவையுடையோர், பாட சாலை மாணவர்கள் வெளி யிடங்களுக்கு சென்று வருவதில் பல இடர்களை எதிர் கொள்ள வேண்டிய அவல நிலை காணப்படுவதாக விசனம் தெரிவிக்கப்ப டுகின்றது.

எனவே தனித்துவிடப்பட்ட கிராமமாகக் காணப்படும் தமது கிராமத்துச் செல்லும் பிரதான வீதியை மக்களின் வசதிகருதி சீர்செய்து தருமாறு உரிய அதிகாரிகளிடம் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (வ–135)


### மரண அறிவித்தல்



**திருமதி அன்னலட்சுமி சிவநேசன்**

புத்தூர் கிழக்கு, குமாரசாமி வீதி யைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்ன லட்சுமி சிவநேசன் நேற்று (26.11.2014) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா-சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், சிவநேசனின் (சட்டத்தரணி) பாசமிகு மனைவியும், தபோதரன் (கனடா), ரமேஸ்தரன் ஆகியோரின் பாசமிகு தாயும், யசிதாவின் (கனடா) மாமியும், கியாஷனின் அப்பம்மாவும், கந்தராசா, கரு ணானந்தம், பஞ்சலிங்கம் (கனடா), பரமசிவம் (கனடா) ஜெயலக்சுமி (ஆசிரியர் புத்தூர்-ஸ்ரீசோமாஸ் கந்தக் கல்லூரி) ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 30.11.2014 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அந்திராணை இந்து மயா னத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. சிவநேசன் (கணவர்) (சட்டத்தரணி)
077 375 4243, 077 031 7614,
021 321 9848

புத்தூர் கிழக்கு,
புத்தூர்.

(54103) (10.6.3)

### மரண அறிவித்தல்



**திருமதி பரமேஸ்வரி கதிரேசு**

மூளாயைப் பிறப்பிடமாகவும் தற்போது பரசங்குளம் புளியங்குளத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி கதிரேசு நேற்று (26.11.2014) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரேசுவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பாக்கியலட்சுமி மற்றும் பத்மநாதன், யோகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், விக்கினேஸ்வரன், வள்ளிநாயகி, கைலைநாயகி, செல்வநாயகி, இராஜேஸ்வரன், ஜெகதீஸ்வரன் (சின்னத்தம்பி) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற செல்வராசா மற்றும் நீதிராசா, சண்முகராசா, செல்வநாயகதேவி, அமுதா, வசந்தகுமாரி ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.11.2014) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் புளியங்குளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பரசங்குளம்,
புளியங்குளம்.
T.P: 077 128 1707

(54103) (10.6.3)

தகவல்: ஜெகதீஸ்வரன் (மகன்)
(சின்னத்தம்பி -
சிவன்பிள்ளை Hard Ware)

### மரண அறிவித்தல்



**Dr. வினாசித்தம்பி சிவப்பிரகாசம்**

மலேசியாவைப் பிறப்பிடமாகவும், யாழ். காங்கேசன்துறை, தலவில, தெஹிவளையை வசிப்பிடமாகவும், கனடாவை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட வினாசித்தம்பி சிவப்பிரகாசம் 24.11.2014 திங்கட்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வினாசித்தம்பி - தெய்வயானை தம்பதிய ரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், தனேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம், காலஞ்சென்ற சிவபாக்கியம், ஆனந்தகிருஷ்ணன் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், விஜித்தா, விஜித்குமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும், பாலசிறீதரன், டீப்ப பாலினி ஆகியோரின் அன்பு மாமனும், ஆரபி, கணா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 29.11.2014 சனிக்கிழமை கனடா (Williamsburg Crematorium Centre 1541 Fisher Hallman rd, Kitchener, on N2R1P6 இல் காலை 9.00 -11.00 மணிக்கு நடைபெறும், இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்பு: மனைவி - 0014 2525 62100
மகன் - 011 273 9355

தகவல்: குடும்பத்தினர்

(சி.17867) (45.3)

### மரண அறிவித்தல்



**கணபதிப்பிள்ளை தில்லையம்பலம்**
(இளைப்பாறிய OA வவுனியா கச்சேரி)

காரைநகர் ஆலடியைப் பிறப் பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை தில்லையம்பலம் 25.11.2014 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - பொன்னுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற வர்களான வைத்திலிங்கம் - அமுதவள்ளி தம்பதியரின் அன்பு மருமகனும், யோகாம்பிகையின் (சிவமணி) அன்புக் கணவரும், தில்லைநாயகி (ஆசிரியர்- மல்லாகம் மகாவித்தியாலயம்), கணபதி (நோர்வே), தில்லைராணி (கனடா), தில்லைநாதன் (கனடா), தில்லைரூபி (காரைநகர்), தில்லைவதனா (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், முத்தமிழ்ச்செல்வன் (யாழ்ப்பாணம்), சிவராணி (நோர்வே), யோகராஜா (கனடா), சுகுமார் (லண்டன்) ஆகியோரின் மாமனும், தீர்த்தன், பிறிந்தா, பிரதாஜினி (யாழ்ப்பாணம்), பவித்ரா, அஸ்வின், (நோர்வே), செந்தூரா, மதுரா, ஜெயன்திரா (கனடா), மயூரா (கனடா) ஆகியோரின் பாசமிகு அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான தம்பையா, இரத்தினம், பாக்கியம், இலட்சுமி, பராசக்தி, ஆறுமுகசாமி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (30.11.2014) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஆலடி, காரைநகர்,
077 270 2094, 021 221 1425

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள், மருமக்கள்,
மற்றும் உற்றார், உறவினர்.

(41542) (46.3)

# விளம்பரங்கள்

## மரண அறிவித்தல்கள்

### மயில்வாகனம் இளமுருகனார்

வேலணை மேற்கு, வண்ணாம்புலத்தைச் சேர்ந்த மயில்வாகனம் இளமுருகனார் நேற்று (26.11.2014) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம்-அன்னம்மா தம்பதியரின் ஏக புத்திரனும், காலஞ்சென்ற வர்களான சிவகுரு-சின்னம்மா தம்பதியரின் மருமகனும், நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், மீனலோஜினி, மலர்மகள், ஞானகலை ஆகியோரின் அன்புச் சகோதரனும், கணேசபிள்ளை, காலஞ்சென்ற குணபாலசிங்கம் மற்றும் இராசரெத்தினம், பாலசுப்பிரமணியம், கதிரவேலு, விசுவநாதன், கிருஷ்ணமூர்த்தி ஆகியோரின் மைத் துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.11.2014) வியாழக்கிழமை மு.ப 11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வேலணை மேற்கு அம்பலவி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(41564)(10.6)

தகவல்: குடும்பத்தினர்.

### திருமதி சின்னம்மா கந்தையா (மாம்பழம்)



மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி சின்னம்மா கந்தையா நேற்று (26.11.2014) புதன்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான மூத்தார்-சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கந்தையாவின் (மாம்பழம்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தம்பையா, சின்னத்தம்பி, இளையதம்பி ஆகியோரின் அருமைச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான இராசலிங்கம் (ஈழநாடு), இராசநாயகம் (காங்கேசன் துறை சிமெந்து கூட்டுத்தாபனம்) மற்றும் இராசேஸ்வரி (யாழ்ப்பாணம்), இராசசிங்கம் (கொழும்பு), இராசலட்சுமி (கனடா), இராசபுஸ்பம் (காங்கேசன்துறை சிமெந்து கூட்டுத்தாபனம்), இராசமணி (செல்வம்- Canada) ஆகியோரின் பாசமிகு தாயும், கந்தசாமி (பயினா), கண்மணி, காலஞ்சென்ற இராஜசிங்கம் மற்றும் பிரேமாவதி, அருளானந்தன், ஆனந்தன் ஆகியோரின் பாசமிகு மாமியும், நிர்மலா-லோயட், பகீரதன்-அனுலா (Canada), காண்டீபன்-சர்மிளா (London), சகுந்தலா-கருணாநிதி(France), சாந்தினிதேவி-பாலச்சந்திரன் (London), காலஞ்சென்றவர்களான சரோஜினிதேவி, கருணாகரன் மற்றும் கிருபாகரன்-லிலியன் (France), ஜெயப்பிரியா, விஜியலட்சுமி-முருகானந்தம், சுகாயினி- கிருஷ்ணா, காலஞ்சென்ற குகன் மற்றும் யதூசன் (வவுனியா), வாசுகி-திருக்குமரன் (Canada), கஜன், மயூரன் (Canada), ஐங்கரன், அஷானி, அச்சுதன், றஜிப்பிரசாத், கோகுலன் (யாழ்ப்பாணம்), யாதவன், மெலானி (Canada) ஆகியோரின் பேர்த்தியும், சிகான், ஜெஸ்மின் (Canada), இந்துசன், ஜனார்த்தன், ஸ்டீபன் (France), சாரங்கன் (London) அக்ஷை (France), அனிகா, அமிசா, அஸ்மிகா (Canada), ஜெலக்சனா, ஜெரோசன், ஜெனுசன் (வவுனியா), விதுசனன், விதுசனா (வவுனியா) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.11.2014) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சாயுடை, கீரிமலை வீதி, மாவிட்டபுரம். (41556) (10.6) தகவல்: குடும்பத்தினர்.

### அந்தோனிப்பிள்ளை ஜோசப் சாள்ஸ்



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் ஊர்காவற்றுறையை வசிப்பிடமாகவும் கொண்ட ஜோசப் சாள்ஸ் (24.11.2014) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை - மரியப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சிறில் எலிசபெத்தின் அன்பு மருமகனும், ஆரோக்கியம்மாவின் அன்புக் கணவரும், பெலிசியா (ஜேர்மனி), றெமிஜியஸ் (சாந்தி - கொலன்ட்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஸ்ரீ சண்முகநாதன் (ஜேர்மனி),வினிடாறொசிற்றா (கொலன்ட்) ஆகியோரின் அன்பு மாமனும், சண்சியா, மிதுஷன், (ஜேர்மனி), றிஷி றெலுக்ஷா, பெனுக்ஷா (கொலன்ட்) ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற புஸ்பம், மெற்றி மற்றும் பிறச்சற் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற சின்னக்கிளி ஆசீர்வாதம் மற்றும் தேவதாஸ் ஆகியோரின் அன்பு மைத்துனரும், கிறிஸ்ரியின் உடன் பிறவா சகோதரனும், அன்ரனிற்றாவின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (27.11.2014) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் புனித யாகப்பர் தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித யாகப்பர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

முகாம் வீதி,
ஊர்காவற்றுறை. (சி.18002)(45.6.3)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

## 6 ஆம் பக்கத் தொடர்ச்சி

### சிறிசேன நிகழ்த்தி

வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்தார். ராஜித சேனா ரத்ன, சந்திரிகா மற்றும் சிறிசேன அனைவரும் தங்கள் பாது காப்புக் குறித்து அச்சம் வெளி யிட்டனர். வெள்ளைவான் நடவடிக்கைகள் இடம் பெறலாம் என்றார் குமாரணதுங்க நிறை வேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்கு தாம் உயிரைக் கொடுக்கவும் தயாராய் இருப்பதாக சிறிசேன குறிப்பிட்டார். அவர்கள் பேசிய போது கண்களில் கண்ணீர் பனித்திருந்ததும் தெரிந்தது.

சிறிகொத்தாவில் ஐ.தே.கவின் கூட்டம் முடிந்ததன் பின்னர் எதிர்க்கட்சித் தலைவரின் காரியாலயம் உள்ள மார்க்கஸ் பிளேஸிலுள்ள இடத்தில் விரிவுபடுத்தப்பட்ட எதிர்க்கட்சித் தலைவர்களதும் பிரமுகர்களதும் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. இந்தக் கூட்டத்தில் கலந்து கொண் டவர்களில் ஆச்சரியமளிக்கும் விதத்தில் வண.மாது ளுவாவே சோபித தேரரும் காணப்பட்டார். சமத்துவத்துக் கும் சமூகநீதிக்குமான அமைப்பின் சார்பில் கையெ ழுத்திடவும் அவர் முன்வந் தார். அந்தக் கூட்டத்தில் ஐ.தே.க. சார்பில் ரணில் விக்கிரமசிங்க, சஜித்பிரேமதாஸ, கரு ஜெயசூரிய, கபிர்ஹாசிம், மங்கள சமரவீர, ரவிகருணா நாயக்க மற்றும் பலர் கலந்து கொண்டிருந்தனர். இந்தக் கூட்டத்தில் சிறிசேன உரை நிகழ்த்துகை யில், ஐ.தே.கட்சித் தலைவர் விக்கிரம சிங்கவை தாம் நேரில் அல்லது தொலை பேசியில் கூட தொடர்பு கொண்டதில்லை. ஆனால் அவ ரது குணாதிசயங்கள் பற்றிக் கேள்விப்பட்டிருப்பதாகவும் நாடாளு மன்ற செயற்பாடுகள் தொடர்பாக அவர் நிறைந்த அறிவு படைத்தவர் என்பதைக் கண்டிருப்பதாகவும் குறிப்பிட்டார். திரு மதி சந்திரிகா குமாரணதுங்கவை அம் மையார் என்று அழைப்பது போல விக் கிரமசிங்கவை தாம் சேர் என்று அழைக்க விரும்புவதாகவும் கூறி யது டன் ஜனாதிபதியாக வந்தாலும் அவ் வாறே அவரைத் தாம் அழைப்பார் என் றும் சொன்னார்.

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஆசிரியர் பொ.ஶ்ரீபாலன் அவர்களின் தந்தை

### சின்னத்துரை பொன்னுத்துரை

அவர்கள் இறைபதமடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயர் அடைகின்றோம். அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம் (41554) (10.6)

யா/உயரப்புலம் மெதடிஸ்மிசன் வித்தியாலயம் - ஆனைக்கோட்டை.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி தனலக்சுமி சிவானந்தஜயர்



அல்வாய் வடமேற்கு திக்கத்தை வதிவிடமாகக் கொண்ட திருமதி தனலக்சுமி சிவானந்த ஐயர் நேற்று (26.11.2014) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சிவானந்தஐயரின் பாசமிகு மனைவியும், சிவபாலக்குருக்கள், சிவபாலேந்திரக் குருக்கள், மகேந்திர சர்மா, சிவசண்முகக் குருக்கள், கமலினி, ஆனந்தினி, நித்தியகல்யாணி ஆகியோரின் அன்புத் தாயும், மங்களேஸ்வரி, கிருஜாம்பாள், பிரதீபா, ஶ்ரீதரசர்மா, பாலரூபசர்மா ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (27.11.2014) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திக்கம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

துலாய்ப் பிள்ளையார் கோயில் வீதி,
அல்வாய் வடமேற்கு, திக்கம். (C/17013) (10.6) தகவல்: குடும்பத்தினர்.

### துரையப்பா கனகசபை



புலோலியைப்.பிறப்பிடமாகவும் இல. 106, புகையிரத வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட துரையப்பா கனகசபை (ஓய்பெற்ற பொறுப்பதிகாரி- விற் பனைத் துறை, காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை) நேற்று (26.11.2014) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரையப்பா-தங்கம்மா தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், சறோஜினியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சின்னத் தம்பி-நாகம்மா தம்பதியரின் மருமகனும், கனகம்மாவின் அன்புச் சகோதரனும், பிரேமலதா, பிரேமகுமார் (பிரான்ஸ்), பிரேமானந் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவனேசன், சிவாஜினி, சிரானி ஆகியோரின் அன்பு மாமனும், சயந்தன் (பொறியியலாளர்- சிங்கப்பூர்), பிருந்தாபன் (பொறியியலாளர்-இலங்கை), சர்மிளா, அக்ஷிக்கா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 30.11.2014 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

106, புகையிரத வீதி,
யாழ்ப்பாணம். (41557) (10.6)

தகவல்: குடும்பத்தினர்.
021 222 6197

## விளம்பரங்கள் / செய்திகள்

# மைத்திரியின் பரப்புரைகள் பொலநறுவையில் ஆரம்பம்

கொழும்பு, நவ.27

மைத்திரிபால சிறிசேன எதிர்வரும் 30ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தலுக்கான பரப்புரையைத் தனது சொந்த மாவட்டமான பொலறுவையில் ஆரம்பிக்க உள்ளார்.



அன்று அவர் பொலனறுவை கல்விகாரையில் வழிபாடுகளில் ஈடுபட்ட பின்னர் தூய்மையான தலைமைத்துவம் காருண்யமான ஆட்சி என்ற தலைப்பில் பரப்புரைகளை முன்னெடுக்கவுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையிலான எதிரணி அரசியல் கட்சிகள், சமய அமைப்புகள், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமார துங்க உட்பட அரசியல் செயற்பாட்டாளர்கள் பலர் இந்தப் பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொள்ள உள்ளனர்.

அதேவேளை, தேர்தல் பரப்புரை நடவடிக்கை அலுவலகம் ஒன்றை மைத்திரிபால சிறி சேன நேற்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் திறந்து வைத்தார். (ந)

## மரண அறிவித்தல்கள்



### சின்னத்துரை திருச்செல்வம்

காளிகோயிலடியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட சின்னத்துரை திருச்செல்வம் நேற்று (26.11.2014) புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை-சொர்ணம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற நல்லையா மற்றும் கனகம்மாவின் மருமகனும், சகுந்தலாதேவியின் அன்புக் கணவரும், சுதர்சன் (லண்டன்), றஜித்தா (லண்டன்), முகுந்தன், இராகவன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், அனித்தா (லண்டன்), றமேஸ்குமார் (லண்டன்), தர்மினி ஆகியோரின் மாமனும், அஞ்சனா, பிரணவராம், பிரதீப்ராம், அபிராம், அக்ஷயா, அஸ்விகா, ஆருத்திரா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

(41569) (10.6.)



### கனகசபை சபாரத்தினம்

(ஓய்வுபெற்ற இ.போ.ச. ஊழியர்)

புதுக்குடியிருப்பு முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை சபாரத்தினம் (ஓய்வுபெற்ற இலங்கை போக்குவரத்து சபை ஊழியர்) நேற்று (26.11.2014) புதன்கிழமை காலமானார்.

அன்னார் பசுபதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சங்கரசிவம், செல்வராணி, சந்திரராணி, பவளராணி மற்றும் மகாலிங்கசிவம் (புது.ப.நோ.கூ சங்க பணியாளர்), சத்தியசிவம் (பிரான்ஸ்), ஸ்கந்தராணி (புதுக்குடியிருப்பு), சண்முகானந்த சிவம் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சின்னராசா (சுற் சிலை மடு), நவகீதா (மாஞ்சோலை வைத்தியசாலை ஊழியர்) கோகி லேஸ்வரி (லண்டன்), கலைவாணி (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனும், சசிதரன், மதுஷா, விதுஷா, திலைக்சிகா, தேசிகன், சாருஜா, சாருதா, நிருந்தன், கேனுஜன், றதுஷன் ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற செல்லையா மற்றும் கதிர்காசி (கற்சிலைமடு), வீரசிங்கம் (இந்தியா) ஆகியோரின் சகோதரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.11.2014) வியாழக் கிழமை பி.ப 2 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக புதுக்குடியிருப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

077 6324 770 (C/18015) (10.6)

### செல்லப்பா இராசரத்தினம்



யாழ்ப்பாணம், பலாலி வீதியைப் பிறப்பிடமாகவும், சுந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா இராசரத்தினம் நேற்று (26.11.2014) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா-புதியாள் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கணபதி-செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பாக்கியத்தின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, இராசலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சித்திரதாசன், நியூட்டன், ரேகணா, காலஞ்சென்ற சுகுணா மற்றும் வசந்ததாசன், கமலதாசன், பாரதிதாசன், விமலதாசன், ஜெனதா ஆகியோரின் பாசமிகு தந்தையும், பூங்கொடி, அல்போன்ஷா, தங்கராசா, சாந்தினி, ஜெயமதி, சர்மிளா, சுபாஜினி, ஜெராட் ஆகியோரின் அன்பு மாமனும், உதயராஜ், காலஞ்சென்றவர்களான உதயசுதன், உதயேந்திரன் மற்றும் உஷாந்தி, அனோஜா, அர்ஜீன், ஸ்ரெபான், இந்துஜா, அஜித், அபிராமி, சிந்துரா, தபிஷ், பர்வின், சுவேதா, திவ்யா, ஆகாஷ், சஜன், சரண், ஷெரீனா, கியூரினா ஆகியோரின் பாசமிகு பேரனும் இந்துஜன், பிரிதா, அபிவர்சன், தனுஷாந்தன், தாட்சாயினி, ஷோபன், கானுஜன், கம்சிகா, கிருத்திகா, அர்வின் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.11.2014) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 2.00 மணியளவில் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மணல்தரை ஒழுங்கை,
கந்தர்மடம். 077 9250593 (41568) (10.6)

தகவல்:
பிள்ளைகள்.

# பசுப்பால் கொள்வனவில் விலை நிர்ணயம் இல்லை

### பிரதேசத்துக்கு பிரதேசம் மாறுபட்ட விலையில்

யாழ்ப்பாண மாவட்டத்தில் பசுப் பால் கொள்வனவில் விலை நிர்ணயம் காணப்படாத நிலையில், பிரதேசத்துக்கு பிரதேசம் மாறுபட்ட விலையில் பால் கொள்வனவு செய்யப்படுகின் றது. ஒரு லீற்றர் பால் 45 ரூபாவில் இருந்து மாறுபட்ட விலைகளில் கொள்வனவு செய்யப் படுகின்றது.

அரசுபசுப்பால்கொள்வனவுவிலையை 60 ரூபா என்று அறி வித்துள்ளபோதும், யாழ்.மாவட் டத்தில் மாறுபட்ட விலைகளில் பால் கொள்வனவு செய்யப்படுகின்றது என்று பண்ணையாளர்கள் மற்றும் மாடு வளர்ப்போர் கவலை வெளியிட்டுள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் பிரதேச கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள், நெஸ்லே நிறுவனம், ஹாக்கில்ஸ் பூட்சிற்றி மற்றும் யாழ். மாவட்ட அபி விருத்திக் கூட்டுறவுச் சங்கம் (யாழ்கோ) என்பன பெருமளவில் பசுப்பாலை கொள்வனவு செய்கின்றன. அவற்றின் பால் கொள்வனவு விலையில் நிர்ணயம் இல்லாது மாறுபட்ட விலை கள் காணப்படுகின்றன என்று அவர்கள் கூறுகின்றனர்.

யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் பாலின் கொள்விலையை கடந்த ஏப்ரல் மாதம் லீற்றர் ஒன்று 58 ரூபாவாக அதிகரித்துள்ளது. ஏனைய அமைப்புக்கள், நிறுவனங்கள் கொள்வனவு விலையை 45 ரூபாவுக்கும் 48 ரூபாவுக்கும் இடைப் பட்ட நிலையிலேயே வைத்துள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் பால் கொள்வனவு அளவை முறையிலும் மாறு பட்ட நடைமுறை பின்பற்றப்படுகின்றது. கூட்டுறவு அமைப்புக்கள் முகத்தல் அளவை முறை யில் லீற்றராக பாலை கொள்வனவு செய்கின்றன. தனியார் நிறுவனங்கள் பாலை நிறுத்தல் அளவை முறையில் கிலோ கிராம் அடிப்படையில் கொள்வனவு செய்கின்றன.

பால் கொள்வனவு தொடர்பான விலை மற்றும் கொள்வனவுக்கான அளவை முறை என்பனவற்றின் மாவட்ட ரீதியில் பொதுத் தன்மை இல்லாத நிலைமையால், தாம் பொருளாதார ரீதியில் பாதிப்புக்கு உள்ளாவதாக பண்ணையாளர்கள் மற்றும் மாடு வளர்ப்பவர்கள் கூறுகின்றனர்.

மாடுகளுக்கான தீவனங்களின் விலை அதிகரித்து வரும் நிலையில் பாலின் விலைக்கு நிர்ண யிக்கப்பட்ட வில்லை இல்லாது இருப்பது, பால்மாடுகளை உரிய முறையில் பராமரிக்க முடியாத இக்கட்டான நிலைக்கு உள்ளாக்குகின்றது என்றும் அவர்கள் விச னம் தெரிவித்துள்ளனர். (ந-11)

## தொடர்ச்சிகள்

### சட்டத்தரணி

டத்தரணிகளான கே.குமாரகே, கே.எஸ்.ரட்ணவேல், ஜே.சி. வெலியமுன ஆகியோர் செய்தியாளர்களைச் சந்தித்தனர்.

"தற்போதைய அரசின் ஆட்சியில் பெரும் அடி விழுந்துவிட்டது. இந்த அரசில் ஊழல் நிறைந்துள்ளது. அமைச்சர்கள் ஊழலில் ஈடுபட்டு பெரும் மோசடிகளில் ஈடுபட்டுள்ளனர்.கொள்கலனில்பொருள்கள் ஏற்றி வந்தமை, எண்ணெயில் கலப்பு உள்ளிட்ட பலவற்றை அவ்வாறு கூறலாம். அவ்வாறு நாட்டுக்குள் எடுத்து வரப்படும் பொருள்களை சுங்கப் பிரிவினர் பார்வையிட பரிசோதனை செய்ய அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. அரசியல் காரணமாக சுங்கப் பிரிவினர் சுயாதீனமாகச் செயற்பட முடியவில்லை."– என்று அவர்கள் கூறினர்.

தொடர்ந்து அவர்கள் அங்கு கருத்துத் தெரிவிக்கையில்,

"2009 ஆம் ஆண்டுடன் விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டு விட்டனர் என்று அரசு கூறிவருகிறது. உள்நாட்டிலோ வெளிநாட்டிலோ புலிகள் மீளெழும் வாய்ப்பும் இல்லை. அவ்வாறு இல்லாத ஒன்றை இருக்கிறது என்று கூறி இந்த அரசு அரசியல் நடத்துகிறது. அதிகளவில் பௌத்த சிங்கள மக்களை இலக்கு வைத்து இனவாதத்தைக் கிளப்ப முயற்சிக்கிறது.

நாட்டில் நியாயமான அரசியலை நடத்திச் செல்ல வேண்டும். நீதித் துறையினதும் சட்டத்துறையினதும் சுயாதீனத் தன்மையைப் பாதுகாக்க ஏற்பாடு செய்யவேண்டும். ஊடகவியலாளர்கள் குறி வைக்கப்படுகிறார்கள், தாக்கப்படுகிறார்கள், ஊடகவியலாளர்கள் காணாமல் போகச் செய்யப் படுகிறார்கள். லசந்த விக்கிரம துங்க, சிவராம், பிரகீத் எக்னெலிகொட உள்ளிட்ட பல ஊடகவியலாளர்கள் அதற்கு உதாரணமாகியுள்ளனர்.

பொது எதிரணி சார்பான மைத்திரிபாலவின் ஜனாதிபதித் தேர்தல் பரப்புரைக் கூட்டங்களில் அந்தந்தப் பிரதேசங்களைச் சேர்ந்த சட்டத்தரணிகள் பங்குபற்றி தமது ஆதரவை வெளிப்படுத்துவார்கள். தவிர பரப்புரைக் கூட்டங்களில் நிறைவேற்று ஜனாதிபதி முறையை நீக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியும் உரையாற்றுவார்கள்.

ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ள ஜனவரி 8 ஆம் திகதி மிக முக்கியமான நாள். அன்றைய தினத்தில்தான் ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க கொலை செய்யப்பட்டார். கொலையாளிகளுக்கு அன்றைய தினம் மரண அடி கொடுத்து அவர்களைத் தோற்கடிக்கச் செய்ய வேண்டும்" – என்று தெரிவித்தனர். (ந-4)

### தேசிய

சிறிசேன. நாடாளுமன்றத்தைப் பிரதிநிதிப்படுத்தும் அனைத்துக் கட்சிகளுக்கும் அவர் இந்த அழைப்பை விடுத்துள்ளார்.

மகாத்மா காந்தி, நெல்சன் மண்டேலா வழி நடந்து ஜனநாயக ஆட்சியை நாட்டில் மலரச் செய்வேன். அதற்காக என் உயிர் உட்பட எனது குடும்பத்தினரின் உயிர்களையும் நாட்டுக்காக அர்ப்பணித்துள்ளேன் என்றும் அவர் மேலும் கூறினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில், கட்சித் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று இடம்பெற்ற மாகாண மற்றும் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் கட்சியின் முக்கிய செயற்பாட்டாளர்களுடனான மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு கூறும்போது, "எனக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பு பறிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு வழங்கும் முழுப் பொறுப்பையும் நாட்டு மக்களிடமே ஒப்படைக்கின்றேன். விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்மீது நம்பிக்கை வைத்து, ஜனவரி 8 ஆம் திகதி என்னை ஜனாதிபதியாகத் தெரிவு செய்யுங்கள்"– என்று தெரிவித்துள்ளார். (ந)

### நேர்மையுடன்

யாளர் அலுவலகத்தால் அமைக்கப்பட்ட இலங்கை தொடர்பான விசாரணைக்குழு முறையற்ற விதத்தில் சாட்சியங்களைத் திரட்டுவதாக, இலங்கை அரசு குற்றம் சாட்டியிருந்தது. இது தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்துக்கு கடிதம் அனுப்பியிருந்தது. இந்தக் கடிதத்துக்கு வழங்கியுள்ள பதிலிலேயே ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் இவ்வாறு தெரிவித்துள்ளார். விசாரணையின் முக்கியமான பிரச்சினைகள் விடயத்தில் இலங்கை அரசு, ஐ.நா மனித உரிமை ஆணையாளர் பணியகத்துடன் இணைந்து செயற்பட வேண்டும். விசாரணைக்காக சாட்சியங்களை சமர்ப்பிக்கும் கால எல்லை முடிந்து விட்டது. அதற்கான மின்னஞ்சல் முகவரிகள் மூடப்பட்டு விட்டன.

ஐ.நா. மனித உரிமைகள் சபையால் ஆணையிடப்பட்டதற்கமைய, நடுநிலையுடனும், நேர்மையுடனும், சுதந்திரமாகவும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன – என்று தெரிவித்துள்ளார். (ந-5)

# வட மாகாண உறுப்பினர் மீது அமைச்சர் டக்ளஸ் பாய்ச்சல்

## மீளாய்வுக் கூட்டத்தில் நேற்று பெரும் பரபரப்பு

யாழ்ப்பாணம், நவ. 27

அரச அதிகாரிகள் முன்னிலையில், வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஆனோல்டை நோக்கி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தாக்கும் பாணியில் ஆவேசமாகச் சென்றமையினால் பரபரப்பு ஏற்பட்டது.

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற பொருளாதாரஅபிவிருத்திஅமைச்சின் மீளாய்வுக் கூட்டத்திலேயே இந்தச்சம்பவம்இடம்பெற்றுள்ளது.

வடக்கு மாகாண சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் ஆனோல்ட் உரையாற்றிக் கொண்டிருக்கும்போது, நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் குழப்பம் விளைவித்துக் கொண்டிருந்துள்ளார். இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் மீது நடவடிக்கை எடுக்குமாறு, மாகாண சபை உறுப்பினர் ஆனோல்ட் வலியுறுத்தியபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

யாழ்.மாவட்ட செயலகத்தில் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் நேற்று இடம்பெற்றது. இதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமை தாங்கினார். வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் பங்கெடுக்கவில்லை. கலந்துரையாடலின்போது இந்திய வீட்டுத்திட்டம் தொடர்பில் ஆராயப்பட்டது.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் இ.ஆனோல்ட், கூட்டத்துக்குத் தலைமை தாங்கி நடத்திய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் அனுமதி பெற்று பேசினார். இந்திய வீட்டுத் திட்டத்தில் பயனாளிகள் தெரிவில் முறைகேடுகள் இருப்பதாகச் சுட்டிக்காட்டியுள்ளார். இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் குறுக்கீடு செய்துள்ளார்.

'இது என்னுடைய நேரம். நான் பேசி முடித்த பின்னர் பேசுங்கள்' என்று மாகாண சபை உறுப்பினர் ஆனோல்ட், நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமாரிடம் தெரிவித்துள்ளார். ஆனாலும் அதற்குமதிப்புக் கொடுக்காத நாடாளுமன்ற உறுப்பினர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரையும், வடக்கு மாகாண சபையினரையும் கடுமையாகச் சாடிப் பேசியுள்ளார். அத்துடன் வடக்கு மாகாண சபையில் செயற்படுவது போன்று இங்கு செயற்படவேண்டாம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது மாகாண சபை உறுப்பினர் ஆனோல்ட், நீங்கள் நாடாளுமன்றத்தில் குழுக்களின் பிரதித் தலைவராக இருப்பவர். நீங்களே ஒருவர் பேசும் குறுக்கீடு செய்து பேசலாமா ? என்று கேள்வி எழுப்பியதுடன் நான் பேசி முடித்த பின்னர் தலைவரிடம் அனுமதி வாங்கிப் பேசுங்கள் என்று தெரிவித்துள்ளார்.

இதன்போதும் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் குறுக்கீடு செய்துள்ளார். வடக்கு மாகாண சபையினரைக் கையாலாகதவர்கள் என்றுவிழித்துப் பேசியுள்ளார். உடனே மாகாண சபை உறுப்பினர் ஆனோல்ட், வடக்கு மாகாண சபையையும், தமிழ் மக்களையும் நீங்கள்தான் அரசுடன் சேர்ந்திருந்து கையலாகாதவர்கள் ஆக்கியுள்ளீர்கள் என்று கடுமையாகச் சாடியதுடன், நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமாரின் குறுக்கீடு தொடர்பில் தலைவராக இருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் தெரிவித்துள்ளார்.

இதன்போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தனது ஆசனத்திலிருந்து எழுந்து, மாகாணசபை உறுப்பினர் ஆனோல்ட்டை நோக்கி ஆவேசமாகச் சென்றுள்ளார். இதனால் சபையில் பரபரப்பு ஏற்பட்டது. இருப்பினும் சிறிது நேரத்தில் வாய்த் தர்க்கத்தில் ஈடுபட்டுப் பின்னர் ஆசனத்தில் அமைச்சர் அமர்ந்து கொண்டார்.

(த-5

## பொலிஸ் நிலையத்தில் இருந்து தப்பிச் சென்ற மோசடிப் பேர்வழி

யாழ்ப்பாணம்,நவ. 27

20 லட்சம் ரூபா பணத்தை வாங்கிப் பண மோசடி செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் இருந்து தப்பிச் சென்றவேளை நேற்றுக் காலை பொலிஸாரால் மீண்டும் கைது செய்யப்பட்டார்.

குறித்த சந்தேக நபர் நேற்றுப் பருத்தித்துறை நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டபோது அவரை எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது

இது தொடர்பாகத் தெரியவருவதாவது:-

துன்னாலைப் பகுதியை சேர்ந்த பெண்ணொருவரிடம் 20 லட்சம் ரூபாவை கடனாக வாங்கித்திருப்பிச் செலுத்தாமல் ஏமாற்றுகிறார் என அதே இடத்தைசேர்ந்த ஒருவர் மீது குறித்த பெண்ணால் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிலையில் குறித்த சந்தேக நபர் தலைமறைவாகியிருந்ததால் கடந்த சில வாரங்களாகப் பொலிஸார் அவரை வலைவீசித் தேடி வந்தனர். இந்த நிலையில் நேற்று முன்தினம் வல்லைப் பகுதியில் உள்ள மதுபான நிலையத்தில் அவர் இருப்பதாகக் கிடைத்ததகவலை அடுத்து சிவில் உடையிலும், பொலிஸ் உடையிலும் அவரைப் பொலிஸார் சுற்றி வளைக்கமுற்பட்டனர். ஆனாலும் தன்னைச் சுதாகரித்துக் கொண்ட சந்தேக நபர் பொலிஸாரின் பிடியில் இருந்து தப்பியோடியுள்ளார். துரத்திச் சென்ற பொலிஸார் வல்லை பிரதான வீதியில் வைத்து அவரை மடக்கிப் பிடித்து பொலிஸ் நிலையம் கொண்டு வந்தனர்.

இந்த நிலையில் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்ட சந்தேக நபர் நேற்று மலசலகூடம் செல்லவேண்டும் எனக் கூறியுள்ளார். அவரைப்பொலிஸ் நிலையத்தின் பின் பக்கம் உள்ள மலசலகூடத்துக்குக் கொண்டு சென்ற நிலையில் பொலிஸாரின் பிடியில் இருந்து தப்பிய அவர் பொலிஸ் நிலைய மதில் பாய்ந்து தப்பிச் சென்றுள்ளார். துரத்திச் சென்ற பொலிஸாரால் அவரைப் பிடிக்க முடியவில்லை. எனினும் நேற்று முற்பகல் ராஜகிராமம் பகுதியில் பதுங்கியிருந்த நிலையில் அவரைச் சுற்றி வளைத்து மடக்கிப் பிடித்ததாக நெல்லியடி பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நிலையில் அவர் நேற்று நெல்லியடிப் பொலிஸாரால் பருத்தித்துறை நீதிமன்றில் நீதிவான் கஜநிதிபாலன் முன்னிலையில் முற்படுத்தப்பட்டார். அவர் தப்பி சென்ற விடயம் மன்றின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது. வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நீதிவான் சந்தேக நபரை எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

(த-109)

## அலரி மாளிகையில் தமிழருக்கு தங்கம் வழங்குகிறார் ஜனாதிபதி

போரின் இறுதிக் கட்டத்தில் கைப்பற்றப்பட்ட தங்க நகைகளில் ஒரு தொகுதி, வடபகுதியைச் சேர்ந்த உரியவர்களிடம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் எதிர்வரும் 4 ஆம் திகதி அலரி மாளிகையில் வைத்துக் கையளிக்கப்படவுள்ளது. கிளிநொச்சியில் வைத்து வழங்குவதாக சொல்லப்பட்டவர்களுக்கே, எதிர் வரும் 4 ஆம் திகதி கொழும்பில் வைத்து இந்தத் தங்க நகைகள் கையளிக்கப்படவுள்ளன.

2009 ஆம் ஆண்டு இறுதிக் கட்டப் போரின்போது தமிழ் மக்கள் தமது உடைமைகள், நகைகள் எல்லாவற்றையும் இழந்து இராணுவத்தினரிடம் சரணடைந்திருந்தனர். அத்துடன்வங்கிகளில் நகைகளை அடைவும்வைத்திருந்தனர். இவைவங்கிகளால்போரின் இறுதிக் கட்டம் வரையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்தன. போரின் முடிவில் அவற்றை இராணுவத்தினர் மீட்டிருந்தனர்.

கடந்த 5 வருடங்களாக அவற்றை உரியவர்களிடம் கையளிக்கவில்லை. இந்த நிலையில் கடந்த ஒக்ரோபர் மாதம் 12 ஆம் திகதி வடபகுதிக்கு ஜனாதிபதி வருகை தந்திருந்தார். கிளிநொச்சியில் வைத்து 2 ஆயிரத்து 379 பேருக்குத் தங்கம் வழங்குவதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. மக்களும் அழைத்து வரப்பட்டிருந்தனர். ஆனால் 419 பேருக்கு மாத்திரமே அவை வழங்கப்பட்டன. எஞ்சியவர்களுக்கு எதிர்வரும் 4 ஆம் திகதி அவை வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

# ஐ.தே.கவுக்குத் தாவினார் ஹுனைஸ் பாருக் எம்.பி



கொழும்பு, நவ. 27

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசிய ஒருங்கிணைப்பாளரும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஹுனைஸ் பாருக் நேற்று ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்துள்ளார்.

அவர் ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையகமான சிறீகொத்தாவில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலும் கலந்துகொண்டார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சிக்குள் இடம்பெற்ற ஒரு சில முரண்பாடுகள் காரணமான நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாருக் கட்சியிலிருந்து விலகுவதாகத் தீர்மானித்துள்ளார். இதனையடுத்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் இணையத் திட்டமிட்ட பாருக் அந்தக் கட்சி உயர் பீடத்துடன் பேச்சில் ஈடுபட்டார். இருந்தபோதிலும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் இணைவது சாத்தியமாகாத நிலையில் அவர் நேற்று ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்துள்ளதாக அவருக்கு நெருக்கிய வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, முஸ்லிம்கள் காட்டிக்கொடுப்பவர்கள் என்பதைத் தனது கட்சி தாவலின் மூலமாக ஹுனைஸ் பாரூக் உறுதிப்படுத்தியுள்ளதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் குற்றஞ்சுமத்தியுள்ளது. இது தொடர்பில் முசலி பிரதேச சபைத்தவிசாளர் எஹ்யாபாய் விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்படி குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாண முஸ்லிம்களின் கௌரவமான குடியேற்றத்தையும் அந்த மக்களுக்கு தலைமை தாங்கும் அமைச்சர் ரிசாத் பதியுதீனையும் அற்ப சொற்ப சலுகைகளுக்காக ஹுனைஸ் காட்டிக் கொடுத்து விட்டார். வடக்கு முஸ்லிம்களுக்கும் அந்த மக்களின் தலைவரான அமைச்சர் ரிசாத் பதியுதீனுக்கும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சிக்கும் ஹுனைஸ் பெரும் துரோகம் இழைத்து விட்டார். ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டிருக்கும் இன்றைய சூழ்நிலையில் எந்த வேட்பாளருக்கு ஆதரவளிப்பது என்பது தொடர்பில் பல தடவை அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி கூடி ஆராய்ந்து இதுவரை எந்தவொரு தீர்மானத்திற்கும் வரவில்லை. எதிர்வரும் 29ஆம் திகதி கூடவுள்ள அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் உயர்பீட கூட்டத்திலேயே தேர்தல் தொடர்பிலும் எந்த வேட்பாளருக்கு ஆதரவு வழங்குவது என்பது தொடர்பிலும் விரிவாக ஆராயப்படவுள்ளது. இவ்வாறான நிலையில், கட்சிக்கோ, கட்சித்தலைமைக்கோ வாக்களித்த மக்களுக்கோ பொறுப்புக் கூறாமலும் அவர்களது அனுமதியின்றியும் ஹுனைஸ் தான்தோன்றித் தனமாக கட்சி மாறியிருப்பது வடமாகாண மக்களுக்கும் நாடு பூராகவுமுள்ள முஸ்லிம்களுக்கும் பெரும் வேதனையையும் சந்தேகத்தையும் தோற்றுவித்துள்ளது. வடமாகாண முஸ்லிம்களின் கௌரவமான குடியேற்றத்திற்கும் அந்த மக்களின் பாதுகாப்பான இருப்புக்காகவும் கட்சியும் கட்சித் தலைமையும் போராடிக் கொண்டிருக்கும் இன்றைய நிலையில் ஹுனைஸ் கட்சி தாவியிருப்பது அவரது சுயநலத்தையும் பணமோகத்தையும் அச்சொட்டாக எடுத்துக்காட்டுகின்றது.

முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்தை கேள்விக்குறியாக்கி ஒட்டு மொத்த முஸ்லிம்களையும் காட்டிக் கொடுத்துவிட்டார். முஸ்லிம்கள் காட்டிக்கொடுப்பவர்கள் என்ற பேரினவாத சமூகத்தின் வாய்ப் பேச்சை ஹுனைஸ் இன்று செய்துள்ள கட்சித் தாவலின் மூலம் உறுதிப்படுத்தியுள்ளது மட்டுமன்றி பணத்திற்காக முஸ்லிம்கள் எதையும் செய்வார்கள் என்ற அவப்பெயரையும் அவர் ஏற்படுத்தி விட்டார்.-எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-10)


# தொடரை வசமாக்கின வங்கப் புலிகள்



பங்களாதேஷ் மற்றும் சிம்பாப்வே அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரின் மூன்றாவது போட்டி நேற்றயதினம் பங்களாதேஷ் டாக்கா மைதானத்தில் இடம்பெற்றது.
ஏற்கனவே நடந்த இரண்டு போட்டிகளிலும் பங்களாதேஷ் வெற்றிபெற்ற நிலையில் இப்போட்டியிலும் வெற்றிபெற்று தொடரைக் கைப்பற்றும் நோக்கில் பங்களாதேஷும் தொடர்ந்த தொடரில் ஆதிக்கம் செலுத்த வேண்டுமாயின் போட்டியை நிச்சயம் வெல்ல வேண்டும் என்ற கட்டாயத்தில் சிம்பாப்வேயும் களமிறங்கின.
நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சிம்பாப்வே அணி பங்களாதேஷை முதலில் துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது. இதன்படி ஆரம்பவீரர்களாக களமிறங்கிய ரமீம் மற்றும் கக்கியு தமக்குள் இணைப்பாட்டமாக 121 ஓட்டங்களைப் பகிர்ந்து அணிக்கு சிறந்த ஆரம்பத்தைக் கொடுத்தனர். 25.5 ஓவர்களில் அணியின் ஓட்டம் 121 ஆகஇருந்தவேளையிலேயே முதல் இலக்காக ரமீம் 40 ஓட்டங்களுடன் வெளியேறினார். தொடர்ந்து வந்த வீரர்களும் ஒரே பாணியில் அதிரடியைக்கையிலெடுக்கபங்களாதேஸ் அணி 50 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 297 ஓட்டங்கலைளக் குவித்தது. அதிகபட்சமாக ஹக்கியூ 95(120), ஷகிப் அல் ஹசன் 40(33), றஹ்மிம் 33(22) ஓட்டங்களைப் பெற்றனர்.
பந்துவீச்சில் சிம்பாப்வே சார்பாக பன்ஜங்கரா 2 இலக்குகளையும் மட்சிபா, கமுன்கோசி, மசகட்சா ஆகியோர் தலா 1 இலக்கையும் கைப்பற்றினர்.
298 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி எனும் கடின இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சிம்பாவே அணியின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்கள் உட்பட முன்னிலை வீரர்கள் எவருமே நிலைக்கத்தவறி மசகட்சா 12(15), சிபெண்டா 9(6), மறுமா 8(16), மிறி 12(33), சக்கபவ 14(38) என சொற்ப ஓட்டங்களுடன்வெளியேற்சிம்பாவே அணி 19 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 82 ஓட்டத்திற்கு 5 இலக்குகளை இழந்து தடுமாறத் தொடங்கியது. சற்றும் மாறுபடாமல் அதே பாணியில் பின்வரிசை வீரர்களும் மோர் 2(11), மட்சிவா 11(24), பன்ஜன்கரா 0(1) காமுன் கோசி 4(9) என வந்த வேகத் தில் வெளியேற சிம்பாவே அணி 39.5 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 173 ஓட்டங்களைப் பெற்றது அதிக பட்சமாக ரெய்லர் 28(40) ஓட்டங்களையும் சிக்கும்புறா இறுதிவரை ஆட்டமிழக்காது 53(46)ஓட்டங்களையும்பெற்றனர்.
பந்துவீச்சில் பங்களாதேஷ் சார்பாக சணி 4 இலக்குகளையும் மோர்ரசா மற்றும் கொசைன் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் சகிப் அல் ஹசைன் மற்றும் முகமதுல்லா ஆகியோர் தலா 1 இலக்கையும் கைப்பற்றினர். ஆட்டநாயகனாகக்கியூதெரிவானார்.
5 போட்டிகளைக் கொண்ட தொடரில் பங்களாதேஷ் அணி 3:0 என்ற அடிப்படையில் தொடரைக் கைப்பற்றியுள்ளது. இவ்விருஅணிகளுக்கும்இடையிலான நான்காவது ஒருநாள் போட்டி நாளை டாக்காவில் இடம்பெறுகின்றது.

(த–ரி)

# சல்மான் கான் தான் கணவராக வேண்டும்



தனது வரலாற்று படத்தில் சல்மான் கான் தான் தனது கணவர்கதாபாத்திரத்தில்நடிக்கவேண்டும் என முன்னணி ரென்னிஸ் வீராங்கனை சானியா மிர்சா கூறியுள்ளார்.
தலைப்பைப் பார்த்து யாரும் அதிர்ச்சி அடைய வேண்டாம். இந்திய குத்துசண்டை வீராங்கனை மேரி கோமின் வாழ்க்கை படமாக எடுக்கப்பட்டு 100 கோடிகளையும் வசூலித்தது.
இதைத் தொடர்ந்து தற்போது தனது வாழ்க்கை வரலாறு குறித்த படத்தை எடுக்கப் பச்சைக் கொடி காட்டி விட்டார் சானியா மிர்சா. இந்தப் படத்தில் சல்மானும், தீபிகா படுகோனும் சேர்ந்து நடிக்க வேண்டும் என அவர் விருப்பம் தெரிவித்துள்ளார்.
இது குறித்து அவர் கூறுகையில், என் வாழ்க்கை வரலாற்றுப் படத்தில் எனது கணவர் சொயைப் மலிக்காக சல்மான் கான் நடிக்க வேண்டும்.
சல்மான் என்னுடைய நல்ல நண்பர். மேலும் அவர் எனக்கு மிகவும் பிடித்த நடிகருமாக இருக்கிறார். படத்தில் என் கதாபாத்திரத்தில் தீபிகா படுகோனே தான் நடிக்கவேண்டும்.
சல்மானும், தீபிகாவும் இதுவரை ஒரு முறை கூட ஜோடி சேர்ந்து நடித்தது இல்லை. அதனால் என் வாழ்க்கை வரலாற்றுப் படத்தில் அவர்கள் சேர்ந்து நடித்தால் அது நன்றாக இருக்கும் என்று தெரிவித்துள்ளார்.(த)

## ஐ.நா. தூதராக சானியா



இந்தியாவின் முன்னணி ரென்னிஸ் வீராங்கனை சானியா மிர்சா. ஐக்கிய நாடுகள் சபையின் தெற்காசிய பிராந்தியத்துக்கான மகளிர் நல்லெண்ண துதரக நியமிக்கப்பட்டுள்ளார்.
தெற்காசிய நாடுகளில் பெண்களுக்கு எதிராக நடைபெறும் கொடுமைகளை எதிர்த்துப் பிரசாரம் செய்வதற்காகச் சானியாவுக்கு இந்தப் பதவி வழங்கப்பட்டுள்ளது.
இந்த நிகழ்ச்சியில் சானியா மிர்சா பேசும்போது, பெண் என்பதால் பல சர்ச்சைகளில் சிக்கினேன். ஆணாக இருந்திருந்தால் இவ்வளவு பிரச்சினைகளை சந்தித்திருக்கவேண்டிஇருக்காது.பெண் ஒருபொருளாகப்பாவிக்கப்படும் மனநிலை மாறி ஆணும், பெண்ணும் சமம் என்பதை உணரும் நாள் விரைவில் வரும். நிறைய பெண்கள் விளையாட்டுத் துறைக்கு வரவேண்டும்–என்றார். (த)


# உலகக் கிண்ண அணியில் இடம் பிடிப்பதே இலக்கு

ஆஸ்திரேலியா–நியூசிலாந்தில் நடைபெறும் 2015ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டிகளில் இந்திய அணியில் மீண்டும் இடம்பெறுவதே இலக்கு என்று ஹர்பஜன் சிங் தெரிவித்துள்ளார்.
விஜய் ஹசாரே ஒருநாள் கிரிக்கெட் தொடரில் பஞ்சாப் அணியை தனது தலைமை மூலம் இறுதிப் போட்டி வரை அழைத்துவந்த ஹர்பஜன் சிங் கூறியதாவது,
நான் உலகக் கிண்ணப் போட்டிகளுக்குத் திரும்ப இலக்கு நிர்ணயித்துள்ளேன். ஆஸ்திரேலியா–நியூசிலாந்தில் நடைபெறும் இந்தப் போட்டிகளில் விளையாடுவது மகிழ்ச்சியான ஒரு தருணம். எந்த ஒரு வீரருக்கும் உலகக் கிண்ணம் என்பது மிக முக்கியமான ஒன்று. நான் நம்பிக்கையுடன் காத்திருக்கிறேன்.
தினமும் நான் விழித்தவுடன் நினைப்பதெல்லாம் உலகக் கிண்ணத்துக்கான இந்திய அணியில் இடம்பெறுவது பற்றிதான். நாட்டுக்காக மீண்டும் ஒரு முறை சிறப்பாக ஆடுவதற்காக என்னை நான் ஊக்கப்படுத்தி வருகிறேன். அனைத்து போட்டிகளிலும் ஆட எதிர்நோக்கியுள்ளேன். எனவே உள்நாட்டு கிரிக்கெட்டில் சிறப்பாக விளையாடி இந்திய அணியில் இடம் பெறுவதை உறுதி செய்வதே என் இலக்கு.எனது பந்து வீச்சுக் குறித்து நான் திருப்தியை உணர்கிறேன்.
விஜய் ஹசாரே இறுதிப் போட்டி வரை அணியை அழைத்து வந்ததற்கு மகிழ்ச்சி அடைகிறேன். ஆனாலும், கிண்ணத்தை வெல்லாமல் போனது வருத்தமளிக்கவே செய்கிறது.
ஆஸ்திரேலியாவை அவர்கள் சொந்த மண்ணில் நாம் அதிரடி மனோபாவத்துடன் எதிர்கொள்வது அவசியம். இந்த ஆஸ்திரேலிய அணி பலவீனமான அணி என்றே சிலர் கூறுகின்றனர். 5 அல்லது 10 ஆண்டுகளுக்கு முன்பாக இருந்த அணி அல்ல இது.
ஆனால், ஆஸ்திரேலியாவில் இவர்கள் ஆடும்போது அந்த அணி அபாயகரமான அணியாகும்.அவர்கள் சிறந்த கிரிக்கெட்டை வெளிப்படுத்துபவர்கள், அவர்களுக்கு இணையாக ஆட வேண்டுமெனில் ஆக்ரோஷமாக ஆடவேண்டும். தன்னம்பிக்கையான மனநிலை வேண்டும்–என்றார்.

(த)

# ஹபீஸ் சதம் விளாசி அபாரம் பாகிஸ்தான் வலுவான நிலை

பாகிஸ்தான நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி நேற்றையதினம் சார்ஜாவில் ஆரம்பமானது. ஏற்கனவே நடந்து முடிந்த இரண்டு போட்டிகளில் முதல் போட்டியில் பாகிஸ்தான் அணி வெற்றிபெற்றும் இரண்டாவது போட்டி சமநிலையிலும் முடிவடைந்ததையடுத்து 1:0 என்ற அடிப்படையில்பாகிஸ்தான்அணி தொடரில்முன்னிலை வகிக்கிறது. இதனால் இப்போட்டியில் கட்டாயம் வெற்றிபெற்று தொடரை சமநிலைப்படுத்த வேண்டும் என்ற நோக்கில் நியூஸிலாந்தும், போட்டியை வெற்றிபெற்றோ அல்லது சமநிலையில் முடித்தோ தொடரைக் கைப்பற்ற வேண்டும் என்ற நோக்கில் பாகிஸ்தானும் விளையாடி வருகின்றன.
நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான்அணி முதலில்



துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. இதன்படி ஆரம்ப வீரர்களாக களமிறங்கியவர்களில் மசூட் 12, யுனிஸ்கான் 5 என சொற்ப ஓட்டங்களுடன் வெளியேறி ஏமாற்றம் கொடுத்தாலும் மறுமுனையில் ஹபீஸ் தனித்து நின்று போராடி சதத்தை நிறைவு செய்தார். ஹபீஸ், மிஸ்பா நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தி தமக்குள் 121 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பகிர்ந்து பாகிஸ்தானை சரிவில் இருந்து மீட்க நேற்றய ஆட்ட நேர நிறைவில் பாகிஸ்தான் அணி 3 இலக்கு இழப்பிற்கு 281 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. ஹபீஸ் 178 ஓட்டங்களுடனும் மிஸ்பா 38 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது களத்தில் உள்ளனர்.
பந்து வீச்சில் நியூஎபிலாந்து சார்பாக கிறைக் 2 இலக்குகளையும் விக்டோரி 1 இலக்கையும் கைப்பற்றியுள்ளனர். ஆட்டத்தின் இரண்டாம் நாள் இன்றாகும். (த–ரி)

# செய்திகள்





## சென்னை அணிக்கு இரட்டைச் சிக்கல்

காயம் காரணமாக எலானோ, பிரேசில் திரும்பியதை அடுத்து, சென்னை அணிக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளது.

ஐ.எஸ்.எல் தொடரில் அதிக கோல் அடித்த வீரர்களில் முதலிடத்தில் (8) உள்ளவர் சென்னை அணியின் எலானோ. புனே அணிக்கு எதிரான போட்டியில் கெண்டைக்கால் காயம் காரணமாக வெளியேறினார்.

இதில் இருந்து மீண்டு வருவதற்காக, எலானோ பிரேசில் சென்று விட்டார். அதேபோல, 4 கோல் அடித்த மற்றொரு சென்னை வீரர் மெண்டோஸாவுக்கு (கொலம்பியா), தொடையின் பின் பகுதியில் காயம் ஏற்பட்டது.

இவருக்குப் பதில் வேறு வீரரை அணியில் சேர்க்க நிர்வாகம் முடிவு செய்துள்ளதாகத் தெரிகிறது. இதனால், மெண்டோஸா ஐ.எஸ்.எல்., தொடரில் இருந்து விலகுவார் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

இன்னும் சென்னை அணி அரையிறுதிக்கு முன்னேறாதநிலையில், இது பெரும் இழப்புதான். (த)

தற்போது உள்ள காலக்கட்டத்தில் தான் தலை முதல் கால், கை என அனைத்திற்கும் பாதுகாப்பு கவசம் கொடுக்கப்படுகிறது. ஆனால் ஆரம்பகால கிரிக்கெட் போட்டியில் இத்தலைகய வசதிகள் கிடையாது.

பாதுகாப்பாக இருந்தாலும் புயல்வேக பந்துவீச்சாளர்களின் 140 கிலோ மீற்றர் வேகத்திற்கு மேல் வரும் பந்து, துடுப்பாட்டக்காரர்கள் முதல் களத்தில் இருக்கும் வீரர்களையும் பதம் பார்த்து சில விபரீதங்களை ஏற்படுத்தி உள்ளது.

கிரிக்கெட்டில் பந்து தாக்கி காயமடைந்த சில நிகழ்வுகளின் விவரம் வருமாறு:-

1932-33 ஆம் ஆண்டு இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் ஹரோல்ட் லார்வுட் வீசிய பந்து தாக்கியதில் ஆஸ்திரேலிய விக்கெட் காப்பாளர் பெர்ட் ஓல்டுபீல்ட்டுக்கு மண்டை ஓடு உடைந்தது

1959 ஆம் ஆண்டு உள்ளூர் கிரிக்கெட்டில் விளையாடிய போது பந்து நெஞ்சில் தாக்கியதில் 17 வயதான பாகிஸ்தான் இளம் வீரர் அப்துல் அஜீஸ் நிலைகுலைந்து நினைவு திரும்பாமலேயே உயிரை விட்டார்.

1962ஆம் ஆண்டு மேற்கிந்திய தீவுகளின் வேகப்பந்து வீச்சாளர் சார்லி கிரிப்பித்தின் தாக்குதலில் இந்திய அணித் தலைவர் நரி கான்ட்ராக்டருக்கு தலையில் காயம் ஏற்பட்டது. இதில் அவருக்கு 6 நாள்கள் சுயநினைவே இல்லை. உயிர் பிழைக்க ரத்தம் செலுத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அதன் பிறகு மீண்டும் அவர் சர்வதேச கிரிக்கெட்டில் கால் பதிக்கவில்லை.

1975ஆம் ஆண்டு இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட்டில் அந்த அணியின் வேகப்பந்து வீச்சாளர் பீற்றர் லெவர் வீசிய பந்து நியூசிலாந்து வீரர் இவென் சாட்பீல்டின் நெற்றியை அசுரத்தனமாக தாக்கியது. இதில் நாக்கு வெளியே தள்ளி, மூச்சே நின்று போனது. விபரீதத்தை உணர்ந்த இங்கிலாந்து பிசியோ தெரபிஸ்ட் பேர்னட் தோமஸ், உடனடியாக இதய [illegible] செய்து அவரைக் காப்பாற்றினார்.

1977ஆம் ஆண்டு மெல்போர்னில் நடந்த நூற்றாண்டு கால நினைவு டெஸ்டில் இங்கிலாந்து பந்துவீச்சாளர் பாப் வில்லிசின் சீற்றத்தில், ஆஸ்திரேலிய வீரர் ரிக் மெக்கோஸ்கரின் தாடை நொறுங்கியது. தேவைப்பட்டதால், 2ஆவது இன்னிங்சில் அவர் தலையில் கட்டுபோட்டுக் கொண்டு துடுபெடுத்தாடி 25 ஓட்டங்கள் எடுத்தார். அந்த டெஸ்டில் ஆஸ்திரேலியா வெற்றி பெற்றது.

1986ஆம் ஆண்டு மேற்கிந்திய தீவுகள் பந்துவீச்சாளர் மல்கம் மார்ஷல் வீசிய பந்தில் இங்கிலாந்து வீரர் மைக் கேட்டிங்கின் மூக்கு உடைந்தது.

1998 ஆம் ஆண்டு பங்களாதேஷ் வீரர் அடித்த ஒரு ஷாட், துடுப்பாட்டக்காரருக்கு மிக அருகில் களத்தடுப்பு செய்து கொண்டிருந்த இந்திய வீரர் ராமன் லம்பாவின் தலையைத் தாக்கியதில் உயிரிழந்தார். லம்பாவின் வயது 38.

2002 ஆம் ஆண்டு மேற்கிந்திய தீவுகள் சுற்றுப்பயணத்தின் ஆன்டி குவா டெஸ்டில் இந்திய வீரர் அனில் கும்பிளே துடுப்பெடுத்தாடியபோது, தில்லான் வீசிய பந்தில் முகத்தில் காயமடைந்தார். தாடை எலும்பு உடைந்து ரத்தம் கொட்டியது. அதன் பிறகும் அவர் 20 நிமிடங்கள் துடுப்பெடுத்தாடினார். பிறகு 2வது இன்னிங்சில் தலையில் கட்டுபோட்டுக் கொண்டு தைரியமாக களம் இறங்கிய அவர் தொடர்ந்து 14 ஓவர்கள் பந்து வீசியதுடன், லாராவின் விக்கெட்டையும் கைப்பற்றி பிரமிக்க வைத்தார்.

2012ஆம்ஆண்டு பயிற்சி கிரிக்கெட்டின் போது, பந்து பட்டு ஸ்டம்பு மீது வைக்கப்பட்டிருந்த பெய்ல்ஸ் குத்தியதில் தென்னாபிரிக்க விக்கெட் காப்பாளர் மார்க் பவுச்சரின் இடது கண் பாதிக்கப்பட்டது. இதனால் அவர் தனது சர்வதேச கிரிக்கெட் வாழ்க்கையை ஓராண்டுக்கு முன்னரே முடிக்க வேண்டியதாகிவிட்டது.

நேற்று முன்தினம் ஆஸ்திரேலியாவில் உள்ள சிட்னி நகரில் நியூசவுத்வேல்ஸ்-தெற்குஆஸ்திரேலிய அணிகள் மோதிய ஆட்டத்தில் தெற்கு அவுஸ்திரேலிய வீரர் பிலிப் ஹியூக்ஸின் தலையில் பந்து தாக்கியதில் அவர் ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (த)

## உயிருக்கு போராடும் ஆஸி. வீரர் ஹியூக்ஸ்



ஆஸ்திரேலிய வீரர் பிலிப் ஹியூக்ஸ், ஷெட்பீல்ட் ஷில்ட் முதல் தர போட்டியில் விளையாடியபோது பவுன்சர் பந்து தலையில் தாக்கியதில் பலத்த காயம் அடைந்தார். மயங்கி விழுந்த ஹியூக்ஸ் ஹெலி மூலம் ஆபத்தான நிலையில் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

சிட்னியில் உள்ள செயின்ட் வின்சென்ட் மருத்துவமனையில் அவர் சிகிச்சை பெற்று வருகிறார். காயத்தின் தீவிர தன்மையை கண்டறிந்து அவருக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.

ஹியூக்ஸ் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு 24 மணி நேரத்துக்கு மேல் ஆனது. ஆனால் அவரது உடல் நிலை தொடர்ந்து கவலைக்கிடமாக இருக்கிறது.

இது குறித்து ஆஸ்திரேலிய அணியின் மருத்துவர் பீற்றர் புருக்னர் நிருபர்களிடம் கூறுகையில், ஹியூக்ஸ் உடல் நிலையில் எந்த மாற்றமும் இல்லை. அவர் தொடர்ந்து கவலைக்கிடமாக உள்ளார் என்று தெரிவித்துள்ளார். தற்போது ஷெட்பீல்ட் ஷில்ட் முதல் தர போட்டி முழுவதுமாக ரத்து செய்யப்பட்டது. இதை ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை அறிவித்தது.

இதற்கிடையே ஹியூக்ஸ் விரைவில் குணமடைய வீரர்கள் பிரார்த்தனை செய்துள்ளனர்.

விராட் கோஹ்லி கூறுகையில், ஹியூக்ஸ் உடல் நலம் தேற பிரார்த்தனை செய்கிறோம் என்று கூறியுள்ளனர்.

இங்கிலாந்து அணித் தலைவர் குக் கூறுகையில், நாங்கள் இந்த செய்தி கேட்டு அதிர்ச்சி அடைந்தோம். அவருக்கு எதிராகச் சில போட்டிகளை விளையாடியுள்ளோம். அவர் விரைவில் குணமடைய பிரார்த்தனை செய்து கொள்கிறோம் என்று கூறியுள்ளார்.

இலங்கை வீரர் லஹிரு திரிமன்னே, நாங்கள் விடயத்தை கேட்டதும் உறைந்து போய்விட்டோம். அவர் ஒரு அதிரடி வீரர். கண்டிப்பாக அவர் முழுவதும் குணமடைந்து வர வேண்டிக் கொள்கிறோம் என்று தெரிவித்துள்ளார்.

25 வயதான ஹியூக்ஸ் 26 டெஸ்ட், 25 ஒருநாள் போட்டி மற்றும் ஒரே ஒரு 20/20 ஆட்டத்தில் விளையாடி உள்ளார். (த)

## ஆஸ்திரேலியாவை அசர வைத்த இந்தியா

இந்தியா- ஆஸ்திரேலியா லெவன் அணிகள் மோதிய 2 நாள் பயிற்சி ஆட்டம் சமநிலையில் முடிந்தது.

அடிலெய்டில் நடைபெற்ற இந்த போட்டியில், இந்தியா ஒரு இலக்கு இழப்பிற்கு 55 ஓட்டங்கள் என்று இருந்த இந்தியா 8 இலக்குகள் இழப்பிற்கு 363 ஓட்டங்கள் எடுத்தது. முரளி விஜய் (51), புஜாரா (55) ஆகியோர் அரைசதம் எடுத்தவுடன் ஆட்டமிழந்தனர்.

விராட் கோஹ்லியும் எந்தவித பிரச்சினையும் இல்லாமல் 60 ஓட்டங்கள் எடுத்தார். சுரேஷ் ரெய்னா அதிரடி முறையில் 49 பந்துகளில் 5 பவுண்டரி 2 சிக்சர்களுடன் 44 ஓட்டங்கலை எடுக்க, இலக்குக் காப்பாளர் விருத்திமான் சஹா 5 பவுண்டரிகள் ஒரு சிக்சருடன் 75 பந்துகளில் 56 ஓட்டங்கள் எடுத்தார்.

அதேபோல் சுழற்பந்து வீச்சாளர் கரன் சர்மா, 54 பந்துகளில் 5 பவுண்டரிகள் 2 சிக்சர்களுடன் 52 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தார்.

புஜாரா மிக அழகாக ஆடினார். 80 பந்துகளில் அவர் 11 அழகான பவுண்டரிகளை அடித்தார். தவான் ஏமாற்றமளிக்க அஜிங்கிய ரஹானே 1 ஓட்டம் எடுத்து ஆட்டமிழந்தார்.

டோனி இடத்தில் சஹா முதல் டெஸ்ட் போட்டியில் ஆடுவது ஏறக்குறைய உறுதி ஆகிவிட்டது. அதனால் அணித் தெரிவு கடினமாகவே இருக்கும்.

முரளி விஜய், ஷிகர் தவான், புஜாரா, கோஹ்லி, ரஹானே, ரெய்னா, கரன் சர்மா, இஷாந்த் சர்மா, புவனேஷ் குமார், வருண் ஆரோன், மொகமது ஷமி என்று இந்திய அணி இருக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பிரிஸ்பன் ஆடுகளம் வேகப்பந்துக்கு சாதகமாக இருக்கும் என்பதால் கரன் சர்மாவுக்குப் பதில் உமேஷ் யாதவ் கூட தெரிவு செய்யப்படலாம். கோஹ்லியும், அணி நிர்வாகமும் செய்யும் முடிவு முதல் டெஸ்ட் போட்டியின் போதே தெரியவரும். (த)



# இங்கிலாந்துடன் போராடி வென்றது இலங்கை



இலங்கை மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான ஒருநாள் தொடரின் முதலாவது போட்டி நேற்றயதினம் கொழும்பு பிறேமதாச மைதானத்தில் ஆரம்பமானது. சமீபத்தில் இடம்பெற்ற இந்தியத் தொடரில் இலங்கைஅணி அனைத்துப் போட்டிகளிலும் தோல்வியடைந்து முழுமையாக வெள்ளையடிப்புச் செய்யப்பட்ட நிலையில் இந்தியத் தொடரில் ஏற்பட்ட களங்கத்தையும் நெருக்கடிகளையும் நீக்கும் ஒரு வாய்ப்பாக இலங்கைஇணி இத் தொடரை பயன்படுத்துமா? அல்லது அன்னிய மண்ணில் தொடரை கைப்பற்றி தமது ஆதிக்கத்தை இங்கிலாந்து நிலைநாட்டுமா?

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி இலங்கை அணியை முதலில் துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது. இதன்படி ஆரம்ப வீரர்களாக களமிறங்கிய டில்சான் மற்றும் குசல்பெரேரா அணிக்கு சிறந்த ஆரம்பத்தை அமைத்துக்கொடுத்தனர். 22.2 பந்துப்பரிமாற்றங்களில் அணியின் ஓட்டம் 120 ஆக இருந்த பொழுது முதல் இலக்காக குசல் பெரேரா 59(74) ஓட்டங்களுடன் வெளியேறினார். தொடர்ந்து வந்த சங்கா 2(4) ஓட்டங்களுடன் வந்த வேகத்தில் வெளியேறினாலும் மஹேல மற்றும் டில்சானின் இணைப்பாட்டம் அணியை சற்று பலப்படுத்த இலங்கையணி 37 பந்துப்பரிமாற்றங்களில் 200 ஓட்டங்களைஎட்டியது. 37.1 பந்துப்பரிமாற்றங்களில் அணியின் ஓட்டம் 204 ஆக இருந்த பொழுது மூன்றாவது இலக்காக டில்சான் 88(98) ஓட்டங்களுடன் வெளியேறினார். தொடர்ந்து வந்த மத்திய வரிசை வீரர்களும் அதே பாணியில் அதிரடியைக் கையிலெடுத்து ஜெயவர்த்தன 55(58), மத்தியூஸ் 33(24), திரிமன்னே ஆட்டமிழக்காது 27(22), ஜீவன் மெண்டிஸ் ஆட்டமிழக்காது 30(14) என்றவாறு ஓட்டங்களைக் குவிக்க 50 ஓவர்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 317 ஓட்டங்களைக் குவித்தது.

பந்து வீச்சில் இங்கிலாந்து சார்பாக வோக்ஸ் மற்றும் ரேட்வெல் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் அலி 1 இலக்கையும் கைப்பற்றினர்.

317 எனும் இமாலய ஓட்டங்களை விரட்டுவதற்காக பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணியின் ஆரம்பம் சிறப்பாக இருந்தது ஆரம்ப வீரராக களமிறங்கிய அலெஸ்டர் குக் மற்றும் மொயின் அலி தமக்கிடையே 54 ஓட்டங்களைப் பகிர்ந்து கொண்ட வேளை 10(17) ஓட்டங்களைப் பெற்றிருந்த அலெஸ்டர் குக் ஆட்டமிழந்து வெளியேறினார். தொடர்ந்து களமிங்கிய பெல்லுடன் இணைந்து கொண்டார். இருவரும் சிறப்பாக ஆடிய போது 35(35) ஓட்டங்களைப் பெற்றிருந்த பெல் ஆட்டமிழந்தார். தொடர்ந்து களமிறங்கிய றூட் 2(7) ஓட்டமும், மோர்கன் 1(7) பட்லர் 21(21) ஓட்டத்துடனும் ஆட்டமிழந்து வெளியேறினர். மறுமுனையில் சிறப்பாக ஆடிக்கொண்டிருந்த மொயின் அலியுடன் இணைந்து கொண்ட வொபாரா சிறப்பாகவே ஆட்டத்தைத் தொடர்ந்த வேளையில் 30.6 பந்துப் பரிமாற்றங்களில் 203 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளை 119(87) ஓட்டங்களைப் பெற்றிருந்த மொயின் அலி ஆட்டமிழந்து வெளியேறினார். தொடர்ந்து அதிரடியாக ஆட்டத்தை ஆரம்பித்த வொபாராவும் ஸ்ரோக்ஸ்ஸும் ஓட்ட எண்ணிக்கையை அதிகரிக்க 39.5 பந்துப் பரிமாற்றத்தில் 16 ஓட்டத்தை பெற்றிருந்த ஸ்ரோக்ஸ் ஆட்டமிழந்தார். பின்னர் களமிறங்கிய வீரர்கள் வோக்ஸ் 7 ஓட்டமும், திரட்வெல் 6 ஓட்டத்துடனும் ஆட்டமிழந்தனர். இறுதியில் சிறப்பாக ஆடிய வொபாரா 65(62) ஓட்டங்களைப்பெற்று ஆட்டமிழந்தார். இறுதியில் 47.1 பந்துப்பரிமாற்றங்களில் 292 ஓட்டங்களைமாத்திரமேபெற்று சகல இலக்குகளையும் இழந்து தோல்வியைப் பெற்றுக்கொண்டது.

பந்து வீச்சில் இலங்கை சார்பாக பெரேரா 3 இலக்குகளையும்ஹேரத் அஜந்த மெண்டிஸ் தலா 2 இலக்குகளையும், பிரசாட், டில்சான், ஜீவன் மெண்டிஸ் தலா ஒரு இலக்குகளையும் கைப் பற்றினர்.

ஆட்ட நாயகனாக இலங்கை அணி

**மணமகன் தேவை**

30 வயதுடைய கனடாவில் வங்கி அதிகாரியாகப்பணி புரியும் அழகிய மணமகளுக்கு படித்த, மிகவும் முக்கியமாக கல்வி நிலை உயர் தராதரம் உள்ளவர்கள் (வைத்தி யர்கள், கலாநிதி, பொறியியலா ளர்கள்) மட்டும் தேவை.
கூடிய சீதனம் கொடுக்கப்படும்.
தொடர்பு:
021 499 3500

**தென்னம்பிள்ளை விற்பனைக்குண்டு**

எம்மிடம் குறைந்த காலத்தில் பயன்தரக்கூடிய நல்லின தென்னம் நாற்றுக்கள் விற்பனைக் குண்டு.
தொடர்பு: 077 659 2044 (47341) (45.8.3)

**பதவி வெற்றிடம்**

வரவேற்பாளர் : பெண்
★ ஆங்கில மொழித்தேர்ச்சி
★ 30 வயதுக்கு கீழ்
தொடர்பு:
021 499 3500

## ஆத்மா சாந்திப்பிரார்த்தனையும் நன்றி நவிலலும்



### கறுப்பையா கிருஷ்ணசாமி

எமது குடும்பத் தலைவர் அமரர் கறுப்பையா கிருஷ்ணசாமி அவர்களின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனை 30.11.2014 ஞாயிற்றுக்கிழமை தியாகி அறக்கொடை நிலையத்தில் (TCT நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.) நடைபெறவுள்ளது. அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு கண்ணீர் அஞ்சலி செலுத்தியோருக்கும், ஆறுதல் வார்த்தை கூறியோருக்கும் மற்றும் வைத்தியசாலையில் உதவி புரிந்தோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இல. 1, காட்டுக்கந்தோர் ஒழுங்கை,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல: 021 373 7422 (41555) (10.6) குடும்பத்தினர்.

**முற்பணம் இல்லை, நுழைவுக்கட்டணமும் இல்லை**

★ கனடா - படிக்க உழைக்க அரிய வாய்ப்பு.
★ செங்கன்நாடுகள்
சுவிஸ், பிரான்ஸ், நோர்வே, இத்தாலி....
உட்பட 26 நாடுகளுக்கு 2 வருட விசா
100% விசா உறுதிப்பாட்டுடன்
★ ஆஸ்திரேலியா குடும்பவிசா.
★ அனைத்து நாடுகளுக்குமான Visit visa, Sponsor, Refusal
(ஞாயிறு விடுமுறை)

**திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்**
175, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
021 221 9016, 021 568 9090



## 1 ஆவது பிறந்த தின வாழ்த்து



சசீபன் வைஷ்னா தம்பதிகளின்
செல்வப் புதல்வன்
**பிரித்வின்**
தனது முதலாவது பிறந்த தினத்தை
27.11.2014 இன்று தனது
இல்லத்தில் கொண்டாடுகிறார்

இவரை அப்பா, அம்மா, அக்கா, அப்பம்மா, அப்பப்பா, அம்மம்மா, அம்மப்பா, சித்தப்பாமார், மாமாமார், அத்தைமார், சித்திமார், அண்ணன்மார், மச்சான்மார், மச்சாள்மார் ஆகியோர் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

**CAPS**



(Canadian Academy of Professional Studies)
52,Palaly Road,Thirunelvely Jaffna. (Near Sampath Bank)
IELTS தேர்வு
NURSING ENGLISH MEDIUM (Canadian Curriculum)
TEACHER TRAINING IN ENGLISH
மேற்படி கற்கைநெறிகளைத் தொடரும் வெளிமாவட்ட மாணவர்களுக்கு தங்குமிட வசதிகள் இலவசமாக வழங்கப்படும்.
விண்ணப்ப கடைசித் திகதி : 30.11.2014
வகுப்புக்கள் ஆரம்பம் : 01.12.2014
தொடர்புகளுக்கு:
Srilanka : 077 386 7458 | Canada : 416 986 9554

**SPOKEN ENGLISH**
WITH DIPLOMA CERTIFICATE
இளைஞர் யுவதிகள், மாணவர்கள், தொழில் புரிவோருக்கான 3 மாத வார, வார இறுதிநாள் SPOKEN ENGLISH பயிற்சிநெறி ஆரம்பம்.
ஆங்கிலத்தில் ஓரெழுத்து தெரியாதவர்களும் கூட எமது இப்பயிற்சியில் இணைந்து பயிற்சிபெற முடியும்.
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் - 29.11.2014 சனி
1.காலை - 10.00-12.00 2.மாலை - 03.00-05.00
வாரநாள் (செவ்வாய், வியாழன்) பிரிவுகள் ஆரம்பம் - 27.11.2014
1.காலை 08.00-10.00 2.காலை 10.00-12.00
SAAMSON
Experts in English Training
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 621 4567

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.11.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.


உதயன்
உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை
மாநில சுயாட்சியையே
இந்தியா வலியுறுத்தும்
30
அகவையில் காலடி பதிக்கும்
உதயன்

## மக்கள் மனங்களை வென்ற நாளிதழ் உதயன்



உதயன் நாளிதழ் தனது 29 ஆவது அகவையைப் பூர்த்தி செய்து 30 ஆவது அகவையில் தடம் பதிப் பதையிட்டு நான் பேருவகையடைகின்றேன்.

"கேட்டார் பிணிக்கும் தகையவாய் கேளாரும் வேட்ப மொழிவதாம் சொல்" என்ற தெய்வப் புலவர் திருவாக்கிற்கிணங்க வாசகர்களின் உள்ளங்களைத் தனது திறம்படச் சொல்லும் திறனால் ஈர்த்து மகத்தான சாதனையுடன் மக்களின் மனங்களை எல்லாம் வென்று உதயன் எம் மண்ணில் இன்று மூன்றாவது தசாப்தத்தில் கால் பதிக்கின்றான். உதயன் நாளிதழுக்கு நடந்து முடிந்த காலங்களில் எத்தனையோ இடர்பாடுகள், துன்பங்கள், இன்னல்கள், உயிர்ச்சேதங்கள், பொருள் சேதங்கள் ஏற்பட்டதை இந்த உலகமே அறியும். அத்தகைய இடர்கள் இனி மேலும் நடைபெறாது இருப்பதற்கு அம்பிகை அருள் புரிய வேண்டும்.

"நன்றே தரினும் நடுவு இகழ்ந்து ஆம் ஆக்கத்தை அன்றே ஒழிய விடல்" என்றவாறு பாரபட்சமின்றி பக்கச்சார்பின்றி உண்மைக்கு முதலிடம் கொடுத்து நடுநிலைமையுடன் துணிச்சலாக செயற்படுவதும் ஆளுமை மிக்க நிர்வாகத் திறமையும் கொண்டு செயற்படுவதும் பாராட்டுதலுக்குரியது. தனது 30 ஆவது அகவையில் மேலும் பற்பல சேவைகளைப் புரிந்து விரிவுபடுத்தவும், உதயனின் பிரதம ஆசிரியரின் ஆற்றுப்படுத்தலிலும், பணிப்பாளர், ஆசிரியர் குழாம், அலுவலர்கள், பணியாளர்கள் முகவர்கள் அனைவரும் திறம்படச் செயற்பட எல்லாம் வல்ல அம்பிகையை இறைஞ்சி வேண்டிப் பிரார்த்தித்து எனது ஆசிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். வாழ்க வளமுடன்.

"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"

**சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்ட பாணிக தேசிகர்.** JP.
*இந்து மதகுரு பீடாதிபதி, பிரதமகுரு,*
*வல்வை ஸ்ரீமுத் துமாரி அம்மன் தேவஸ்தானம்,*
*வல்வெட்டித்துறை*

## உதயனின் பணி தொடரட்டும்



ஊரறிய, உலகறிய, உண்மையாய் உயர்ந்தவன் உதயன். உன்னதமான உயரிய பணியாற்றும் உதயனுக்கு எமது வாழ்த்துக்கள். இருபத்தொன்பது ஆண்டுகள். பல துன்பங்களையும், துயரங்களையும் சுமந்து மக்களின் மனதில் இடம்பிடித்து, மக்களுக்காக பணி செய்து வருகின்ற உதயனின் பயணத்தில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் உதயனோடு பயணித்தது என்ற பெருமை எமக்கு உண்டு. நேர்மையும், உண்மையும், பக்கச்சார்பற்ற பக்குவமும் உதயனின் அலங்காரம். அதில் ஒருபோதும் மாறுபாடுகள் ஏற்படுவதற்கு இடமில்லை. தமிழர் தம் தாய்மொழியை தலை நிமிர்ந்து பேசுவதற்கு வல்லமையைக் கொடுத்தவனும் உதயனே. அயராத உழைப்பால் அரவணைப்பால் பல உயிர்களைக் காவுகொடுத்து இன்னும் பணி செய்ய வேண்டுமென்ற உதயனின் துணிச்சலுக்கு முன்னால் எவரும் ஈடுகொடுக்க முடியாது. மேலும் பல்லாண்டு உதயனின் பணி தொடர வேண்டும். மக்களின் உயர்வான வாழ்வுக்கும், நமது தேசக் குழந்தைகளின் கல்விக்கும் அளப்பரிய சேவையை தொடர்ந்து, இன்னும் செய்வதற்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஆட்சிக்குழு உறுப்பினர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் சார்பாக வாழ்த்தி நிற்கின்றோம்.

*தொழிற்சங்கப் பணிக்காக*
**சரா.புவனேஸ்வரன் ,**
*பொதுச் செயலாளர்.*
*இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்*

## தமிழ்த் தேசியத்தை நிலைநாட்ட உழைப்பவன் உதயன்



உதயன் 29 வருடங்களை நிறைவு செய்து 30 ஆவது ஆண்டில் காலடி வைப்பது என்பது ஈழத் தமிழ் மக்களின் சுதந்திரமான உணர்வின் 29 வருட நிறைவாகவே இருக்கும். இன்று இலங்கையில், பத்திரிகைச் சுதந்திரம் என்பது முற்றாகவே மறுக்கப்பட்ட நிலையில், தமிழ் ஊடகவியலாளர்கள் மட்டுமல்லாது, உண்மையை எழுதுகின்ற சிங்கள, ஆங்கில மொழியிலான ஊடகவியலாளர்களும் கூட, தாக்குதலுக்குள்ளாக்கப்படுவதும், கொலை செய்யப்படுவதும், மற்றும் தமிழ் பத்திரிகை அலுவலகங்கள் எரியூட்டப்படுவதுமாக இருப்பது போன்ற காட்டுமிராண்டித் தனமான செயல்கள் கட்டவிழ்த்துவிடப்பட்ட போதெல்லாம், உதயன் பத்திரிகையும், அதன் ஆசிரிய பீடமும், செய்தியாளர்களுமே நேரடியாகப் பாதிக்கப்பட்டிருந்தமையை 1997 ஆம் ஆண்டில் இருந்தே அனுபவித்து வருகின்றோம். அன்று தொடக்கம், இன்று வரை உதயன் அனுபவித்து வரும் துன்பங்கள் மற்றும் அரச பயங்கரவாதங்களையெல்லாம் துணிச்சலுடன் எதிர்கொண்டு, பீனிக்ஸ் பறவையாக எழுந்து நிற்கும் உதயனின் வளர்ச்சியின் பின்னால் ஆயிரக்கணக்கான உள்ளங்கள் தமது அர்ப்பணிப்பான சேவைகளை ஆற்றி வருகின்றமை ஈழத் தமிழர்களுக்கு மட்டுமல்லாது, புலம் பெயர்ந்த தமிழ் உறவுகளுக்கும் ஒரு பலத்தையும், உத்வேகத்தையும் கொடுத்துக் கொண்டிருக்கின்றது. தமிழ் தேசியத்தை நிலைநாட்டுவதற்காகக் கடந்த 29 வருடங்களாக, உழைத்து வரும் உதயன் 1988 ஆம் ஆண்டில் சந்தித்த ஒரு நெருக்கடியான நிலையில், அது முடக்கப்பட்டு விடுமோ என்ற ஓர் அச்ச நிலை தோன்றியபோது, பத்திரிகா தர்மத்தை நிலைநாட்டும் வகையில், அதன் எழுத்துக்களையும், செய்தியின் நம்பகத்தன்மையையும் நியாயப்படுத்தி, உதயன் எதிர்நோக்கிய நெருக்கடியில் இருந்து விடுபட்டுத் தொடர்ந்து தமிழ் மக்களின் குரலாக நின்று துணிச்சலுடன், ஒலிக்கும் உதயன் இன்னும் பல ஆண்டுகள் வெளிவந்து எமது இனத்தின், சுபீட்சமான ஒரு வாழ்வுக்கான பாதையை அமைத்துக் கொடுப்பதில் தொடர்ந்தும் உழைக்க வேண்டுமென்று வாழ்த்துகின்றேன். யோகர் சுவாமிகள் கூறியது போல், "ஏசுவார்கள், எரிப்பார்கள், உண்மையை எழுதுங்கள், உண்மையாய் எழுதுங்கள்" என்ற வேதவாக்குக்கு அமைய, உதயன் பத்திரிகையைத் தொடரும் பணியில் நடுநிலை நின்று உழைத்துவரும் அதன் பிரதம ஆசிரியர் மற்றும் ஆசிரியர், செய்தி ஆசிரியர்கள், ஊடகவியலாளர்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ந.அனந்தராஜ்** , *நகரபிதா, வல்வெட்டித்துறை*

## அருளாசிச் செய்தி



மக்கள் மனம் நிறைந்த நாளிதழான "உதயன்" இன்று தனது 29 ஆவது அகவையைப் பூர்த்தி செய்து தனது 30 ஆவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றான் என்பதையிட்டுப் பெரு மகிழ்ச்சியடைகின்றோம்.

1985 முதலாக அவன் நடந்து வந்த பாதை மிகவும் சங்கடமானது. எத்தனையோ இன்னல்களைத் தாண்டி வெற்றி நடை போட்டு வீரசாகஸம் புரிந்துள்ளான். ஒவ்வொரு நாளும் உதயனைப் பார்க்காவிட்டால் எதையோ இழந்து விட்டது போலிருக்கும். இப்படி ஈழம் வாழ் மக்களின் நெஞ்சங்களில் நீங்கா இடம்பிடித்து விட்ட உதயனுக்கு இன்று பிறந்த நாள். இந்த இனிய நன்னாளில் அவன் இன்னும் நீண்ட காலம் ஊடகப் பணி செய்ய வேண்டுமென்று நல்லைக்குருமணியின் பாதம் பணிந்து அருளாசிகள் நல்கி வாழ்த்துகின்றோம். நல்லதொரு பத்திரிகையான உதயனின் நற்பணி மேன் மேலும் நல்லமுறையில் தொடரப் பிரார்த்திக்கின்றோம். உளமார ஆசி வழங்கி மகிழ்கின்றோம்.

வாழ்க வளமுடன்!

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்.**
*ஆதீனமுதல்வர், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்.*

## "உதயன்" நாளிதழே உன்னதமாய் வாழியவே!

இதய தாகந் தீர்க்கும் இனிய நாளிதழாய் மலர்ந்து
ஈழம் வாழ் மக்களின் நல் மனங்களில் நிறைந்து
உதய வேளையில் உதித்து உத்தம சேவை செய்யும்
"உதயன்" நாளிதழே!
உன்னதமாய் வாழியவே!
திக்கெட்டும் புகழ் பரப்பித் தினமும் கைகளில் திகழ்ந்து
தீராத பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் நாளிதழே!
மக்கட்கெல்லாம் நல்ல மகத்தான சேவை செய்து
மாண்புடனே என்றென்றும் மங்களமாய் வாழியவே!

**"கலாபூஷணம்" இராசையா ஸ்ரீதரன்.**

## மக்கள் வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந்தவன் உதயன்

பல்வேறு அரசியல் நெருக்கடிகளுக்கு மத்தியிலும் பத்திரிகைத் துறையில் 3 ஆவது தசாப்தத்தை எட்டியிருக்கும் உதயன் நாளிதழ் மக்களின் இரசனைக்கேற்பவும் காலத்திற்கேற்பவும் காத்திரமான சிந்தனைத் தெளிவுள்ள ஆக்கங்களையும் நாடு மற்றும் சர்வதேச ரீதியில் இடம்பெறும் செய்திகளைத் துணிவுடன் பல்வேறு இடர்களுக்கு மத்தியிலும் சிறப்பான வகையில் நடுவு நிலைமை தவறாது நாளாந்தம் வெளியிட்டு வருகின்றமையே பத்திரிகையின் சிறப்பான வளர்ச்சிக்கும் வெற்றிக்கும் காரணமாகிறது.

மக்களின் வாழ்க்கையுடன் பின்னிப்பிணைந்து ஒன்றாகிவிட்ட உதயன், ஆரம்ப ஆண்டிலிருந்து சுதந்திரமாகப் பக்கச் சார்பற்ற துணிச்சலான வகையில் செய்திகளையும் ஆக்கங்களையும் தமிழ் பேசும் மக்களின் கலாசாரம், வாழ்வியல், தமிழ் மக்கள் அனுபவித்த அவலங்கள் மற்றும் எதிர்நோக்கும் சவால்கள் அனைத்துக்கும் சான்றாகவும் பதிவாகவும் உதயன் நாளிதழ் விளங்குகின்றது என்றால் அது மிகையாகாது. உதயனின் வளர்ச்சியை நோக்காகக் கொண்டு அல்லும் பகலும் அயராது சேவையாற்றும் உதயன் பத்திரிகையில் கடமை புரியும் ஆசிரியர்கள், செய்தியாளர்கள் மற்றும் அங்கு கடமை புரியும் அனைத்து ஊழியர்களின் ஒத்துழைப்புடன் மேன்மேலும் உதயன் தினம் தினம் உதித்து மக்களுக்கு உயர்சேவை வழங்கி பத்திரிகை வரலாற்றில் மேலும் மேலும் சாதனைகள் படைக்க வேண்டும் என்று எனது நல்லாசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**இ.தேவசகாயம்பிள்ளை,**
*தவிசாளர், நகராட்சி மன்றம், சாவகச்சேரி.*

## உயிரோடு உணர்வாக உதயன்



உண்மைகளை உரக்கச்
சொல்லிக் கடமைகளைக்
கடைக்கொண்டு
உரிமைகளை உணரச் செய்து
தமிழருக்காய் தாலாட்டுப்
பாடும் தமிழ்த் தாயவளின்
வயது இன்றோடு முப்பது
ஐயாறு வயதினிலும் அயராது
உழைக்கும் உண்மையான உதயன்
என்றும் உன் உன்னதமான உரிமைக் குரல்
தமிழர் நெஞ்சங்களில் ஓயாது ஒலித்திட
எம் மனமார்ந்த வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்....

**இரத்தினம் சிவநாதன்**
*(நயினாதீவு நாகபூஷணி*
*அமுதசுரபி அன்னதான சபை*
*உறுப்பினர்)*

## சுதேச மருத்துவ வளர்ச்சிக்கு பங்களிப்பு வழங்குபவன் உதயன்

தற்கால தொழில்நுட்ப வளர்ச்சியின்பால் இணையத்தளங்களின் துரித செய்திகளுக்கு நடுவே, உதயன் பத்திரிகை திறம்பட மிளிர்வது என்பது திறமையின் பாற்பட்டது. நவீன ஆய்வாளர்கள் செவிவழிச் செய்திகளையும், தொல் சீர் காலத்து ஏடுகளையும், கல்வெட்டுக்களையும் ஆய்வு செய்து மீள் பிரசுரமாக்குவது அறிவுசார் வளர்ச்சிக்கு அடிப்படையாகும். அந்த வகையில் தமிழர் சுதேச மருத்துவத்தின் சீர்பெற்ற வளர்ச்சிக்கு நீண்ட காலமாகப் பல்வேறு வகையில் காத்திரமான பங்களிப்பை வழங்கி வரும் உதயன் பத்திரிகை நிறுவனம் தமது பணிகளை மெருகூட்டி முத்துவிழா காண்கின்றது. அந்த வகையில் உதயன் பத்திரிகை சுதேச மருத்துவ வளர்ச்சியில் கைகோர்த்து தனக்கென தனித்தடம் பதித்துப் பெருமையுடனும், சாதனையுடனும் தனது சேவைகளை இடையறாது வழங்கி மக்களை ஆற்றுப்படுத்தி மேலும் வளர்ச்சி கண்டு பன்னெடுங்காலம் இயங்கிப் பல விழாக்கள் காண வேண்டுமென்று மனதார வாழ்த்துகின்றேன்.

Dr. **திருமதி சி.துரைரட்ணம்**, *மாகாண ஆணையாளர், சுதேச மருத்துவ திணைக்களம், வடமாகாணம்.*

## துணிவுடன் மிளிரும் பத்திரிகை உதயன்

தமிழ் மக்களின் கண்ணாடியாகத் திகழும் உதயன் பத்திரிகைக்கு எமது நல்லாசிகள். 30ஆவது ஆண்டில் காலடிவைக்கும் இந்த வேளையில் உதயன் பத்திரிகை கடந்து வந்த காலத்தில் சந்தித்த பல வேதனைகளையும் சோதனைகளையும், சவால்களையும் தனது வளர்ச்சிக்கான உரமாக இட்டு இன்று தமிழரின் நிழல் தருபெரு விருட்சமாகக் காட்சியளிக்கின்றது. உதயனின் மகத்தான சேவைக்கு உயிர்த் தியாகம் செய்த தியாகிகளின் ஆத்மா உதயனின் வளர்ச்சிக்கும் பணிகளுக்கும் ஆசிர்வதிக்கும். தமிழர் தம் எண்ணங்களையும் அபிலாசைகளையும் உரிமைகளையும் பெற்று மகிழ்ந்திட மக்கள் குரலாக ஒலித்துக் கொண்டிருக்கும் உதயனுக்குப் பாராட்டுக்கள். எவராக இருந்தாலும் தட்டிக்கேட்கும் இடத்தில் தட்டிக் கேட்டும், பாராட்டும் சந்தர்ப்பத்தில் பாராட்டியும், ஆலோசனைகள் வழங்கியும், பிழைகளைச் சுட்டிக்காட்டியும் துணிவுடன் மிளிரும் பத்திரிகை உதயன் ஆகும். சிறந்த பணிகளை ஆற்றும் உதயன் சமூகத்தினருக்கு எமது வாழ்த்துக்கள். மக்களுக்கு மகத்தான சேவைகளை ஆற்ற ஆசிர்வதிக்கின்றோம். எமது சமய, கலை, கலாசார விழுமியங்கள் உரிமைகள் எம்மைவிட்டு நலிவுறா வண்ணம் காப்பதற்கு அயராது உழைத்திடும் உதயனுக்கு இறைவனைப் பிரார்த்தித்து ஆசிர்வதிக்கின்றோம்.

**சிவஸ்ரீ சபா.வாசுதேவக்குருக்கள்**
*தலைவர், சர்வதேச இந்து மதகுருமார் ஒன்றியம்,*
*யாழ்ப்பாணம்.*

## சத்தியத்தின் வழியில் நிற்கும் உரிமைக்குரல்



தமிழரின் உரிமைக்குரலாகவும் அடங்காமையின் குறியீடாகவும் பத்திரிகைத் துறையில் எழுந்து வந்திருக்கிற உதயன் இன்று தனது 29 ஆவது அகவையை நிறைவு செய்து 30 வது அகவையில் கால் பதிக்கிறான். உரிமைப் போராட்டத்தின் உன்னத நாளான இன்றைய மாவீரர் நாளில் உதயனுக்கு மனமார்ந்த வாழ்த்துக்களை பகிர்வதில் பேருவகை அடைகிறேன். உதயன் எங்களின் நீண்ட நெடிய உரிமைப்போராட்ட நியாயங்களை தயங்காது உரைத்ததை எங்கள் மக்கள் நன்கு அறிவர். தடைகள் பலவற்றை எல்லாம் தகர்த்து எறிந்து உலக ஊடகத்துறைக்கு முன்மாதிரியாக திகழ்வதை சர்வதேசம் நன்கு அறியும். எங்களவர் வாழ்வியலையும் மக்களின் வாழ்வோடு பின்னிப் பிணைந்திருக்கின்ற கலாசாரத்தையும் கட்டிக்காப்பதில் உதயனின் பணியை , உண்மை அறியும். தொடர்ந்தும் சத்தியத்தின் வழியில் நின்று மக்களின் உரிமைக்குரலாக ஒலித்து, பல நூறு ஆண்டுகள் வாழ்ந்திட உதயனை வாழ்த்துகிறேன்.

**து.ரவிகரன்**
*வடமாகாண சபை உறுப்பினர்*

## ஜனநாயகத்தின் காவலன்



உதயனின் 30வது அகவையில் காலடி பதிப்பதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். 29 வருடங்கள் ஒரு பத்திரிகை நிலைத்து நிற்பதென்பது சாதாரண விடயமல்ல. அதுவும் இலங்கை போன்ற நாடுகளில் நிலைத்து நிற்பது என்பது அசாதாரண விடயம். ஊடகத்துறையை பயங்கரவாத அமைப்புகள் போன்று உருவகப்படுத்திய காலகட்டத்தில் தமிழ்மக்களின் விடுதலைக் குரலாகவும் மிகச்சிக்கலான அரசியல் சமூக பொருளாதார சூழ்நிலையிலும் தொடர்ந்து மக்களின் குரலாகவும் ஓங்கி ஒலித்தது அதற்காக சிந்திய இரத்தங்களும் கொடுத்த விலைகளும் கொஞ்சமல்ல. மக்கள் ஊடகம் என்ற வகையில் நடுநிலையில் நின்று செய்திகளை வெளயிடுவதுடன் தனக்கெதிரான விமர்சனங்களையும் தவிர்க்காது வெளயிட்டுவருவது சிறப்பம்சம்.
ஜனநாயகத்தின் காவலனாகவும் மாற்றத்தின் தூதுவனாகவும் நடுநிலையில் நின்று நீடுழி வாழ வாழத்துகிறேன்.

**இ.இந்திரராசா**
*வடமாகாண சபை உறுப்பினர்*
*வவுனியா மாவட்டம்.*

## வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாண மண்ணில் இருந்து வெளிவரும் உதயன் தமிழ்த் தினசரிப் பத்திரிகை தனது ஊடக சேவையில் 29 ஆண்டுகளைப் பூர்த்தி செய்து 30 ஆவது ஆண்டைத் தொடங்குவது மிகவும் மகிழ்ச்சிகரமானதாகும் .
ஈழத்தமிழின வரலாற்றில் மிக நெருக்கடியான காலப்பகுதிகளில் நெருக்குவாரங்களையும் தாக்குதல்களையும் அச்சுறுத்தல்களையும் எதிர்கொண்டு தளராது சேவையாற்றுகின்ற அச்சு ஊடகமாக உதயன் விளங்குகிறது. செய்திகளை உடனுக்குடன் வழங்குவது மட்டுமின்றி கலை, கலாசாரம், சமயம், இலக்கியம், கல்வி, விளையாட்டுத்துறை, பிறநாட்டுச் செய்திகள் என எல்லாத் துறைகளிலும் உதயன் இப்போது தடம் பதித்துள்ளது.
இன்றைய உலகியல் சூழலில் ஒவ்வொரு மனிதனும் தன்னைச் சுற்றியுள்ள உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நடவடிக்கைகளை அறிந்திருக்க வேண்டியது மிக அவசியமாகின்றது. அவ்வாறு இல்லையெனின் அவன் தான் சார்ந்ததும் சமூகம் சார்ந்ததுமான முடிவுகளை எடுக்க முடியாதவனாகவே இருப்பான். எமது சமூகத்தை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுத் தகவல்களையும் செய்திகளையும் தெரிந்த ஒன்றாக ஆக்குவதில் உதயனின் பணி முக்கியமானதாகப் பார்க்கலாம். உதயன் நாளிதழ் மேன்மேலும் வளர்ந்து தமிழ்த் தேசிய உணர்வுகளைத் தொய்யவிடாமல் தொடர்ந்தும் முன்னெடுக்க இறைவன் துணைபுரிய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

**சீ.வீ.கே.சிவஞானம்**
*அவைத்தலைவர், வடக்கு மாகாணசபை.*

## உள்ளதை உள்ளபடி வெளிக்காட்டுபவன் உதயன்



கடந்த முப்பது வருடங்களாக, ஈழத்தமிழ் மக்களது உரிமைக் குரலாக விளங்கி, வாசகர்களுக்குத் தனது சேவையை பற்றுறுதியுடன் ஆற்றி வரும் உதயனது சேவை அளப்பரியது. உலக மயமாதல் என்ற அகில உலக சுனாமியிலிருந்து நாம் மீள வேண்டுமானால் இனம், மொழி இரண்டையும் பாதுகாக்கும் பெரும்பணியை நாம் மேற்கொள்ள வேண்டும். காலப் போக்கில் வட்டார மொழிகளும், குறுமொழிகளும் அழிந்து போகும் அபாயமிருக்கிறது. தமிழ் அப்படி அழிந்து போகக் கூடாது. தமிழ் அழியவும் அழியாது. உலகில் இன்று பல ஆயிரம் மொழிகள் பேசப்படுகின்றன. ஆனால் அடுத்தடுத்து வரும் நூற்றாண்டுகளில் ஆறே ஆறு பெரிய மொழிகள் மட்டும் தான் தப்பிப் பிழைக்கும். சீனம், ஆங்கிலம், இந்தி, அரபி, ஸ்பானி, தமிழ் ஆகிய 6 மொழிகள் மட்டுமே எதிர காலத்தில் எஞ்சி நிற்குமாம் என ஓர் ஆய்வு சொல்கிறது.
எவ்வாறாயினும் எமது ஈழத்தில் தமிழ் மொழியையும், எம் இனத்தையும் பாதுகாக்கும் பெரும் பணியை உதயன் பத்திரிகை மேற்கொள்வதையிட்டு மனமகிழ்ச்சி அடைகின்றேன். கடந்த வருடங்களாக பல இன்னல்களை சந்தித்து வரும் தமிழ் மக்களது உரிமையை உள்ளதை உள்ளபடியே அனைவருக்கும் வெளிச்சமிட்டு காட்டும் உண்மையானதும், நீதியானதுமான இப்பத்திரிகை பல இடர்களுக்கு மத்தியில் இன்று தனது 30 ஆவது வருடத்தில் காலடியெடுத்து வைக்கின்றது என்றால் அனைத்து ஊழியர்களது சிறப்பான சேவையே காரணம். தங்களது இச்சேவை மேன்மேலும் வளர்ச்சியடைய எனது மனமார்ந்த ஆசியையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**சோ.சுகிர்தன்**
*தவிசாளர், வலிகாமம் வடக்கு பிரதேச சபை,*
*காங்கேசன்துறை (மல்லாகம்).*

## வாழ்க உதயன்

உலக நடப்புகளை
உண்மையுடன் இயம்பி
நாற்றிசையின் செய்திகளை
நயம்பட உரைத்து
யாழிசைத்த மண்ணிலே - கொடும்
யாகத் தீயினில் வெந்துயிர்த்து
தமிழ் கூறு நல்லுலகில்
தடங்கள் பல பதித்திட்ட உதயன்

அகவை புதிதினிலே
அவனிதனில் கால் பதிக்கும்
இனிய நாளாம் இந்நாளில்
இன்முகத்தோடு இச்சகமதில்
நெஞ்சம் மகிழ்ந்து
நெஞ்சாரப் புகழ்ந்து
பல்லாண்டு காலம் - தொடர்
பணி செய்திட வாழ்த்தும்

*உடுவிலூர் கலா*

## முத்தமிழால் வாழ்த்துகிறோம்



முப்பதாவது ஆண்டில்
கால்பதிக்கும் தாயகத்தமிழரின்
தனித்துவக் குரல்
உதயன் பத்திரிகையை
உளமார வாழ்த்துகிறோம்!
எப்போதும் இன்னல்பட்டாய்!
இடையறாது துன்பப்பட்டாய்!
இனவாதசக்திகளின் இடர்பட்டாய்!
இரும்புச் சிறைகளிலும் அடைபட்டாய்!
வெடிபட்டாய் அடிஉதையும் பட்டாய்!
எத்தனை தடைகளை சுமந்து நீயோ!
இருள்சூழ்ந்த எம்மினத்தின் குரலாய்!
இருப்புக்காக எழுந்து பணியாற்றுகிறாய்
இடம்மாறி நீ ஓடவும் இல்லை!
எப்போதும் இனப்பற்றை விடவில்லை!
துட்டர்களின் துவேசத்தை பொசுக்கி!
துரோகிகளின் சூழ்ச்சிகளை தகர்த்து!
எட்டப்பர்களின் பழிவாங்கல்களையும்!
பச்சோந்திகளின் பம்மாத்துக்களையும்!
பரம எதிரிகளின் சதிகளையும்!
படைகளின் அடாவடிகளையும்!
ஒட்டுக்குழுக்களின் ஓரவஞ்சனைகளையும்!
இரும்புப்பாதங்களின் குண்டுகளையும்!
இருபத்தொன்பது ஆண்டுகளாய் சுமந்து
துணிந்து நின்று பணிசெய்கின்றாய்!
துன்பம் பலகண்டவேளையிலும்!
சோரம்போக என்றுமே எண்ணவில்லை
வீரம் விவேகம் உனக்கு உண்டு!
விடுதலை உணர்வு உள்ளத்தில் உண்டு!
கெடுதல் செய்யாத மனமும் உண்டு!
தேடுதல் செய்து உண்மைகளை!
நேரிய தமிழால் தருவோனே!
கூரிய எழுத்துக்கு உதயன் நீயே!
கொள்கையாய் என்றும் உயர்வோனே!
முப்பது ஆண்டில் கால்பதிக்கும் வேளை!
முட்டுக்கட்டைகளையும் தகர்த்து!
முன்னேறி வெற்றிவாகை சூட!
முத்தமிழால் வாழ்த்துகிறோம்!


**பா.அரியநேத்திரன் (அரியம்),**
*தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு*
*நாடாளுமன்ற உறுப்பினர்.*
*மட்டக்களப்பு மாவட்டம்.*

## தமிழ் மக்களின் நெஞ்சங்களில் நிலை கொண்டவன்

கடந்த 29 ஆண்டுகளாக அர்ப்பணிப்புடனும் பற்றுறுதியுடனும் யாழ்.குடா நாட்டு மக்களுக்கு மட்டுமல்லாது தனது சேவையை எங்கெல்லாம் தமிழ் மக்கள் வாழ்கின்றார்களோ, அங்கெல்லாம் தன்னை நிலைநிறுத்தி மக்களின் உள்ளங்களில் என்றென்றும் வலம் வந்துகொண்டிருக்கும் உதயன் 27.11.2014 அன்று தனது 29ஆம் அகவையை நிறைவு செய்து 30 ஆவது அகவையில் காலடி வைப்பதையிட்டுப் பெருமகிழ்ச்சியடைகின்றோம். அதற்கு உறுதுணையாக அர்ப்பணிப்புடன் பணி ஆற்றும் உதயன் பணிமனையைச் சார்ந்த அனைவரும் மேன்மேலும் உறுதியுடன் செயலாற்றவும் அதன் மூலம் அதன் வளர்ச்சி பெறவும் சந்நிதி வேற்பெருமானை வேண்டி நிறைவு செய்கின்றோம்.

**செ.மோகனதாஸ் சுவாமி,**
*சந்நிதியான் ஆச்சிரமம்,*
*செல்வச்சந்நிதி தொண்டமானாறு.*

## உதயனின் சேவை மேலோங்கட்டும்



யாழ்ப்பாணத்தில் தினசரி பத்திரிகையாக சிறப்போடு வெளிவந்து கொண்டிருக்கும் உதயன் பத்திரிகை தனது 30ஆவது ஆண்டை தொடங்கியிருப்பது மகிழ்வைத் தருகிறது. நடு நிலை பிறழாத செய்திகளோடு வெளிவரும் உதயன் தினசரியில் எல்லாச்சிறப்புகளையும் காண்கிறேன். முக்கியமாக ஆலயங்கள் சம்பந்தப்பட்ட விசேஷங்களுக்கு முன்னுரிமை கொடுத்து பிரசுரிப்பது எமக்கெல்லாம் பெருமை. மேலும் உதயனின் சிறப்பு மேலோங்க இறைவனைப் பிரார்த்தித்து ஆசீர்வதிக் கிறேன்.

**சிவஸ்ரீ தா.மகா தேவக்குருக்கள்,**
*காயத்ரீ பீடம், தர்மசாஸ்தா குருகுலம், இணுவில், சுன்னாகம்.*

## நடுவு நிலை தவறாது பணி செய்பவன் உதயன்

முப்பதாவது ஆண்டில் முன்நோக்கி கால்பதிக்கும் உதயனுக்கு முதற்கண் எனது மனமார்ந்த நல்வாழ்த்துக்கள். பத்திரிகைத் துறையில் ஆழ, அகலக் கால் பதித்து அகவைகள் பல கடந்து இன்று முப்பதாவது ஆண்டில் உதய சூரியனாய் கதிர்பரப்பி எங்குமே தன்னாட்சி புரிந்து அனைவரது மனங்களிலும் இடம்பிடித்த புதினப் பத்திரிகையாம் உதயன் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமேது.

உள்நாட்டு, வெளிநாட்டு செய்திகளுடன் கல்வி, கலை, விளையாட்டுத் துறைகள், மேம்பட ஆக்கங்களை அவதானத்துடன் பிரசுரிப்பதிலும் விளம்பரம், அறிவித்தல் என அகில உலகமெங்கும் காட்சிப்படுத்தும் வகையில் கணினி மயப்படுத்திய பக்கங்களால் கடல் கடந்த நம் உறவுகளைத் தொட்டுத்தழுவி ஆற்றுகைப் படுத்துவதிலும் உதயன் வண்ண முகப்போடு வலம் வருவது விண்ணைத் தொடும் வழியாகும் என்பதில் வியப்பில்லை.

ஊடக தர்மம் தழும்பாமல் நடுவுநிலை தவறாமல் பகைமை கொள்ளா பண்பாளனாக பார் முழுதும் புதினம் பரப்பிப் பட்டி தொட்டிகளெல்லாம் களங்கமறயாவும் அறிய தவறாது உழைக்கும் உதயனுக்கு மீண்டும் ஒரு முறை என் இதயம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி கொள்கிறேன்.

வாழ்க உதயன் தொண்டு. வாழ்க உதயன் பணி.

**வைத்திய கலாநிதி திருமதி பவானி பசுபதிராஜா,**
*பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.*

## முப்பதாவது அகவையில் கால்பதித்திருக்கும் உதயன்



மக்களிடம் செய்திகளை உடனுக்குடன் அவற்றின் உண்மைத் தன்மைக்குப் பங்கம் ஏற்படாதவகையில் கொண்டு சென்று சோக்க வேண்டியது செய்தி ஊடகங்களின் கடப்பாடு ஆகும். ஆனால், பௌத்த சிங்கள பேரினவாதத்தின் கொடூரப்பிடிக்குள் சிக்குண்டு தனது வாழ்வுரிமை, வாழ்புலம் எல்லாவற்றையும் இழந்து அல்லலுற்றுக் கொண்டிருக்கும் ஈழத் தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் இருந்து வெளிவரும் அச்சு ஊடகங்களின் சமூகப் பொறுப்பு வெறுமனே செய்திகளைச் சேகரித்து வழங்குதல் என்ற பணியுடன் மட்டும் நின்றுவிடமுடியாது. அதற்கும் அப்பால் எமது தேசிய விடுதலைப் போராட்டத்தின் நியாயப்பாடுகளை உலகறிய உரத்துச் சொல்லவேண்டிய தேவையும், அதன்பால் மக்களை அணிதிரட்டவேண்டிய தேவையும் மேலதிக ஊடகக் கடப்பாடுகள் ஆகும். அந்தப்பணியை பல்வேறு அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் பணியாளாகளின் உயிர் பறிப்புகளுக்கு மத்தியிலும் தளராது நின்று உதயன் மிகச்சிறப்பாகச் செய்துவருவது பாராட்டுக்குரியது.

முப்பதாவது அகவையில் கால்பதித்திருக்கும் உதயன் மேன்மேலும் நல்வளாச்சி பெற்று ஈழத்தமிழ்ச் சமூகத்தின் விடியலுக்கு உழைக்க இயற்கை என்னும் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

**பொ.ஐங்கரநேசன்,**
*அமைச்சர், விவசாய, கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் சுற்றுடல் அமைச்சு, வடமாகாணம்.*

## ஒப்பற்ற ஊடகப் பணி



ஊடக வரலாற்றில் உதயன் பத்திரிகை, அதன் நிறுவனத்திற்குத் தனித்துவமான ஒரு வரலாறுண்டு. அந்த ஊடகம் தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைக்குத் தமிழர் சமுதாயத்தைக் கட்டியெமுப்பியதில் முன்னணி வகித்து வந்திருக்கிறது.

தமிழ்த் தேசிய இன்த்தின் விடுதலைக்கான அனைத்து வழிப் போராட்டங்களையும் அடக்கி ஒடுக்கி விட அரசுகளும், இராணுவத்தினரும், தீவிரவாத பௌத்த சக்திகளும் செயற்பட்ட பொழுதிலும் தமிழர் போராட்டம் தொடர்கிறது. இன்று உலகளாவிய ரீதியில் அப்போராட்டத்தின் வடிவங்கள் பரந்து விட்டுள்ளமை போற்றப்பட வேண்டும்.

அதே போல உதயன் பத்திரிகையையும், அந்த நிறுவனத்தையும் அழித்துவிட எதிரிகள் எடுத்துவரும் வன்முறை நடவடிக்கைகள், சட்ட நடவடிக்கைகள், உயிர் அச்சுறுத்தல்களையெல்லாம் தாண்டி வென்று புதிய வடிவங்களில் புத்துயிரும் புதுப்பொலிவும் பெற்று 30 ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைத்திருக்கும் உதயன் ஏட்டுக்கும் அந்த நிறுவனத்துக்கும் எம் வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைக்கும் விடிவுக்கும் உதயன் பத்திரிகை தொடர்ந்தும் செயலாற்ற நாமெல்லாம் ஒத்துழைப்பு வழங்குவோம்.

**மாவை.சோ.சேனாதிராசா, பா.உ**
*தலைவர், இலங்கைத் தமிழரசுக் கட்சி.*

## ஒப்பற்ற ஊடகப் பணி ஆற்றுபவன் உதயன்



எமது மண்ணில் 30 ஆண்டுகளாக மக்களின் அரணாக நின்று அரும் பணியாற்றிவரும் உதயன் பத்திரிகையின் ஆண்டு விழாக்குறித்து வாழ்த்துவதில் ஆனந்தம் அடைகிறேன். உதயன் பத்திரிகையின் பணி நன்முறையில் தொடரத் துர்க்கா தேவியை வேண்டுதல் செய்கிறேன்.

எம்மண்ணில் வாழும் மக்களின் இடர்களை எடுத்துரைத்ததனால் இந்தப் பத்திரிகை சந்தித்தவை ஏராளம். இந்தப் பத்திரிகையின் வருகைக்காக தம்முயிரை அர்ப்பணித்த ஊடகப் பணியாளரை நாம் நன்றியோடு போற்றக்கடமைப்பட்டுள்ளோம். ஊடகங்கள் நேர்மையான வழியில் மக்களை என்றும் ஆற்றுப்படுத்த வேண்டும். ஊடகத்துக்குரிய உயர் நாகரிகப் பண்புகளை என்றும் வளர்க்க வேண்டும். ஊடகங்கள் ஊடாக மக்கள் செய்திகைள மட்டும் அறிபவர்கள் அல்ல. பல விடயதானங்களைக் கற்றுக் கொள்பவர்கள். மக்களை மாசற்ற பாதையால் அழைத்துச் செல்லும் மகத்தான பணி ஊடகங்களுக்குரிய உயர்ந்த பணி. பத்திரிகைத் துறையில் பழுத்த அனுபவமுடைய மூத்த பத்திரிகையாளர் வ.கானமயில்நாதன் அவர்களின் ஆற்றுப்படுத்தலில் மூன்று தசாப்த காலம் ஒப்பற்ற பணியாற்றிவரும் உதயன் பத்திரிகையின் எதிர்காலம் மேலும் சிறக்க வாழ்த்துகிறேன். உதயனின் முதல்வர் , கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் அவர்களுக்கும், ஆசிரிய குழாத்துக்கும், செய்தியாளர்கள், பணியாளர்கள் அனைவருக்கும் இந்த நாளில் இதயபூர்வமான வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் தெரிவித்து அமைகிறேன்.

**கலாநிதி ஆறு.திருமுருகன்.**
*தலைவர், ஸ்ரீதுர்க்கா தேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.*

## உலகினை ஆளும் உதயன்

இதழியற் பணிக்களத்திலே
இருபத்தொன்பது ஆண்டுகள்
'உதயன்' நாளிதழின்
'உலக உலா தொடர்கிறது

'பற்றி எரிக்கும் நெருப்புப் பணியே'
பத்திரிகைத் துறைப் பணி என்பதை
ஊடக நேர்மை
உலகுக்கு உணர்த்தும்

நாட்டு நடப்புகளின்
நல்லது கெட்டதுகளைக்
காட்டும் நிலைக்கண்ணாடியே
காகித ஊடகம்
எனினும் அவற்றின்
உட்பொருள் உணர்த்தி
உண்மை தெளிவிக்கும்
உயர்தரப் பண்பும்
உடையதே நாளிதழ்

அச்சியல் நேர்த்தி
அவசியச் செய்திகள்
பார்வையைக் கவரும்
பக்க வடிவமைப்பும்
அரசியல், சினிமா

அருந்தமிழ்க் கலைகளும்
நிரம்பி வழியும்
நிகரிலா ஊடகம்
'உதயன் நாளிதழ்
உலகை ஆளுக

*த.ஜெயசீலன்*

## ஒளியூட்டிய உதயோன்....

சிந்தையைச் சுடரிடும்
செங்கதிரோனாம் உதயனுக்கு எங்கள்
செந்தமிழ் வந்தனங்கள்
சிந்தனை உளிகள் கொண்டு
மனச் சிற்பத்தை
சிற்ப வல்லுனன் நீதான்- உதயனே
குடத்துக்குள் குடியிருக்கும்

குப்பி விளக்காய் எரிந்து எம்மினத்தின்
துயரை உலக வானில்
ஒளியூட்டிய உதயோன் நீ...

பக்கச்சார்புக்குள்- எனது
பணிச் சிதையாமல்
உண்மைகளுக்காய் என்னும்
உன் குரல் உரத்தொலித்திடட்டும்.
எதிர்வரும் இடர் கண்டும்

கலங்காமல் தொடரட்டும்
உனது ஊடகப் பணி
இருபத்தெட்டாண்டுப் பயணத்தில்- மெல்ல
இள நிலையைக் கடந்து தொடர்ந்தும்
களத்தினில் ஆடும் வீரன் நீ
இருந்தும் உலக அரங்கில்
ஈழத் தமிழர் உரிமைக்கான
உறவுப் பேரொளியாக உதயவானில்
அவதாரமெடுக்க அவாக் கொண்டு
ஆசிக்கிறேன் வாழ்க உதயன்.

30

*என்.பிறேமசீலன். கோண்டாவில்.*

30 ஆவது அகவையில் காலடி வைக்கும் உதயனுக்கு
அகவை நான்குகாணும் திசைகாட்டியின்

# வாழ்த்து

**புதியபார்வை, நல்நோக்கம், தாராளதன்மை**

**உங்கள் திசைகாட்டி இரும்புத் திரைகள் அகன்று எல்லோருக்கும் இயல்பாகிப்போனது**



**முற்பணங்களும் இல்லை.**
**நுழைவுக்கட்டணங்களும் இல்லை.**

கனடாவில் படிக்க உழைக்க பல்வேறு அரியவாய்ப்புக்கள், செங்கன் நாடுகளான சுவிஸ், நோர்வே, இத்தாலி பிரான்ஸ் உட்பட 26 நாடுகளுக்குப் பறந்துபோகலாம். 100 % விசா உறுதிப்பாடு.

ஐரோப்பிய நாடான சைப்பிரஸில் படிக்க Rs.1,000,000.00 வரை உழைக்க எம்மிடம் வழிவகைகள் உள்ளன. ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும் மூடப்பட்டிருக்கும்.



## திசைகாட்டி (பிறைவேற்)லிமிட்டெட்.
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்திச் சந்தி, யாழ்ப்பாணம்.
021 221 9016



30 ஆவது ஆண்டில் கால் பதிக்கும் உதயனை மனதார வாழ்த்துகின்றோம்
லலிதா ஜுவலர்ஸ்
Lalitha Jewellers
No. 75, Kasthuriar Road, Jaffna.
T.P: 021 222 2863

30
மூன்று தசாப்த அகவை காணும்
உதயனை வாழ்த்துகின்றோம்
சிறி மகமாரி களஞ்சியம்
663. K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.

Pretty World
Beauty Parlour
Threading, Clean up, All Types Of Facial, Pimple Treatment, Pedicure, Manicure, Waxing, Hair Treatment, Hot Oil Massage, Hair Colouring, Hair Perming, Hair Rebonding, Hair Cutting
Wedding Makeup, Mehanthy, Nail Art, Flower Arrangment, Cake Icing, Tailoring
and Classes Are Available
Jaffna Road, Aalady Junction, Manippay.
T.P: 021 791 7367 / 077 401 6745
Email: prettyworld@gmail.com

30 ஆவது
அகவையில் காலடி பதிக்கும்
உதயனை வாழ்த்துகின்றோம்.
வேல் களஞ்சியம்
887. K.K.S.வீதி, தட்டாதெரு சந்தி, யாழ்ப்பாணம்.

30 ஆவது ஆண்டில் தடம் பதிக்கும் உதயன் நாளிதழ் சிறந்து விளங்க வாழ்த்துகின்றோம்.
குறைவான கட்டணத்தில் கணினிப் பயிற்சியினை சிறப்பாக பெற்றுக்கொள்ள
MCAI CAMPUS
இல.243, ஆடியபாதம் வீதி,
கல்வியங்காட்டுச் சந்தி, கல்வியங்காடு.

ஏஞ்சல்ஸ் அழகு நிலையம்
பயிற்சியகம்
புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன
பேசியல் மணப்பெண் அலங்காரம்
திரட்டிங் பேர்மிங் மற்றும் பல....
ஏஞ்சல்ஸ் அழகு நிலையம்,
இல.94, கல்லூரிட்டி வீதி, (மக்கள் வங்கி அருகில்)
தொ.பே.: 077 627 7332

YARL PHONE SHOP
யாழ் போன்சொப்
Phone Sales & Repair
இல.09, ஆஸ்பத்திரி வீதி, நவீன சந்தை வெளிப்புறம், யாழ்ப்பாணம்.
T.P: 021 222 3817 / 021 222 7125 / 077 361 1282

மக்கள் மனங்களில் நீங்கா இடம்பிடித்த உன்னை இன்னும் பல்லாண்டு காண இந்நாளில் வாழ்த்துகின்றேன்
பெஸ்ட் இன்ஸ் ரெக்ஸ்ரைல்
592, பெரியகடை, யாழ்ப்பாணம்.

30 ஆவது
அகவையில் காலடி பதிக்கும்
உதயனை வாழ்த்துகின்றோம்.
அன்பரசன் புத்தகசாலை
முல்லை வீதி, ஒட்டுசுட்டான்.

30 ஆவது அகவையில் கால் பதிக்கும் உதயனின் பணி தொடர வாழ்த்துகின்றோம்
CIMA, கணினிக் கல்விக்கு
யாழ்.மண்ணில் சிறந்ததோர் நிறுவனம்
MCS IT CAMPUS
34,சேர் பொன்.இராமநாதன் வீதி, (யாழ். பல்கலைக்கழகம் அருகில்) யாழ்ப்பாணம்.
077 239 5895 / 021 222 6373

உலகம் எங்கும் உன் பெயர்
தொடர்ந்து ஒலிக்க
30 ஆவது அகவையில் வாழ்த்துகின்றேன்.
S.V.முருகேசு
இல.154, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

30 ஆவது அகவையில்
உதயனை வாழ்த்துகின்றோம்.
ரமேஸ் ஸ்ரோர்ஸ்
இல.37, சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

30 ஆவது அகவையில் காலடி பதிக்கும்
உதயனை வாழ்த்துகின்றோம்.
ASIAN Furniture
Distributors for Piyestra Products
- வீட்டு மற்றும் அலுவலகத் தளபாடங்கள்
- கொழும்பு - யாழ்ப்பாண ரான்ஸ்போட்
- வெளிநாட்டுப் பொதிகள் சேவை.
No.133, POWER HOUSE ROAD,JAFFNA.
T.P:021 791 6911 / 077 358 3879 / 077 831 4201

ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
ALL CEYLON DISTRIBUTERS
Importers of books, Magazines, Agriculture Equipments, all kinds of Stationery, All Kinds of Paper Items, Chemicals, Sports Goods. Office Equipment etc.. and Government Suppliers.
No.212, K.K.S.Road, Jaffna,
T.P.021 222 5542, 021 567 1527
E-mail: acdil@ymail.com
Fax:021 222 7983

Let's Enter Our Miracle World
அகவை 30 இல் கால்பதிக்கும் தமிழ் தேசிய நாளிதழான உதயன் இன்னும் பல சாதனைகள் படைத்து பல சர்வதேச விருதுகளை பெற மனமார வாழ்த்துகின்றேன்.
ANDRA ADVERTISING நிறுவனத்தினர்
379,Kasthuriyar Road,Jaffna.
Phone : 021 720 0000 Fax: 021 222 8929
Mobile : 077 748 1696 Email : andradigi@gmail.com
Web : www.andradesigns.com

30 ஆவது அகவையில் காலடி வைக்கும்
உதயனின் பணி தொடர வாழ்த்துகின்றோம்
Multy Farm & Pet Paradise
எம்மிடம் வளர்ப்பு கலர் மீன்கள், மீன்தொட்டி, மீன்தொட்டி உபகரணங்கள், வளர்ப்பின செல்லப் பிராணிகள் (புறா, நாய், கினிபிக்ஸ், முயல், கோழி). கூடு என்பனவற்றை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
941,கே.கே.எஸ்.வீதி, தட்டாதெரு சந்தி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 7600 / 075 988 0000

30
சிறப்பாகப் பணியாற்றி பல விருதுகள் வென்ற உதயன் நிறுவனம் தனது 30 ஆவது ஆண்டில் கால் பதிப்பதையிட்டு நளின் நிறுவனம் மனதார வாழ்த்துகின்றது.
கணினி, கணினி உதிரிப் பாகங்கள் அனைத்தினையும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள
Nalin
Inforamation Technologies (Pvt)Ltd.
No. 195/4, Parameswara Junction,Palaly Road, Jaffna
T.P: 021 222 1121 / 021 224 2222 / 0777 667 975

30 ஆவது அகவையில் காலடி பதிக்கும் உதயனை வாழ்த்துகின்றோம்.
யாழகம் YARLAKAM
Whole Sale / Retail Dealers in
- Sports - Sports Wear - Under wears
- Music - Winner Cup - T.Shirt
- Exercise - Medals - Player Jersey
568,Hospital Road, Jaffna. Tel 021 222 5563

30 ஆவது அகவையில் காலடி பதிக்கும்
உதயனை மேன்மேலும் பல அகவைகள்
காண மனதார வாழ்த்துகின்றேன்
ORIFLAME
SWEDEN
யாழ்.கிளை
187/30, யூனியன் ஒழுங்கை,யாழ்ப்பாணம்.
(சத்திரச் சந்தி அருகில்,கொட்டடி வீதி.)

30 ஆவது ஆண்டில் கால் பதிக்கும் உதயனின் உன்னத சேவையினை வியந்து பாராட்டுகின்றோம் இவன் பணி தொடர வாழ்த்துகின்றோம்.
கிருபா லேணர்ஸ்
Regd.No.: DS/589
அரச அங்கீகாரம் பெற்ற சாரதியப் பயிற்சிப் பாடசாலை. எம்முடன் இணைந்து நிறைவான பயிற்சியுடன், சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றிடுங்கள்.
இல. 226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4353 / 0777 225 292
கிளை : கிளிநொச்சி - 021 228 5505 /071 454 6955
வவுனியா - 024 222 7777 / 0777 100 444

பல தடைகளைக் கடந்து
30 ஆவது அகவையில் காலடி பதிக்கும்
உதயனின் பணி தொடர வாழ்த்துகள்
ERIC GANESH OPTICIANS
மூக்குக் கண்ணாடி அகரும் பல கட்டுமிடம்
Prop:V.Ganeshalingam
564, 566, Hospital Road, Jaffna.
T.P/Fax: 021 222 2486
Mobile: 0777 156 604

30 ஆவது ஆண்டில் கால் பதிக்கும் உதயனுக்கு எமது நல்வாழ்த்துக்கள்
ஒரிஜினல் தங்க நகைகளை பெற்றுக் கொள்ள நீங்கள் நாட வேண்டிய இடம்
நியூ மைதிலி ஜுவலர்ஸ்
இல. 38,40, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 221 7878, 021 221 7877
E-mail : newmaithily@gmail.com

இன்று தனது 30 ஆவது அகவையில்
காலடி வைக்கும்
உதயனை வாழ்த்துகின்றோம்.
தவம் போட்டோ & கலர் லாப்
362, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

30 ஆவது ஆண்டில் கால்பதிக்கும்
உதயனை வாழ்த்துகின்றோம்
FERENCE LANGUAGE CENTER
யாழின் முன்னணி FRANCE கல்வி நிறுவனம்
புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளதால்
உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.
ஆசிரியர்-MR.V.JEGAN (Trained teacher in france-2007 university இல் பகுதிநேர france விரிவுரைகளை மேற்கொண்டவரும்)
No.40 Palaly Road Jaffna.(ஆரியகுளம்) | No.181 1 st Floor main Street(நெல்லியடி) | 021 320 2973 077 978 9456

பல இன்னல்களிலும் தடம்புரளாது இன்றுவரை
நிலைத்திருக்கும் உதயனே
29 அகவைப் பூர்த்தியில் வாழ்த்துகின்றோம்.

**ஜோதி புக் சென்ரர்**

கிரான் பஜார், மன்னார்.

பல இன்னல்களிலும் தடம்புரளாது இன்றுவரை
நிலைத்திருக்கும் உதயனே
29 அகவைப் பூர்த்தியில் வாழ்த்துகின்றோம்.

**வரணா புத்தகசாலை**

185, பொதுசந்தை, கிளிநொச்சி.

பல இன்னல்களிலும் தடம்புரளாது இன்றுவரை
நிலைத்திருக்கும் உதயனே
29 அகவைப் பூர்த்தியில் வாழ்த்துகின்றோம்.

**அருள் அரசி**
**பல்பொருள் வாணிபம்**

வலைப்பாடு, வேரவில், கிளிநொச்சி.

இலங்கை மட்டுமன்றி
உலகமெங்கும் உன் புகழ்பரப்பும் உதய சூரியனே 30 ஆவது
அகவையில் கால் பதித்து உன் சேவை வளர வாழ்த்துகிறோம்

**வன்னிபேபி நீட்ஸ் அன்ட் புக்ஸ் சென்ரர்**

57/2, மன்னார் றோட்,
குருமன்காடு, வவுனியா.

பல இன்னல்களிலும் தடம்புரளாது இன்றுவரை
நிலைத்திருக்கும் உதயனே!
29 அகவைப் பூர்த்தியில் வாழ்த்துகின்றோம்.

**திருநீலகண்டன் ஸ்ரோர்ஸ்**

57, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

மூன்று தசாப்தங்களாக உதித்து வரும்
சூரிய உதயனே உன் சேவை பல்லாண்டுகள்
தொடர இப்பிறந்தநாளில் வாழ்த்துகின்றோம்.

**விசாகா**
**பஷன் சிற்றி**

25. மன்னார் வீதி,
குருமன்காடு, வவுனியா.

மூன்று தசாப்தங்களாக உதித்து வரும் சூரிய உதயனே
உன் சேவை பல்லாண்டுகள்
தொடர இப்பிறந்தநாளில் வாழ்த்துகின்றோம்.

**J.P.K.SHOPING COMPLEX**

144, பஜார் வீதி,
வவுனியா.

காலையில் எழுந்தவுடன் கண்விழிக்கும் நேரத்தில்
கதவோரம் வந்து நிற்கும் உதயனே
உன் பிறந்த நாளாம் இன்று
உன்பணி தொடர வாழ்த்துகிறோம்

**பகவான் மெடிக்கல்**

221, நாவலர் றோட்,
யாழ்ப்பாணம்.

பல இடர்களைக் கடந்து இன்று வரை
மலர்ந்து வரும் உதயனே
இந்த 29ஆவது அகவைப் பூர்த்தியில்
உன் சேவைகள் தொடர வாழ்த்துகின்றோம்.

**நெடுங்கீரன்**
**பல்பொருள் வாணிபம்**

கரடிப்போக்குச் சந்தி, கிளிநொச்சி.

இருந்த இடத்தில் எம் இருப்பிடம் வந்து
கதவோரம் கண் அசைத்து காலை எம்மை எழுப்பி
கதைகள் பல புரிய வைக்கும் எங்கள் உதயனே
நீ பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்

**கவிதா ஸ்ரோர்ஸ்**

இல.05, பஸ் நிலையம்,
வவுனியா

இலங்கை மட்டுமன்றி
உலகமெங்கும் உன் புகழ்பரப்பும் உதய சூரியனே 30 ஆவது
அகவையில் கால் பதித்து உன் சேவை வளர வாழ்த்துகிறோம்

**குன்றத்தூரான்**
**பல்பொருள் வாணிபம்**

ஓவசியர் கடைச் சந்தி,
5ஆம் வாய்க்கால், பரந்தன்.

இலங்கை மட்டுமன்றி
உலகமெங்கும் உன் புகழ்பரப்பும் உதய சூரியனே 30 ஆவது
அகவையில் கால் பதித்து உன் சேவை வளர வாழ்த்துகிறோம்

**K.P.K.சென்ரர்**

24, பஸ் நிலைய கட்டடம்,
வவுனியா.
024 222 2504

30 ஆவது
அகவையில் காலடி பதிக்கும்
உதயனை வாழ்த்துகின்றோம்.

**உயர்சி புத்தகசாலை**

பிரதான வீதி, மல்லாவி.

30 ஆவது
அகவையில் காலடி பதிக்கும்
உதயனை வாழ்த்துகின்றோம்.

**குயிலன் புத்தகசாலை**

A9, ஆனந்தபுரம், கிளிநொச்சி.

30 ஆவது
அகவையில் காலடி பதிக்கும்
உதயனை வாழ்த்துகின்றோம்.

**இளங்கதிர் இரும்பகம் (அன்பு)**

சிவன்கோயிலடி, ஒட்டுசுட்டான்.

இருந்த இடத்தில் எம் இருப்பிடம் வந்து
கதவோரம் கண் அசைத்து காலை எம்மை எழுப்பி
கதைகள் பல புரிய வைக்கும் எங்கள் உதயனே!
நீ பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

**பொதிகை**
**மல்ரிசென்ரர்**

புதுக்குடியிருப்பு சந்தி

30 ஆவது
அகவையில் காலடி பதிக்கும்
உதயனை வாழ்த்துகின்றோம்.

**விது மெடிக்கல்ஸ்**

பிரதான வீதி, முள்ளியவளை.

பல இன்னல்களிலும் தடம்புரளாது இன்றுவரை
நிலைத்திருக்கும் உதயனே
29 அகவைப் பூர்த்தியில் வாழ்த்துகின்றோம்.

**தென்றல்குமரன்**
**பல்பொருள் வாணிபம்**

நெட்டாங்கண்டல்.

மூன்று தசாப்தங்களாக உதித்து வரும்
சூரிய உதயனே உன் சேவை பல்லாண்டுகள்
தொடர இப்பிறந்தநாளில் வாழ்த்துகின்றோம்.

**செந்தமிழ் ஸ்ரோர்ஸ்**

முல்லை வீதி, பரந்தன்

இருந்த இடத்தில் எம் இருப்பிடம் வந்து
கதவோரம் கண் அசைத்து காலை எம்மை எழுப்பி
கதைகள் பல புரிய வைக்கும் எங்கள் உதயனே!
நீ பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

**நிலா உணவகம்**

வெளிக்கண்டல் சந்தி,
கண்டாவளை.

இருந்த இடத்தில் எம் இருப்பிடம் வந்து
கதவோரம் கண் அசைத்து காலை எம்மை எழுப்பி
கதைகள் பல புரிய வைக்கும் எங்கள் உதயனே
நீ பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்

**செல்லப்பிள்ளையார்**
**விவசாய உள்ளீடுகள் வாணிபம்**

புளியம்பொக்கணை சந்தி

30 ஆவது
அகவையில் காலடி பதிக்கும்
உதயனை வாழ்த்துகின்றோம்.

**சோமசுந்தரம் ஸ்ரோர்ஸ்**

A9றோட், மாங்குளம்

பல இடர்களைக் கடந்து இன்று வரை
மலர்ந்து வரும் உதயனே
இந்த 29ஆவது அகவைப் பூர்த்தியில்
உன் சேவைகள் தொடர வாழ்த்துகின்றோம்.

**படையப்பா**
**பல்பொருள் வாணிபம்**

A9 வீதி, புளியங்குளம் சந்தி, புளியங்குளம்.

மூன்று தசாப்தங்களாக உதித்து வரும்
சூரிய உதயனே உன் சேவை பல்லாண்டுகள்
தொடர இப்பிறந்தநாளில் வாழ்த்துகின்றோம்.

**சாயினி**
**மல்ரி சென்ரர்**

முருகானந்தா பாடசாலை முன்பாக,
முரசுமோட்டை, பரந்தன்.

30 ஆவது ஆண்டில் கால்பதிக்கும் உதயன் மேன் மேலும் வளர எமது வாழ்த்துக்கள்
Information for all Nursing Homes and Pharmacies
NASHA BRAND EXPORT QUALITY
DISPOSABLE GLOVES ALL SIZEs AVAILABLE
@Rs.650/100 - 10 BOXES 1 BOX FREE
Vanikaa Surgicals,
203, Hospital Road, Jaffna
T.P:021 222 0077

# ஊடகப் போராளிகள்

ஊடகத் துறைக்கென தங்களை அர்ப்பணித்துப் பணியாற்றிய பலரை நாங்கள் இழந்திருக்கின்றோம். இப்போது இந்தத் துறையில் இருப்பவர்களுக்கு இதுவரையான இழப்புக்கள் ஊடக அடக்குமுறையுள்ள தேசமொன்றில் இயங்குகிறீர்கள், பாதுகாப்பற்ற சூழலில் பணிபுரிகின்றீர்கள் போன்றவை உரக்கச் சொல்லப்படுகின்றது.

இலங்கையின் ஊடக சுதந்திரம் ஆயுதம் தாங்கியவர்களினாலும், அதிகாரத்திலுள்ளவர்களினாலும் அடக்கம் செய்யப்பட்ட பின்னும் துணிந்து போராடிய ஊடகப் போராளிகள் துப்பாக்கியின் கோரப் பசிக்கு இரையாக்கப்பட்டதுடன் சிலர் காணாமற் போனார்கள். கடத்தப்பட்டு விடுவிக்கப்பட்டார்கள். பல ஊடகப் போராளிகளின் இழப்புக்களைக் கடந்தே நாம் வந்திருக்கிறோம். அந்த இழப்பின் வலியும், அது எம்முள் கீறிவிட்ட வடுவும் இன்னமும் அப்படியேதான் இருக்கிறது. இழப்புக்கள் தொடர்பிலான நீதி விசாரணைகள் நீதியை வழங்கிய வரலாறுகள் கிடையாது.

*- ஜோ குட்டி*

பல இன்னல்களிலும் தடம்புரளாது இன்றுவரை நிலைத்திருக்கும் உதயனே
29 அகவைப் பூர்த்தியில் வாழ்த்துகின்றோம்.
சின்னத்தம்பி ஸ்ரோர்ஸ்
கைதடி நுணாவில், சாவகச்சேரி.

பல இன்னல்களிலும் தடம்புரளாது இன்றுவரை நிலைத்திருக்கும் உதயனே!
29 அகவைப் பூர்த்தியில் வாழ்த்துகின்றோம்
அறிவொளி புத்தகசாலை
இரணைப்பாலை வீதி, புதுக்குடியிருப்பு

பல இன்னல்களிலும் தடம்புரளாது இன்றுவரை நிலைத்திருக்கும் உதயனே
29 அகவைப் பூர்த்தியில் வாழ்த்துகின்றோம்.
சிவசாந்தி உணவகம்
தாழ்வுப்பாடு வீதி, எனில் நகர், மன்னார்.

www.travelpass.lk
148,Aluth Mawatha Road, Colombo-11
Tel: 077 036 4264
IATA



நம்ப முடியாத விலைகளில் உங்களது விமானப் பயணச் சீட்டுக்களை நீங்கள் எமது www.travelpass.lk என்ற இணையத் தளத்தின் மூலம் நீங்களாகவே பதிவுசெய்து கடனட்டைகளின் மூலம் பெற்றுக்கொள்ள முடியும். எமது இணையத்தளத்தின் மூலம் நீங்கள் ஒரே ஒருமுறை விமானப் பயணச் சீட்டினைப் பதிவு செய்து பார்த்தால் உங்களுக்கு இந்த உண்மை புரியும். உதாரணமாக Colombo - Doha - Rs. 18035/= இற்கு பெற்றுக்கொள்ளலாம். இது போலவே ஏனைய டிக்கட்டுக்களும் மிகக் குறைந்த விலைகளிலேயே வழங்கப்படுகின்றன.
மத்திய கிழக்கு நாடுகளுக்கு நாமே மிக மிகக் குறைந்த விலைகளில் எமது www.travelpass.lk இணையத்தளத்தின் மூலம் டிக்கட்டுக்களை வழங்குகின்றோம் என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கின்றோம். மேலதிக விவரங்களுக்கு
Muthu: 0777 881 656/ DILAN : 077 755 1512
இவற்றைத் தவிர ஏனைய பயன்களாவன...
- எமது இந்த இணையத்தளத்தின் வாயிலாக உலகிலுள்ள எந்தவொரு HOTEL இனையும் நீங்கள் பதிவுசெய்துகொள்ள முடியும்.
- எமது www.travelpass.com என்ற இணையத்தளத்தின் மூலம் Indonesia, China, Bangkok, Malaysia, Myanmar, Vietnam, India, Dubai மற்றும் Singapore மேலும் பல நாடுகளுக்கான Visa வினைப்பெற்றுக் கொள்வதற்கு தேவைப்படும் ஆவணங்கள் பற்றியும் எமது இணையத்தளத்தின் வாயிலாக அறிந்துகொள்ள முடியும்.
- எமது இணையத்தளத்தின் வாயிலாக டிக்கட்டுக்களைப் பதிவு செய்யும் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் ஒவ்வொரு கிழமைகளிலும் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசுகள் வழங்கப்படும் மாத முடிவில் தேர்ந்தெடுக்கப்படும் ஒரு குடும்பத்திற்கு 3 இரவுகள், 4 நாள்கள் (2 Pax Bangkok சுற்றுலா சென்று வர Voucher வழங்கப்படும்.
Hotline : 077 788 1656, 077 036 4264

அன்னை புத்தகசாலை வாடிக்கையாளர்களுக்கு ஒரு நற்செய்தி
★மதிப்புக்குரிய வாடிக்கையாளர்களே!
★கடந்த வருடம் போல் இந்த முறையும்
★சகல பாடப்புத்தகங்களுக்கும் விசேட விலைக்கழிவு வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு அறியத்தருகின்றோம்.
பாலர் வகுப்பு முதல்! பட்டப்படிப்பு வரையான!!
சகல புத்தகங்களையும்
2015 ஆம் ஆண்டுக்கான புதிய பதிப்பு
ந.சந்திரகுமார் (மட்டக்களப்பு) அவர்களின்
தரம் 1 முதல் 5 வரையான சகல பாடப்புத்தகங்களும் வெளிவந்து விட்டன.
மற்றும் இலங்கையின் பிரபல ஆசிரியர் ஏ.எஸ் ஜௌபர் அவர்களின் எழுத்துருவாக்கத்தில் உருவான பாடப்புத்தகங்கள் 2015 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர் களுக்கான விசேட கற்றல் வழிகாட்டி நூல்கள்.
ENGLISH MEDIUM BOOKS AND MODEL PAPERS GRADE 6 TO 11
INTERNATIONAL School Books Grade-1 to 5
சகல விதமான கொப்பி வகைகளும்
2015 ஆம் ஆண்டுக்கான கலண்டர்கள், டயறிகள் என்பவற்றையும்
பாடசாலையில் வழங்கப்படும் School List இற்கு தேவையான சகல பொருள்களும் விசேட விலைக்கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்.
ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறக்கப்படும்.
அன்னை புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
021 222 9881





உலகெங்கிலும் உள்ள பத்திரிகை நிறுவனங்களுக்கெல்லாம் இதயமாக இருப்பது ஆசிரியர்பீடம்தான் என்பது அனைவரும் அறிந்ததே. உதயனுடைய ஆசிரியர் பீடத்தில் நகைச்சுவைச் சம்பவங்களுக்கு பஞ்சமே இல்லை.

■ பிரகாஸ்



சற்றுக் குண்டான ஒரு பையன் இருக்கிறான், இல்லை, இல்லை கொஞ்சம் அதிகமாகவே குண்டுதான். அவன் எட்டு மணிக்கு வந்துவிடுவான். அவனது உடலுக்கு ஏற்றது மாதிரியே அவனது குரலும். உள்ளே ஆள் உள்ளது என்பதை வாசலில் நிற்பவருக்கு தெரிந்துவிடும். ஏதாவது நிகழ்ச்சிகளை நாம் உதாசீனம் செய்ய வெளிக்கிட்டால் போதும் உடனும் "சேரிட்ட சொல்லிடுவன்" என வெருட்ட ஆரம்பித்திடுவான். சேர் எண்ட அந்த வார்த்தையைக் கேட்டதுமே அனைவரும் பெட்டிப்பாம்புபோல் அடங்கிவிடுவோம்.

மற்றுமொருத்தன் இருக்கிறான் அவன் எந்த நேரமும் தாடியுடன் அலைவான். பாவம் அவனும் ஆண்தானே அவனுக்கு என்ன பிரச்சனையோ! புகைப்படம் எடுப்பது தான் அவனின் வேலை. ஆசிரியர் மகிழ்ச்சியாக இருந்தால் அலுவலகத்தில் தங்கிவிடுவான். ஆசிரியர் சற்றுக் கோபமாக இருப்பதுபோல் தென்பட்டால் போதும் கெமராவை எடுத்துக்கொண்டு மெல்ல நழுவி வில்லையினால் வில்லங்கங்களை தேட ஆரம்பித்துவிடுவான். பீடத்தில் ஆசிரியர் இல்லாத நேரம் அவன் இருக்க வேண்டும் என்பதுதான் பலரின் எதிர்பார்ப்பு. ஒரு வரியில் சொல்ல வேண்டுமென்றால் ஆசிரியர்பீடத்தின் கலகலப்பைப் பேணுவது அவன் பணி.

■ தர்சன்

# வாசகரை தொட்ட உதயன்

தமிழ் மக்களின் தனித்துவமான பத்திரிகை என்றால் அது உதயன் தான். 1985ஆம் ஆண்டில் இருந்து இன்றுவரை மக்களுக்காகப் பல சவால்களையும் பல உயிரிழப்புக்களையும் சந்தித்தும் பக்கம் சாராமால் தளராத நடைபோடும் உதயன் நாளிதழ் வாசகர்கள் மத்தியிலே எவ்வாறான எண்ணத்தை வேரூன்ற வைத்திருக்கிறது? எத்தகைய காரணிகளால் இந்தப் பத்திரிகைக்கு .இன்றும் தனித்துவமான இடத்தை மக்கள் வழங்கியுள்ளனர்?

உதயன் பத்திரிகை வெளிவந்த நாளில் இருந்து இன்றுவரை அதனுடைய தனித்துவமும், எவருக்கும் அஞ்சித் தலை குனியாத தன்மையாலும் அதனுடைய வாசகராக அறிமுகமானார். இன்று தலைமுடி நரைத்து அவருடைய இளமை மங்கிக் கட்டிலில் படுக்கையாக இருந்தாலும் காலையில் உதயன் பத்திரிகையைப் பார்ப்பதற்காக மட்டும் எழுந்து கட்டிலின்மேல் அமர்ந்து கொள்வார். கண் பார்வை மங்கினாலும் பத்திரிகையைப் படிப்பதில் அவருக்கு அளவு கடந்த ஈடுபாடு. அவருக்கு எதனால் இந்தப் பத்திரிகையில் இவ்வளவு வெறி?

"2ஆம், 3ஆம் வகுப்புப் படிக்கேக்கயே நான் பேப்பர் பாக்க வெளிக்கிட்டன். எந்தப் பேப்பர் எண்டு இல்ல. எல்லாத்தையும் பாப்பன். பிறகு 'ஈழநாடு' எண்ட ஒரு பேப்பர் தமிழ் மக்களின்ர பிரச்சினையள வெளியால கொண்டு வந்திச்சு. அப்ப அத எங்கட பேப்பர் எண்டு பாக்க வெளிக்கிட்டன். என்ர அப்பா படியாதவர். ஆனா அரசியலில, பத்திரிகையில எண்ட என்ர ராசா...! அவரோட ஆடேலாது. தமிழரசுக் கட்சியும் 'ஈழநாடும்' எண்டாக் காணும் அவருக்கு.. இதுகளால எனக்கும் பத்திரிகையில நல்ல விருப்பம்" என்று கூறியவாறே தனது கால்களை எடுத்துக் கட்டிலின் மேல் வைத்து அருகிலே இருந்த வெற்றிலை, பாக்குகளைப் போட ஆரம்பித்தார். சிறிது மணித்துளிகள் சென்ற பின்னர் தனது பேச்சை ஆரம்பித்தார்.

"அப்பிடி இருக்கேக்க 'ஈழநாடு' இறங்கி மெதுவா 'உதயன்' வளரத் தொடங்கிச்சு" என்றவாறே, அருகில் இருந்த உதயன் பத்திரிகையைக் கையில் எடுத்தார். "இப்பிடி ஒரு பத்திரிகை வளரும் எண்டு சா...! என்ன பத்திரிகையப்பா இது. நவரசம், அறுசுவை எல்லாம் நிறைஞ்ச பத்திரிகை. காலப் போக்கில அது வும் இந்தப் போர்க்காலம் வந்த துக்குப் பிறகு உதயன் எண்டால்....." என்று ஒரு மாதிரி இழுத்து அவருடைய நெஞ்சை நிமிர்த்தி "உயிர் தான்" என்று கூறி அமர்ந்திருந்தார்.

இனிப்பா இருக்கு. உறைப்பா இருக்கப்பா.. சகலதும் அடங்கின ஒரு பத்திரிகையப்பா. இது எல்லாம் பார்க்காமலுக்கு அதில வாற ஆசிரியர் தலையங்கத்தப் பாத்தாலே போதும் எண்டு இருக்கும். ம்ம்... இப்பிடி அது கொஞ்சம் கொஞ்சமா வளந்து துணிஞ்சு எல்லாத்தையும் போட்டு எளிய நடையில, படிச்சவனுக்கு மட்டுமில்லாம படியாதவனும் பாக்கிற மாதிரி விளக்கமாயும், சிரிக்ககூடிய மாதிரியும் அழக்கூடிய மாதிரியும், சிந்திக்ககூடிய மாதிரியும் இருக்கிற ஒரு பத்திரிகை என்னெண்டா அது உதயன் தானப்பா" என்று கூறியவாறு வாயில் இருந்த வெற்றிலையை கட்டிலின் கீழே இருந்த ஒரு பேணிக்குள் துப்பி வாயைத் துடைத்தார். சிறிது நேரம் தலையை ஆட்டி யோசித்து மறுபடியும் கதைக்க ஆரம்பித்தார்.

100 பக்கம் வாசிக்கிறத விட அதில ஒரு பக்கம் வாசிச்சாலே போதும். போர்க்காலத்திலயும்..! அப்பிடி எந்தப் பத்திரிகை இருந்தது? உதயனைவிட வேற ஒரு பத்திரிகை இருந்ததா? இருக்குமா? எல்லாற்ற மனதிலயும். ஒருவற்ற கையில என்டாலும் உதயன் இல்லாம இல்ல. சும்மா நிக்கிறவன் கூட கையில பேப்பர் வைச்சிருந்தா உதயன் பேப்பரா எண்டு கேட்டு ஒருக்கால் வாங்கி சும்மா தலையங்கம் எண்டாலும் பாக்காமல் போமாட்டான். அப்படியான பேப்பர் ஐயா" என்று கூறக் கூற அவர் படுக்கையில் இருந்ததை மறந்து போய் உசாரான ஓர் இளைஞன் போலவே பேசினார்.

"சுருங்கச் சொன்னாலப்பா படிச்சவனுக்கு மட்டுமில்ல படியாதவனுக்கும் விழங்கக்கூடிய அவ்வளவு எளிய நடையிலும், விளக்கமாயும், தெளிவாயும் சொல்றது உதயன் எண்டுதான் சொல்லுவன். என்னால மட்டுமில்லையப்பா ஆரும், உதயன் பேப்பர் வாசிக்கிற எவை யும், வேற எந்தப் பத்திரிகைக்காரனும் கூட ஒருக்கா குறை சொல்லட்டும் பாப்பம். சும்மா சொல்லலாம் ஒழிய மனச்சாட்சியைத் தொட்டு உதயன் பத்திரிகை ஒரு தரம் குறைஞ்ச பத்திரிகை எண்டு சொல்ல முடியாது" மனதில் இருந்ததை மிடுக்குடன் கூறினார்.

உதயன் பத்திரிகைய வாசிக்கத் தொடங்கினா ஒரு எழுத்தும் விடாம வாசிப்பன். இதால நேரம் போறதும் தெரியாது. காலம் போறதும் தெரியாது. அப்பிடி ஒரு பத்திரிகை. அரசியலில எனக்குப் பெரிசா ஈடுபாடு இல்ல. ஆனா யாழ்.குடா நாட்டு மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் ஆற்றின தொண்டு அளப்பரியது. ஆரப் பாத்தாலும் உதயனில வந்தது, அந்த செய்தி உதயனில வந்தது, இப்பிடி எல்லாம் உதயன் எண்ட சொல்லத் தவிர வேற எந்தப் பத்திரிகையையும் சொல்ல மாட்டினம், இழுத்துக் கூறி "இப்பிடி ஒரு பத்திரிகை இல்லை எண்டால், போர்க் காலமே தெரியாம போயிருக்கும். ஓண்டும் தெரியாம போயிருக்கும் ஒருவருக்கும். அரசாங்கம் என்ன எல்லாம் செய்தது? அரசாங்மும் அதை மடக்க, அழிக்க, ஒழிக்க பட்டபாடு செய்த காரியங்கள் ஆ.. அதுக்கும் பயந்ததா? அடி உதைக்குப் பயந்ததா? கொளுத்தினாங்களே, எரிச்சாங்களே எல்லாம் செய்தாங்கள் அசைஞ்சுதா? சா.. அந்தப் பத்திரிகை நடத்திற அந்த நிர்வாகத்த என்னெண்டு புகழுறது. என்னெண்டு சொல்லுறது... வார்த்தையே இல்லையையா. அப்பிடியான ஒரு வல்லமை, துணிவு, வீரம், இண்டைக்கு அதுகளெல்லாம் பெருக்கெடுத்து ஆறா ஓடத் தொடங்கிட்டுதப்பா, பெரிய ஆறா ஓடத்தொடங்கிட்டுது. அணை கட்ட முடியாத ஆற்று வெள்ளம். பொய்யில்ல, புளுகில்ல, ஏமாத்திறது இல்ல, தந்திரமில்ல, வியாபாரமில்ல. பேப்பருக்கு வழியில்லாத அந்தக் காலத்தில இந்தத் தாள் என்ன பேப்பர்?" எண்டு எங்களைக் கேட்டுத் தலையை சொறிந்து யோசித்தார். நாங்களும் வாய் எதுவும் திறக்காமல் கேட்டுக் கொண்டிருந்தோம். அப்போது திடீர் எண்டு "என்ன அது நாங்கள் சோதினைக்கு எழுதுற பேப்பர் ஆ... ஆ... புஸ்காசீற்று பேப் பரில எல்லாம் உடனுக்குடன சுடச்சுட, ஒவ்வொரு பக்கங்களில எல்லாம் பத்திரிகை அடிச்சு ஐஞ்சு ரூபாக்கு எல்லாம் வித்தவங்கள்.;... உதயன், உதயன் தானப்பா"

இந்த முதியவர் உதயனைப் பற்றி கதைக்க ஆரம்பிக்கும் போது இருந்த சோர்வு, கதை முடியும் போது மருந்தாகி உற்சாகமாகவும் தெட்டத்தெளிவாகவும் தனது கருத்துக்களை முன்வைத்தார்.



இன்னுமொருத்தன் இருக்கிறான். பெரிய மிருதங்க வித்துவான் எண்டு நினைப்பு. எந்த நேரம் பாத்தாலும் மிருதங்கத்தப்பற்றி கதைத்துக் கதைத்து காதுக்கால ரத்தம் எடுப்பான். அட அதுகூட பரவால்லையுங்கோ அவன்ர தொலைபேசி றிங்ரோனையம் மிருதங்க வாசிப்பைத்தான் விட்டிருக்கிறான் எண்டாப் பாத்துக்கோங்களேன். இருந்த இடத்தில இருந்துகொண்டு அந்த றோட்டில என்ன விபத்து. இந்த பொலிஸ்ரேசனில என்ன முறைப்பாடு. நீதிமன்றத்தில என்ன வழக்கு எண்டு வெட்டி விளாசுவான். என்ன ஒண்டு தனக்கு முடிகொட்டுறத நினைச்சு ஒரே கவலைப்படுவான்.



பிறிதொருவர் இருக்கிறார், கொஞ்சம் குண்டான ஆள் ஆனால் தமிழுக்கு இனியவர். உள்ளூர் விளையாட்டுகளின் செய்தி சேகரிப்பு அவர் பணி. அவரது உடம்புக்குச் சற்றும் பொருத்தம் இல்லாத ஒரு மோட்டார் சைக்கிளை எடுத்துக்கொண்டு தெருக்கள் முழுவதும் புகையடித்துக்கொண்டு திரிவார். பாவம் மனிசன் ஒவ்வொரு நாளும் வீட்டுக்குச் செல்ல இரவு எட்டு மணியோ அல்லது பத்து மணியோ ஆகும். தலையில் முடி கொட்டுபவர்கள் வரிசையில் எமது பீடத்தில் இவருக்கே முதலிடம்.

**ஒரு பத்திரிகையின் மொத்த இயக்கமும் இப்படித்தான். செய்தி சேகரிப்பிலிருந்து, விற்றுத்தீர்வது வரையிலான உழைப்புக் காலம், அதன் மனிதர்களின் செயல்கள் இங்கே பதிவாகின்றன.**

# இது செய்திப் பணி

## முதலில் செய்தியாளர்கள்

உண்மையை சொல்லுறம். றிப்போட்டர் என்டா ஊருக்குள்ள ஓர் இளக்காரம்தான். அப்பிடி இளக்காரமாகப் பாக்கிறவங்களுக்கு ஒன்று சொல்ல ஆசைப்படுறம். றிப்போட்டர் வேலையை செய்துபாத்தாத்தான் தெரியும். சும்மா இருக்க செய்தி வருமா? இதுகள யோசிக்கிறேல்ல எங்கட சனங்கள்.

விடிய எழும்பி 'கோ'படத்தில ஜீவா வந்தபோல நாங்களும் வேலைக்கு வந்தா சிலநேரங்களில் 'அசைன்மென்ட்' இருக்கும். 'அசைன்மென்ட்' என்பது நிகழ்வுகள். அதுகளப் பார்த்துக் கவர் பண்ணோணும். 'அசைன்மென்ட்' இல்லாட்டியும் எங்களுக்கென்று தரப்பட்ட திணைக்களங்கள், அலுவலகங்களில என்ன நடந்தாலும் அந்த செய்தியை சேகரித்துப் பிரசுரிக்கவேண்டிய தேவை எங்களுக்கு இருக்கு.

சில செய்திகள் தொலைபேசி மூலமாக எடுக்கலாம். ஒத்துழைப்புத் தாற அலுவலர்களிட்ட இது சாத்தியம். சில அலுவலர்கள் இருக்கினம். அவயளிட்ட தொலைபேசில தொடர்புகொண்டா நேரில் வா என்டுவினம். நேரில் போனா "சேர் மீற்றிங்கில இருக்கிறார்" என்று மணிக்கணக்கில காக்க வைப்பினம். சரி காத்திருந்தாலும் பரவாயில்லை, செய்திக்காகத்தானே என்டிருந்தா அவயள் தங்கட சொந்தக் கதை, சோகக் கதையெல்லாம் சொல்லுவினம். எல்லா அதிகாரிகளும், அலுவலர்களும் இப்பிடியில்லை. யாரோ சில பேர் தங்களத்தான் என்டு நினைச்சுப்போட்டினம். ஐயோ உங்கள சொல்லேல்ல பாருங்கோ..

சில நேரம் நாங்கள் போட்ட செய்தி பிழை என்டு போர்க் கொடி தூக்கிக்கொண்டுவருவினம் சில நிறுவனத்தினர். இப்பிடியான பிரச்சனைகள் எல்லாத்தையும் சமாளிச்சு ஆசிரியரின் சத்திர சிகிச்சைக்குப பிறகு அடுத்தநாள் காலையில் அச்சில் வருவதுதான் நீங்கள் படிக்கும் இந்த செய்தி.

## உதவி ஆசிரியர்கள்

எங்களுக்குரிய பணி, ஆசிரியரால் பக்கங்கள் குறிப்பிட்டு அனுப்பப்படும் செய்திகளை செம்மையாக்கி அதற்குரிய பக்கங்களுக்குக் கொடுக்கிறது. வேலை இது தான் என்டதும்... அடடா ரொம்ப சுலபமே எண்டு நினைக்கிறது விளங்குது... கொஞ்சம் பொறுங்கோ..!

முதல் நாள் எப்பிடியும் வீட்டுக்குப் போக சாமம் ஒரு மணியாகி இருக்கும்.. "என்ன பேய் வேலை பாக்கிறியோ?" என்ட பேச்சையும் வாங்கிக் கொண்டு சாப்பிட்டுப் படுத்து விடிய வேலைக்கு வந்து கணினிய 'ஒன்' பண்ணுவம் எண்டு கைய வைக்க... "என்ன .....! பக்கங்கள் நேத்து வடிவா பாக்கலயோ?.. 2ஆம் பக்கத்தில இப்பிடிப் போயிருக்கு. உங்கட பக்கங்களுக்கு நீங்க பொறுப்பு", எண்டு குரல் கேட்கும்.

ஒரு மாதிரி சமாளிச்சுப் போட்டு இடத்தில போயிருந்து வேலையத் தொடங்குவம். ஒவ்வொரு உதவி ஆசிரியருக்கும் பல, சில பக்கங்கள் பொறுப்புக் கொடுக்கப்பட்டிருக்கும். செய்தியாளர்கள் செய்தி அனுப்பினமோ இல்லையோ, குத்துக்கரணம் அடிச்செண்டாலும் செய்திகளைக் கொடுத்துப் பக்கத்த சரியான நேரத்துக்கு அச்சுப்பகுதிக்கு அனுப்ப வேண்டியது அந்தந்த உதவி ஆசிரியர்களின் பொறுப்பு. மெயில்ல சில நாள்கள் ஓபின் பண்ணினோான செய்திகள் குவிஞ்சிருக்கும். சரி, இண்டைக்கு வேளைக்கு வேலைய முடிக்கலாம் எண்டு நிம்மதியா இருக்கும். சில நாள்கள் 'இன்பொக்ஸ்' வெறுமையா சிரிக்கும். அண்டைக்கு ராசி பலன் சரியில்லை எண்டு நினைக்க வேண்டியதுதான்.

செய்திகள் கனக்க வந்திருந்தா சந்தோசமா இருக்கும். ஆனால் செய்திகளைச் செம்மையாக்கத் தொடங்கக் கொஞ்ச நேரத்தில முழிபிதுங்கிடும். 90 சதவீதமான செய்தியள் தலையிடி கொடுக்கும். என்னத்த எழுதி இருக்கிறாங்கள் எண்டே தெரியாது. எழுத்துப் பிழையளுக்கு எந்தப் பஞ்சமும் இருக்காது. ஒவ்வொருத்தனுக்கும் கோல் பண்ணி டவுட் எல்லாம் கிளியர் பண்ணி முடிக்க டவுசர் கழண்டிடும். ஏனெண்டா சில செய்தியாளர்கள் எழுத நினைக்கிறது ஒண்டு. எழுதி அனுப்பிறது இன்னொண்டு. சில செய்தியாளர்களிண்ட செய்தி எண்டா நாங்க எல்லாம் தலைதெறிக்க ஓடுறதும் உண்டு. அந்தளவுக்கு செய்திகள் சுத்தம். அப்பிடியே செய்தியக் குடுத்திட்டுப் போனா அடுத்தநாள் எங்கட தலை தான் உருளும். ஏதாவது பிழை எண்டா அலுவலகத்தில விழுற பேச்ச விட பொழுது போகாதவன் எல்லாம் போன் எடுத்து வறுத்தெடுத்து உயிர வாங்குவாங்கள். ஒருமாதிரி ஒவ்வொரு பக்கத்துக்குமான செய்தியள வெட்டிக் கொத்தி செம்மையாக்கிப் பக்கவடிமைப்பாளர்களிடம் அனுப்பிக் கொண்டிருப்பம். கதிரையில் இருந்து வேலை செய்யேலாது. 'கெடிங்' பெரிசு சின்னனாக்குங்கோ, நியூஸ் பெரிசா இருக்கு வெட்டுங்கோ எண்டு இருக்க விடாங்கள். பகல் நேரத்தில பரவாயில்லை. இரவு வேலை இருக்கே.. செய்தியளக் குடுத்திட்டுப் பக்கத்தப் போடுங்கோ எண்டுட்டுப் பாத்துக்கொண்டிருந்தால் பக்கம் வராது. பக்கம் போட்டுக் கொண்டே நித்திரையாகி போயிடிவினம் சிலபேர். இருக்கிற வேலையில அவங்கள இடைக்கிட போய் எழுப்பவும் வேணும். நித்திரையில செய்திக்கு இடையில இருக்கிற பந்தியளையும் அழிச்சுப் போடுவினம் சிலவேளை.

பக்கங்கள் வடிவமைக்கப்பட்டு வந்ததும் ஒப்புநோக்குநர்களிடம் கொடுக்கப்பட்டு ஒப்புநோக்கப்பட்டு, திருத்தங்கள் எல்லாம் போடப்பட்டு எங்களிட்ட வரும். நாங்க கொடுத்த மாதிரித்தான் பக்கம் வடிவமைக்கப்பட்டிருக்கிறதா?, செய்திகள் எல்லாம் சரியாக இருக்கிறதா? எண்டு அந்தப் பக்கம் முழுக்க வாசிச்சுப் போட்டு செய்தி ஆசிரியரிடம் கொடுப்போம். அவரும் பக்கத்தப் பாத்திட்டு ஏதும் திருத்தம் இருந்தாத திருத்திப் போட்டுத் தருவார். அதுக்குப் பிறக்கு ஆசிரியரிட்டப் போகும்.

பக்கத்தில ஏதாவது பிழை வந்திட்டெண்டா எங்கட தலை தான் உருளும். "பக்கத்துக்கு நீங்கதான் பொறுப்பு. உங்கட பக்கங்கள நீங்க தான் சரியாப் பாக்கோனும். புருவ் ரீடஸ் பாக்கேல.. இவை பாக்கேல்ல" எண்டு, காரணம் சொல்லேல்லாது, எண்டு ஆசிரியர் கிழி கிழி எண்டு கிழிச்சிடுவார். அந்தக் கடுப்பில ஒப்புநோக்குநர்களிடமோ, மற்றையவையிட்டயோ நாங்க போய் ஏறிப் பாய்ஞ்சா, ஓம் பிழை போட்டுது.. நீங்க பாத்துத்தானே தந்தனீங்க எண்டு ஈஸியா சமாளிச்சிடுவிடுனம். வடிவேலு ரேஞ்சுக்கு எல்லாரிட்டயும் வாங்கிறது நாங்கதான்.

## பக்கவடிவமைப்பாளர்கள்

பத்திரிகையின் வெற்றிகரமான சுற்றோட்டத்திற்கு ஊடகப் பணியாளர்கள் அனைவரது உழைப்பும் இருக்கின்றது. வாசகனைக் கவரும் வகையில் பக்கத்தை வடிவமைக்கும் பொறுப்பு பக்கவடிவமைப்பாளர்களுடையது.

பக்கம் எப்பிடி வடிவமைக்க வேண்டும் எண்டு சில விதிமுறைகள் இருக்கு. அதாவது எங்கட பத்திரிகையின் பக்கங்கள் இப்பிடித்தான் வெளிவரவேண்டும் என்ற விதிமுறைகள். இது நிறுவனங்களுக்கிடையில் வேறுபடும். செய்தித்தாளின் பக்கங்களை அதன் பெறுமதி குறையாமல் வடிவமைக்க வேண்டும். சஞ்சிகைப் பக்கங்கள் போன்று தினசரிப் பத்திரிகையின் பக்கங்களை வடிவமைக்க முடியாது. அதேநேரம் வாசகர்களைக் கவரும் வகையிலும் இருக்க வேண்டும் என்பது சற்று சவாலான விடயம்தான்.

பக்க வடிமைப்புப் பிரிவில என்ன நடக்கும் என்று உங்களுக்குத் தெரிய வாய்ப்பில்லை.

முதலில் தொலைநகல்ல வாற செய்திகளை ரைப் பண்ணுவம். அலுவலக செய்தியாளரிட்ட இருந்து உதவி ஆசிரியரிட்ட வாற செய்தி மின்னஞ்சல்ல வாறபடியா அதைத் திருப்ப 'ரைப்' பண்ணத் தேவையில்ல. செய்தி 'ரைப்' பண்ணுறவர்களை 'ரைப்' செற்றர்ஸ் எண்டு சொல்லுறது. அவர்கள் ரைப் செய்த பிறகு ஒப்புநோக்குநர்களிட்ட செய்தியைக் கொடுப்பம். அவர்கள் அதில் சொற்பிழை, பொருள்பிழை பார்த்து திருத்துவினம்.

பிறகு அதைத் திருத்தி பக்கத்தில போடுவம். பிறகு வடிவமைக்கப்பட்ட பக்கத்தை மறுபடியும் ஒப்பநோக்குநர்களிட்ட கொடுப்பம். என்ன தான் முதல் திருத்தியிருந்தாலும் அப்ப கண்ணுக்குத் தெரியாத பிழைகள் இரண்டாம் தரம் பார்க்கேக்க வரும். அவர்கள் திருத்தம் போடுறதைத் திருத்திக்கொண்டு பக்கத்தை அதற்கு பொறுப்பான உதவி ஆசிரியரிட்ட கொடுப்பம்.

ஒப்புநோக்குநர்கள் கண்ணுக்கு அகப்படாத சில தவறுகள் உதவி ஆசிரியர்கள் கண்ணுக்குப் புலப்படும். அவர்கள் திருத்தம் போடுவார்கள். அதையும் திருத்திக் கொண்டு பக்கத்தை செய்தி ஆசிரியரிட்ட கொடுப்பம். அவர் சிலநேரங்களில தலைப்புக்களில மாற்றங்கள் செய்வார். எல்லா மாற்றங்களும் நடந்த பின் தான் அடுத்தநாள் வெளிவர வேண்டிய பத்திரிகையின் றேசிங்களை இயந்திரப் பகுதிக்கு அனுப்புபவர்கள்.

## இயந்திரப் பகுதி

எங்கட வேலை பத்திரிகை அச்சடித்தல். ஆசிரியர் பீடத்தில இருந்து சொல்லுவினம் 'பக்கம் எடுக்க வரட்டாம்" எண்டு. போய் எடுத்தா எங்கட வேலை தொடங்கும். இதுதான் வழமை. சிலநேரம் இந்தா வருது பக்கம். இந்தா வருது பக்கம் என்டுவினம் ஆசிரிய பீடத்தினர். அது வரும்.ஆனா வராது என்ட நிலைமையில ஆறுதலா வரும் பக்கம். நெடுக இல்லை. எப்பாலும் இருந்திட்டு. பக்க வடிவமைப்பு முடிஞ்ச உடன அதெல்லாம் சரி பார்த்து இறுதியா றேசிங் தருவினம். நாங்கள் அதைக் கொண்டு வந்து எங்கட வேலையை தொடங்குவம்.


கன பேருக்குத் தெரியாது என்னெண்டு பேப்பர் அச்சடிக்கிறது எண்டு. பள்ளிக்கூடப் பிள்ளையள் வந்தா ஆர்வமாப் பார்த்துத் தெரிஞ்சுகொண்டு போவினம். இனி என்ன விநியோகம்தான். அது அதிகாலையிலேயே ஆரம்பிக்கும்..சுடச்சுட செய்தி படியுங்கோ..!




சில நேரம் நாங்கள் போட்ட செய்தி பிழை என்டு போர்க் கொடி தூக்கிக்கொண்டுவருவினம் சில நிறுவனத்தினர். இப்பிடியான பிரச்சனைகள் எல்லாத் தையும் சமாளிச்சு ஆசிரியரின் சத்திர சிகிச்சைக்குப பிறகு அடுத்தநாள் காலையில் அச்சில் வருவததான் நீங்கள் படிக்கும் இந்தச் செய்தி.

உதயனின்


# துயரப் பதிவுகள்




உதயன் செய்தி ஆசிரியர் கொடுங்கோலர்களின் தாக்குதலுக்கு இலக்கானார்.



2006 உதயன் அலுவலகம் மீதான தாக்குதல்




திருகோணமலை செய்தியாளர் சுட்டுக் கொலை



உதயன் செய்தியாளர் ரஜிவர்மன் சுட்டுக் கொலை



2006 உதயன் அலுவலகம் மீதான தாக்குதல்



உதயன் களஞ்சியசாலை இனந்தெரியாதோரால் எரிக்கப்பட்டது

# விற்பனையில் உதயன்

தி.ராஜ்,
வினோதன்

பத்திரிகைகளை மக்களிடம் கொண்டுபோய் சேர்ப்பதில் முக்கிய பங்கு விற்பனை முகவர்களுக்கு இருக்கின்றது. அவர்களின் விற்பனைத் தந்திரமும் ஒவ்வொரு பத்திரிகையின் வெற்றியிலும் பங்கெடுத்திருக்கின்றது. பத்திரிகை அலுவலகத்தின் சம்பளம் பெறாது, பத்திரிகைக்காக வேலை செய்பவர்கள்தான் விற்பனை முகவர்கள்.

ஒவ்வொரு விற்பனை முகவர்களும் பல பத்திரிகைகளை யும் விற்பார்கள். ஆனாலும், வாடிக்கையாளர்கள் எந்தப் பத்திரிகையில் மோகம் காட்டு கின்றார்கள் என்பதை முகர்ந்து பிடித்து அதனைப் பூர்த்தி செய்தால் தான் வாடிக்கையாளர்களை ஈர்க்க முடியும்.

விற்பனை முகவர்கள் பத்திரிகை அலுவலகத்திலிருந்து கொஞ்சம் விலகி இருப்பவர்கள். அதனால்தான் அடிக்கடி விநியோகப் பிரிவினருடன் உரிமையுடன் கோபித்துக் கொள்வார்கள். பத்திரிகை கொஞ்சம் தாமதிக்கின்றது என்றால் போதும், தொலை பேசி மேல் தொலை பேசியடித்து விநியோகப் பிரிவினரை ஆட்டிப் படைத்து விடுவார்கள். விநியோகப் பிரிவினரும் இந்தா வருகின்றது, வருகின்றது என்று சொல்லி ஒருவாறு கொண்டு போய்ச் சேர்ப்பது மட்டுமல்லாமல், விற்பனை முகவரிடமும் பேச்சு வாங்குவார்கள்.

இந்தச் சுவையான அனுபவங்கள் வாசகர்களுக்குத் தெரிந்திருக்க வாய்ப்பிருப்பதில்லை.

உதயனின் 29 வருட பயணத் தில் பல்வேறு விற்பனை முகவர்கள் இருந்திருக்கின்றார்கள். தற்போதும் இருக்கின்றார்கள். பத்திரிகை அலுவலகத்துக்குத் தாங்களே நேரே வந்து, எடுத்துச் சென்று விற்பனை செய்கின்ற முகவர்களும் இருந்திருக்கின்றார்கள்.

நான் 20 வருசமா உதயன் வித்துக் கொண்டிருக்கிறன். இண்டைக்கும் விக்கிறன். சோப் என்றா சன்லைட் மாத்திரி, பேப்பர் என்றா உதயன்தான் என்று சொல்கின்றார். 64 வயதான பொன்னம்பலம் செல்லப்பா. உதயனின் கொடிகாமம் பகுதிக்கான விற்பனை முகவர்.

உதயன் தொடங்கின காலத்தில நான் விற்கேல்ல. எனது மச்சான் சு.கந்தசாமி என்பவர்தான் கடையை நடத்தினவர். அவர்தான் பத்திரிகை முகவரா இருந்து விற்றவர். அதுக்குப் பிறகுதான் நான் உதயன் வித்தனான். சண்டை நேரம் இங்க பேப்பர் வராது. நெல்லியடிக்குத் தான் வரும். நெல்லியடிக்குப் போய் எடுத்துக் கொண்டு வந்து கொடிகாமத்தில் வித்தனான். கொஞ்ச நாள் நெல்லியடியிலையும் வைச்சு உதயன் வித்தனான். காசோ, செக்கோ எந்தப் பிரச்சினை யுமில்லாமல் கொடுத்து வந்தனான்.

உதயன் பேப்பர் விற்கிறது எவ்வளவு பிரச்சினை. அது உங்களுக்கே தெரியும்தானே. மற்றப் பேப்பரை விட உதயன் என்றாலே விளங்கும்தானே.

பேப்பர் கொண்டுவாற பெடியள் சில நேரம் பிந்திக் கொண்டு வருவாங்கள். அவங்களுக்குப் போன் எடுத்துக் கேப்பன். அவங்கள் ஒவ்வொரு சாட்டைச் சொல்லுவாங்கள். சனத்துக்கு அதைச் சொல்லேலாது. இந்தா கைதடிக்கு வந்திட்டுதாம், கொண்டு வாறாங்களாம் என்று சொல்லி சமாளிப்பன்.

என்னட்ட விற்கிற பேப்பரில உதயன்தான் கூட விற்கிறது. அதோட எப்ப உதயன் கூட விற்கும், என்று எனக்குத் தெரியும். அந்த நேரம் நான் கொஞ்சம் கூட்டி எடுப்பன் என்று தனது 20 வருட அனுபவத்தில் எங்களுடன் பகிர்ந்து கொண்டார்.

மாலுசந்தி முகவரான முருகேசு சுந்தரலிங்கம் வயது 70 ஐத் தொட்டிருந்தாலும், கம்பீரமான கதையுடன் எங்க ளுடன் தனது அனுபவத்தைப் பகிர்ந்தார்.

1988 ஆம் ஆண்டு இங்க வந்து பேப்பர் விற்கத் தொடங்கினான். அப்ப எனக்கு உதயன் வாறேல்ல. மற்ற எல்லாப் பேப்பரும்தான் வாறது. அப்ப ராஜரட்ணம் என்பவர்தான் நாவலடிச் சந்தியில உதயன் பேப்பர் விற்றவர். ஆனா் என்னட்ட சனம் வந்து உதயன் பேப்பர்தான் கேட்கும். அதால நான் ராஜரட்ணத்திட்ட கொஞ்சப் பேப்பர் வாங்கிக் கொண்டு வந்து விற்பன்.

அப்போது உதயன் விநியோகப் பகுதி முகாமையாளராக இருந்த மரியநாயகமோ அல்லது மரியதாஸோ தெரியேல்ல, உங்களுக்குப் பேப்பர் யார் தந்தது, நீங்கள் இப்படி விற்கேலாது என்று சொன்னார். சனம் கேட்டதால தான் நான் இப்படி விற்றன் என்று சொல்ல, கொஞ்ச நாளைக்குப் பிறகு எனக்கும் விற்கிறதுக்கு நேர பேப்பர் கொண்டு வந்து தந்திச்சினம்.

இராணுவ ஆக்கிரமிப்பு, முழு நேர ஊரடங்கு, இந்தியன் இராணுவம் பிரச்சினை நேரத்தில பேப்பர் விற்கேலாம வரும். அந்த நேரம் நான், இன்பருட்டி சூரிய குமார், சிவலிங்கம், தம்பசிட்டியில கண்ணன், என ஊருக்குள்ளால நடந்து போய் பேப்பரைக் காவிக் கொண்டு வந்து விற்றனாங்கள். அப்ப உதயன் சில நேரத்தில மாலைப் பதிப்பு விசேட பதிப் பாய் வரும். ஒரு பேப்பர் 2 ரூபாதான். நான் கிட்டத்தட்ட முந்நூறு பேப்பர் வரை வாங்கி விற்றனான்.

என்னட்ட சனம் வந்து பேப்பர் என்று கேட்டா உதயனைத் தான் தூக்கிக் கொடுப்பன். இப்படிக் கஸ்டப்பட்டுத்தான் உதயனை வளர்த்தனாங்கள் என்றார் நீண்ட பெரு மூச்சுடன். பத்திரிகை அலுவலகத்தை அச்சுறுத்தி அடிபணிய வைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும் அதேவேளையில், முகவர்களையும் நெருக்குவாரத்துக்கு இனந்தெரியாத தரப்புக்கள் தள்ளியும் இருந்தன. ஆனால் அவற்றையெல்லாம் துணிவோடு எதிர் கொண்டுதான் உதயனின் விற்பனை முகவர்கள் இன்றும் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.



# உதயன் எதிர்கொண்ட முக்கிய தாக்குதல்களை நினைவுபடுத்தல்

தொகுப்பு: சோபனா

## 2006.01.24

**உதயன் - சுடரொளி செய்தியாளர் வீதியில் வைத்து அதிகாலை சுட்டுக்கொலை**

சுப்பிரமணியம் சுகிர்தன் (வயது-35) திருகோணமலைத் துறைமுகத்தில் மேற்பார்வையாளராகக் கடமையாற்றி வந்த வேளை உவர் மலையில் உள்ள அவரது வீட்டுக்கு அருகாமையில் வைத்து காலை 6.30 மணிஅளவில் சுட்டுக்கொல்லப்பட்டார். துறைமுகத்துக்கு ஊழியர்களை ஏற்றிச்செல்லும் பஸ்ஸில் ஏறுவதற்காக நடந்து சென்று கொண்டிருந்தபோது மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் இருவர் தலையிலும் மார்பிலும் இரண்டு சூடுகளை நடத்தியுள்ளனர். சூடுகளின் பின்னர் அவர் நிலத்தில் விழுந்துள்ளார். வடக்கு- கிழக்கு மாகாணங்களின் ஆளுநர் அலுவலகத்துக்கு முன்னால் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. அப்போது காவல் கடமையில் பொலிஸாரும் இராணுவத்தினரும் இருந்துள்ளனர். இரண்டு பிள்ளைகளின் தந்தையான இவர் திருகோணமலையில் தமிழ் மாணவர்கள் 5 பேர் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய செய்திகளையும் படங்களையும், சிங்களக் குடியேற்றங்கள் தொடர்பிலும் கட்டுரைகளையும் வெளிக்கொணர்ந்தமை பாதுகாப்புத் தரப்புக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியிருந்தது. சம்பவத்தைப் போர்நிறுத்த கண்காணிப்புக்குழுவினர் விசாரணைகளை சம்பவ இடத்தில் மேற்கொண்டிருந்தனர்.

## 2006.05.02

மீள்பிரசுரம்

**உதயன் பத்திரிகை அலுவலகத்தில் ஆயுததாரிகள் கொலை வெறியாட்டம்**

உதயன் பத்திரிகை அலுவலகத்துக்குள் நுழைந்து ஆயுததாரிகள் நடத்திய வெறியாட்டத்தில் முகாமையாளர் உட்பட இருவர் அந்த இடத்திலேயே சாவடைந்தனர். மற்றும் இரு பணியாளர்கள் படுகாயமடைந்தனர். முகங்களைத் துணிகளால் மூடிக்கட்டிக் கொண்டு மோட்டார் சைக்கிளில் வந்திறங்கிய கும்பல் இந்தத் தாக்குதலை மேற்கொண்டிருந்தனர். பத்திரிகையின் ஆசிரியர் பீடத்துக்குள் நுழைந்து குறிப்பிட்ட உதவி ஆசிரியர் பெயரைக்கூறி சகட்டு மேனிக்குத் துப்பாக்கிப்பிரயோகம் செய்துள்ளனர். அலுவலகத்தின் கணினிப் பிரிவுக்குள் நுழைந்து அங்கிருந்த சகல கணினிகள் மீதும் ரவைகளைப் பொழிந்து அவற்றை சுக்குநூறாக்கி செயலிழக்கச் செய்துள்ளனர். மிகத் தெளிவாகத் தமிழ் பேசிய ஆயுததாரிகளே இந்த ஈனச்செயலைச் செய்துள்ளனர். முகமூடி அணிந்திருந்த அவர்கள் தமது முகங்களை துணிகளால் மூடிக்கட்டி இருந்தனர். இரவு 7.25 மணியளவில் அலுவலகத்தில் வழமை போல் பணிகள் இடம்பெற்றுக் கொண்டிருந்த போது அலுவலகத்தின் முன்பக்கச்சுவரின் மீது திடீரென ஏறிப் பாய்ந்த ஆயுததாரிகள் 5 பேர் சரமாரியாகத் துப்பாக்கிப்பிரயோகத்தை மேற்கொண்டனர். உதயனின் சந்தைப்படுத்தல் முகாமையாளர் பஸ்ரின் ஜோர்ஜ் சகாயதாஸ் (சுரேஸ்) வயது-36 , விநியோகப்பிரிவுக்கு மேற்பார்வையாளரான எஸ்.ரஞ்சித் ஆகியேர்ர் சம்பவத்தில் உயிரிழந்துள்ளனர். விநியோகப்பகுதி பணியாளர்களான எஸ்.உதயகுமார் வயது 48, நா.தயாகரன் (வயது-24) ஆகியோர் காயமடைந்தனர். சம்பவத்தின் போது பயத்தில் ஓடிய பணியாளர்களைக் காணவில்லை. ரஞ்சித் திருமணமாகி ஒரு மாதகாலமே ஆகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. சுவர் ஏறிக்குதித்து வந்தவர்களில் நால்வர் முதலில் அலுவலகப் பாதுகாப்பு ஊழியர் இருக்கும் இடத்துக்குச் சென்று துப்பாக்கி முனையில் அவரைக்கீழே படுக்க வைத்தனர். நிமிர்ந்தால் சுடுவோம் எனவும் மிரட்டி விட்டு அவர் அருகில் ஒரு ஆயுததாரி நின்று கொண்டார். ஏனையவர்களில் இருவர் அலுவலகத்தின் முன்புறம் இருந்த சந்தைப்படுத்தல் முகாமையாளர் அலுவலகம் நோக்கிச் சென்றனர். எந்தக்கேள்வியும் இன்றி சராமரியாக துப்பாக்கிச் சூட்டை நடத்தியதால் அந்த இடத்திலேயே முகாமையாளர் மடிந்து வீழ்ந்தார். பின்னர் அங்கிருந்து திரும்பிய அவர்கள் பாதுகாப்பு அலுவலரின் அருகோடு இருந்த விநியோகப்பிரி வுக்கு நுழைந்துள்ளனர். அங்கிருந்த அனைவரையும் கீழே இருக்கு மாறு கூறி தாறுமாறாகத் துப்பாக்கிப்பிரயோகத்தை மேற்கொண்டனர். இதன்போது விழுந்து கிடந்த பணியாளர் உதயகுமார் காயமடைந்தார். காயமடைந்தவரின் 'ஐயோ' என்ற குரலைக் கேட்டு நிமிர்ந்து பார்த்த ரஞ்சித்தை நோக்கி ஆயுததாரிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். அவரும் அந்த இடத்திலேயே சாவடைந்தார். விநியோகப்பிரிவின் உதவி அலுவலரின் தலையில் துப்பாக்கியை வைத்து மிரட்டி ஆசிரியர் பீடத்தைக்காட்டுமாறு உதவி ஆசிரியர் ஒருவரின் பெயரைக்கேட்டுள்ள னர். பாதுகாப்பு ஊழியரின் பகுதியில் இருந்து ஆசிரியர் பீடத்துக்கு செல்லும் வரை துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். ஆசிரியர் பீடத்தில் இருந்த பணியாளர்கள் பாதுகாப்பாக ஓர் இடத்தில் பதுங்கியதால் ஆத்திரமடைந்தவர்கள் கணினி அறையில் இருந்த அனைத்துக் கணினிகளையும் சுட்டுத் தள்ளினர். அங்கு பணிளார்கள் யாரையும் காணாத காரணத்தால் மீணடும் துப்பாக்கிச்சூட்டை நடத்தி விட்டு வீதிக்குச் சென்று அங்கிருந்து மோட்டார் சைக்கிளில் ஏறித்தப்பிச் சென்று விட்டனர்.




## 2006.08.18

**உதயனின் களஞ்சிய அறை தீவைப்பு**

கோப்பாய் ராஜ வீதியில் உள்ள உதயன் பத்திரிகை நிறுவனத்தின் களஞ்சியம் இரவு 10.30 மணியளவில் ஆயுததாரிகளால் எரித்து நாசமாக்கப்பட்டது. மாடி வீடொன்றில் அமைந்துள்ள களஞ்சியத்துக்கு 4 ஆயுததாரிகள் சென்றனர். அன்றைய தினம் குடா நாடு முழுவதும் ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் இருந்தமை குறிப்பிடத்தக்கது. ஆயுததாரிகள் நால்வரும் கறுப்பு நிற ரீசேர்ட் அணிந்திருந்தனர். தமது வாய்களைக் கறுப்புத் துணிகளால் கட்டியிருந்தனர். களஞ்சியங்களின் இரவுக் காவலுக்கு நின்ற பாதுகாப்பு உத்தியோகத்தரின் கண்களை யும் கைககளையும் பின்னால் கட்டிய ஆயுததாரிகள் அவரைத்தூரத்தே போகுமாறு சைகை காட்டி விட்டுக் களஞ்சியத்துக்குத் தீ வைத்தனர். "சத்தம் போட்டால் சுட்டுப்போடுவோம்" என்று சொல்லியே பாதுகாப்பு உத்தியோகத்தரைக் காட்டினர். வந்தவர்களில் ஒருவர் யாழ்ப்பாணத் தமிழிலும் மற்றவர் மட்டக்களப்புத் தமிழிலும் கதைத்தனர். தீச்சுவாலை விட்டெரிந்த பின்னர் சுமார் 11.30 மணியளவில் பாதுகாப்பு உத்தியோகத்தரின் கட் டுக்களை அவிழ்த்து விட்டு நெருப்பை அணைக்கக் கூடாது என்றும் அணைத்தால் பின்னர் வந்து சுடுவதாகவும் கூறிச்சென்றுள்ளனர். விடியும் வரை நெருப்பு எரிந்து களஞ்சியம் முற்றாக நாசமானது. பாதுகாப்பு உத்தியோகத்தர் பொலிஸ் நிலையத்துக்கு சென்று தீ வைப்புக் குறித்து முறைப்பாடு செய்தார். அதன் பின்னர் பொலிசார் சம்பவ இடத்தக்கு வந்து பார்வையிட்ட போதும் தீ அணையவில்லை. அதனால் களஞ்சியத்தில் பத்திரிகை அச்சிடும் தாள், கணணிகள், எலக்ரோனிக் பொருள்கள் என்பன எரிந்து தீயில் எரிந்து நாசமாகின.







## 2011.07.29

**உதயன் செய்தி ஆசிரியர் மீது ஆயுததாரிகள் தாக்குதல்**

உதயன் பத்திரிகையின் செய்தி ஆசிரியர் ஞானசுந்தரம் குகநாதன் (வயது.-59) ஆயுததாரிகள் இருவரால் மிலேச்சத்தனமாகத் தாக்கப்பட்டதில் தலையில் படுகாமடைந்தார். பகல் வேளை முடித்து அவர் வீடு திரும்பிக் கொண்டிருந்த போது இரவு 7.30 மணியளவில் இந்தக் காடைத்தனமான தாக்குதல் நடத்தப்பட்டது. நாவலர் வீதிக்கும் கஸ்தூரியர் வீதிச்சந்திக்கும் மனோகரா தியேட்டர் சந்திக்கும் இடைப்பட்ட பகுதியில் இவரைப் பின் தொடர்ந்து சென்ற காடையர்கள் இருவர். அவர் மீது இந்தக் காடைத் தனமான தாக்குதலை நடத்தியுள்ளனர். தாக்குதலை நடத்தியவர்கள் பின்னர் தயாராக நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளில் ஏறித்தப்பிச் சென்றனர் என நேரில் பார்த்த வர்கள் தெரிவித்தனர். தாக்குதலுக்கு உள்ளாகி குருதி கொட்டிய நிலையிலும் ஒருவாறு சமாளித் துக் கொண்டு சமீபமாக இருந்த தனது வீட்டுக்குச் சென்ற குகநாதன், பத்திரிகை அலுவலகத்துக்குத் தகவல் கொடுத்ததை அடுத்து அங்கிருந்து சென்றவர்கள் அவரை உடனடியாக வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றனர். வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப்பிரிவில் சேர்க்கப்பட்டார். இரண்டு நபர்களில் ஒருவர் இரும்புக் கம்பிகளால் தாக்கி விட்டு ஓடிச் சென்று மோட்டார் சைக்கிளில் ஏறிச் சென்றனர். சம்பவத்தை நேரில் கண்டனவர்கள் உதயனுக்குத் தெரிவித்தனர். 2 பேர் அரை மணித்தியாலத்துக்கு தரித்து நின்றுள்ளனர். அடையாளம் தெரியாத மூவர் வீட்டுக்கு முன்னால் முதல் நாள் தரித்து நின்றுள்ளனர். அவர்கள் இருந்த இடத்தில் மதுபானப் போத்தல்கள் காணப்பட்டுள்ளன. யாழ்ப்பாணப் பொலிசார் வைத்தியசாலைக்கு வந்து வாக்குமூலங்களைப் பெற்றுக் கொண்டனர். கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள காவலரணில் இருந்து 30 மீற்றர் தூரத்திலேயே இந்தச் சம்பம் இடம் பெற்றுள்ளது. 2006 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட உதயன் தாக்குதலின் போது இவரது பெயரைக் குறிப்பிட்டு தாக்குதல் நடத்தியிருந்தனர். இதன் அச்சத்தில் 3 வருடங்கள் அலுவலகத்தில் உள்ளேயே இருந்து பணியாற்றி வந்தமை குறிப்பிடத்தக்கது.

# உதயன் எதிர்கொண்ட தாக்குதல்களை நினைவுபடுத்தல்



**2006.08.15**

**உதயன் பணியாளர் வீதியில் சுட்டுக்கொலை**

ஊரடங்கு நீக்கப்பட்ட நேரத்தில் பத்திரிகை விநியோகம் செய்துவிட்டு யாழ்ப்பாணம் நோக்கித் திரும்பிக்கொண்டிருந்த உதயன் நிறுவனத்தின் சாரதி எஸ்.பாஸ்கரன், புத்தூர் சந்தியில் வாகனத்தில் வைத்துச் சுட்டுக்[illegible]பட்டார்.உதயன் நிறுவனத்தக்குச் சொந்தமான பிக்கப் வாகனம் புத்தூர் சந்திக்கு அருகே [illegible]திரம் இயங்கிக் கொண்டிருக்கத் தரித்திருந்த நிலையில் சாரதி பாஸ்கரன் சாரதி ஆசனத்தில் து[illegible]பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் சரிந்து கிடக்கக் காணப்பட்டார். சாம்பசிவம் பாஸ்கரன் (வயது 47), நாச்சிமார் கோவிலடியைச் சேர்ந்த இவர் 3 பிள்ளைகளின் தந்தையாவர்.சம்பவம் நிகழ்ந்த பின்னர் அந்த வழியால் சென்றவர்கள் தகவல் தெரிவித்தனர். அதே நேரம் அந்த இடத்தில் சீருடையினரின் நடமாட்டம் அதிகமாக இருந்ததாகவும் தெரிவித்தனர். வாகனத்தில் மீடியா எனக்குறிப்பிடப்பட்ட பெயர்ப்பலகை பொருத்தப்பட்டிருந்தது. கொலையுண்ட பாஸ்கரன் இதே வாகனத்தில் ஊரடங்கு நீக்கப்பட்டிருந்த வேளையிலும் அச்சுவேலி வரை சென்று பத்திரிகை விநியோகத்தை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

**1999.08.21**

**உதயன் அலுவலகம் மீது கிரனேட் தாக்குதல்**

உதயன் பத்திரிகை அலுவலகத்தின் மீது இரவு 8.30 மணியளவில் இரண்டு கிரனேட்டுக்கள் வீசப்பட்டுள்ளன. இதனால் பாதுகாப்பு ஊழியரான ஆர்.செல்வராஜா, (வயது-45) முதுகில் காயமடைந்தார். இரண்டு [illegible]ர்கள் மற்றும் சில சைக்கிள்கள் சேதமடைந்தன. காயமடைந்த பாதுகாப்பு ஊழியர் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

**2013.04.03**

**உதயன் பத்திரிகையின் கிளிநொச்சி அலுவலகம் காடையர்களால் தாக்குதல்**

உதயன் பத்திரிகையின் கிளிநொச்சி அலுவலகம் மீது மிலேச்சத்தனமான காடைத்தனமான, கோழைத்தனமான தாக்குதல் நடத்தப்பட்டன. முகங்களைத் துணிகளால் மூடிக்கட்டிக்கொண்டு வந்த காடையர் கும்பல் ஊழியர்களைக்கண்மூடித்தனமாகத் தாக்கியும், வாகனங்கள் கணினிகளை உடைத்தும் வெறியாட்டம் நிகழ்த்தினர். இந்தக் கொலைவெறித் தாக்குதலில் கிளை முகாமையாளர் உட்பட 4 பேர் காயமடைந்தனர். பல இலட்சம் பெறுமதியான சொத்துக்கள் சேதமடைந்துள்ளன. கிரிக்கெட் விளையாடப் பயன்படுத்தப்படும் விக்கெட் பொல்லுகளைக் கொண்டு காடையர் கும்பல் கண் மூடித்தனமாக இந்தத் தாக்குதலை நடத்தினர். யாழ்ப்பாணத்தில் உள்ள உதயனின் பிரதான பணிமனையில் இருந்து பத்திரிகைகள் எடுத்துச் சென்ற வாகனத்தில் இருந்து ஊழியர்கள் பத்திரிகைகளை இறக்கிக் கொண்டிருந்த சமயத்தில் சிங்கள மொழியில் கூச்சலிட்டபடி ஓடி வந்த நபர்கள் விநியோகப்பணியாளர்களைக் கண்மூடித்தன மாகத் தாக்கியுள்ளர். அதன் பின்னர் அலுவலகத்தில் இருந்த முகாமையாளர் ஆறுமுகம் பொன்ராஜா வயது 66 என்பவரை இரத்தம் கொட்டக் கொட்டத்தாக்கினர். அலுவலகத்தில் இருந்த கணினி , பிறிண்டர் மற்றும் போட் போக்கொப்பி மிசின் என்பவற்றையும் அடித்து நொருக்கினர். பின்னர் வெளியில் இருந்த வாகனங்களையும் அடித்து நொருக்கிவிட்டு சென். திரேசா பாடசாலை ஒழுங்கைக்குள் ஓடித் தப்பிவிட்டனர். இதன் போது பணியாளர்கள் 4பேர் காயமடைந்தனர்.

**2007.04.9**

**உதயன் செய்தியாளர் பட்டப்பகலில் சுட்டுக்கொலை**

உதயன் பத்திரிகையின் அலுவலகச் செய்தியாளர் செல்வராஜா ரஜிவர்மன், (வயது-24) யாழ்.நகர்ப்பகுதியில் பட்டப்பகலில் சுட்டுக்கொல்லப்பட்டார். புத்தூர் கிழக்கு ஆவரங்காலைச் சேர்ந்த ரஜிவர்மன் உதயன் ஆசிரியர் பீடத்தில் தனது பணியை முடித்துக் கொண்டு காலையில் அலுவலகத்தில் இருந்து புறப்பட்டார். யாழ்.ஸ்ரான்லி வீதியில் இராசவின் தோட்ட வீதியில் இருந்து சிறிது தூரத்துக்கு வந்து கொண்டிருந்தபோது இனந்தெரியாதவர்களால் சுடப்பட்டு அந்த இடத்திலேயே சாவடைந்தார். பின்னர் சம்பவ இடத்துக்கு சென்ற நீதிவான் பூர்வாங்க விசாரணைகளை நடத்தினார். 'நமது ஈழநாடு' பத்திரிகையில் சில வருடங்கள் செய்தியாளராகப் பணியாற்றியவர். அதன் பின்னர் 'தினக்குரலிலும்', இறுதியாக 'உதயன்' நிறுவனத்திலும் பணிபுரிந்தார்.

**2001.06.23**

**உதயன் பிரதம ஆசிரியர் மீதான தாக்குதல் முயற்சி**

உதயன் சஞ்சீவி பத்திரிகைகளின் ஸ்தாப ஆசிரியரும் பிரதம ஆசிரியருமான ம.வ.கானமயில்நாதன், யாழ்.பலாலி வீதி-நாவலர் வீதிச் சந்தியில் இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்தார். அவர் பயணம் செய்த மோட்டார் சைக்கிளைச் செலுத்திக் கொண்டு சென்ற உதயன் அலுவலக உதவியாளர் ஆர்.சிவநேசனும் இந்தச் சம்பவத்தில் படுகாமடைந்தார். நாவலர் வீதியில் வந்து கொண்டிருந்த இவர்களது மோட்டார் சைக்கிளும் பலாலி வீதி வழியாக வந்துகொண்டிருந்த ஈ.பி.டி.பி அமைப்பின் பிக்கப் வாகனம் ஒன்றும் மோதிக்கொண் டன. உதயன் பிரதம ஆசிரியரதும் ஊழியரினதும் வலது கால்கள் விபத்தில் முறிந்தன. உதயன் ஆசிரியர் தலையிலும் காயமடைந்தார். இதே இடத்தில் உதயன் முகாமையாளர் விபத்துக்குள்ளாகி உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

**2011.05.28**

**உதயனின் அலுவல[illegible]செய்தியாளர் மீது இனந்தெரியாதோர் தாக்குதல்**

உதயனின் அலுவல[illegible]ப்தியாளர் செ.கவிதரன் காலை 6.30 மணியளவில் யா[illegible]கரில் வைத்துத் தாக்கப்பட்டார். கஸ்தூரியார் வீதியில் யாழ்.இந்துக் கல்லூரிக்கு அண்மித்த பகுதியில் நால்வர் கொண்ட குழு ஒன்று இவர் மீது திடீரெனக் கிரிகெட் மட்டைகள், விக்கெட்டுக்களால் சரமாரியாகத் தாக்குதல் நடத்தினர். பணிக்காக அலுவலகத்துக்கு வந்து கொண்டிருந்த போது இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்த இவரைச் சுற்றி வளைத்து அவர்கள் தாக்கதல் நடத்தியுள்ளனர். அவர் அருகில் உள்ள தனியார் கல்வி நிலையத்துக்குள் புகுந்து கொண்டதை அடுத்து தாக்குதல் நடத்தியவர்கள் அங்கிருந்து தப்பிச்சென்று விட்டனர். சம்பவம் குறித்த யாழ்.பெலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. எழுதப்பட்ட செய்தி தொடர்பில் இவர் இலக்கு வைக்கப்பட்டாரா எனப் பொலிசார் விசாரனைகளை மேற்கொண்டு வருகின்றனர். தாக்குதலை அடுத்து கவிதரன் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.



**2001.05.06**

**உதயன் முகாமையாளர் இராணுவ வாகனம் மோதி சாவு**

உதயன் வெளியீட்டு நிறுவனத்தின் சிரேஷ்ட நிர்வாக அதிகாரிகளில் ஒருவரான கனகையா நந்தகுமார் நண் பகல் பலாலி வீதி நாவலர் சந்தியில் இராணுவ வாகனம்–மோட்டார் சைக்கிள் விபத்தில் கொல்லப்பட்டார். 56 வய தான நந்தகுமார் தனது கல்லூரிக் கல்வியை முடித்துக் கொண்ட பின்னர் ஒரு பத்திகையாளராகப் பணியை ஆரம்பித்தார்.

**2013.01.10**

**உதயன் பணியாளர் இனந்தெரியாதோரால் தாக்குதல்.**

பத்திரிகை விநியோகப்பணியில் ஈடுபட்டிருந்த உதயன் பணியாளர் ஒருவர் இனந்தெரியாதோரால் கடுமையாகத் தாக்கப்பட்டார். அவர் பயணம் செய்த மோட்டார் சைக்கிளும் அவர் கொண்டு சென்ற ஆயிரக்கணக்கான பத்திரிகைகளும் தீக்கிரையாக்கப் பட்டன. இதன் போது விநியோகப்பணியாளரான நா.பிரதீபன் கையிலும் உடலிலும் பலத்த காயங்களுக்கு உள்ளானர். வழமைபோல் உதயன் அலுவலகத்தில் இருந்து வடமராட்சிப்பகுதிக்கான பத்திரிகை விநியோகப் பணிகளுக்காக இரு மோட்டார் சைக்கிள்களில் உதயன் பணியாளர்கள் சென்று கொண்டிருந்தனர். இதன்போது வல்லைச் சந்திப்பகுதியில் இராணுவத்தினர் வெளிச்சத்தைப் பாய்ச்சி அடையாளம் கண்டுகொண்ட பின்னர் தொடர்ந்து செல்ல அனுமதித்தனர். இதன் பின்னர் பிரதீபன் மாலுசந்தியிலிருந்து 200 மீற்றர் தூரத்தில் உதயன் முகவர் நிலையம் ஒன்றில் பத்திரிகையை விநியோகித்துவிட்டு ஏனைய முகவர் நிலையங்களுக்கு பிரதிகளை விநியோகிப்பதற்காக மீண்டும் யாழ்.நகர் நோக்கிய திசையில் மோட்டார் சைக்கிளில் வந்தார். இதன்போது யாழ்.நகரில் இருந்து நெல்லியடிப் பக்கமாக மோட்டார் சைக்கிளில் ஹெல்மெட் அணிந்தபடி வந்த நபர் உதயன் பணியாளரின் மோட்டார் சைக்கிளுடன் மோதினார். இதனால் நிலை தடுமாறி கீழே விழுந்த சமயத்தில் இன்னொரு மோட்டார் சைக்கிளில் வந்த நபர் உதயன் பணியாளரைக் கண்மூடித்தனமாகத் தாக்கினார். முள்ளுக் கம்பியால் விரட்டியடித்து தாக்கியதால் நெல்லியடி பஸ்ஸில் பாய்ந்து ஏறி உயிர் தப்பினார் பிரதீபன். தாக்குதல் நடத்துபவர்கள் மோட்டார் சைக்கிளையும் பத்திரிகைகளையும் தீயிட்டு எரித்துள்ளனர். இதன்போது மோட்டார் சைக்கிளும் நூற்றுக்கணக்கான பத்திரிகைகளும் தீயில் நாசமாயின. நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கிய பின்னர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் பிரதீபன். இதேவேளை பிரதீபனுடன் இன்னொரு மோட்டார் சைக்கிளில் சென்ற இன்னொரு பணியாளரையும் மோட்டார் சைக்கிளில் சென்ற நபர்கள் பின் தொடர்ந்து துரத்தியுள்ளனர். இத்னால் நெல்லியடிப் பக்கமாக சென்ற அவரைக் கைவிட்டவர்கள் மீண்டும் காத்திருந்து துரத்தியுள்ளனர். இதனால் அவர் பாதுகாப்புத் தேடி பொலிஸ் நிலையத்துக்குள் நுழைந்துள்ளார்.

**2009.06.25**

**பத்திரிகைகள் தீவைப்பு**

குடாநாட்டில் இருந்து வெளிவரும் உதயன், தினக்குரல்,வலம்புரி பத்திரிகைகள் முகமூடி அணிந்த இனந்தெரியாத ஆயுததாரிகளால் அதிகாலை 4.55 மணியளவில் வீதியில் வைத்துத் தீக்கிரையாக்கப்பட்டன. வழமை போன்று பத்திரிகை நிறுவனங்களின் விநியோகப்பணியாளர்கள் தமது வாகனங்களில் பத்திரிகைகளை விநியோகிப்பதற்கு எடுத்துச் சென்றனர். யாழ்.நகருக்கு சமீபமாக நாவலர் வீதியில் ஆனைப்பந்திச்சந்திக்கு அருகில் உதயன் பிரதிகளை எடுத்தச் சென்ற விநியோகப்பணியாளர் மோட்டார் சைக்கிளில் வந்த முகமூடி அணிந்த ஆயுததாரிகளால் அச்சுறுத்தப்பட்டு நிறுத்தப்பட்டார். அவர் எடுத்துச் சென்ற பத்திரிகைப் பொதிகளை ஆயுததாரிகள் தம்வசம் வைத்திருந்த வாள்களால் வெட்டி அவற்றைப் பிரித்து வீதியில் போட்டு தாம் கொண்டு வந்த பெற்றோலை ஊற்றிப் பத்திரிகைகளுக்குத் தீ வைத்தனர். அதனைத்தொடர்ந்து அதே பாதையில் வந்த தினக்குரல், வலம்புரி பத்திரிகைகளின் விநியோகப்பணியாளர்களும் வழிமறிக்கப் பட்டன. அவர்கள் கொண்டு வந்த பத்திரிகைகளும் உதயன் பத்திரிகைகளுடன் சேர்த்துத் தீ வைக்கப்பட்டன.

# பதற்றம் விலகாத நாள்கள்

27

■ தில்லாலங்கடி

நேரம், இரவு 8 மணியை நெருங்கிக் கொண்டிருக்கும். கொஞ்சம் மழையடித்து ஓய்ந்திருந்தது. ஆனாலும் மெல்லிய தூறல் தொடர்ந்து கொண்டிருந்தது. இதற்கிடையில் நாய்களின் குரைப்புத் தெளிவாகவே கேட்கின்றது. அந்தக் குரைப்புக்கள் வர வர அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. குரைத்துக் கொண்டே நாய்கள் பின்னோக்கி ஓடவும், காலடி ஓசைகளின் சத்தம் நெருங்கி வந்து கொண்டிருக்கின்றன. அந்தக் காலத்தில் காலடி ஓசைகளும், நாய்களின் குரைப்பும் சாதாரணமானவைதான். லாந்தர் வெளிச்சத்தில் வீட்டு அறையிலிருந்த, அதனை எடுத்துக் கொண்டேன். சில மணித் துளிகளில் அவர்கள் வருவார்கள். வரும் போது அவர்களிடம் இருந்து தப்பித்துக் கொள்ள அதுதான் உதவியாக இருக்கும், சொல்லி வைத்தால் போல் வீட்டுக் கதவு தட்டப்படுகின்றது. கதவு தட்டப்பட்ட உடனேயே, திறந்து கொள்கின்றேன். கொஞ்சம் தாமதித்தாலும், அவர்களது சப்பாத்துக்கால்கள் அதனை பதம் பார்த்து விடும்.

கொச்சைத் தமிழும், சிங்களமும் கலந்து வருகின்றது. அவர்கள் இந்த நேரத்தில் என்ன கேட்பார்கள் என்பது முதலே தெரிந்த ஒன்றுதான். லாந்தர் வெளிச்சத்தில் தேடி எடுத்த ஆமி அடையாள அட்டையைக் காட்டி வீட்டில் ஒருவரும் இல்லை என்று கொஞ்சம் அவர்களுக்கு விளங்கும் ஸைகை மொழியில் சொன்னேன். அதனை அவர்கள் நம்பப் போவதில்லை என்பதும் தெரியும்.

சப்பாத்துக் கால்களுடன் உள்ளுக்குள் நுழைந்து, தாங்கள் கொண்டு வந்த ரோச்லைற் வெளிச்சத்தில் வீடு முழுவதையும் நோட்டம் விட்டு வெளியேறினர். ஆனாலும் நாய்களின் குரைப்பு நிற்பதற்கு நீண்ட நேரம் பிடித்தது.

1995 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் குடாநாட்டிலிருந்து தந்திரோபாய பின்வாங்கலைச் செய்திருந்தனர். 1996 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தின் பின்னரே வலிகாமத்தினுள் மக்கள் மீளக்குடியமரத் தொடங்கியிருந்தனர். இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் வாழத் தொடங்கினர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் வெளியேறும் வரையில், நவம்பர் மாதம் என்பது குடாநாட்டின் புனித மாதமாகவே இருந்து வந்தது. மின்சாரம் இல்லாத அந்தக் காலத்திலும், மாவீரர் துயிலும் இல்லங்களை வர்ண விளக்குகள் அலங்கரித்து இருக்கும். வர்ண மின்குமிழ்களின் வெளிச்சத்தில் துயிலும் இல்லங்கள் நிரம்பியிருக்கையில், மக்கள் கூட்டமும் துயிலும் இல்லங்களை நிறைத்திருக்கும். ஆனால் விடுதலைப் புலிகளின் வெளியேற்றத்தை தொடர்ந்து, இராணுவத்தினர் துயிலுமில்லங்களைத் தரைமட்டமாக்கினர். நெருக்கடியான காலகட்டத்தினுள்ளேயே குடாநாட்டு மக்கள் வாழ வேண்டிய நிர்பந்தம், அதுவும் நவம்பர் மாதம் என்றாலே இராணுவத்தினர் கிலி கொண்டவர்களாகக் காணப்படுவர். புலிகள், தமது நினைவு நாள்களுக்கு எங்காவது தாக்குதல் நடத்துவார்கள் என்பது மக்களுக்கும், இராணுவத்தினருக்கும் தெரியும், அதுவும் மாவீரர் வாரத்தில் குறிப்பாக மாவீரர் நாளில் நிச்சயம் தாக்குதல் நடத்துவார்கள் என்பது இராணுவத்துக்கு நன்றாகத் தெரியும்.

இதனால் மாவீரர் வாரம் ஆரம்பமானதிலிருந்து, முடியும் வரையில் குடாநாட்டில் நிலை கொண்டிருக்கும் படைகள் கண்ணுக்கு விளக்கெண்ணை ஊற்றிக் கண்காணிப்பார்கள். ஆனால் அவர்களது கண்ணில் மண்ணைத் தூவி புலிகளின் அதிரடித் தாக்குதல் நடக்கும்.

இதனைத் தடுப்பதற்காக சுற்றிவளைப்புக்கள் நடக்கும். வீடு வீடாகப் பகல் இரவாக சோதனை மேற்கொள்ளுவார்கள். வீதிச் சோதனைகள் இறுக்கமடையும். மாவீரர் வாரம் ஆரம்பமாகப் போகின்றது என்பதை இராணுவத்தின் இந்தக் கெடுபிடிகளே மக்களுக்கு நினைவூட்டிவிடும். அத்துடன் நவம்பர் 27 ஆம் திகதி பொதுமக்கள் நேரத்துடனேயே வீடுகளில் முடங்கி விடுவார்கள். ஏனெனில் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்துவார்கள். இராணுவத்தினர் சாவார்கள். மக்கள் முடங்கி விடுவார்கள். சில வேளைகளில் ஊரடங்குச் சட்டத்தையும் அறிவித்து விடுவார்கள். மக்கள் வீடுகளுக்குள் முடக்கப்பட்டாலும், எல்லோருக்கும் அன்றைய மாவீரர் நாள் உரை கேட்க வேண்டும் என்ற வேட்கை இருக்கும். புலிகளின் குரல் வானொலியை இராணுவக் கட்டுப்பாட்டில் இருக்கும் எவரும் கேட்க முடியாது. அதனை மீறிக் கேட்பவர்களின் காதுக்குள் பேனையால் வைத்துக் குத்திக் காதைச் செவிடாக்கி விடுவார்கள் என்று பல கதைகள் உலாவின.

இதனால் மாவீரர் நாள் அன்று தலைவரின் உரையை மக்கள் வீடுகளில் பயந்து பயந்தே கேட்பார்கள். புலிகளின் குரலும் அப்போது குடாநாட்டில் தெளிவாக ஒலிக்காது. வீட்டுக்கு வெளியில் எங்காவது உயரமான 'அன்ரனா' கட்டி அதன் வயரை, ரேடியோவுக்குக் கொடுத்தே கேட்க முடியும். அவ்வாறு செய்தால் இராணுவத்துக்குத் தெரியும் என்பதால் வீட்டுக்குள்ளேயே உயரமான 'அன்ரனாவைக்' கட்டி, ரேடியோவை அங்கேயும் இங்கேயும் தூக்கிப் பிடித்து மெல்லிய முனகல் சத்தத்தில் தலைவரின் உரையைக் கேட்பார்கள்.

1996ஆம் ஆண்டிலிருந்து 2001ஆம் ஆண்டு வரையில் இந்த நிலையே நீடித்தது. 2002ஆம் ஆண்டு சமாதான ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. அதன் பின்னர் குடாநாடு மாவீரர் வாரத்துக்கு மீளவும் களை கட்டியது. வீதிகள் தோறும் சிவப்பு மஞ்சள் கொடிகளும், சந்திக்குச் சந்தி ஒலிபெருக்கியில் மாவீரர் நாள் நினைவுப் பாடல்களும் ஒலிக்கும். அத்துடன் சிகரங்களும் கட்டப்பட்டிருக்கும்.

குடநாட்டில் இராணுவத்தினரால் அழிக்கப்பட்ட துயிலும் இல்லங்கள் புனரமைக்கப்பட்டு மாவீரர் தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

தொழில்நுட்ப வளர்ச்சியால், ஒவ்வொரு துயிலும் இல்லங்களிலும் தலைவரின் மாவீரர் தின உரை நேரடியாக ஒலிபரப்பப்படும். அத்துடன் தமிழீழ தேசியத் தொலைக்காட்சியிலும் நேரடியாக ஒலிபரப்பாகும். இவ்வாறான சூழலில் அனுஷ்டிக்கப்பட்டு வந்த மாவீரர் வாரத்துக்கு 2005ஆம் ஆண்டுடன் முழுக்குக் கட்டிவிட்டார்கள்.

2005 ஆம் ஆண்டு மாவீரர் வாரத்துக்குக் கொடி கட்டிக் கொண்டிருந்த இரு இளைஞர்கள் நீர்வேலியில் சுட்டுக் கொல்லப்பட்டதுடன், சமாதானத்துக்கு சாவுமணியும் அடித்தது.

இதனால் 2006ஆம் ஆண்டு குடாநாடு மீண்டும் 1996ஆம் ஆண்டு காலப் பகுதிக்குரிய நிலைக்குப் பின்னோக்கிச் சென்றது. மீளவும் இராணுவக் கெடுபிடிகளும், வெள்ளைவான் கடத்தல்களும் உச்சம் பெற்றதால், மாவீரர் தினங்கள் மௌனமாக குடாநாட்டு மக்களால் அனுஷ்டிக்கப்பட்டது.

2009 ஆம் ஆண்டு தளத்திலிருந்து விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டதாகச் சொல்லப்பட்ட பின்னரும் குடாநாட்டில் மாவீரர் வாரம் மீளவும் பதட்டத்திற்குரியதொன்றாகவே உள்ளது.



# ஈழ விதைகள்



கவிமகன்

அம்மா வாங்கோ போவம்…. வாகனம் வெளிக்கிடப்போகுது. அப்பா அங்க நிண்டு கத்தப் போறார். தாயை வாஞ்சை கொண்டு அழைக்கிறாள் புவனா. பிள்ளை மாலை எடுத்திட்டியே…? அவனுக்கு என்று வாங்கின அந்த உடுப்பையும் எடம்மா கொண்டுபோய் குடுப்பம். மகனுக்குப் பிடித்தமான நிறத்தில் அவனுக்காக வாங்கி வைத்த உடுப்பையும் எடுத்துக் கொண்டு வெளிக்கிட உத்தரவு பிறப்பிக்கிறாள் தாய். என்ர பிள்ளை பார்த்திட்டு இருக்கும். எங்கடா இன்னும் என் அம்மாவைக் காணல என்று. குரல் தடுமாறியது சமாளித்துக் கொண்டு தனது கண்ணீர், கூட இருக்கும் இளையவளையும் பாதிக்கக் கூடாது என்பதில் கவனம் எடுத்தவளாக. திடம் கொள்கிறாள்.

விழிகளில் அரும்பிய நீரை ·சேலை தலைப்பால் துடைத்துக்கொண்டு சுவற்றில் மாட்டப்பட்டிருந்த திருவுருவப்படங்களை வணங்கிவிட்டு வெளிவருகிறாள் புவனாவின் தாய் மங்களம். கையிலே மகனுக்கென்று ஒரு பொதி. அதற்கும் சுற்றப்பட்டிருந்தது கச்சான் அல்வா மற்றும் சிற்றுண்டிகள். இவை அனைத்தும் அவனுக்கு மிகவும் பிடித்தவையாம். அவனுக்காகவே தனது கையால் செய்து கொண்டு செல்கிறாள் தாய். ஒலிபெருக்கியில் வாகனம் கிளம்புவதற்கான அறிவிப்பு தொடர்ந்து கொண்டிருக்கிறது. வந்தவர்களை ஏற்றிக் கொண்டு செல்வதற்கான பேருந்தில் ஏறி அமர்ந்து கொள்கின்றனர். பெற்றவளும் பிள்ளையும்.

அது ஒரு மழைக்காலம்., நீண்ட நாள்கள் தொடர் மழை எங்கள் தேசத்தையே ஒரு பிடி பிடித்து ஓய்ந்திருந்தது. ஆனாலும் இடையிடையே தூறலும் சாரலும் விடவில்லை. எப்போதும் திரும்பி வரக்கூடிய அபாய நிலையிலையே காலநிலை கணக்கு காட்டிக் கொண்டிருந்தது. ஒரு இடம் விட்டு இன்னொரு இடத்துக்கு நகரவே முடியாத நிலை. நிலம் தெரியாத நீரால் எங்கள் பூமித்தாய் சங்கமிக்கப்பட்டிருந்தாள். இந்த நிலையிலும் வாகனம் தன் இலக்கை அடைய குன்றும் குழியுமான கிரவல் வீதி தாண்டி பயணித்துக் கொண்டிருக்கிறது.

கார்த்திகை மலர்களின் நினைவுகளை தாங்கி எங்கள் தேசமே அவர்களுக்கான வணக்கங்களுக்குத் தயாராகி இருந்தது. திரும்பிய இடமெங்கும் சிவப்பு, மஞ்சள் வண்ணத்தின் ஆளுமை மனதில் நிலையாகியது. கருவி ஏந்திக் களத்தில் வீழ்ந்த மறவர்களின் திருவுருவங்கள் தாங்கி எமது தாயக பூமி பிரகாசித்துக் கொண்டிருந்தாள். எமது தேசத்தின் கொடி ஓங்கி நின்று புத்தொளி வீசி பறந்து கொண்டிருந்தது.

வீதி இரு மருங்கும் சிறு சிறு கொட்டகைகளில் மாவீரர்களின் படங்கள் பூமாலைகளைத் தாங்கி நின்றன. இவை எவற்றிலுமே ஈடுபாட்டை நிலைநிறுத்த முடியாது அந்தத் தாய் நினைவுகளில் மூழ்கிக் கிடந்தாள். பெற்றெடுத்த மூன்று குழந்தைகளில் தேச விடுதலைக்காக மூத்தவன் பயணித்த போது. இளையவர்களான இரு பெண் குழந்தைகளையும் தாங்கும் தூணாகி நின்று அவர்களின் வாழ்வோடு ஒன்றிப் போயிருந்தவள் மங்களம். அவளது பெயருக்கேற்ப மங்களகரமான முகப்பொலிவு உள்ளவளைப் பார்ப்பவர்களும் சந்தோசித்தே இருப்பார்கள். ஆனால் இன்று அவள் சோகமே குடிகொண்டவளாக ஒரு நடைப்பிணமாக தன் இளையவளுக்காக மட்டும் வாழ்ந்து வரும் நிலை கொடியதே.

ஆவணி 14 தலைமைத்துவ பயிற்சிக்காக சென்ற மூத்த பெண் பிள்ளை தங்கி இருந்த செஞ்சோலை கருமேகத்தால் சூழ்ந்தபோது அவளின் நிலையறியாது துடித்தும் பயனில்லாது கயவர்களின் குண்டுத்தாக்குதலுக்கு அவளைப் பறிகொடுத்து. அவளின் உடலத்தைப் புதைத்த சுவடு மறைய முன்னமே மீண்டும் அதிர்ச்சி அவளைத் தாக்கியது. தாயகம் புண்பட்டு வதைபட்டுக் கிடந்த நேரமது. தேச சுமை தாங்கப் புறப்பட்டிருந்தவன் வீடு திரும்பி இருந்தான் திருவுருவப்படமாக… ஒரு வார இடைவெளிகூட இல்லை கரு சுமந்து பெற்ற இரு பிள்ளைகளின் திருவுருவைப் படமாக மாலையிட வைத்தது தேசம். பெற்றவள் உடலம் பற்றி எரிந்தது. சிங்கள வதை யாளர்களைச் சாபமிட மட்டுமே முடிந்தது அவளால்….

"அம்மா அண்ணாவிடம் வந்திட்டம் எழும்புங்கோ…" குரல் கேட்டு அதிர்ந்தவளாய் இளையவளை நோக்கினாள். "என்ன பிள்ள…" "அம்மா வந்திட்டம். இறங்குங்கோ" பேருந்தின் சாளரம் வழியாகப் பார்த்தவளின் விழிகள் மழையென சொரிகின்றன. "எண்ட பிள்ளையிட்ட வந்திட்டன் என்ர பிள்ளையிட்ட வந்திட்டன். அவன் இப்பத்தான் என்னை பார்த்து சந்தோசப்படுவான்" அவளது வார்த்தைகள் மகிழ்வா அல்லது கவலையா என்ற எந்த பேதத்தையும் வெளிப்படுத்தாது வெற்றிடமாகவே வெளிவந்து கொண்டிருந்தன. வாகனத்தை விட்டு இறங்கி ஓடுகிறாள். கூடவந்த இளையவளையும் மறந்து. திரும்பும் இடமெங்கும் உறங்கிக் கொண்டிருக்கும் உன்னதமானவர்களின் உணர்வுடன் பேசிக் கொண்டிருந்தார்கள் உறவுகள். அவர்கள் ஒவ்வொருவரையும் கடந்து சென்று கொண்டிருந்தாள் அவள்.

"அப்பா உங்க பிள்ளை வந்திருக்கானப்பா எழும்பி ஒரு தடவை அவனப் பாருங்க. அவனது முகத்தை கூடப் பார்க்காமல் இங்க வந்து படுத்திருக்கிறீங்களே…" கையில் இருந்த குழந்தையின் திருவுருவை பார்க்க வேண்டுதல் செய்து கொண்டிருந்தாள் ஓர் இளம் தாய். கருவில் குழந்தை இருக்கும் போதே வித்தாகிப் போன நிகழ்வின் வெளிப்பாடே இந்த வேண்டுதல் என்பது வெளிப்படையானது.

யாரையுமே காணவில்லை. ஒரே ஒரு பெண் மட்டும் அந்த நினைவுக் கல்லை அணைத்துக் கொண்டு படுத்திருந்தாள். அவளது உணர்வுகள் மட்டுமே அவனோடு பேசிக் கொண்டிருந்தன. திருமணமாகி இரு வாரங்கள் கூடக் கழிந்திராத நிலையில் அவன் சூட்டிய திருமண மாலை கூட வாடாத நிலையில், அவனை அணைத்திருந்த கரங்களால் மாலையிட வைத்து. அவன் மண்ணுக்குள் விதையாகிப் போயிருந்தான். அவள் தன்னவனை இறுக்கமாக அணைத்துக் கொண்டு ஏதோ பேசிக் கொண்டிருந்தாள். அவளையும் கடந்து தனது மகனை நோக்கிச் சென்று கொண்டிருந்தவள் காதுகளில் அந்தச் சிறுவர்களின் கலியொலி வந்து வீழ்கிறது.

"தம்பி நான் அம்மாவுக்கு விளகேத்திறன்" "நீ அப்பாவுக்கு விளக்கு ஏத்து. தங்கைச்சியையும் நீ கூட்டிட்டுபோ" தாயையும் தந்தையையும் வித்தாக்கி விட்டு வாழ்வாதாரத்துக்காகத் துணையாகத் தலைவனின் அரவணைப்புக்குள் இருக்கும் அந்தக் குழந்தைகளின் குரலொலி அவளைத் திடுக்கிட வைக்கிறது. ஐயோ எத்தனை வேதனை குரல்கள் இந்த மண்ணின் விடுதலைக்காக இங்கு ஒலித்துக் கொண்டிருக்கின்றன! தன் மன வேதனையைக் கடந்த வேதனைகளின் உச்சத்தில் இங்கே பல உறவுகள் தம் உரித்துக்களுடன் கல்லறைகளில் உறவாடிக் கொண்டிருந்த நிலை அவளை இன்னமும் வேதனைக்குள் கொண்டுசென்றது. ஆயிரமாயிரம் உறவுகள் தங்கள் உணர்வுகளைக் கல்லறை நாயகருடன் பகிர்ந்து கொண்டிருக்கின்றார்கள். அத்தனை உணர்வு கொந்தளிப்புக்களையும் தாண்டி தான் கருவில் சுமந்து தாயகக் கருவூட்டலுக்காக மண்ணின் கருவில் உறைந்து உறங்கி கொண்டிருக்கும் தனையனின் கல்லறைக்கு வந்து சேர்கிறாள் மங்களம். 'பளிச்' என்ற வெண்மையின் பின்னணியில் வீர வேங்கை என்று தொடங்கும் வாசகங்களோடு எழுதப்பட்டிருந்த அந்த பெயரை கொண்ட கல்லறை முன்னாள் விம்மலுடன் சேர்ந்த கண்ணீருமாய் மயக்கம் போட்டு வீழ்ந்து விட்டாள் மங்களம். தாயின் மயக்க நிலை கண்டு பதறிப் போன புவனா "அம்மா, அம்மா எழும்புங்கோ அம்மா…." ஆனாலும் மகனின் நினைவுகளோடு அவனின் கல்லறை மீது சாய்ந்து போய் கிடக்கிறாள் அவள். தாயை எழ வைப்பதில் கண்ட சோதனையையும் தாண்டி தன் அண்ணனுக்காக அம்மா கொண்டுவந்திருந்த அத்தனை பொருள்களையும் அவனின் கல்லறையில் பரப்பி வைக்கிறாள்.

அண்ணா உன் தங்கை உனக்காக என்ன எல்லாம் கொண்டு வந்துள்ளேன் பாருண்ணா…. எங்கள் தாயின் நிலையை எழும்பி பாருண்ணா…. என்னைத் தனிக்க விட்டு ஏன் அக்காவும் நீயும் போனீங்க….? அண்ணா உன் தங்கை தனியனாக நின்று தவிக்கிறேன் அண்ணா…" நெஞ்சக் கூட்டை சிதறவைக்கும் ஓலங்களுக்கிடையில் அவளது கதறலும் ஒலித்து கொண்டிருக்கிறது. கதறல்கள் கட்டுப்படுத்த முடியாது. கரை காணமுடியா நிலையில் வெளிப்பட்டு கொண்டிருந்தன. உறவுகளின் கண்ணீர் ஆறு துயில்வோரின் வீரர்கள் பாதங்களைக் கழுவி தூய்மைப்படுத்திக் கொண்டிருந்தது.

"விடுதலை வீச்சுக்காக மூச்சை இழந்து துயில்வோரின் வணக்க நாளான இன்று…." என்று ஒலிபெருக்கி தன் பணியை செய்து கொண்டிருந்தது. சர்வதேசமே ஒரு வருடமாகக் காத்திருக்கும் உரையை காற்றலைகளில் தவழ விடுகிறது ஒலிபெருக்கி….. ஒளி சுடர்கள் ஏற்றப்பட்டு அவர்கள் நினைவுகள் சுமந்து செல்கிறது ஒளியலை.

அதுவரை நேரமும் சாரலாகத் தூறிக் கொண்டிருந்த மழை தனது வீழ்ச்சியை நிறுத்திக்கொள்கிறது. ஓ…! இதுவரை குளிர்வித்துப் பாதாபிசேகம் செய்த மழைநீர் கூட இப்போது உறவுகளின் கண்ணீர் மழையால் அவர்கள் பூஜிக்கப்படட்டும் என்று அடக்கம் கண்டுவிட்டதோ? அல்லது ஈழ விதைகளாகத் தாய் பூமியின் மார்பைப் பிளந்து விதைக்கப்பட்டிருக்கும் இவர்களைக் கிளர்ச்சி அடைய வைக்கும் தன்மை கண்ணீர் மழைக்குத்தான் உண்டு என்று எண்ணியதோ…? காரணம் தெரியாது நினைவுகளோடு மூழ்கி போகிறார் புவனாவின் தந்தை.



# உதயனுக்கு கிடைத்த அங்கீகாரம்



துணிச்சலுக்கான இரண்டாவது விருது



எல்லைகளற்ற பத்திரிகையாளர் சங்கத்தின் பத்திரிகை சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கான சர்வதேச விருது உதயனுக்கு வழங்கப்பட்டது.




பொதுப்பணிக்கான இதழியல் விருது



துணிச்சலுக்கான முதலாவது விருது


30 ஆவது அகவை காணும் உதயனின் பணிதொடர வாழ்த்துகின்றோம்.

திருமுருகன் கொம் நெற் இன் சிறப்பு அனுசரணையுடன்...

"Vijay Super Singers Musical Show"

சுப்பர் சிங்கர் இசை நிகழ்ச்சி



தென்னிந்திய விஜய் தொலைக்காட்சியின் கலைஞர்களான திவாகர், சோனிய, ஆழகேசன், மற்றும் ஸ்ரீநிசா கலந்து சிறப்பிக்கும் மாபெரும் சுப்பர் சிங்கர் இசை நிகழ்ச்சி

இடம் :யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி உள்ளரங்கில்

காலம் 06.12.2014 சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு

ரிக்கட் கிடைக்கும் இடங்கள்: திருமுருகன் கொம் நெற்

- 271A, கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம்.
- 64, ஆடியபாதம் றோட், திருநெல்வேலி.
- பிரதான வீதி, சங்கானை.
- 50, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.
- கடற்கரை வீதி, குருநகர்.
- பிரதான வீதி, பருத்தித்துறை
- 18, பிரதான வீதி, நெல்லியடி.
- வேம்படி றோட், பருத்தித்துறை வீதி, வல்வெட்டித்துறை.